
# சக்தி

கொழும்பு
மகளிர்
இந்து
மன்றம்




230.6
மகளி
SL/PR

SHAKTHI

17614

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
[illegible]
பதிவு இல. 73
10. [illegible]. 193[illegible]
[illegible]
[illegible] இல. 14805
[illegible]. [illegible]. 19[illegible]

SHAKTHI

230.6
மகளி
SL/PR

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பதிவு இல. 73
10. 8. 1950
14895
7. 6. 1968

# சக்தி

கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின்

17614

## சிறப்பு மலர்

## 1998

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே
ஸர்வார்த்த ஸாதிகே – ஸரண்யே
த்ரியம்பகே கௌரீ
நாராயணீ நமோஸ்துதே !



# வணக்கம்



கொழும்பு மகளிர் இந்து மன்றம் என்ற பந்தலில் மொட்ட விழ்ந்துள்ள முதலாவது புஷ்பமாகிய 'சக்தி'யைச் சகல ஆற்றலும் மிக்க கருணா கடாட்சியாகிய எல்லாம் வல்ல பராசக்தியின் பாதங்களில், சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியும் கட்டற்ற களிப்பும் கொள்ளுகின்றோம்.

சமுதாயத்தின் பல்வேறு துறைகளில், நிலைகளில், தமது ஆற்றலையும் ஆளுமையையும் வெளிப்படுத்தி வரும் எமது இந்துப் பெண்கள் தங்களின் கலாசாரம், சமயம், சமூகம் முதலியவற்றின் வளர்ச்சிக்காக ஆற்ற வேண்டிய தொண்டுணர்வின் தூண்டுதலால் இம்மன்றத்தில் சங்கமித்துள்ளனர்.

கடந்த காலத்தில் கலாசாரம், ஆன்மிகம், கலைத்துறைகளில் கால் பதித்து அவ்வாறான நிகழ்ச்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஊக்குவிப்புக்களை அளித்து வந்த இம்மன்றம், முதிய அன்னையர் தொண்டில்லமென்ற அவசியமான, ஆனால் பாரிய திட்டமொன்றைத் துவங்கியுள்ள வேளையில், அதன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் பராசக்தி அருளைப் பாலிப்பதுடன், தாராள மனது கொண்ட பெரியோர்களும் தமது கைகளை விரித்து வாழ்த்த வேண்டுமென இம்மலரை வைத்து வணங்கி மகிழ்கிறோம்.

உலக சனத்தொகையில் சரி பாதி பெண்களே. சமுதாயத்தை இயக்குவதில் ஒரு பாதி ஆணினம் என்றால், அதன் மறுபாதி பெண்ணினமாக விளங்குகின்றது. இருபாலரும் சமமாக இணைந்ததே உலகம் – சமூகம் – குடும்பம் – வாழ்க்கை – எதிர்காலம் என்ற அத்தனையுமே! இனிமை, அன்பு, இரக்கம் பொறுமை, மென்மை, கவர்ச்சி முதலியவற்றை மட்டுமே கொண்டவளல்ல பெண். இராஜ தந்திர விவேகம், வீரம், அறிவு, செயற்திறமை முதலிய ஆற்றல்களும் நிறைந்தவர்களாக வேத காலத்தில் பெண்கள் விளங்கியுள்ளனர். இன்று கலை, கல்வித்துறைகளில்



மட்டுமல்லாமல் மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம், சட்டம், அரசியல், நிர்வாகம், விவசாயம் போன்ற அனைத்துத் துறைகளிலுமே ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றார்கள் பெண்கள் என்பதனை இம்மலரின் அட்டையை அலங்கரித்துள்ள சித்திரம் விளங்க வைக்கின்றது. பின்புற அட்டையில் எமது மன்றம் இயக்கவுள்ள 'அன்பு இல்ல' கட்டிடத்தின் கம்பீரமான தோற்றத்தையும், இல்லத்தின் அமைதியான சூழலையும் தெட்டெனத் தெரிவிக்கும் புகைப்படம் இடம் பெற்றுள்ளது. முழுமுதற் கடவுளான ஈசனின் இயக்க சக்தியாகி எந்தச் செயலுமே அவளின்றி அசைய முடியாது என்று பெருமையைக் கொண்ட பராசக்தியின் காட்சித் தோற்றம் உள்ளே முகப்போவியமாக விளங்குகின்றது.

பெரியோர்களின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள், வாழ்த்தப்படுபவருக்கு வளர்ச்சி அளிப்பவை, மகான்கள், ஞானிகள், மகாபுருஷர்களின் கருத்துக்கள் படிக்கப்படிக்கத் தெவிட்டாமல் பயனளிப்பவை மட்டுமல்ல, சரியான பாதையில் சமுதாயம் நடைபோட வேண்டுமென்பதை எப்போதும் நினைவூட்டிக் கொண்டிருக்கும் வழி காட்டிகள். மற்றும் மகளிரின் 'சக்தி' – அச் சக்தியின் ஆற்றல், பெருமை, உயர்வு முதலியவற்றை விளக்கும் பல அறிஞர்களின் கருத்துக்களும் இதில் அடங்கியுள்ளன. சமயதத்துவம், சக்தி மகத்துவம், கலை இலக்கியம், கலாசாரம் சமூகம் தொடர்பான ஆக்கங்கள், – கட்டுரைகளாக, கம்பீரமான கவிதைகளாக, சில சிறுகதைகளாக இம்மலருக்கு மணம் ஊட்டுகின்றன. அவற்றிலுள்ள சிறப்புக்கள் எல்லாம் அவற்றை ஆக்கியவர்களுக்கேயுரியன.

சஞ்சிகைத் தயாரிப்பு அனுபவம், சமய இலக்கியப் புலமை எழுத்தாற்றல் மிக்கவரான பிரபல எழுத்தாளர் திருமதி. பத்மா சோமகாந்தன் அவர்கள் இம் மலருக்கான ஆக்கங்களை அறிஞர்களிடமும் அங்கத்தவர்களிடமும் சேகரித்துச் செம்மை செய்து ஒப்பு நோக்கி ஒழுங்கமைத்து இம்மலர்ப் பணியின் மூலசக்தியாக விளங்கியவர்.

திருமதி. அபிராமி கைலாசபிள்ளை அவர்கள் உரிய வேளையில் அழகிய முறையில் இம்மலர் வெளிவர வேண்டும் என்பதில் குறியாக இருந்து ஓயாது எம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி பம்பரமாக இயங்கியவர்.

இவ்விருவரின் அயரா முயற்சியின் அறுவடையே வண்ணமும் மணமுங்கொண்ட இம்மலர் என்பதை பெருமையோடும் நன்றியோடும் குறிப்பிட்டு மகிழ்கிறோம்.

இம்மலரில் இடம் பெற்றுள்ள ஆக்கங்களின் தலைப்புகளுக்குத் தன் சின்னக்கரங்களால் வண்ணக் கோலமிட்டு வனப்பூட்டி சிறப்பித்துள்ள செல்வி அருணியா விமலேந்திரனின் கற்பனை வளத்தையும் கைவண்ணத்தையும் வாழ்த்திப் பாராட்டுகிறோம்.


அச்சக அதிபர் திரு. விமலேந்திரன் அவர்களும் அவரின் நிறுவன பணியாட்களும் காட்டிய அக்கறையையும் ஒத்துழைப்பையும் வியந்து பாராட்டுகிறோம்.

கலை வண்ணமும், அறிவு மணமும் மிக்கதாக இம்மலரை வெளிக்கொணர துணை நின்ற மற்றும் அத்தனை சக்திகளுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மலரின் வனப்பையும், வண்ணத்தையும் எமது எண்ணத்தையும் சுருக்கமாகச் சொல்லி விட்டோம். காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சே. ஆனால் வாசகர்கள்தான் நடு நின்று கருத்தைச் சொல்ல முடியுமென்பதால், மலரின் மணத்தை நுகர வழிவிட்டு....

உங்கள் பொன்னான கருத்துக்களும், ஆதரவும் எமது பந்தலில் அடுத்த மலருக்காக மொட்டுக்கட்டுவதற்கு, நீராகவும் பசளையாகவும் உதவும்என எதிர்பார்க்கின்றோம். வணக்கம்.

ஆசிரியர்.



# சக்தி

## கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் சிறப்பு மலர்



### இதழ்கள்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வாழ்த்துச் செய்தி | - | சுவாமி. ஆத்மகனாநந்தா | |
| 2. | வாழ்த்துரை | - | துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி | |
| 3. | President's Message | - | | |
| 4. | வரலாற்று ஏடுகளிலிருந்து ..... | - | | |
| 5. | வளர்ச்சிப் பாதையில் .............. | - | செயலாளர் | |
| 6. | மலர்க் குழு | - | | |
| 7. | நிர்வாகக் குழு | - | | |
| 8. | மீனாக்ஷி | - | ஜகத்குரு சங்கராச்சாரியார் | 11 |
| 9. | Ideal of our Womanhood | - | Swami Vivekananda | 13 |
| 10. | சர்வம் சக்திமயம் | - | சுவாமி விபுலானந்தர் | 16 |
| 11. | அருள் நெறியும் மாதரும் | - | குன்றக்குடி அடிகளார் | 19 |
| 12. | நமது சிறப்பான பாரம்பரியம் | - | சுவாமி சின்மயானந்தர் | 21 |
| 13. | Religion & Prayer | - | Swami Shantanand | 24 |
| 14. | சைவ சமயத்தில் பெண்கள் பங்கு | - | தங்கம்மா அப்பாக்குட்டி | 27 |
| 15. | பெண் எனும் பேறு | - | வசந்தா வைத்தியநாதன் | 33 |
| 16. | என்னடா மனிதா நீ? | - | திலகவதி | 36 |
| 17. | அர்த்த நாரீஸ்வர தத்துவம் | - | கு. சோமசுந்தரம் | 37 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | சக்தி | - | சுகந்தி ராஜகுலேந்திரன் | 40 |
| 19. | இசையும் சமயமும் | - | பாலம் லக்ஷ்மணன் | 41 |
| 20. | சக்தி விழித்தெழுந்தால்...... | - | "துவைதிலி" | 47 |
| 21. | தமிழில் பெண்கள் இலக்கிய ...... | - | சித்திரலேகா மௌனகுரு | 48 |
| 22. | மாதவம் செய்து மண்ணில் ..... | - | திலகா மகானந்தன் | 52 |
| 23. | ஒரு காலைப் பொழுதில் .......... | - | நேர்காணல் | 53 |
| 24. | இளம் பெண்களை வளர்க்கும் பணியில் ...... | - | திருமதி ஆர். சுந்தரலிங்கம் | 56 |
| 25. | தாயின் அருமை | - | குமுதினி மகாதேவன் | 58 |
| 26. | நவீன சமூகமும் சிறுவர் துர்ப்பிரயோகமும் ..... | - | பூமணி குலசிங்கம் | 59 |
| 27. | தொலைக்காட்சி நாடகங்களில் ........ | - | சாந்தி சச்சிதானந்தன் | 62 |
| 28. | தடுமாறும் தலைமுறைகள் ........ | - | பத்மா சோமகாந்தன் | 68 |
| 29. | நாட்டியத்தின் ஆன்மீக அடிப்படை | - | ருக்மிணிதேவி | 72 |
| 30. | செண்பகமே செண்பகமே | - | சாந்தி பாலசுப்பிரமணியம் | 75 |
| 31. | சமூக சேவையும் மகளிரும் | - | ராஜேஸ்வரி ரவிகுலராஜன் | 78 |
| 32. | சமயமும் சமூக சேவையும் | - | அபிராமி கைலாசபிள்ளை | 80 |
| 33. | அமைதி .... | - | அன்னலட்சுமி இராஜதுரை | 81 |
| 34. | ஆலய வழி பாட்டின் நோக்கம் | - | மனோவதனா கனகசூரியம் | 82 |
| 35. | பெண்ணுக்கும் கல்வியே கண் | - | வசந்தா விமலேந்திரன் | 85 |
| 36. | கைமுத்திரைகள் ...... | - | பிரகதா தில்லைநடராசன் | 87 |
| 37. | பெண்மை வாழ்கென்று .... | - | சந்தனா நல்லலிங்கம் | 89 |
| 38. | சக்தி வழிபாடு ....... | - | எஸ். கோமதி | 91 |
| 39. | ஆயகலைகள் அறுபத்துநான்கு | - | சாரதா நடராஜன் | 93 |
| 40. | Religion & Service to Society | - | Vanathy Ravindran | 96 |
| 41. | 6th World Saiva Conference | - | Indra Mahadevan | 98 |
| 42. | Appeal for Elders' Home | - | | 101 |
| 43. | Rules & Regulations of Visalambal Anbu Illam | - | | 102 |
| 44. | Acknowledgement | - | | 104 |

# வாழ்த்துச் செய்தி



கொழும்பு மகளிர் இந்து மன்றம் 'சக்தி' என்ற நாமம் தாங்கிய ஆண்டு மலர் ஒன்றினை வெளியிடுகிறார்கள் என் அறிகிறோம்.

அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுதல்கள் ! நமது சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பார்க்கும் பொழுது, பல துறைகளிலும் சிறந்து விளங்கிய பெண்ணரசிகளைப் பற்றிய குறிப்புகளைக் காணலாம். ஆண்களுக்கு நிகராக பெண்களும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

பெண்களுக்கு வாய்ப்பும் சுதந்திரமும் அளித்தால் அவர்கள் மகத்தான காரியங்களைச் செய்வார்கள் எனக் கூறினார் சுவாமி விவேகானந்தர்.

அவரது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் இன்று பல மாதர் அமைப்புக்கள் பல்வேறு வகையான சமுதாயப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

நமது சமய மரபுகளில் நிலைத்தவராக, கொழும்பு மகளிர் இந்து மன்றம் ஆற்றிவரும் பணிகள் மேன்மேலும் விருத்தியடைய இறைவனது அருளைப் பிரார்த்திக்கிறோம்.

சுவாமி ஆத்மகனாநந்தா

தெல்லிப்பழை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர்
துர்க்கா துரந்தரி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி ஜே. பி. அவர்கள்

# வாழ்த்துரை



"உலக சேவையே உத்தமன் பூசையாம்" என்பது ஞானிகளின் அறிவுரையாகும். இந்தப் பிறவி இறைவன் நமக்குத் தந்த நோக்கம் வாழ்வாங்கு வாழ்ந்து ஏனையோரையும் வாழவைத்து அறம்பல புரிந்து அவன் அடிக்கீழ் சென்று அடைதற் பொருட்டேயாகும். எனவே இதனை உணர்ந்து வாழ்வதும் பணியாற்றுவதும் ஒவ்வொருவருக்கும் அமைந்த நற் கடனாகும்.

இதனை உன்னிப்பாக உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட கொழும்பு வாழ் இந்து மகளிரை நான் மனமாரப் பாராட்டுகின்றேன். ஊனுக்கும் உடைக்கும் உல்லாச வாழ்வுக்கும் தமது வாழ் நாளை வீணடித்துக் கொள்ளாமல் அறச் சிந்தனையோடு வாழ்வாங்கு வாழ முற்பட்டிருக்கிறார்கள் இவர்கள்.

வாழ்வு என்பது இது தான். ஏனையவை எல்லாம் தாழ்வு நிலைக்கு எம்மைத் தள்ளுவனவே. கொழும்பு வாழ் இந்து மகளிருக்கெல்லாம் இணையில்லா எடுத்துக் காட்டாக விளங்குபவர் திருமதி. விசாலாம்பாள் அரியகுட்டி அம்மையார். எங்கள் தெல்லிப்ழை துர்க்காபுரம் மகளிருக்கு அவரால் வழங்கப்பட்ட நல்லூர் நன்கொடை நிலம் என்றும் அன்னாரின் அறச் சிந்தனையை எடுத்துக் காட்டுவதாகவே அமையும்.

"தருமம் என்றொரு பொருளுளது" என்பதையும் அதனை மேற்கொள்வதால் கிடைக்கும் இம்மை மறுமை மோட்ச கைங்கரியங்களையும் அம்மையார் உணர்ந்தமையாலேயே இவ்வுயர் நிலையை உயிரோடிருக்கும் போதே பெற்றுவிட்டார்.

ஆகவே கொழும்பு மகளிர் இந்து மன்றம் ஆற்றப் போகும் அறப்பணிகளையும் அவர்களால் வெளியிடப்படும் 'சக்தி' சஞ்சிகையையும் மனமாரப் போற்றுகிறேன். தூய சேவையாற்றி விளங்கட்டும் என்று திருவருளைப் போற்றி அமைகின்றேன்.

*"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்*
*செய்திட வேண்டுமம்மா – அவர்*
*பங்கயக் கைநலம் பார்த்தலவோ இந்தப்*
*பாரிலறங்கள் வளருதம்மா".*

# COLOMBO
# YOUNG WOMEN'S HINDU ASSOCIATION

## PRESIDENT'S MESSAGE



Sivaperuman is always depicted as half male and the other half as female. The imagery of this aspect is ARTHANARESWARAR one of the twenty Maheswara Forms as icons in our temples.

The Female part represents the Sakthi. Sivam and Sakthi are inseparable. There is NO Sivam without Sakthi and there is NO Sakthi without Sivam. The male part proposes and the female part disposes. The female part is the real motivation. This is one of the greatest concepts of Saiva Religion. All our Nayanmars and the remaining Saints in their Arul Kadchi have always beheld HIM in this form.

Hinduism in Sri Lanka is really Saivaite Hinduism and its philosophy is Saiva Siddhantam otherwise known as Meikanda Sastras. The Government has acknowledged the position.

Saiva Religion is a very ancient Religion. It has been existing as a living religion for more than five thousand years even before Ramanaya period. Harappa, Mohanjendaro findings are the earliest proof. It was pre Vedic.

Mandothari, the Queen of Ravana was a great devotee of Sivaperuman. She excelled both in Pathi Bakthi and Siva Bakthi in beauty too. She was not second to Sita. She is the most Noble Character in the Epic Ramayanam.

During its long duration Saivaite Hinduism had faced several challenges, the Pandyan and Pallava Kings became Jains and Jain Monks virtually ruled those kingdoms in the 7th century A.D.

Mangayarkarasiar, the Queen of the Pandyan King continued to remain as an ardent Saivaite and Thilagavathiar, the elder sister of Saint Navukkarasar with divine help were responsible for saving Saiva religion and our Religio-Culture from the onslaught of Jainism which is foreign to us.

Raja Raja Cholan 1 the Great, 10th century AD was a great Saivaite and a devotee of Lord Nadarajah of Chidambaram. He lost his parents as a child. He was brought up by his great Aunt Dowager Queen Sembian Ma Devi. She was a great devotee of Sivaperuman and loved to listen to the singing of Thevaram Hyms. She built more than one hundred Sivan Temples in Tamilnadu in granite which were before built in bricks. She instilled into the King Siva Bakthi and interest in listening to the singing of Thevara Hyms in Pan Isai. Raja Rajan1 was the king who built the Great Temple of Tanjore and retrieved the Muvar Thevaram from an Ant Hill at Chithambaram. Thevaram is our greatest heritage. These Saintly high ranking souls are a constant source of inspiration to us. They are always in our thoughts.

Saivite Hinduism is facing a big challenge today. Our old and young who are destitutes are vulnerable to proselytization with the promise of a safe home and security and money too.

Recently, to ameliorate the condition of elderly women without home and hapless, we have established a secure Home named "Visalambal Anbu Illam" in the name of the benefactress Mrs. Visalambal Ariacutty, to enable them to live happily peacefully, and in comfort.

God willing the Sangam is planning to establish several such homes and inaugurate other schemes for the betterment of Hindu women. 'சேவையே மகேசன் தொண்டு" is our Molto.

The first volume of the journal named "Sakthi" will be released by the Sangam. This contains learned articles and essays on the glories of Saivaite Hinduism and its rich traditions which we hope would inspire and involve many more of our womenfolk to join us and dedicate themselves in promoting this glorious Religio-Culture and traditions and to do humanitarian work, which is an essential part of our religion.


Before I conclude, I wish to thank all those who contributed articles and otherwise helped me to make this GOLDEN MAGAZINE a success and finally wish that copies of this magazine should get into the hands of every Hindu woman in Sri Lanka and help to spread the knowledge of Saivate Hindu Culture and traditions.

I pray to ALMIGHTY and would express my sincere good wishes for the success of this Magazine.

**MRS.INDRANI YOGARAJAH**
*President*

14th February 1998.

# எமது மன்றத்தின் ஏடுகளிலிருந்து




பல பெரியோர்களுடைய ஆசீர்வாதங்களோடும் ஊக்குவிப்புக்களோடும் கொழும்பு மகளிர் இந்துமன்றம் 1965ம் ஆண்டு உதயமானது. இம்மன்றத்தின் ஆரம்ப காலத் தலைவியாக வாய்த்தவர் திருமதி லீலா சுப்பிரமணியம். சுறு சுறுப்பும் பணியாற்றும் பான்மையும் மிக்கவரான இவரது தலைமையிலே மன்றம் சிறிது சிறிதாகப் பல பணிகளில் காலடி பதித்தது. இவருடைய ஆற்றலும் தலைமைத்துவத்துக்குமேற்ற வகையில், நிர்வாக சபையும் தொழிற்பட்டது. செயலாளராக செல்வி. சற்சொருபவதி நாதனும், பொருளாளராக செல்வி வள்ளிநாயகி கணபதிப்பிள்ளையும், திருமதிகள் விசாலாம் பாள் அரியக்குட்டி , ஜேர்மையா, இராஜேஸ்வரி முதலியார், அமிர்தலிங்கம், மகேஸ்வரி நடராஜா, கணகரத்தினம் இன்னும் பலர் நிர்வாக சபையிலிருந்து ஒத்துழைப்பு நல்கினர். காலம் செல்லச் செல்ல திருமதி. பாலசிங்கம், சற்குண நாதன் முதலியோர் இணைந்து செயற்பட்டனர்.

வடக்கிலும் கிழக்கிலும் இருந்து வரும் பெண்கள் தலைநகரில் தங்கிநிற்கவும், தங்கியிருந்து படிக்க வேலைபார்க்கக் கூடியதான விடுதியின் தேவை அப்போது அவசியமாகக் கருதப்பட்டது. எனவே இம்மன்றம் இத்தேவையை மனதிற் கொண்டு வெள்ளவத்தை I B C வீதியில் சுமார் 30 பேர் இருக்கக்கூடியதான ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி விடுதியாக நடாத்தியது. பிரச்சினைகள் ஏற்பட்டபோது இவ்விடுதியும் இடத்துக்கிடம் மாறியது. அத்தோடு இந்து சமயப் பிள்ளைகளுக்கான தேவார வகுப்புகள், நவராத்திரி காலத்தில் பூஜை, விழாக்கள் முதலியனவற்றைப் பிள்ளைகளின் கும்மி, கோலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளோடு கொண்டாடியது. அறிஞர்கள், சமயப் பேச்சாளர்களை அழைத்துச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியது.

தர்ம சேவையாக நோயுற்றோர், அங்கவீனமுற்றோரையெல்லாம் சந்தித்து ஆறுதல் வார்த்தை பேசி , பஜனைமுதலியவை நிகழ்த்தி அன்பளிப்புகளும் செய்தது. விசேட புண்ணிய பண்டிகை, நாட்களில் ஏழைகளுக்கு உணவு வழங்கியது. சிறைச்சாலையிலுள்ளோருக்கும், மனநோயாளருக்கும் தன்னால் இயன்றளவு சிறு சிறு உதவிகளை ஆற்றியது.

1983 கலவரத்தோடு, நாட்டின் நிலை தழும்ப யாவுமே குழம்பி விட்டது.

*(ஆரம்பகால உறுப்பினரின் தகவல்படி. ஆ-ர்)*

# வளர்ச்சிப் பாதையில் கொழும்பு மகளிர் இந்துமன்றம்

யமுனா கணேசலிங்கம்
*செயலாளர்,* கொழும்பு மகளிர் இந்துமன்றம்

**(1992-1998)**

**1983** ஆடிக்கலவரம் தலைநகரில் இயங்கி வந்த பல்வேறு இந்து சமய, தமிழ் வளர்ச்சி மன்றங்களின் நடவடிக்கைகளை ஸ்தம்பித மடையச்செய்தது. அந்த வகையில் கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் பன்னெடுங்கால வளர்ச்சிப்பாதையில் தடை ஏற்பட்டது. மன்ற ஆவணங்கள் இல்லாதுபோயின. பத்திரங்கள் பல இருந்த இடம் தெரியாது போயின. மன்ற உறுப்பினர்கள் சிதறுண்டு நாலாதிசைகளிலும் சென்றுவிட்டனர்.

மன்றம் புத்துயிர் பெற ஏறக்குறைய பத்து வருடங்கள் சென்றன. ஆம், 1983ம் ஆண்டு கொழும்பு மாநகர வீதிகளில் இறுதியாகப் பவனிவந்த ஆடிவேல் ரதபவனி மீண்டும் பவனிவந்த 1992ம் ஆண்டு எமது மன்றமும் புத்துயிர் பெற்று இயங்க ஆரம்பித்தது.

மன்றத்திற்கு புத்துயிர் அளித்து முன்னர் போன்று இயங்க வைப்பதில் சிலர் முழுமூச்சுடன் முன்னின்று செயற்பட்டனர். தலைமைப் பதவியை வகித்து எமது வழிகாட்டியாக இருந்து பணி செய்தவர் திருமதி. ஆழ்வாப்பிள்ளை.

இதில் முக்கியமாக நான் எமது மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினரும் முன்னைய தலைவியுமான செல்வி சற்சொரூபவதி நாதனையும் குறிப்பிடவேண்டும். எமது மன்றத்தினை வளர்ச்சிப்பாதையில் அடியெடுக்க உதவியவர் என கூறினால் மிகையாகாது. இவர்களது முயற்சியை கண்ணுற்று உறுப்பினர்கள் பலர் மன்றத்தில் இணைந்து கொண்டனர். மன்றத்திற்கு புதிய அமைப்பு விதி உருவாக்கப்பட்டது. மேலும் பல உறுப்பினர்களைச் சேர்ப்பதில் சங்கத்தவர்கள் ஈடுபட்டதன் விளைவாகத் தலைநகரிலுள்ள பல பெண்மணிகள் யுவதிகள் மன்றத்தில் பெருமளவில் இணைந்து கொண்டனர். சமய, சமூகப் பணிகளில் இவர்கள் அனைவரும் ஒருமனதுடன் காட்டிய ஆர்வம் எமக்கு பெரும் உத்வேகத்தை அளித்தது.

சமய, கலை, கலாச்சார வளர்ச்சிப் பணிகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட எமது மன்றத்தின் முதலாவது நிகழ்வாக ''சக்திவிழா'' எனும் கதம்பநிகழ்ச்சி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது. பலரது பாராட்டையும் பெற்று வெற்றிகரமாக நடந்து முடிந்த இந்நிகழ்ச்சியில் மன்ற அங்கத்தவர்களது பட்டிமன்றம், வில்லுப்பாட்டு என்பன சபையோரின் அமோக வரவேற்பைப் பெற்றது. இந்த முதலாவது நிகழ்வு மூலமே எமது மன்றத்திற்குத் தலைநகரில் ஒரு தனி அந்தஸ்து கிடைத்தது. வருடா வருடம் நவராத்திரி காலத்தில் ஒருநாள் சக்திக்கு விசேட பூஜை செய்து கலைநிகழ்ச்சிகளை நடாத்தி வருகிறோம். அத்துடன் பொங்கல் தினத்தன்று அனாதை சிறுவர்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் உணவுப் பொதிகளை வழங்கி வருகிறோம்.

அகில இலங்கை இந்துமாமன்ற கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளுக்கு எம்மாலான உதவிகளைப் புரிந்தோம். இராமபிரானின் அணைக்கு அணில் உதவியது போல எமது மன்றத்தின் நன்கொடையாக

இரண்டு லட்சம் ரூபாய் வழங்கினோம். வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலைகளின் கொழும்புக்கிளைகள் யாவும் ஒரு குடையின் கீழ் திரண்ட போது அவர்களுக்கு உதவுமுகமாக நாடக நிகழ்ச்சியினை நடத்தி 1லட்சம் ரூபாய் நன்கொடையாக வழங்கினோம்.

இலங்கை விவேகானந்த சபை வருடாந்தம் நடத்தும் சைவசமயப்பரீட்சையின் போது எமது மன்ற அங்கத்தவர்கள் பலன் எதையும் எதிர்பாராது பரீட்சை மேற்பார்வையாளராகக் கலந்து கடமையாற்றி வருகிறார்கள்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ சொற்பொழிவு நூற்றாண்டு விழா தொடர்பான நிகழ்ச்சிகளை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜின் வேண்டு கோளுக்கிணங்க கொழும்பில் சிறப்பாக நடத்தினோம். ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற விழாவிற்கு வவுனியாவிலிருந்து வந்த 65 மாணவர்களுக்கும், பத்து ஆசிரியர்களுக்கும் இருப்பிடம் உணவு மற்றும் சகல வசதிகளையும் இருதினங்களுக்கு அளித்து உதவினோம்.

கொழும்பு பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி வளர்ச்சிக்கு உதவுமுகமாகக் கல்லூரி மாணவிகள் நடத்திய விற்பனைச் சந்தையில் – நாம் பங்குபற்றி உதவி புரிந்தோம்.

உலக சைவப் பேரவையின் நான்காவது வருடாந்த மகாநாடு கொழும்பில் நடைபெற்ற போது அதன் இலங்கைக்கிளைத் தலைவர் திரு. கா. தயாபரனின் வேண்டு கோளுக்கிணங்க உதவிகள் பல புரிந்து மகாநாடு வெற்றிகாண முழுமூச்சுடன் ஒத்துழைத்தோம். இதில் எம்மன்ற அங்கத்தவர்கள் அனைவருமே பங்கேற்று ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மன்றத்தின் வளர்ச்சிப்பணிகளுக்கு உறுப்பினர்களின் ஒத்துழைப்பு எவ்வளவு அவசியமோ அது போன்று நிதி வசதிகளும் மிகமிக அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு தலைநகரில் விகாரமாதேவி பூங்காவில் மாபெரும் விற்பனைச் சந்தை ஒன்றினை 1994ம் ஆண்டு வைத்து நிதி சேகரித்தோம் மேலும் 1997ம் ஆண்டு றே ஒவ் கலர்ஸ் ('Ray of Colours') எனும் நிகழ்ச்சியினை கொழும்பு ஹில்டன் ஹோட்டல் 'Hotel'இல் வைத்து மாபெரும் நிதி சேகரித்தோம்.

ஆரம்பத்தில் முப்பது அங்கத்தவர்களுடன் பல சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வந்த எமது மன்றம் இன்று ஆலமரம் போன்று வேரூன்றித் தழைத்து 250 துடிப்பான செயல் திறன் மிக்க அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

பல வருடங்களாக எமது மன்றத்தின் அங்கத்தவர் பலரது மனங்களில் பேராசை கொண்டிருந்த 'இந்துப் பெண்கள் முதியோர் இல்லம்'' என்ற மகத்தான பணி இன்று நிறை வேறி உள்ளது. திருமதி விசாலாம்பாள் அரியக்குட்டி அவர்கள் கொள்ளுப்பிட்டி பகத்தலவீதி 15ம் இலக்கத்திலுள்ள தனது காணியுடன் கூடிய வீட்டின் அவரது பங்கை எமது மன்றத்திற்கு சகாய விலையில் வழங்கி உள்ளார். அவரின் தாராள மனப்பான்மைக்கு எமது மன்றம் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி தன் நன்றியைத் தெரிவித்து கொள்கிறது.

இவ்வாறு எமது மன்றத்தின் சமய, சமூக கலை கலாச்சாரப் பணிகள் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்து செல்லப்படுகிறன.

தொடர்ந்து எமது பணிகள் செவ்வனே அமைவுறச் சகல தரப்பினரது ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறோம். இது வரை காலமும் எமது மன்றப் பணிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகள் பல புரிந்து அனைவருக்கும் நாம் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்

சமய சமூகப் பணிகளில் தம்மை இணைத்துச் செயல்பட விரும்பும் தலைநகர்வாழ் பெண்மணிகள் எமது மன்றத்தில் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும் என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

# மலர்க்குழு

திருமதி. சுலோசனா செல்வகணேஷ்
*(இதழாசிரியர்)*

திருமதி. ஸ்ரீரஞ்சனி விஷ்ணுகாந்தன்

திருமதி. ராஜேஸ்வரி ரவிகுலராஜன்

திருமதி. வசந்தகௌரி விமலேந்திரன்

திருமதி. அபிராமி கைலாசபிள்ளை
*(நிர்வாக ஒழுங்கிணைப்பாளர்)*

திருமதி. பத்மா சோமகாந்தன்
*(மலர் தயாரிப்பு பொறுப்பாளர்)*

# கொழும்பு மகளிர் இந்து மன்றம்

## காப்பாளர்கள்

திருமதி. கனகம்மா ஆழ்வாப்பிள்ளை
திருமதி. விசாலாம்பாள் அரியக்குட்டி
திருமதி. ரெங்கநாயகி பத்மநாதன்

## தலைவி

திருமதி. இந்திராணி யோகராஜா

## உபதலைவிகள்

திருமதி. அபிராமி கைலாசபிள்ளை
திருமதி. புவனேஸ்வரி கதிர்காமத்தம்பி
திருமதி. நவரத்தினம் கனகசபை

## செயலாளர்

திருமதி. யமுனா கணேசலிங்கம்

## துணைச் செயலாளர்கள்

திருமதி. சாந்தி பாலசுப்பிரமணியம்
திருமதி. வாமினி சத்தியமூர்த்தி

## பொருளாளர்

திருமதி. வனஜா தவயோக ராஜா

## துணைப் பொருளாளர்

திருமதி. ஸ்ரீ ரஞ்சனி விஷ்ணுகாந்தன்

## நிர்வாக உறுப்பினர்கள்

திருமதி. கமலா கனகசபை
திருமதி. சாரதா நடராஜா
திருமதி. மகாலெட்சுமி சுந்தரலிங்கம்
திருமதி. இந்திரா மகாதேவா
திருமதி. சுபத்திரா கணேஷன்
திருமதி. நீலா தயாபரன்
திருமதி. ராஜேஸ்வரி ரவிகுலராஜன்
செல்வி. கோமதி சுப்பையா
திருமதி. வசந்தகௌரி விமலேந்திரன்
திருமதி. ஈஸ்வரி பாலசுப்பிரமணியம்
திருமதி. மனோவதனா கனககூரியம்
திருமதி. பத்மா சோமகாந்தன்
திருமதி. காமினி யோகேஸ்வரன்
திருமதி. கோகிலா குணவர்த்தனா
திருமதி. யோகேஸ்வரி லோகேந்திரன்
திருமதி. பொன்மலர் கந்தசாமி
திருமதி. காமினி அசோகன்
திருமதி. குமுதினி மகாதேவன்
திருமதி. சுலோசனா செல்வகணேஷ்
திருமதி. மல்லிகா தியாகராஜா
திருமதி. ஷர்மிளா இராஜரெத்தினம்

# Colombo Young Women's Hindu Association
## Executive Committee 1997/98




**Seated - (L to R)** Sri Ranjani Vishnukanthan, Vamini Sathiamoorthy, Shanthi Balasubramaniam (Asst. Secy.) Jamuna Ganeshalingam (Secretary), Visalampal Ariacutty (Patron) Indrani Yogarajah (President), Vanaja Thavayogarajah (Treasurer), Abirami Kailasapillai (Vice President), Navaratnam Kanagasabai (Vice President), Buvaneswari Kathirgamathamby (Vice President).

**Standing - (L to R)** Padma Somakandhan, Kamala Kanagasabai, Neela Thayaparan, Rajeswari Ravikularajan, Kohila Gunawardana, Eswari Balasubramaniam, Kamini Asokan, Kumuthini Mahadeva, Sulochana Selvaganesh, Kamini Yogeswaran, Yogeswarai Logenthiran, S. Komathy, Manovathana Kanagasooriam, Shermilla Rajaratnam, Subathra Ganeshan, Indra Mahadeva, Ponmalar Kandasamy, Vasanthagowri Vimalendran, Saratha Nadarajan.

**Not in the Photo -** Ranganayaki Pathmanathan (Patron), Mahalechumi Suntharalingam and Mallika Thiagarajah

# MRS. VISALAMBAL ARIACUTTY



Mrs. Visalambal Ariacutty is a founder member of our Association and she has rendered yeomen services for the success of various activities launched by the Association . Though she is 86 now, she actively involves herself in religious activities and prayers. Our Association is grateful to her for having magnanimously sold us her land at Bagattale Road, Colombo 3 at a modest price to run the "Visalambal Anbu Illam" for the elderly Hindu women.

# மீனாக்ஷி

ஜகத்குரு சங்கராச்சாரியர்

அம்பாள் ரூபங்களிலே பிரசித்தமாகக் காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி, காசி விசாலாட்சி என்ற மூன்றையும் சொல்கிறோம்.

உலகத்துக் கெல்லாம் பிரசித்தமாக, வரப்பிரசாதினியாக இருப்பவள் மீனாம்பிகை. காருண்யத்தோடு லாவண்யமும் ஆதிபத்திய சக்தியும் சேர்ந்திருப்பவள் மீனாக்ஷி ஆறுமாசம் தன்னிடம் செங்கோல், ஆறுமாசம் சுந்தரேஸ்வரரிடம் செங்கோல் என்றிப்படி லோகம் முழுவதற்கும் ராஜ்ய பாரம் பண்ணுகிறவள். நித்தியப்படி பூஜை, நைவேத்தியம் முதலியவற்றைப் பார்த்தாலோ, ஈஸ்வரனுக்கு அவள் சரி சமானம் மட்டுமில்லை. அவனைவிட ஒரு படி மேலே என்று தோன்றுகிறது. பூஜை, நைவேத்தியம் எல்லாம் முதலில் அவளுக்குப் பண்ணிவிட்டு அப்புறந்தான் ஈஸ்வரனுக்குப் பண்ணுவது என்று மதுரையில் மாறுதலான வழக்கமும், இருக்கிறது.



பெரிய பெரிய கோபுரங்கள், பிரகாரங்களுடன் வெள்ளைக்காரர்களும் பார்த்துப் பிரமித்துக் கொண்டாடும் படியான ஆலயம் மீனாட்சிக்கே ஏற்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற சிற்பச் செல்வங்களுக்குக் கணக்கு வழக்கில்லை. மற்றச் சேக்ஷத்ரங்களில் ஈஸ்வரன் பேரிலேயோ கோயிலைச் சொல்லி அதில் சின்ன அம்பாள் ஸன்னிதி இருக்கிறது என்பார்கள். ரொம்பவும் சக்தியோடு, ஜீவகளையோடு, பாலாம்பாள், கற்பகாம்பாள், மங்களாம்பாள் முதலியதேவி மூர்த்தங்கள் இருக்கிறகோயில்களைக் கூட வைத்யநாத ஸ்வாமி கோயில், கபாலீஸ்வரர் கோயில் கும்பேச்வரஸ்வாமி கோயில் என்றுதான் சொல்கிறோம். ஆனால் மதுரையில் மட்டும் சுந்தரேஸ்வரர் கோயில் என்று சொல்வதில்லை. மீனாட்சியம்மன் கோயில் என்று தான்சொல்கிறோம். அங்கேதான் சுந்தரேஸ்வரர் அறுபத்தி நாலு திருவிளையாடல்களையும் பண்ணியிருக்கிறார். சுந்தரேஸ்வரரை ஸ்தோத்திரம் பண்ணி, விபூதி மகிமையாலேயே ஞானசம்பந்தர் பாண்டிய ராஜாவின் வெப்புநோயைத்தீர்த்து அதுவரை ஜைனனாக இருந்த அவனைச் சைவனாக்கிறார். இப்படித் தம் தேசத்தில் மறுபடிவைதிகமதம் நன்றாக ஸ்தாபிதமாவதற்கே சுந்தரேஸ்வரர் தான் காரணமாயிருக்கிறார். ஆனாலும் அவர் பெருமையை எல்லாம் ஒன்றுமில்லை என்று பற்றிக்கொண்டு அம்பாள் மீனாட்சியே அங்கே முக்கியமாயிருக்கிறாள். மீனாட்சியம்மன் கோவில் என்றே அழைக்கிறோம். சைவாகமங்களின்படி ஈஸ்வரனின் ஆலயமாகவே உள்ள மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் என்று பெயர் ஏற்பட்டிருப்பது தான் விசேஷம்!

மீனாட்சியை ஆதிகாலத்திலிருந்தே அநேகமகான்களும் கவிகளும் ஸ்தோத்திரம் செய்திருக்கிறார்கள்.

'சியாமளா தண்டகம்' என்று காளிதாசன் செய்திருக்கின்ற பிரசித்தஸ்துதியில் சொன்ன சியாமளா தான் மீனாட்சி. சியாமளா, மாதங்கி, மந்த்ரிணி என்றெல்லாம் மந்திர தந்திர சாஸ்திரங்களில் மீனாட்சிக்குப் பெயர். சங்கீதத்துக்கு அதிதேவதையாக எப்போதும் மாணிக்க வீணையை மீட்டிக்

கொண்டிருக்கிறவள் அவள். கானாம்ருதத்தாலேயே மோக்ஷாம்ரு தத்தைத் சாதித்து தருகிறவள்!

குறிப்பாக 'சியாமளா தண்டக' த்தில்

மாதா, மரகத ச்யாமா மாதங்கீ மதசாலி நீ!
சூர்யாத் கடாக்ஷம் கல்யாணீ
கதம்பவநவாஸி நீ!!

என்று வருவது மரகதப் பச்சையாக ஜ்வலிக்கிற மீனாட்சியைச் சொல்வதாகவே இருக்கிறது. 'கதம்ப வனம்' என்பது தான் மதுரை 'கடம்ப வனம்' என்றும் தமிழில் சொல்வார்கள்.

"ஓங்கார பஞ்ஜர சுகீம்" என்ற ஆரம்பிக்கிற 'நவரத்ன மாலிகை' யிலும் அம்பிகையைச் சங்கீத தேவதையாகத்தான் காளி தாஸன் வர்ணித்திருக்கிறான். 'ஓங்காரம் என்று கூட்டிலிருக்கும் கிளி' என்று அம்பிகை வர்ணிக்க ஆரம்பிக்கிறாள். மதுராபுரியில் மீனாக்ஷி வீணாதாரிணியாக இல்லாமல், கிளியைத்தான் கையில் வைத்துக் கொண்டிருக்கிறாள்!

'மீனாட்க்ஷி பஞ்சரத்னம்' என்று ஆசார்யாளும் பண்ணியிருக்கிறார்.

"பாதி மானுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டும் – தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே – என்று ஞானசம்பந்தர்.

ஈஸ்வரனைப் பாடுகிற போது கூட 'பாதி மாது' என்று முதலில் ஈஸ்வரனுடைய அர்த்தாங்கியாயிருக்கிற அவளைத்தான் சொல்லியிருக்கிறார்.

இப்படிப் பல கவிவாணர்கள் அம்பாளைப் பாடியுள்ளார்கள். குமரகுருபரர் 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' என்று சாட்சாத் ஜகன்மாதாவைத் குழந்தையாக வைத்து ஸ்தோத்தரித்திருக்கிறார். அதைக் கோயிலிலேயே அரங்கேற்றம் பண்ணினார்கள். அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த திருமலை நாயக்கரின் அக்ராஸனத்தில் அரங்கேற்றம் நடந்தது. குமர குருபரர் பாட்டுக்களைச் சொல்லிக் கொண்டு வரும் போதே திடீரென்று அங்கே அர்ச்சக ருடைய பெண் குழந்தை வந்து திருமலை நாயகரின் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த முத்து மாலையைக் கழற்றிக் குமரகுரு பரரின் கழுத்திலே போட்டு விடடதாம். 'இதென்னடா! இந்தப் பெண்இப்படிப் பண்ணுகிறது?' என்று எல்லோரும் பிரமித்துப் போயிருக்கும் போது அந்தப் பெண் அப்படியே கர்ப்பக்கிரகத்துள் போய் அந்தர்த்யானமாகி விட்டதாம்! அப்போதுதான் எல்லோருக்கும் மீனாட்சியே இந்த ரூபத்தில் வந்து குமரகுருபரருக்கு பகுமானம் பண்ணிவிட்டுப் போயிருக்கிறாள் என்று தெரிந்தது!

தமிழில் 'அங்கயற்கண்ணி' என்று அம்பாளைச் சொல்வார்களாம். 'அம் என்றாள் அழகிய, 'கயல்' என்றால் மீன், மீன்போன்ற அழகிய கண்ணுற்றவள் மீனாக்ஷி என்று அர்த்தம். 'அங்கச்சி அங்கச்சி' என்றே மதுரையில் எந்தப் பெண்ணையும் கூப்பிடுவது இதனால் தான்.

உலகம் சித்து அசித்து என இருவகைப்படும். சித்து அறிவுடைப்பொருள் அசித்து என்பது அறிவில்லாத பொருள் அதாவது ஜடம்.

* * * * * * * * * * * * * * * *

பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டாவது அறிவு நிகழ்ச்சியைத் சித்தென்று கொள்ள முடியாது ஏனெனில் இவ்வறிவு எக்காலத்தும் உடலைவிட்டு நீங்கலாகாதது. அப்படியன்றி உடல்கிடக்க அறிவு நீங்குகையால் அறிவுபஞ்சபூதங்களின் சேர்க்கையால் உண்டானதல்ல.

# THE IDEAL OF OUR WOOMANHOOD

SWAMI VIVEKANANDA

Râma and Sitâ are the ideals of the Indian nation. All children, especially girls, worship Sita. The height of a woman's ambition is to be like Sita, the pure, the devoted, the all suffering! When you study these characters, you can at once find out how different is the ideal in India from that of the West. For the race, Sita stands as the ideal of suffering. The West says, "Do. Show your power by doing,." India says, "Show your power by suffering" The West has solved he problem of how much a man can have : India has solved the problem of how little a man can have. The two extremes, you see. Sita is typical of India the idealised India. The question is not whether she ever lived, whether the story is history or not, we know that the ideal is there. There is no other Pauranika story that has so permeated the whole nation, so entered into its very life, and has so tingled in every drop of blood of the race, as this ideal of Sita. Sita is the name in India for everything that is good, pure and holy; every thing that in woman we call womanly. If a priest has to bless a woman he says, "Be Sita" If he blesses a child, he says, "Be Sita!" They are all children of Sita, and are struggling to be Sita, the patient, the all - suffering, the ever faithful, the ever-pure wife. Through all this suffering she experiences, there is not one harsh word against Rama. She takes it as her own duty, and performs her own part in it. Think of the terrible injustice of her being exiled to the forest! But Sita knows no bitterness. That is, again, the Indian ideal. Says the ancient Buddha: "When a man hurts you and you turn back to hurt him, that would not cure the first injury; it would only create in the world one more wickedness." Sita was a true Indian by nature; she never returned injury.

You may exhaust the literature of the world that is past, and I may assure you, that you will have to exhaust the literature of the world of the future, before finding another Sita. Sita is unique; that character was depicted once and for all. There may have been several Ramas, perhaps, but never more than one Sita! She is the very type of the true Indian woman, for all the Indian ideals of a perfected woman have grown out of that one life of Sita; and here she stands these thousands of years, commanding the worship of every man, woman and child, throughout the length and breadth of the land of Âryâvarta. There she will always be, this glorious Sita, purer than purity itself, all patience, and all suffering. She who suffered that life of suffering without a murmur, she the ever-chaste and ever- pure wife, she the ideal of the people, the ideal of the gods, the great Sita, our national God she must always remain. And every one of us knows her too well to require much delineation. All our mythology may vanish, even our Vedas may depart, and our Sanskrit language may vanish for ever, but so long as there will be five Hindus living here, even if only speaking the most vulgar *patois,* there will be the story of Sita present. Mark my words: Sita has gone into the very vitals of our race. She is there in the blood of every Hindu man and woman; we are all children of Sita. Any attempt to modernise our women, if it tries to take our women away from that ideal of Sita, is immediately a failure, as we see every day. The women of India must grow and develop in the foot-prints of Sita, and that is the only way.

Every girl in India must aspire to be like Savitri whose love could not be conquered by death, and who through this tremendous love snatched back from even Yama, the soul of her husband.

There was a king called Ashvapati. The king had a daughter who was so good and beautiful that she was called Savitri, which is the name of a sacred prayer of the Hindus. When Savitri grew old enough, her father asked her to choose a husband for herself. These ancient Indian princesses were very independent, you see, and chose their own princely suitors.

Savitri consented and travelled in distant regions, mounted in a golden chariot, with her guards and aged courtiers to whom her father entrusted her, stopping at different courts, and seeing different princes, but not one of them could win the heart of Savitri. They came at last to a holy hermitage.

Now it happened that there was a king, Dyumatsena, who was defeated by his enemies, and was deprived of his kingdom when he was struck with age and had lost his sight. This poor, old, blind king, with his queen and his son, took refuge in the forest and passed his life in rigid penance. His boy's name was Satyavân.

So Savitri came to this hermitage and saw there Satyavan, the hermit's son, and her heart was conquered. She had escaped all the princes of the palaces and the courts, but here in the forest-refuge of King Dyumatsena, his son, Satyavan, stole her heart.

When Savitri returned to her father's house, he asked her, "Savitri, dear daughter, speak. Did you see anybody whom you would like to marry?" Then softly with blushes, said Savitri, "Yes, father." "What is the name of the prince?" "He is no prince but the son of the king Dyumatsena who has lost his kingdom-a prince without a patrimony, who lives a monastic life, the life of a Sannyâsin in a forest, collecting roots and herbs, helping and feeding his old father and mother, who live in a cottage.

On hearing this the father consulted the Sage Narada, who happened to be then present, there, and he declared it was the most ill-omened choice that was ever made. The king then asked him to explain why it was so. And Narada said, "Within twelve months from this time the young man will die." Then the king started with terror, and spoke, "Savitri, this young man is going to die in twelve months, and you will become a widow: think of that! Desist from your choice, my child, you shall never be married to a short-lived and fated bridegroom." "Never mind, father; do not ask me to marry another person and sacrifice the chastity of mind, for I love and have accepted in my mind that good and brave Satyavan only as my husband. A maiden chooses only once, and she never departs from her troth." When the king found that Savitri was resolute in mind and heart, he complied. Then Savitri married prince Satyavan, and she quietly went from the palace of her father into the forest, to live with her chosen husband and help her husband's parents. Now though Savitri knew the exact date when Satyavan was to die, she kept it hidden from him. Daily he went into the depths of the forest, collected fruits and flowers, gathered faggots, and then came back to the cottage, and she cooked the meals and helped the old people. Thus their live went on until the fatal day came near, and three short days remained only. She took a severe vow of three nights' penance and holy fasts, and kept her hard vigils. Savitri spent sorrowful and sleepless nights with fervent prayers and unseen tears till the dreaded morning dawned. That day Savitri could not bear him out of her sight even for a moment. She begged permission from his parents to accompany her husband when he went to gather the usual herbs and fuel, and gaining their consent she went. Suddenly, in faltering accents he complained to his wife feeling faint, "My head is dizzy, and my senses reel, dear Savitri, I feel sleep stealing over me; let me rest beside thee for a

while." In fear and trembling she replied, "Come, lay your head upon my lap, my dearest lord". And he laid his burning head in the lap of his wife and ere long sighed and expired. Clasping him to her, her eyes flowing with tears, there she sat in the lonesome forest until the emissaries of Death approached to take away the soul of Satyavan. But they could not come near to the place where Savitri sat with the dead body of her husband, his head resting in her lap. There was a zone of fire surrounding her, and not one of the emissaries of Death could come within it. They all fled back from it, returned to the King Yama, the God of Death, and told him why they could not obtain the soul of this man.

Then came Yama, the God of Death, the Judge of the dead. He was the first man that died-the first man that died on earth-and he had become the presiding deity over all those that die. He Judges whether, after a man has died, he is to be punished or rewarded. So he came himself. Of course he could go inside that charmed circle, as he was a god. When he came to Savitri, he said, "Daughter, give up this dead body, for know death is the fate of mortals, and I am the first of mortals who died. Since then, every one has had to die. Death is the fate of man". Thus told, Savitri walked off and Yaman drew the soul out. Yama having possessed himself of the soul of the young man proceeded on his way. Before he had gone fa he heard footfalls upon the dry leaves. He turned back. "Savitri, daughter, why are you following me? This is the fate of all mortals." "I am not following thee, Father," replied Savitri,"but this is also fate of woman she follows where her love takes her, and the Eternal Law separates not loving man and faithful wife." Then said God of Death: "Ask for any boon, except the life of your husband." "If thou art pleased to grant a boon, O Lord of Death, I ask that my father-in law may be cured of his blindness and made happy." "Let thy pious wish be granted, duteous daughter. And then the King of death travelled on with the soul of Satyavan. Again the same footfall was heard from behind. He looked round. "Savitri, my daughter, you are still following me?" "Yes, my father; I cannot help doing so; I am trying all the time to go back, but the mind goes after my husband, and the body follows. The soul has already gone, for in that soul is also mine; and when you take the soul, the body follows, does it not?" "Please am I with your words, fair Savitri, ask yet another boon of me but it must not be the life of your husband." "Let my father-in-law regain his lost wealth and kingdom father, if thou art pleased to grant another supplication." "Loving daughter," Yama answered, "this boon I now bestow; but return home, for living mortal cannot go with King Yama." And then Yama pursued his way. But Savitri, meek and faithful, still followed her departed husband. Yama again turned back, "Noble Savitri, follow not in hopeless woe." "I cannot choose but follow where thou takes my loved one." "Then suppose, Savitri, that your husband was a sinner and has to go to hell. In that case goes Savitri with the one she loves?" "Glad am I to follow where he goes, be it life or death, heaven or hell," said the loving wife. "Blessed are your words, my child, pleased am I with you, ask yet another boon, but the dead come not to life again." "Since you so permit me, then, let the imperial line of my father-in-law be not destroyed; let his kingdom descend to Satyavan's son." And then the God of Death smiled. "My daughter, thou shalt have thy desire now: here is the soul of thy husband, he shall live again. He shall live to be a father, and thy children also shall reign in due course. Return home. Love has conquered Death! Woman never loved like thee, and thou art the proof that even I, the God of Death, am powerless against the power of the true love that abideth!

# சர்வம் சக்தி மயம்

சுவாமி விபுலானந்தர்

வாக்குமனாதீத கோசரமாகிய ஒரு பரம்பொருள் உண்டென வேதங்கள் கூறுகின்றன. 'அப்பரம்பொருளினை நாம் அறிதல் கூடுமோ?' எனின், அறிதல் கூடாது. உரையினாலும் மனத்தினாலுமளத்தலே அறிதலாதலால், அறிதற்குரியபொருள் உரை மனம் இரண்டினுக்கும் உட்பட்டு நிற்றல் வேண்டும்; ஆதலால், உரை மனமிறந்து நின்ற பரம்பொருளை யாம் எங்ஙனம் அறிதல் கூடும்? அங்ஙனமாயினும், வேதங்கள் அப்பரம்பொருளை 'அநந்த கல்யாண குணமுடையோன்' எனப் போற்றித் துதிக்கின்றன. குணியாகிய பரம்பொருள் உரை மனமிறந்து நின்ற எம்மால் அறியப்படாததொன்று ஆயினும், அப்பரம்பொருள் குணங்கள் எம்மால் அறியப்படுந்தகையன. சத்தனாகிய உருத்திரனை நாம் அறியோம்; சத்தியாகிய உருத்திராணியை நாம் அறியவல்லோம். தினமும் மாலைக்காலமுச் சந்திப்பொழுதில், பகற்காலம் அகன்று இரவு வந்தெய்தும் எல்லையிலே, வேத நூல் வல்ல அந்தணர்கள் உருத்திராணியைத் துதிப்பார்கள். பகல் முழுதும் தொழில் செய்துகொண்டிருந்த உயிர்க்கூட்டங்கள் தாஞ்செய்த தொழிலினின்று நீங்கியடங்குகின்ற மாலைக்காலம் சர்வசம்ஹார காலத்தில் தொழிலினின்று நீங்கியடங்குகின்ற மாலைக்காலம் சர்வசம்ஹார காலத்தில் சூரியசந்திர நட்சத்திரங்களனைத்தும் ஒழிந்து போகப் பிரபஞ்சமனைத்தினுங் கவிந்து நின்ற பேரிருளை நிகர்க்குமன்றோ? ஞானக்காட்சியினாலே இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களையுமுணர்ந்த முதன்மையோர், சர்வ சம்ஹார காலத்திலே தோற்றுகிற மஹா சத்தியாகிய ஆத்யகாளியைக் கரியநிறத்தோடும், கையிற் கத்தியோடும், பிரமசிரங்களாலமைந்த மாலையோடும், ஸ்மசான பூமியிலே தோற்றுவதாகத் தியானிப்பார். ஸ்மசானம் பரிசுத்த பூமி. உயர்ந்தோர், தாழ்ந்தோர், இளையோர், முதியோர், செல்வர், வறிஞர், பண்டிதர், பாமரர் என்றின்னோரன்ன வேறுபாடுகளை அகற்றிவிட்டு அனைவரும் ஒரு தன்மையராய் ஈற்றில் வந்தடைகின்ற இடமிது. மன்னர் மண்டலீகரும் அவரால் அற்பமென்று கருதப்படுகிற ஏழைகளும் ஈற்றில் ஒரே தன்மையராகி வெந்து ஒரு பிடிச் சாம்பராய்விடுவார்கள் என்பதைத் தினமுஞ் சிந்தித்து வருவோமாயின், அகங்காரத்துக்கு இடமெங்கே? பிறரைக் கெடுக்கவெண்ணுகிற குரோதத்துக்கு இடமெங்கே? ஆதலால், உட்பகை ஆறையும் கடந்து உண்மையை அடைய விரும்புவோமாயின், மகா ஸ்மசானத்தை மனத்தினாற் சிந்திப்போமா! பிரபஞ்சமனைத்தும் பெரியதொரு ஸ்மசானமாகும். மயக்கத்துக்கு இடமாயிருக்கின்ற கல்வி செல்வம் என்பனவும், இவை காரணமாகத் தோற்றுகிற பல வகை வேறுபாடுகளாலமைந்த பிரபஞ்சமும் ஒழிந்த நிலையில் உண்மை ஞானம் உதிக்குமாதலின், ஞானத்தை விரும்பிய மேலோர் சங்கார கருத்தனாகிற பரம்பொருளோடு அந்நியோந்நியமாய் நின்ற சங்கார காரணியாகிய உருத்திராணியைத் தோத்திரம் பண்ணுவர்.

## வைஷ்ணவி

வேதநூல் வல்ல அந்தணாளர்கள் உச்சிப்பொழுதில் நீரிறைத்து மலர் தூவி வைஷ்ணவி சக்தியைத் துதிப்பார்கள், பொருள் இன்பம் என்னும் புருஷார்த்தங்கள் இரண்டினுக்குமுரியவள் வைஷ்ணவி சத்தியேயாதலின் முன்னொரு காலத்திலே, தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலினைக் கடைய, ஆண்டிருந்து அமுதத்தொடும் எழுந்த பொருளின் செல்வியாகிய மலர்மகள், அரிபரந்தாமனுக்கு மனைவியாயினள்; பின்னுமோரூழியில் வராகவுருவினைக்கொண்ட மாதவன் மண்மகளைத் தனது மருப்பிலேந்தினன்; அன்றே அவளவனுக்கு மனைவியாயினள். அவனைக் காப்பாற்றி வருவது வாசுதேவனுக்குரிய கடமையாயிற்று; கேவலம் மானிடராகிய ஆடவர் தம்மனைவியருக்குப் பொன்னும் பூணுங்கொடுத்துப் போற்றி வருவாராயின், புருஷோத்தமனாகிய நாராயணன் தனக்குகந்த நாயகியாகிய நிலமகளைப் போற்றாது விட்டுவிடுவானா? ஆதலினால், மாயவன் பலப்பல வடிவந்தாங்கி உலகிலுற்பவித்துத் துட்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்து, பூபாரந்தீர்ப்பது இயல்பாயிற்று. இன்னணமேற்பட்ட அவதாரங்களுள் அயோத்தியில் தசரத குமாரனாகிய

அவதாரத்திலே திருமால் ஸ்ரீ ராமசந்திரனென்னும் பெயரினைத் தாங்கத் திருமகள் சீதாபிராட்டியாய்த் திருவவதாரஞ் செய்தாளெனவும், அரவணைச்செல்வன் கோபாலனாய் விளங்க அரிப்பிரியை உருக்குமிணி சத்தியபாமா முதலிய அட்டலக்ஷ்மிகளாய் அவன் மருங்கு பொலிந்தாளெனவும் புராணம் கூறுகின்றது.

பதுமநாபன் காயாம்பூ நிறத்தினன். அவனையகலாது அவனோடு என்றும் உடனின்ற பதுமை செந்தாமரைப்பூ நிறத்தினள். திருமகளும் திருவின் கேள்வனும் நித்தியராய் வியாபகராய் அனைத்துயிரினுஞ் செறிந்து நிற்பாரெனப் பாஞ்சராத்தி ஆகமங்கள் கூறுகின்றன. திருமகள் திருமாலினுடைய சக்தி; ஆதலினாலே, நிலமகளுங் கோகுலத்தில் கண்ணனுடைய திருநயன நோக்கத்தைக் காதலித்து நின்ற பாவைமாரனைவரும் திருமகளின் அமிசம் ஆவாரென்பது பெறப்படுகின்றது. செல்வம், வனப்பு வெற்றி என்னுமிவை திருமகளுக்குரிய இலக்கணங்கள். ஆதலினாலன்றோ தனலக்ஷ்மி, சௌபாக்கிய லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி என ஆன்றோர் போற்றினர்? 'இங்ஙனம் போற்றப்பட்ட சக்திகள் ஒன்றா பலவா?' என்றால், தீயென்னும் ஒரு பொருளே, அடுதல் சுடுதல் முதலிய தொழில் வேற்றுமையாற் பலவேறு வகைப்படுமாறுபோல, ஒரு சத்தியே தொழில் வேறுபாட்டாற் பலவாக வழங்கப்படுமென்க.

இனிச் செல்வம், வனப்பு, வெற்றி என்னும் இவற்றை மருவி மணி முடி கவிந்து நிலவலயத்தையாளும் மன்னரைத் தமிழ்ப்புலவர் திருமாலாக மதித்து 'பூவை நிலை' என்னும் செய்யுட்புனைந்தளிப்பர். இச்செயலின் உட்கிடையைச் கூர்ந்து ஆராயுமிடத்துப் பெரியதோர் உண்மை புலப்படுகின்றது. 'அஃது எதுவோ?' என்னில், சத்தி எவ்வெவ்விடத்து வெளிப்படுகிறாளோ, அவ்வவ்விடத்துச் சத்தனும் வெளிப்படுவானென்பது. அங்ஙனமாதலிற் சத்தியுஞ்சத்தனும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு நிற்பரெனினும், உண்மையளவில் ஒருவராய் நிற்பாரென்பது முடிகின்றது. இக்குறிப்பினைப் பின்னரும் ஆராய்வாம். 'செல்வம், வனப்பு, வெற்றி என்னும் இவற்றினைப் பெருகப்பெற்ற சிறப்பினோராகிய மன்னர் திருமாலின் அமிசமாகுங்கால், இவ்விலக்கணங்களை அளவாகப் பெற்ற ஏனைய ஆடவரும் திருமாலின் அமிசம் ஆவாரோ? ' எனின், ஆவாரென்பது. ஆண் தன்மை படைத்த ஆட வரனைவரும் புருஷோத்தமனாகிய நாராயணனுடைய அமிசமாகக் கருதப்படுவர்; புருஷோர்த்தங்களுட் பொருள் இன்பம் என்னும் இரண்டினையுந் துய்த்து அவற்றின்மேல் அருவருப்புற்று ஞானத்தைத் தேடும் பெரியாரே சங்கார கருத்தனைத் துதித்தற்கு அருவருப்புற்று ஞானத்தை தேடும் பெரியாரே சங்கார கருத்தனைத் துதித்தற்கு அருகராவார்; பொருள் இன்பம் என்னும் இவற்றை விழைந்தோர் இலக்குமி தேவியையும் பதுமநாபனையும் இறைஞ்சுவதே மரபாகும்.

## பிராமி

சர்வசங்கார காலத்துக்குப் பின் யாண்டு இருள் கவிய, நிறைந்த நீரின் மேற்பரப்பிலே ஆலிலையொன்றின் மீது நீலமேனியோன் அறிதுயில் புரிவானெனவும், பின்னர் அவனது நாபியங்கமலத்தினின்ற இரணிய கருப்பனாகிய பிரமதேவன் தோற்றுவா னெனவும், அப்பிரமதேவன் பிராமி என்னுஞ் சத்தியினுடைய உதவியினால் உலகங்களைத் தோற்றுவிப்பானெனவும் புராணம் கூறுகின்றது. ஆகவே, பிராமி, வைஷ்ணவி, உருத்திராணி என்னும் மூவரும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலென்னும் முத்தொழில் புரிந்து வருகிறாரென்பது பெறப்படுகின்றது. சர்வ சங்கார காலத்து இருள் அகன்று ஒளியும் உயிர்த்தோற்றமும் வெளிப்படுகிற படைத் தற்காலம் குணதிசையிற் பருதியெழுகிற காலைப்பொழுதை நிகர்த்தது. வேத நூல் வல்ல அந்தணர்கள் காலைப்பொழுதில் நீரிறைத்து மலர் தூவிப்பிராமியென்னும் சத்தியை வழிபடுவார்கள். உஷத்காலத் தோத்திரமாக வேதத்திற் காணப்படும் பதிகங்களும் உலக மாதாவாகிய பிராமிக்கு உரியனவே.

## பராசக்தி

நவராத்திரி விரதத்தை அநுட்டிப்போராக யாம் வழிபடுகிற தெய்வவுருவத்தின் மாண்பினையாராய்ந்து சிந்திப்போமாயின், அறிதற்கரிய இரகசியங்கள் பலவற்றை எளிதில் அறிந்துகொள்வோம். யாம் இதுகாறும் கூறிய பிராமி, வைஷ்ணவி, உருத்திராணி என்னும் சத்திகளும் பிறவும் அத்தெய்வ உருவத்திற்றோற்றுவன. ஆங்குத் தோற்றும் மூர்த்திகளைத் தனித்தனி மூர்த்திகளாகக் கருதுவோர் உண்மை தேரார். உரை மனமிறந்து நின்ற ஒரு தனிப்பரம் பொருள் தானே தனது அருளினால் மக்களாகிய நாம் கண்டு தரிசிக்கும்படி வெளிப்படுத்திய அருளுருவம் அத்தெய்வவுருவம் என்பதை உளங்கொண்டு நாம் அத்தெய்வுருவத்தை தியானித்தல் வேண்டும். அத்தெய்வ உருவத்தின் நடுவிற் பராசத்தியாகிய எம்மன்னை தோற்றுவாள். அவள் ஆரோகணித்திருக்கின்ற சிங்கமானது, வேத முதலிய அனைத்துக் கலைஞானங்களும் ஒடுங்குகின்ற வாக்கு ரூபமாகும். மகிஷாசுரன் அஞ்ஞான ரூபம்; அவனையழிக்கின்ற

எம்மன்னையே ஞானரூபியெனத் தேவரும் முனிவருந்துதித்தேத்துவர். நடுவில் நின்ற திருவுருவத்தினிருபாலும் கலைமகளுந் திருமகளுந் தோற்றுவர். இவ்விருவரையும் பராசத்தியினுடைய புத்திரிகளென நாம் நமது மக்கட்டன் மைக்கு இயையக் கூறுவோமெனினும், உண்மையில் இருவரும் பராசத்தியினின்றும் வேறல்லர். கல்விக்கிறைவி பராசத்தியினோர் அமிசம்; செல்வத்துக்கிறைவி மற்றோர் அமிசம். மேலும், ஒருபால் ஞான கணேசனும், மற்றொருபால் அமரர் சேனாதிபதியாகிய குமரநாயகனுந் தோற்றுவர். கலைமகளுக்குச் சித்தி, புத்தி என்னும் இரு புத்திரிகளுளரென்றும், அவ்விருவரையுங் கணேசமூர்த்தி மண முடித்தாரென்றும் பார்க்கவ புராணம் கூறுகின்ற இயல்பை நோக்குமிடத்துக் கலைமகள் கல்விக்கிறைவியென்றும், அக்கல்வியினாற் பெறப்படுகின்ற அறிவு (புத்தி), அநுகூலம் (சித்தி) என்னுமிவற்றுக்குத் தலைவராய் விளங்கும் பதியினைக் கணபதியென வேதம்வழுத்திற்றென்றும் அறிவோம். இனிக் கலையனைத்துஞ் சார்ந்து நின்ற சத்தனை வேதம் இரணிய கருப்பனென துதிக்கும். இங்ஙனம் துதிக்கப்படுகின்ற இரணிய கருப்பனும் (பிரமன்) கலைமகளும் (பிராமி), சித்தி புத்தியும், ஞான கணேசனும் பராசக்தியினது பரஞான ரூபத்துக்கு வாயிலாக நின்ற அபரஞான அமிசமாவாரேயன்றி வேறாகாரென்பது பெறப்படுகின்றது. தெய்வயானையம்மையார் திருமாலுக்குப் புதல்வியராயதோடு தேவராஜனாகிய இந்திரனுக்கும் புதல்வியாராகிப் பொருளுக்குத் தலைவியாராய் விளங்குவார். அன்பினைந் திணைப்பாலதாகிய இன்பத்துக்குரிய சத்தி வள்ளி நாயகியாரென்பது வெளிப்படை. அங்ஙனமாகவே, பொருள், இன்பம் என்னும் இரண்டினையும் திருமாலுக்குந் திருமகளுக்கும் புதல்வியரெனக் கொள்ளுவதும் இவ்விரண்டினுக்குந் தலைவராக விளங்கிய வீரவேற்கரத்தரைத் திருமால் மருகரெனக் கொண்டு துதிப்பதும் மனிதராகிய நமக்கு இயல்பேயாம். புராணக் கதையை ஒருபால் வைத்துவிட்டுத் தத்துவ உண்மையை நாடுவோமாயின், திருமால், திருமகள், இந்திரன், குமரநாயகன், வள்ளிநாயகியார், தெய்வானையம்மையார் என்னும் அனைவரும் பராசத்தியினுடைய அர்த்த காம (பொருளின்ப) ரூபத்தின், அமிசமாவாரேயன்றி வேறாகாரென்பது பெறப்படுகின்றது.

பரஞானம் மோக்ஷ சாஸ்திரப் பொருளாகும்; அபர ஞானம் அதற்கு வாயிலாக நின்ற தர்ம சாஸ்திரங்களின் பொருளாகும். இவ்வாறு ஆராயுமிடத்து நவராத்திரிக் காலத்தில் அம்மன் கொலுவிருக்கையென நாம் பூசிக்கின்ற திருவுருவம் ஒன்றாகி இச்சை, ஞானம், கிரியை என்னும் மூன்றினையும் தன்னுட்பொருந்தியதாய், அறம், பொருள், இன்பத்தையும் அவற்றின் நீங்கிய வீடு பேற்றினையும் அளிக்குமியல்பினதாய், அஞ்ஞானத்தையகற்றி ஞானத்தைத் தருகின்ற பரவொளியாய், வாக்கு மனோதீத கோசரமாகிய பரம்பொருளை யாம் சிந்தித்துத் துதிப்பதற்கியைந்த திருவுருவமாய் விளங்குவது. புருஷார்த் தங்களனைத்தினையும் வேண்டி நின்றோர் மங்கள ரூபியாகிய இறைவியைத் துதிப்பாராதலினால், யாமும் எம்மாலியன்ற தமிழ் மாலை புனைந்து அவளது மெல்லென்ற நீர்மையவாய சிற்றடியை உள்ளத்தினுஞ் சிரத்திலுமிருத்தித் துதிப்போமாக:

*ஆயிரங் கதிரவ ரொருங்குதித் தனரெப்*
*பாயிருள் சீக்கும் படிவமப் படிவத்து*
*இலங்கொளி நிறைமதி யேய்ப்பத் துலங்கும்*
*நுதற்கட் டீட்டிய நுண்சுடர்ச் சுட்டிபொடு*
*கருமுகிற் கூந்த லிடைமிளிர் திருமுகம்*
*திருமுகத் தொளிர்வது சிறுபுன் முறுவல்*
*அதுவே,*
*அரியே றிவர்ந்து வாட்படை யேந்தி*
*எருமைப் பேரோ னுரனழி திருநாட்*
*சுரகுல முதல்வர்க் குவகையும் பரவா*
*அவுண மாக்கட் கச்சமுங் காட்டிய*
*நிலைய தாலித னீள்கடல் வரைப்பினில்*
*அருள்பெறு வாருக் கருளுங் காட்டும்;*
*மருள் பெற மவருக்கு மருட்சியும் காட்டும்*
*அவ்வழி,*
*திருவிழை மாந்தர் திருமகட் கண்டனர்;*
*கலைவிழை மாந்தர் கலைமகட் கண்டனர்;*
*அறநெறிச் செல்வோ ரறத்துமுதல் கண்டனர்;*
*தவநெறிச் செல்வோர் தவத்துமுதல் கண்டனர்;*
*சுற்றமுந் தொடர்பு நீங்கிய கொள்கைப்*
*பற்றறு மாண்பினர் பரவெளி கண்டனர்;*
*யானெக் கண்டனம் யாமு மாதலின்*
*வேத முதல்வியை மாதவப் பயனை*
*மலைக்கிறை பயந்த மழலையங் குழவியை*
*நீல மேனி நெடியோன் றங்கையை*
*ஆல முண்டவற் கரும்பெருந் துணைவினய*
*ஓமெனு முருவனை யுவந்தருளனையைச்*
*சேயைப் பயந்த செல்வியை யாய்தமிழ்*
*வளம்பொலி தருகென வழுத்தி*
*உளங்கொண் டேத்துக முண்மைதேர் பொருட்டே.*

# அருள் நெறியும் மாதரும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள?" என்று திருவள்ளுவர் வினா எழுப்பவில்லை விடையையே வினாப்போல் எழுப்புகின்றார். பெண்ணினம் பாரட்டுதலுக்கும், பெருமைக்கும் உரியது பெண்எதையும் அதிகமாக விவாதிக்காமல் ஏற்றுக்கொள்வாள், நம்புவாள், வாழ்ந்தும் காட்டுவாள், அதனாலன்றோ சேக்கிழார் பரவையாரைப் பாராட்டுவது போல பெண்ணினத்தையே பாராட்டுகின்றார். சேக்கிழார், சுந்தரர் வாயிலாகப் பரவையாரைப் பாராட்டும் போது 'கற்பகத்தின் பூங் கொம்போ?' என்று வர்ணிக்கின்றார். கற்பகதரு, கருதியவை அனைத்தையும் தரும் என்பது மரபு. அதுபோல, நல்லபெண், கருதியவை அனைத்தையும் தரவல்ல ஆற்றல் உடையவளாக இருப்பாள் என்பது பெறப்படுகிறது.

ஏழாம் நூற்றாண்டில் சமயவாயிலாக சமுதாயப் புரட்சியை நிகழ்த்திய நமது அப்பர் அடிகளும், திருஞானசம்பந்தரும் பெண் இனத்தின் பெருமையை – மனையறத்தின் மாட்சியை விளக்கப் பெரிதும் தொண்டாற்றி உள்ளனர். அவர்கள் காலத்தில் வடபுலத்தில் இருந்து வந்த பௌத்தமும் சமணமும், தமக்கென நாடும், மொழியும், இறையும் இல்லாத – சுழன்று திரிந்த மாயாவாதமும் பெண்ணினத்தை இழிவுபடுத்தின. மனையறத்தை சிற்றின்பம் என்னும் விலங்கு என்றும் வர்ணித்தனர். இயற்கை நெறிக்கு மாறாக துறவு நெறியை வலியுறுத்தினர். இக்கொள்கையைக் கடிந்து நாளும் இனிய தமிழால் அகனைந்திணை வழக்கத்தின் பெருமையை முழங்கினர் நாயன்மார்கள். ஈருருவமும் ஒருருவமாய அம்மையப்பன் வழிபாடு கூட ஏழாம் நூற்றாண்டிலேயே முதன்மைப் படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்ற தெரிகின்றது.

வாழ்க்கை இனியது – இலட்சிய நோக்குடையது. வாழ்க்கையை மகிழ்ந்து நோக்கி, இனிமைப் பண்புடையதாக்கி இலட்சிய நிறைவிற்குரியதாக்கிக் கொள்ளும் முயற்சி வேண்டும். இங்ஙனம் வாழும் முறையையே திருவள்ளுவர் 'வாழ்வாங்கு வாழ்தல்' என்று குறிப்பிடுகின்றார். வாழ்வாங்கு வாழும் நெறிக்கே அருள்நெறி என்று பெயர்.

திருஞானசம்பந்தர் அருளிய தமிழ், அருள்நெறித் தமிழ், அப்பர் அடிகள் வளர்ந்த நெறி நன்மை பெருகு அருள் நெறி காந்தி அடிகள் நின்று வாழ்ந்த நெறி அருள் நெறி.

அருள் நெறியின் முதல் நெறி அன்பு செய்வது, வாழ்க்கையின் முன்னும் பின்னுமாய முழு இலட்சியம் அன்பு செய்வதே ஆகும். இவ்வுடம்பின் அகத்துறுப்புக்களையும் புறத்துறுப்புக்களையும் கூர்ந்து நோக்குவோமாயின் அன்பு செய்வதற்கென்றே அவை அமைந்திருப்பது புலனாகும்.


அன்பின் வழியது உயிர்நிலை என்பது குறள் பண்பாளருக்குக் காட்டும் அன்பு பண்பை வளர்க்கும். பகைவனுக்குக் காட்டும் அன்பு பகையைக் குறைக்கும். அன்பு செய்யும் ஒழுக்கத்தை ஆண்மகன் முயன்று பெறுகிறான் பெண்ணோ இயல்பிலேயே பெற்றுக் கொள்கிறாள். அதனால் தான் அன்புக்கு உவமையாகப் தாயே பேசப்படுகிறாள். இலக்கியங்களின் பெண்பருவம் தோறும் அன்பு காட்டுவதில் முதிர்ச்சி அடைகிறாள் பருவத்திற்குரிய அன்பையும், தியாகத்தையும் அள்ளிச் சொரிகிறாள். அன்புப் பாடம் கற்றுக்கொடுக்கும் தலையாய ஆசிரியர் குலம் பெண் குலமே.

அருள் நெறியின் இரண்டாவது ஒழுக்கம் அறநெறி நிற்றல் அறத்தின் பாற்பட்ட ஒழுக்கம் கூறுகள் பலபல எனினும் பிறருக்கு உதவி செய்தலும் அங்ஙனம் உதவிசெய்யும் ஆற்றல் கைகூடாத போது துன்பம் செய்யாது இருந்தலுமே சிறந்த அறப்பண்பு இப்பண்பு மனித

குலத்தில் வளர்ந்தால் சட்டங்களும், திட்டங்களும் இல்லாமலே, சோசலிசத்தை நாம் கண்டுவிட முடியும் இத்தகைய அரிய பண்பை இயல்பிலேயே பெண்மை பெற்றிருப்பது பாராட்டுதற் குரியது. ஒரு பெண் தாய்மையை அடைகின்ற பொழுது அவள் செய்யும் தியாகத்திற்கு ஒப்பான வேறு தியாகத்தை நாம் காட்ட முடியுமா தன் செங்குருதியையே பால் உணவாக மாற்றி குழந்தைக்கு ஊட்டி வளர்க்கிறாள். இதைவிடச் சிறந்த கருணையை நாம் காண முடியுமா? இதனாலன்றோ நம் மாணிக்க வாசகர் இறைவனைப் பாராட்டும் போது தாய் முலையை தருவானை என்று குறிப்பிடுகின்றார். அதுமட்டுமல்ல குழந்தையின் நோய்க்கு தான் மருந்துண்டு பத்தியம் காக்கும் பண்பும், தாய்மை இடத்திலே உண்டு. இத்தகைய சிறந்த இயல்புகளையே மற்றவர்களுக்கும் இவர்கள் கற்றுக் கொடுப்பார்கள். அதனால் வையகம் துயர் நீங்கி வானுற வோங்குவோம்.

அருள் நெறியின் மூன்றாவது ஒழுக்கம், இறை வழிபாட்டு நெறி உடலுக்குத் தேவை மூச்சுக்காற்று உயிருக்குத் தேவை இறைவழிபாடு. இரைப்பைக்குத் தேவை சோறு அகத்துக்கு தேவை அருளியல் சிந்தனை பெண்களிடத்தில் இயல்பாகவே கடவுள் வழிபாட்டு உணர்ச்சி மிகுந்து இருக்கிறது. அதன் காரணமாகவே அவர்களிடத்து நல்லியல்புகளும் பல்கிப் பெருகிக் காணப்பெறுகின்றன. சமயவரலாறுகளைப் பார்த்தாலும் ஆண்மக்கள் தடம்புரண்ட பலசெய்திகளை பார்க்கின்றோம். ஆனால் பெண்கள் தாம் தடம் புரளாததோடு, தடம்புரண்டவர்களையும் தகுதிப்படுத்தி அருள் நெறிக்கு ஆற்றுப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்த சிறப்பியல்புகளுக்குத் திலகவதியார், மங்கையர்க்கரசியார் வரலாறுகளை நாம் எடுத்துக் காட்டாகக் கூறலாம். இத்தகு பெருமைக்குரிய பண்புக் கூறுபாடுகளை இயல்பிலேயே பெற்றிருக்கிற பெண்மைக்குலம், தாய்மைக்குலம் சுழன்றடித்து வரும் புதுமைக் காற்றின் பேரால் தடம் புரளாமல் நிலைபெற்றிருப்பார்களானால் அருள் நெறி வளரும். அவர்கள் மனிதகுலத்தை நேசிக்க, அன்பு செலுத்த நமக்கு நல்வாழ்க்கையை காட்ட வேண்டும். குறைவிலா நிறைவாக கோதிலா அமுதாக விளங்கும் திருவருளை வாழ்த்த இன்ப அன்பு கலந்த நல்வாழ்வுவாழ வழிநடத்திச் செல்ல வேண்டும்.



விநாயகனே வினையறுப்பவன். தனக்கு மேலான தலைவன் இல்லாதவன். விநாயகனை நினைத்து வணங்கி கிரியைகளைத் தொடங்க பசுவின் சாணத்தினால் இந்துக்கள் பிள்ளையார் பிடித்து அதன் மீது அறுகம்புல் குத்தி வைத்து வணங்கித் துதிப்பர். வாசலில் கோலம் இடும் பின்னரும் இல்லங்களில் மற்றும் கிரியைகள் நடைபெறும் போதும் பிள்ளையார் பிடித்து வணங்குவது வழக்கம். பசுவின் சாணத்தினால் பிள்ளையார் பிடிப்பதே மிகச் சிறந்தது. சாணம் மருத்துவ சக்தி வாய்ந்தது. சிறந்த தொற்று நிவாரணியும் கூட. இதனாலேயே வாசல், மண்டபம் போன்ற இடங்களைத் துப்பரவு செய்ய கூட்டிப் பெருக்கி சாணித்தண்ணீர் தெளித்துத் தூய்மைப்படுத்துவர் வயல்களில் தோட்டங்களில் வேலை செய்வோர் தம் முரிவு, வெடிப்பு போன்ற உடன் காயங்களுக்கு பசுவின் சாணம் சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்பட்டதை டாக்டர் ஸ்ரீபநைடெஸ் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

கொடிய ஜுரங்களுக்கும் காய்ச்சலுக்கும் கூட பசுவின் சாணம் உடம்பில் பூசி மருந்தாகப் பயன்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாணத்திலிருந்தே திருநீறு தயாரிக்கப்படுகிறது. திருநீறு தெய்வீகத் தன்மையோடு கடும் குளிரைப் போக்கக்கூடியதாகவும் கிருமி நாசினியாகவும் கூட உள்ளதை நாம் நினைவிற் கொள்ளவேண்டும்.

# நமது சிறப்பான பாரம்பரியம்

**சுவாமி சின்மயானந்தர்**

நம்முடைய முன்னோர்கள் விஞ்ஞான அறிவு இல்லாதவர்கள் என்றும், பொதுவாக ஓரிடத்திலேயே அமர்ந்து எதுவும் செய்யாமல், தியானம் என்று கண்ணை மூடிக்கொண்டு இருந்துவிட்டவர்கள் என்றும் பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய முன்னேற்றத்தில் அக்கறை இல்லாத மேலைநாட்டினர், நம்மை நாகரிகம் தெரியாதவர்கள் என்றும், மூடநம்பிக்கைகளில் ஊறிப் போனவர்கள் என்றும் பட்டம் கட்டி விட்டார்கள். ஆனால் அறிவார்ந்த உலகமக்கள் சிலர், இந்து மதத்திற்கு ஒரு பெருமை மிக்க பின்னணி இருப்பதை உணர்ந்தார்கள். நமது பழம் பெரும் கலாசாரத்தை ஆராய முற்பட்டார்கள். அதன் பலனாகப் பலரும் அறியாமையில் மூழ்கிக் கிடந்தவர்களாகக் கருதப்பட்ட நமது முன்னோர்கள் மிகச் சிறந்த அறிவாளிகள் என்றும், அவர்கள் எழுதி வைத்த நுட்பங்களே இன்று பலவிதமான கண்டுபிடிப்புகளாக உருவாகி உள்ளன என்பதும் தெரிய வந்தது.

விஞ்ஞானி மெய்ஞ்ஞானி இருவருமே உண்மையைத் தேடி அலைபவர்கள் தான். விஞ்ஞானி வெளி உலகத்தையும் அதில் உள்ள பொருளையும் ஆராய்கிறான்; மெய்ஞ்ஞானி தனக்குள்ளேயே ஒளிவிடு பேருண்மையை அறிந்து கொள்ள முற்படுகிறான். இந்தியாவில் இருவரும் வெவ்வேறு திசைகளில் தமது ஆராய்ச்சிகளை மேற் கொண்டதாக எண்ணிக் கொள்ள வேண்டாம். நமது முன்னோர்களிடையே இருந்த சிறந்த புத்திசாலிகள் பலரும், உலகின் மற்ற பகுதிகளில் உள்ளவர்களைப் போலவே தம்மைச் சுற்றியுள்ள பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார்கள். வழி வழி வந்த இந்த உண்மைகள் மேலும் பல உண்மைகளைக் கண்டு பிடிக்கவும் துணை செய்தன. ஆனால் இவற்றினால் கிடைக்கும் சுகம் மன அமைதியைத் தரவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். இதுவே அவர்கள் தமது ஞானப்பார்வையை உள்முகமாகத் திரும்பி, தம்மைத்தாமே உணர முனைவதற்குக் காரணம் ஆயிற்று.

இதன் பலனாக நமக்குத் கிடைத்தவையே வேதாந்தப் பேருண்மைகள். உலகெங்கிலும் உள்ள பேரறிஞர்கள் இந்தப் பேருண்மைகள் தரும் விளக்கங்களையும், அவைதரும் மன அமைதியையும் உணர்ந்து, இந்த நாட்டை நாடிவரத் தொடங்கினார்கள். அப்படி அவர்கள் ஆராய முற்பட்டபோது தான், விஞ்ஞானம் என்பது இந்த மெய்ஞ்ஞான உணர்வின் ஒருபகுதியாகவே நம்மிடையே வளர்ந்து வந்திருப்பதும் புலனாயிற்று; விஞ்ஞானம் உபவேதங்களாகவும், தத்துவ விளக்கங்கள் வேத உபாங்கங்களாகவும், எல்லாம் சேர்ந்து வேதத்தின் முடிவு – வேதாந்தம் என்று இருப்பதும் தெரிய வந்தது.

சம்ஸ்கிருத இலக்கியங்கள் என்றால் புராணக் கதைகள் என்றும் , நம்பிக்கைகள், சடங்குகளைப் பற்றிய விவரங்கள், பாவம் – புண்ணியம் பற்றிய விளக்கங்கள் ஆகியவை அடங்கியவைதான் என்ற தவறான எண்ணம் உள்ளது. அவை கணிதம், வான்கணிதம், தாவர இயல், விலங்கியல், மருத்துவம், பொருளாதாரம், இசை, கட்டிடக்கலை, உடற்கூறுஇயல், காமசாஸ்திரமும் கூட விளக்கமாகச் சொல்லப்பட்ட நுட்பமான நூல்கள் அடங்கியது என்பதைப் பலரும் தெரிந்து கொள்ளவில்லை. நமது முன்னோர்கள் கண்டுபிடித்த அன்றைய அபூர்வக் கண்டுபிடிப்புகள் சிலவற்றை, இன்றைய விஞ்ஞானப் புதுமைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். அவற்றுக்குப் பின்தான் அவர்கள் மனிதன் உள்ளத்துக்கு அமைதி தரும் தத்துவ விளக்கங்களை நாடமுற்பட்டார்கள் என்பதையும் புரிந்து கொள்வோம்.

சரித்திர ஆராய்ச்சியாளர்கள், இன்று பலராலும் புகழப்படும் எகிப்திய நாகரிகத்துக்கு முன்னோடிகளான நிபுணர்கள் இந்தியாவிலிருந்து தான் சென்றார்கள் என்ற கூறுகிறார்கள். சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்பே உயர்நாகரிகம் இந்தியாவிலிருந்து எகிப்தில் குடியேறியதாகக் கூறுகிறார் ஆல்காட் என்ற சரித்திர ஆராய்ச்சி நிபுணர்.

இன்றைய வான்கணித (Astronomy) குறிப்புகள் 1350 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. ஆனால் அதற்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வேதங்களில் இவற்றுக்கான அடிப்படைக் குறிப்புகள் காணப்படுகின்றன. சூரிய சித்தாந்தத்திலிருந்து அறியப்படும் நுட்பமான கணக்கு விவரங்களும், நவீன வான்கணிதக் குறிப்புகளும் ஒப்பிடும்போது ஒத்திருக்கின்றன.

ஸில்வியன் பெய்லி, டியூபோ போன்ற ஆராய்ச்சியாளர்கள், இந்து 'ஸோடியாக்' விவரங்களே காலண்டர் அமைப்புக்கு முன்னோடியாக இருந்ததாகவும், முதல் காலண்டர் இந்தியாவிலேயே 12000 ஆண்டுகளுக்கு முன் உருவாயிற்று என்றும் கூறுகிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வான் கணித ஆராய்ச்சி நம்மிடையே விரிவாக நடந்துள்ளது.

யோக வாசிஷ்டம், அதர்வண மகாநாராயணோபனிஷதம் விண்வெளியில் (Cosmic - Space) பல்வேறு கோளங்கள் இருந்த அமைப்புகளைப் பற்றி விவரமாகக் கூறுகிறது.

'கிருத, 'திரேதா, துவாபர, கலியுகம் ஆகியவற்றின் மொத்த அளவு 12000 x 360 = 43,20,000 ஆண்டுகள் என்பது இந்துமதப் பழம் பெரும்நூல்கள் கூறுவதாகும். உலகத்தின் சுழற்சி, ஓர் ஆண்டு சுழற்சி, சூரியனைச் சுற்றிச் சுழல்வது ஆகியவற்றுடன் கணக்கிடும் போது 43,20,000 ஆண்டுகள் என்ற அளவையே இன்று விஞ்ஞான பூர்வமாக நிரூபணம் செய்கிறது. என்ன ஒற்றுமை பாருங்கள்!

"மகாபாரதததில் பூமி, சூரியன் சந்திரன், கோளங்கள், நட்சத்திரமண்டலங்கள் ஆகியவை பற்றிய நுட்பமான குறிப்புகள் உள்ளன. வெப்பம், ஒளி, மின்சாரம், காந்தஈர்ப்பு, ஈத்தர் ஒலி ஆகியவை பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன" என்று கூறுகிறார் மாக்ஸ்முல்லர் (Sacred Books of the East - Vol.I) உலோகங்களைப் பற்றிய குறிப்புகள் மட்டும் இன்றி, சூரிய–சந்திர கிரகணங்கள் இவற்றின் மீது உண்டாகும் பாதிப்புகளைப் பற்றியும், மகாபாரதத்தில் விளக்கங்கள் வருகின்றன என்று கூறுகிறார் ஆராய்ச்சியாளர் திருமதி. கோலிங்கோ.

1948–ம் ஆண்டு விட்டேகர் தொகுத்துள்ள வான் இயல் குறிப்புகள், 1100–ம் ஆண்டு வாழ்ந்த புகழ் பெற்ற நிபுணர் பாஸ்கராச்சாரியாரின் குறிப்புகளுடன் ஒப்பிடும் போது, மிகுந்த ஒற்றுமையுடன் அமைந்துள்ளன.

பிதோகரஸ் கண்டுபிடித்த கணித உண்மைகள் ஏற்கெனவே ஆரியபட்டரின் குறிப்புகளில் உள்ளன. கணிதத்துக்கு முக்கிய அடிப்படையான பூஜ்யம் என்ற எண் இந்தியா வில்தான் முதன்முதலில் உருவாயிற்று என்று வான்ஸ்லெட் ஹாக்பென் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

மருத்துவத்துறையிலும் சரகர், சுஸ்ருதர், வாக்பாதர் ஆகியவர்கள் அறுவைச் சிகிச்சை,மருத்துவ மருந்து சிகிச்சை, பாக்டீரியா கிருமிகள் பற்றிய ஆய்வுகளை விரிவாக வேத காலத்திலேயே எழுதி வைத்திருக்கிறார்கள். கண்கள், காதுகள், இருதயம், சுவாசகோசம், மூளை, வயிறு ஆகியவை பற்றிய நுட்ப விவரங்கள் அவர்களால் எழுதப்பட்டுள்ளன. சரகரும், சுக்ருதரும் 115 வெவ்வேறு அறுவை சிகிச்சைக்குரிய கருவிகளைப் பற்றி விவரங்களைத் தொகுத்திருக்கிறார்கள். சிக்கலான பிரசவத்தில் தாயையோ, குழந்தையையோ கையால் தொடாமல் வெளியே கொண்டு வரக்கூடிய நுட்பத்தை அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். முதன்முதலில் இன்றைய நவீன கலையான பிளாஸ்டிக் – சர்ஜரி பற்றிய விவரங்களை எழுதியவர்கள் அவர்களே! கி.மு. 700 –ம் ஆண்டிலேயே பரத்வராஜ மகரிஷி மருத்துவ மூலிகைகள் பற்றிய கருத்தரங்கை நடத்தி இருக்கிறார்கள்.

உலோகங்கள் பற்றிய அபூர்வக் கண்டுபிடிப்புகளும் நமது முன்னோர்களுக்குத் தெரியும். செம்பைத் தங்கமாகவும், இரும்பை வெள்ளியாகவும் மாற்றக்கூடிய நுண்கலையை, ரசவாதம் என்ற தலைப்பில் அவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். பாதரசம் சாதாரண வெளி உஷ்ண நிலையில் திரவம் போல நகர்ந்து ஓடக்கூடியது. இதை இறுதிச் செய்து, கெட்டியாக்கி அதை வைத்து பூஜைக்குரிய உருவங்களையும், தாயத்துக்களையும் செய்யக் கூடிய சித்தர்கள் இன்று நம்மிடையே இருக்கிறார்கள். பலரும் இதை வெளியே பகிரங்கமாகச் சொல்வது தர்மம் அல்ல என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், இவை நூல் வடிவிலோ, ஆராய்ச்சி முடிவுகளாகவோ வெளிவரவில்லை.

அலெக்ஸாண்ட்ரியாவைச் சேர்ந்த கிளாடியஸ் பெட்லோமி பூமி நிலைத்திருப்பதாகவும், மற்ற கோளங்கள் அதைச் சுற்றி வருவாதகவும், கி.பி. முதல் நூற்றாண்டில் குறிப்பிட்டு எழுதினார். மக்களும் இதை ஒப்புக் கொண்டார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் வந்த நிக்கொலஸ் காப்பர்னிக்கஸ் என்ற விஞ்ஞானி தான் ஹீலியோ – சென்ட்ரிக் சித்தாந்தத்தில் சூரியனைச் சுற்றி மற்றகோளங்கள் சுற்றுவதைக் குறிப்பிட்டார்.

காப்பர்ணிக்கஸ் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் ஆரியபட்டர் என்ற வான்கணித நிபுணர் இருந்திருக்கிறார். அவர் எழுதிய 'ஆரியபட்டியா' என்ற நூலில் சூரியன், பூமி, மற்ற கிரகங்களின் இருப்பிடத்தை இந்தப் புதிய அமைப்பின் படி விவரித்திருக்கிறார். மற்றும் சூரிய, சந்திர கிரகணங்கள். கோளங்களின் சாய்வு கோணம் பற்றியும், அல்ஜீப்ரா, டிரிக்னாமெட்ரி போன்ற கணிதப் பிரிவுகளைக் குறித்தும் விரிவாக எழுதி இருக்கிறார். காப்பர்னிக்கஸ் வெளியிட்ட ஹீலியோ செண்ட்ரிக் சித்தாந்தத்தை இவ்வளவு தூரம் புகழும் நமது அறிஞர்கள் ஏன் ஆரியபட்டரின் சாதனையைப் புரிந்து கொள்ளவில்லை?

சர் ஐஸக் நியூட்டன் 17–ம் நூற்றாண்டில் பிறந்தவர். பூமியின் ஈர்ப்புச் (Gravitation) சக்தியைப் பற்றியும், சுழற்சி- இயக்கம் பற்றிய விதிகளையும் கண்டுபிடித்தவர் எனப்படுபவர் அந்த விஞ்ஞானிதான். ஆனால் அவர் பிறப்பதற்கு முன்பே, சுமார் 500 ஆண்டுகள் முன்னதாக – பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஸ்கராச்சாரியர் தனது சித்தாந்த சிரோன்மணி என்ற நூலில் விண்வெளியில் உள்ள எல்லா கோளங்களைப் பற்றியும் பூமியின் ஈர்ப்புச் சக்தியைக் குறித்தும் எழுதி இருக்கிறார்.

மனிதன் குரங்கிலிருந்து உருவான தத்துவத்தை டார்வின் சித்தாந்தம் கூறுகிறது. மனிதன் நீர்வாழ்–நிலம்வாழ் இனங்களிலிருந்து உருவாகி மேம்பாடடைந்த தத்துவத்தைத் தசாவதாரம் அன்றே கூறியுள்ளது. நாலாவது நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவரும் தனது யோக சூத்திரத்தில் மனிதன் பற்றிய உருவமைப்பு தத்துவத்தை ஓர் அத்தியாயமாகவே எழுதி இருக்கிறார். பதஞ்சலி, பாணினி எழுதிய இலக்கண நூலுக்கும் விளக்கவுரை (மகாபாஷ்யம்) எழுதியவர். உலகிலேயே இதுதான் மிகப்பழைமையான இலக்கண நூலாகக் கருதப்படுகிறது.

ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கண்டுபிடித்த காலம் – இடம் பற்றிய (Time Space) சித்தாந்தம் எல்லோராலும் போற்றப்படுவது. இந்துமத நூல்களில் மிக ஆரம்ப காலத்திலேயே இது கண்டுபிடிக்கப்பட்டு, பிரயோகத்திலும் இருந்து வந்துள்ளது. ஆத்மபோதம், பிரம்மாண்ட புராணம், நவமி விஸ்வகலா, லலிதா சகஸ்ரநாமம், சனத்குமார – ஷண்முக சம்வாதம் (ஸ்கந்த மகாபுராணம்) பாகவதத்தின் இரண்டாவது காண்டம், மகாநாராயணோப நிடதத்தின் முதல் அத்தியாயம் ஆகிய பலவற்றிலும், சங்கராச்சாரியரின் ஞான விளக்கங்களிலும் இது இடம் பெற்றுள்ளது. ஆகவே பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இதை நம்முடைய முன்னோர் அறிந்து விளக்கி வைத்திருக்கிறார்கள்.

முன்னோர்கள் இப்படி அமைத்துக் கொடுத்த அடிப்படையின் மீது நாம் உன்னதமான கட்டிடத்தை எழுப்பத் தவறிவிட்டோம். அதற்கு மாறாக அவர்கள் நுட்பமான அறிவு இல்லாதவர்கள் என்றும், செயற்பாட்டில் ஈடுபடும் சுறுசுறுப்பு இல்லாதவர்கள் என்றும், கூடக் கூறிவந்திருக்கிறோம். நமது பூர்வகால இந்தியர்கள் நாகரிகம் தெரியாதவர்கள் என்றும், சம்ஸ்கிருதம் ஓர் உயிரற்ற மொழி என்றும் கூறி வந்திருக்கிறோம்.

நமக்கு ஏற்கெனவே கிடைத்து வந்துள்ள இந்த அரிய பொக்கிஷங்களை நாம் காப்பாற்றவும், போற்றவும் தவறிவிட்டோம். நவீன வசதிகளை நேரடியாக அடைய சுலபமான வழிகளைத்தேடிய நாம் இதற்கு ஒரு நுட்பமான அடிப்படை நம்மிடம் ஏற்கெனவே இருந்ததை அறிந்து கொள்ளத் தவறிவிட்டோம்.

இங்கே குறிப்பிடப்படுள்ளவை சில மட்டுமே. ஆனால் நமது பழம்பெரும் நூல்களில் உள்ள உண்மைகள் மிகப்பல கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், சுக்கிராச்சாரியாரின் சுக்ரநீதி. வைசம்பாய நரின் நிதிம் பிரகாசிகா, சித்திர – ஓவியம் பற்றிய திலகமஞ்சரி, இசைபற்றிய கந்தர்வ வேதம், பரதமுனியின் நாட்டிய சாஸ்திரம், இரத்தினங்கள் பற்றிய இரத்தினப் பிரகாசிகா, மதனக்கலை பற்றிய காமசூத்திரம் ஆகியவை உலகின் இன்றைய ஆராய்ச்சி நூல்கள் எதற்கும் பின்தங்கியவை அல்ல. இவ்வளவு விரிவான நுட்பமான ஆராய்ச்சிகளை, உலகிலேயே மிகப்பழைமையான காலகட்டத்தில் இந்து மதம் உருவாக்கியுள்ளது என்பது நமக்குப் பெருமை.

இவ்வளவையும் கண்டுபிடித்துக் கொடுத்த நமது சநாதனதர்மம் இவையாவுமே நிலையற்றவை என்றும், மன அமைதியை நிரந்தரமாகக் கொடுக்க இயலாதவை என்றும் எடுத்துக்கூறி விளக்கி, நிலையான பேரானந்தத்தையும், உறதியான மனஅமைதியையும் தேடிப்பெரும் வழியையும் நமக்கு எடுத்துக் காட்டி இருக்கிறது.

இறப்புக்குப் பின்னரும், அடுத்த பிறவியிலும் தொடரும் நமது பொறப்புக்கள், பற்றுக்கள், பந்தங்கள் ஆகியவை பற்றியும், ஆன்மாவின் நிலையைக் குறித்தும், இப்பிறவியில் நாம் செய்பவையும் சேமிப்பையும், நம்மைத் தொடர்ந்து வரும் நிலையைப் பற்றியும் நமது சநாதன தர்மம் எடுத்துக் கூறுகிறது. ஆக அநித்தியமான உலக வாழ்க்கைக்கும் , நித்தியமான வேதாந்த உணர்வுக்கும் இடையே அமைந்ததொரு அபூர்வமான பாலமாகவே நமது பழம் பெரும் சித்தாந்தங்கள் உள்ளன.

ஆக, பந்தத்திலிருந்து விடுதலைக்கு, இம்மையிலிருந்து மறுமைக்கு உலகியலிலிருந்து மோட்சத்துக்கு, தனித்தன்மையிலிருந்து உலகம் தழுவிய சித்தாந்தத்துக்கு வழி காட்டுகிறது நமது இந்துமதம், இதற்கு இணையானது வேறு எதுவும் இல்லை.

# RELIGION & PRAYER

H. H. SWAMI SHANTANAND

## RELIGION

Where there is a process of awakening, that process is Religion.

Religion is a means of drawing out the Divinity that is already in us.

Religion is living. Religion is behaviour and not merely a belief. We are suffering not for want of Religion, but because we do not put Religion into practice............Unless and until we live Religion, any amount of understanding would be of no use.

Religion is a conduct, a behaviour in life, in our daily dealing with everyone, so that the inner and outer lives may be co-ordinated and harmonised.

Religion is the result of rational inquiry.

The Religion of Buddha does not differ from the Religion of Christ. The Religion of Christ does not differ from the Religion of Krishna.But the Religion about Buddha may differ from the religion about Christ. The Religion of Christ may differ from the Religion about Krishna............this is all our bungling.

Religion is living experience. Intellectual grasp of religious truths alone is not enough............studying the Railway time table is not undertaking the journey.

To know about Religion is easy. But to live Religion is difficult.

Religion is philosophy in action. Religion is applied philosophy. Religion is the way of life, philosophy the view.

Religion starts with reason and inquiry and ends in love and service for all beings.

Religion properly understood is not a dogma, not a cult, not any faith, not membership in any denomination but is-as is meant by the word Religion, which comes from the word Re-ligo-to bind the individual back to the Source.

Religion is nothing else but the answer to the urge for inquiry which is within man to know what is what.

Religion is art of Self-Perfection, Religion is art of Self-Mastery, Religion is art of Self-Conquest.

Religion is the art of true observation, true enquiry, ture doubt, true analysis, true view and true way of man and the Universe. In this way Religion is one, though religions are many.

Religion presents to the conscious mind of the human individual ideals to live by,

aims to pursue, values to seek, patterns to follow, which in turn will yield the harvest of peace, order, beauty and harmony in life.

All the efforts of all Religion, of all Saints, and their teachings, the sum and subtance of them all, is to remove the curtain which acts as a veil for the potential Divinity which is within you.

Religion is a scientific way of life.

The aim of all Religious discipline is to make us conscious of what is going on within us.

Religion discipline gives us a method slowly and slowly to evolve.

Religion recognises an inner world apart from the outer world. Sages proclaim that the conquest of the inner nature is the real victory and not conquest of the external forces.

Religious discipline is meant to make you aware of yourself.

## PRAYER

Prayer is the plug that connects you with God, for the Divine current to flow.

When all our self-effort reaches saturation point, when we turn to the Divinity for His Grace, prayer becomes the sole guide in our path.

The ultimate purpose of prayer is not for gaining ability and power for oneself, for prayer is absolute self-denial and self-effacement, so that the Universal Consciousness can flow in and through the individual will.

Let your prayer be **Thy will be done**, not **I will do Thy will**. This indicates complete absence of the ego.

Prayer means a perfect willingness to submit our ego at the feet of the Higher Power; then alone prayer becomes fruitful and only then absolute humility and faith are born in the heart.

There is not a single sincere prayer which goes unanswered. When we complain - **God has not answered my prayer** - we only mean that He has not answered in the way we want.

Prayer is allowing the Divine to take charge of our personalities.

Prayer is the recognition of the non-doership of the individual self and the Supreme doership of the One Doer who is the Supreme God Himself.

Prayer begins where human capacity ends.

Prayer even for material comforts is to focus our minds on the Universal Reality which is worshipped under different names and forms.

Prayer need not necessarily be answered in the way we want, because our knowledge is limited, His knowledge is unlimited.

Let me work hard, pray to Him and leave the rest to Him. Success............. well and good.It is His Grace Failure.............yes,according to me, but there must be some specific reason for it. He knows what is best.

Not even a little of your prayer goes in vain. So pray........... Pray and pray.............Pray and wait............Wait and pray........... Pray and watch and wait............. Wait and again pray.

The recognition and consciousness of an Indwelling Presence in man and an Operating Presence behind the world with all its events- this very awareness-is in itself the highest prayer. It is a prayer without words and without thoughts..........When I blossom into this state.

**I am in Him.....He is in me.....The world is in Him.....He is in the world.....He is the All in All**

When I was a bud, I did not pray because I did not know. When I have become the fully blossomed flower, again I do not pray because I know.

A time comes when prayer is not in the morning or evening, or once in a week or on a festival day, but is a perpetual, continuous unbroken awareness of the existence of God working in and through me, and in and through everything.

True prayer is that which is without any content of the mind. It is a contentless, conscious, awareness.

I am not worshipping the picture as Murugan, but I worship Murugan through the picture.

Prayer is the most wonderful power in hands of a human being. Electricity can fail, electromagnetism, radiation, nuclear energy,any of these can fail, but not the power of prayer.

Japa is not meant to calm the mind......Japa is not meant to still the mind......Japa is meant to increase your power of observation of the various agitations taking place in the mind.

Universal Power is for ever flowing. Prayer is a means to remove any clogging in its path..........the clogging being the ego-consciousness.

Japa leads to a heightened awareness of the agitations of the mind.

Every prayer is answered. There is not a single prayer which emanates from the mind of any Soul, genuinely and sincerely offered, either to a Saint or to Go, that goes unanswered.

Prayer becomes sincere and surrender complete only when we utter the prayer from the bottom of our hearts and are bot bothered about the results.

The answer to our prayers may not be in the way we want, but in the way we need.

| | | | |
|---|---|---|---|
| LIFE IS A CHALLENGE | - MEET IT | LIFE IS A SONG | - SING IT |
| LIFE IS A GIFT | - ACCEPT IT | LIFE IS AN OPPORTUNITY | - TAKE IT |
| LIFE IS AN ADVENTURE | - DARE IT | LIFE IS A JOURNEY | - COMPLETE IT |
| LIFE IS A SORROW | - OVERCOME IT | LIFE IS A PROMISE | - FULFILL IT |
| LIFE IS A TRAJEDY | - FACE IT | LIFE IS A BEAUTY | - PRAISE IT |
| LIFE IS A DUTY | - PERFORM IT | LIFE IS A STRUGGLE | - FIGHT IT |
| LIFE IS A GAME | - PLAY IT | LIFE IS A GOAL | - ACHIEVE IT |
| LIFE IS A MYSTERY | - UNFOLD IT | LIFE IS A PUZZLE | - SOLVE IT |



# சைவ சமயத்தில் பெண்கள் பங்கு

செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி

சைவம் சிவ சம்பந்தமுடையது சிவம் என்பதற்கு அன்பு, இன்பம், ஆனந்தம் எனப் பல பொருள் கூறுவர் "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்ற பேசுகிறார் மணிவாசகப் பெருமான். ஆண்டவனிடத்தன்றி அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே சைவத்தின் தலையாய சிறப்பாகும்.

இதனாலேயே கொல்லாமை, கொன்றதைத் தின்னாமை சைவத்தில் வற்புறுத்தப்படுகிறது.

*"எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்*
*தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"*

என்று வேண்டுகிறார் தாயுமானார்.

சைவத்தின் பெருமைக்கும், பழமைக்கும் மொகஞ்சதாரோ, ஹரப்பா கால நாகரீகச் சின்னங்கள் மாத்திரமன்றி உலகெங்கனும் அதாவது மெக்சிக்கோ, ஆஸ்திரேலியா, தென்கிழக்கு ஆகிய நாடுகள் ஆகியவற்றில் இடம் பெற்றிருந்த சிவவழிபாடும் சான்றாக அமைகிறது. 'உலகெலாம்' எனச் சிந்தித்த ஒரேயொரு சமயம் சைவம். "வையகமுந் துயர் தீர்கவே" என்பதும் "அப்பாலு மடிச்சார்ந்தாரடியார்க்கும் அடியேன்" என்பதும் சைவத்தின் பரந்த கொள்கையைத் தெற்றென விளக்குகிறது.

*"யாதொரு தெய்வம் கொண்டீர்*
*அத்தெய்வ மாகி ஆங்கே*
*மாதொரு பாகனார்தாம் வருவார்"* என்பதும்

*"விரிவிலா அறிவி னோர்கள்*
*வேறொரு சமயம் செய்தே*
*எரிவினாற் சொன்னா ரேனும்*
*எம்பிராற் கேற்ற தாகும்"*

என்பதும் சைவத்தின் விரிந்த நோக்கையும் பரந்த தத்துவத்தையும் காட்டி நிற்பன. சைவசித்தாந்தம் என்று சொல்லும் போது "சைவ" என்ற அடைமொழி சேர்ந்து அது ஒரு தனிப்பெரும் கடவுட் கொள்கை என்பதைக் காட்டி நிற்கிறது. "சைவத்தின் முடிந்த முடிவு" என்ற இதற்கு விளக்கம் கூறுவர். வாழ்க்கையோடு இணைந்த நெறியே இது. இக்கொள்கைகள் எக்காலத்தும் மாறாதவை வாழ்வாங்கு வாழ்ந்தால் போது மென்றே இந்நெறி காட்டுகிறது. இறைவனை அடைவதற்கு மிக அழுத்தமான பாதை சைவ சித்தாந்தமே என்று பேரறிஞர்கள் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

*"ஒரும் வேதாந்த மென்றுச் சியிற்பழுத்த*
*ஆரா இன்ப அருங்கனி பிழிந்து*
*சாரங் கொண்ட சைவசித் தாந்தத்*
*தேனமு தருந்தினர் சிலரே"*

என்ற குமரகுருபரசுவாமிகளும் எடுத்துக் கூறியுள்ளார். கந்தபுராணத்திலே காசிபர் உபதேசமும் இவ்வடிப்படையிலேயே அமைகிறது.

*"சான்றவர் ஆய்ந்தித் தக்க வாம்பொருள்*
*மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன*
*ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை*
*வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே"*

என்று பாடத் தொடங்குகிறார் காசிபர்.

இங்கே முதற் பொருளாகப் பேசப்பட்ட பரம் பொருளையே "சிவம்" என்று குறிப்பிட்டு வழிபட்ட மக்கள் அதனுடனிணைந்த சக்தியையும் உணரத் தலைப்பட்டனர்.

"சிவமெனும் பொருளும் ஆதி சக்தியோ டிணைந்திடின் எத்தொழிலும் வல்லதாம்" என்ற கூற்றுப்படி அவனது பேராற்றலே அனைத்தையும் இயக்குகிறது என்ற நம்பிக்கையிலே சக்தி தத்துவம் காட்டப்படுகிறது.

*"சிவம்சக்தி தன்னை யீன்றும்*
*சக்திதான் சிவத்தை யீன்றும்*
*உவந்திரு வரும் புணர்ந்திங்*
*குலகுயி ரெல்லா மீன்றும்*
*பவன்பிரம சாரி யாகும்*
*பான்மொழி கன்னி யாகும்*
*தவந்தரு ஞானத் தோர்க்கித்*
*தன்மைதான் தெரியு மன்றே."*

இதிலிருந்து சக்தியும் சிவமும் ஒன்றே என்பது வெளிப்படை. "அப்பன் நீ அம்மை நீ" என்ற வாக்கும் "அம்மையே அப்பா" என்ற வாசகமும் இந்த அடிப்படையிலே எழுந்தவை. குழந்தையைப் பெற்றுப் பாலூட்டித் தொட்டிலில் வளர்த்திச் சிறிது வளர்ந்த ஞான்று விளையாட விட்டுப் பார்த்து மகிழ்பவள் தாய். குழந்தை குறும்பு செய்யுமாயின் அச்சுறுத்தி அழுங்குழந்தையை அணைத்து அதற்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து அமைதியாக உறங்க வைப்பவள் தாய். இறைவனும் இவ்வாறே தாயாக நின்று உயிர்களை வளர்க்கிறான் என்ற கருத்தில் தாயுமானார் பாடலொன்றைக் காணலாம்.

*"காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற*
*கண்ணிலாக் குழவியைப் போற்*
*கட்டுண்டிருந்த எமை வெளியில்விட்டல்லலாங்*
*காப்பிட் டதற் கிசைந்த*
*பேரிட்டு மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல்*
*பெலக்கவிளை அமுதம் ஊட்டிப்*
*பெரியபுவ னத்தினிடை போக்குவர வுறுகின்ற*
*பெரியவிளை யாட்ட மைத்திட்*
*டேரிட் டதன்சுருதி மொழிதப்பின் நமனைவிட்*
*டிடருற வுறுக்கி இடர்தீர்த்*
*திரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்*
*இசைந்துதுயில் கொண்மின் என்று*
*சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே*
*சித்தாந்த முத்தி முதலே*
*சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே*
*சின்மயா னந்த குருவே".*

உயிர்கள் அனாதியாகவே ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கின்றன. இருள் செறிந்த இக் கருப்பையில் அகப்பட்டுக் கேவல நிலையில் நிற்கின்றன. இவ்வழுந்துதலிலிருந்து நீங்குவதற்குப் பற்பல உடம்பைக் கொடுத்து உயிரறிவைச் சிறிது விளக்க வைக்கின்றான் இறைவன். பிறவிதோறும் இவ் விளக்கம் ஏற்பட்டுப் பிறவாமையாகிய பேரின்ப நிலை கிட்டுகிறது. எனவே நித்தியானந்தப் பெருவாழ்வில் உயிர்கள் அமைதியுற்று வீடுபேறடைகிறதே முடிந்த முடிவு. இந் நிலையைத் தாயாக நின்ற இறைவன் தருகிறான் என்பதே சைவ சித்தாந்த முடிவு.

*"தன்னிலைமை மன்னுயிர்கள்*
*சாரத் தருஞ்சக்தி*
*பின்னமிலான் எங்கள் பிரான்".*

என்பது திருவருட்பயன். சக்தி தரும் சாரத் தரும், தன்னிலைமை (இறைவனது ஒப்பற்ற தன்மையை) சாரத்தரும் என்பதை விளக்கமாகக் காண்கிறோம். கேவல, சகல சுத்தம் ஆகிய மூன்று நிலைகளுக்கும் மேற்காட்டிய தாயுமானார் பாடல் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. இறைவன் தாயாக நின்று உயிர்களைப் பக்குவப்படுத்தி முத்தியை வழங்குகின்றான் என்பதைச் சிறப்பித்துப் பேசுகிறார் சுவாமிகள்.

"தாயுடன் சென்று தாதையைக் கூடிப் பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டை" என்று கூறிய பட்டினத்தார் வாக்கும் இவ்வுண்மையையே காட்டுகிறது. சக்தியின் அம்சமாக விளங்கும் தாய்மாரும் இத்தகைய தொரு தியாகத்தையே சமுதாயத்தில் ஆற்றுகின்றனர். அம்பாளே தியாகேஸ்வரியாக நின்று இவ்வுண்மையைக் காட்டுகிறாள். தம் முடைய அடியார் செய்த பாவங்களையும் பிழைகளையும் போக்கி அருளி அவர்களை அடியாராக்கி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று உமையம்மை சிவபெருமானையே வேண்டி நின்றதாகக் காஞ்சித் தல வரலாறு காட்டுகிறது. அர்ச்சனை புரியும் ஆகம விளக்கத்தை இறைவனே திருக்கைலாயத்திலே உமாதேவிக்கு விளக்கி அருளினார்.

*"வெள்ளி மால்வரைக் கயிலையில்*
*வீற்றிருந் தருளித்*
*துள்ளு வார்புனல் வேணி*
*யருள்செயத் தொழுது*
*தெள்ளு வாய்மையி னாகமத்*
*திறனெலாந் தெரிய*
*வுள்ள வாறுகேட் டருளினா*
*ருலகையா ளுடையார்."*

அதாவது வெள்ளியங்கிரியில் வீற்றிருப் பவரும் கங்கையைத் தரித்தவருமான சிவபெருமானின் திருவாக்கினின்றும் வெளி வந்த சிவாகமத்தை உமாதேவி கேட்டருளினாள்.

*"எண்ணி லாகம மியம்பிய*
*இறைவர்தாம் விரும்பு*

*முண்மை யானது பூசனை*
*யெனவுரைத் தருள*
*வண்ண லார்தமை அர்ச்சனை*
*புரியவா தரித்தாள்*
*பெண்ணி னல்லவ ளாயின*
*பெருந்தவக் கொழுந்து."*

எண்ணிறந்த ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவனுக்கு உவந்தது பூஜையாதலால் அந்தப் பூஜையைச் செய்து அவருடைய அருளைப் பெறவேண்டுமென்று தேவியே விரும்பினாள். அதன் பயனாகக் காஞ்சியிலே முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து அறம் வளர்த்த நாயகியாகக் காட்சியளித்துக் கோண்டிருக்கிறாள். உமையம்மையின் அம்சமாக விளங்குபவர்கள், பெண்கள் இவர்களின் உயர்விலேயே வீட்டின் உயர்வும் நாட்டின் உயர்வும் தங்கியுளது. உலக வாழ்க்கைக்கு ஜீவ ஒளியாகப் பெண்குலமே அமையவேண்டும் தர்மம், சத்தியம், தாய்மை, பொறுமை, கருணை, கற்பு, தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை அனைத்தும் பெண்குலத்துக்கும் பெருமை தருவன புகுந்த இடத்துக்கும் பெருமையைத் தேடிக் கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றி விளங்க வேண்டிய கடமை பெண்களுக்கு உண்டு. அம்பிகையின் பல்வேறு வடிவங்களின் பெயர்கள் பல்வேறு சக்திகளை விளங்கி நிற்பன. அன்னபூரணியாக இருந்து ஆண்டவனுக்கே ஈகையின் சிறப்பைக் காட்டியவள் உமாதேவி. அவள் உலகுக் கெல்லாம் படியளந்து எல்லாப் பெண்களும் அறம் வளர்க்கும் செல்விகளாக விளங்க வேண்டுமென்றும் வழிகாட்டினள்.

திருநாவுக்கரசு நாயனார் காலத்தில் அவர் பெயராலே தர்ம கைங்கரியங்களில் ஈடுபட்ட அப்பூதி அடிகளாரையும் அவரின் மனைவியாரையும் பற்றி யறிகின்றோம். இறைவனின் சோதனையாக மூத்த மகனை இழந்ததும் ஈகையின் பெருமைக்கு எடுத்துக் காட்டாக இக்குடும்பம் விளங்குகிறது. பசித்து வந்த சிவனடியாருக்கு இன்னமுதும் மாங்கனியும்அளித்து ஈகையின் சிறப்புகளை எடுத்துக் காட்டியவர் புனிதவதியார். நள்ளிரவிலே வீட்டுக்கு வந்த சிவனடியாரை அன்னமூட்டிப் பசி நீக்குவதற்கு வழி காட்டியவர். இளையான் குடிமாற நாயனாரின் மனைவி அமுதசுரபி கொண்டு பசியால் வருந்துவோருக்கு அமுதளித்தவள் மணிமேகலை. கணவனைப் பிரிந்திருந்தகாலத்தில் "அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம் பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று கண்ணகி கூறுவதிலிருந்து பெண் குலம் பெருமையோடு வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டது ஈகை என்பது வெள்ளிடைமலை"

*"படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில்*
*நடமாடுங் கோயில் நம்பற்கங் காகா*
*நடமாடுங் கோயில் நம்பற்கொன் றீயில்*
*படமாடுங் கோயில் பரமற்கங் காமே"*

இத்திருமந்திரக் கருத்துப்படி மக்களுக்கு ஈவதே மகேஸ்வரனுக்கு உவப்பானது எனக் காட்டப்படுகிறது. உயிர்களின் உண்மை ஊதியம் ஈகையின் சிறப்பிலேயே அமைந்துள்ள தென்பதை வள்ளுவரும் காட்டுகிறார்.

*"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது*
*ஊதியம் இல்லை உயிர்க்கு"*

ஈதலினாலேயே புகழ் கிடைக்கிறது என்பதை அழுத்தமாகக் கூறவந்த வள்ளுவர் ஈதலையும் புகழையும் இணைத்து ஒருமையிலே வைத்து "அது" என்று பேசுகிறார்.

அடுத்து விருந்தோம்பும் பண்பில் பெண் மக்கள் சிறந்திருந்த தன்மையை நோக்கலாம். கோசல நாட்டின் பெருமையைக் கூறவந்த கம்பநாட்டாழ்வார்.

*"பெருந் தடங்கண் பிறைநுத லார்க்கெல்லாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்*
*வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே"*

என்று பாடியுள்ளார். இன்றும் விருந்தோம்பும் பணியில் பெண் குலம் கொண்ட ஈடு பாட்டிற்குச் சங்க இலக்கியங்கள் பெரும் சான்றாக விளங்குகின்றன. விருந்து வரும் என்ற கரைந்த காக்கைக்கு அன்னமிட்டு மகிழ்ந்தது சங்க காலப் பெண் குலம். கணவனுடன் கொண்ட ஊடலை நீக்குவதற்கு விருந்து ஒரு வாயிலாக அமைந்ததைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. திருவாரூர்ச் சிறப்பைக் கூற வந்த சேக்கிழார் "மேலெல்லாம் அகில் தூபம் விருந்தெல்லாம் திருந்துமனை" என்று சிறப்பிக்கிறார். இல்லங்ளெல்லாம் விருந்தினால் சிறப்படைய வேண்டும். இதற்குரியவர்கள் இல்லத்தரசிகளே. செல் விருந்தோம்பி வரு விருந்து பார்த்திருப்பவர்க்கு வானத்தவர் நல் விருந்தளிப்பர் என்பது பொதுமறை.

சைவத்தின் பெருமையிலும் வளர்ச்சியிலும் பெண்கள் பெரும் பங்கு பெற்றுள்ளமையை எடுத்துக்காட்டும் முகமாகப் பூம் பாவையை எழுப்பிய இடத்தில் ஞானசம்பந்தர் கருத்தைக் காண்கிறோம்.

*"மண்ணி னிற்பிறந் தார்பெறும்*
*பயன் மதிசூடும்*
*அண்ண லார்அடி யார்தமை*
*அமுது செய்வித்தல்*
*கண்ணி னால்அவர் நல்விழாப்*
*பொலிவுகண் டார்தல்*
*உண்மை யாமெனில் உலகர்முன்*
*வருகென உரைப்பர்."*

அடியாரைப் போற்றலும் அமுது செய்வித்தலும் ஆண்டவன் பணிகளில் ஈடுபடுதலும் பெண்குலத்தின் கடமைகள் என்பதை இவ்வரலாறு காட்டுகிறது.

இன்னும் பக்தி நெறியில் பெண் மக்கள் கொண்டுள்ள பங்கைக் கவனிப்போம்.

திருவாசகத்திலே மணிவாசகர் கூற்றொன்றிற் காணலாம்:

*"முன்னைப் பழம்பொருட்கும்*
*முன்னைப் பழம்பொருளே*
*பின்னைப் புதுமைக்கும்*
*போர்த்துமப் பெற்றியனே*
*உன்னைப் பிரானாகப்*
*பெற்றவுன் சீரடியோம்*
*உன்னடியார் தாள்பணிவோம்*
*ஆங்கவர்க்கே பாங்காவோம்*
*அன்னவரே எங்கணவ*
*ராவா ரவருகந்து*
*சொன்ன பரிசே*
*தொழும்பாய்ப் பணிசெய்வோம்*
*இன்ன வகையே*
*எமக்கெங்கோன் நல்குதியியேல்*
*என்ன குறையு*
*மிலோமேலோர் எம்பாவாய்"*

கன்னியர்கள் தமக்குக் கிடைக்கப்பெறும் கணவன்மார் சிவதொண்டர்களாகவே அமைய வேண்டுமென்ற பிரார்த்தனை செய்கின்றனர்: ஏனென்றால் பக்தியனுபவம் கணவனுக்கும் மனைவிக்கும் ஒன்றாய் அமையாவிடத்துத் திருப்தியாக இல்லற தர்மம் அமையாது. இதற்கு எடுத்துக்காட்டாகக் காரைக் காலம்மையார் வாழ்வு அமைகிறது. விடையவர்பால் அல்கிய அன்புடன் அழகின் கொழுந்தெழுவதென வாழ்ந்தவர் அம்மையார். ஆனால் திருமண வாழ்வு சிறப்பாக அமையவில்லை. எனினும் கணவனாலேயே "தெய்வம்" எனப் போற்றப்படும் பெரு நிலையும் இவருக்கு ஏற்படுகிறது. அந்நிலையிலே சிவனறிவொன்றே கைவரப் பெற்றவராய் உற்பவித் தெழுந்த ஞானத் தொரு மையிலே அற்புதத் திருவந்தாதியைப் பாடுகிறார். அதில் ஒரேயொரு பாடலை மாத்திரம் எடுத்துக் கொள்வோம்.

*"வானத்தா னென்பாரு*
*மென்கமற் றும்பர்கோன்*
*தானத்தா னென்பாரும் தாமென்க –*
*ஞானத்தான்*
*முன்னஞ்சத் தாலிருண்ட*
*மொய்யொளிசேர் கண்டத்தான்*
*என்னெஞ்சத் தான்என்பன் யான்."*

இங்கே ஒரு பெருமிதம் தோன்றுகிறது. அதாவது ஆண்டவன் தன்னகத்திலே குடியிருக்கிறான் என்பதே அதற்குப் காரணமாகும். "ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன் ஒன்றே என்னுள்ளத்தினுள்ளத்தேன்" என்று பாடிப் பேய் வடிவுடன் காற்றிலும் கடிதாகச் செல்லுகிறார்.

*"அண்டர் நாயகனார் என்னை அறிவரேல்*
*அறியா வாய்மை*
*எண்டிசை மாக்களுக்கு*
*யான் எவ்வுருவாவென்"*

என்பது அவர் கருத்து.

தலையினால் நடந்து திருக்கயிலையை அண்மியபொழுது "வருமிவள் நம்மைப் பேணும் அம்மை" எனக்கூறி, இறைவன் உமையம்மைக்கு அறிமுகம் செய்து வைக்கிறார். அதுவுமன்றி அம்மையே உனக்கு என்ன வேண்டும் என்று கேட்ட ஞான்று அதற்குப் பதிலாக வெளிப்பட்ட அருள் வாக்குகளை நாம் என்றென்றும் போற்றி ஓதவேண்டியவர்களாக இருக்கிறோம்.

*"இறவாத இன்பஅன்பு*
*வேண்டிப்பின் வேண்டு கின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும்*
*பிறப்புண்டேல் உன்னை யென்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும்*

*வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவாநீ ஆடும் போதுஉன்*
*னடியின்கீழ் இருக்க என்றார்."*

சமய வாழ்வில் தலைப்பட்ட பெண்கள் தியாகத்தின் சின்னங்களாகவும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இயற்பகையார், சிறுத்தொண்டர் ஆகியோரின் மனைவியர்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். இயற்பகையாரின் நிலையான அன்பைப் பெற்றவர் அவர் மனைவியார். இதனைச் சோதிக்கும் முகமாக இறைவனே எழுந்தருளி சிவனடியாராக வந்து நாயனாரின் மனைவியைத் தனக்குத் தரும்படி வேண்டுகிறான். 'விதி மணக்கு மடந்தை யுன்னை இம் மெய்த்தவர்க்கு யான் கொடுத்தனன்' என்கிறார் இயற்பகை. இதனை ஏற்றுக்கொண்ட மாதரசி "இன்று நீர் எனக்கு உரைசெய்த திதுவேல் என்னுயிர்க் கொருநாத நீருரைத்த தொன்றை நான் செயுமல்லால் உரிமை வேறுளதோ எனக் கூறிய மாண்பினை நினைந்து நினைந்து போற்றவேண்டியுள்ளது.

கணவனாரின் நியமத்தை நிறைவேற்றும் பொருட்டு தன் மகனை இழக்கத் துணிந்த திருவெண்காட்டு நங்கையின்தியாகத்துக்கு எதிர்நிற்க வல்லவர் யார்?

*"இல்லதென் இல்லவள் மாண்பானால்*
*உள்ளதென்*
*இல்லவள் மாணக் கடை"*

என்பது பொய்யா மொழியன்றோ!

அடுத்து "தர்மம்" என்ற இடத்திற்கு வருவோம். இவ்வழியில் நின்று நாட்டுக்கு சைவ ஒளியில் மேலோங்கச் செய்த பெருமை மங்கையர்க்கரசியாருக்கு உண்டு. நாட்டையும் குடிமக்களையும் நன்னெறியிற் செலுத்த வேண்டியது அரசியல் தருமம். ஒப்பற்ற சிறந்த பாண்டிநாடு நீற்றொளி விளக்கம் குன்றி, ஆலயங்களில் ஒளி குன்றி, சைவசீலங் குன்றி இருந்த காலத்தில் மனமுடைந்து சிவதர்மத்தை நாட்டிலே நிலைநாட்டப் பாடுபட்டவர் மங்கையர்க்கரசியார். இதனாலேயே மங்கையர்க்குத் தனி அரசி என்று போற்றுகிறார் – சேக்கிழார். அதுமாத்திரம் அன்று. "பொங்கொளி வெண் திருநீறு பரப்பினாரைப் போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே" எனப் பாடியுள்ளார். ஞானசம்பந்தப் பெருமானும் ஆலவாயம்மானைப் பாடுமுன்பு அரசியாரைப் பாடுகின்றார்.

சிவநெறி வழுவாத சோழர் குலத்திலே அவதரித்த அரசியார் "தெய்வப்பாவை" என்று போற்றப்படுகிறார். இடர்ப்பாடு மலிந்த காலத்திலே நெருக்கடிக்குள்ளே சைவத்தை வளர்த்தார் அரசியார் என்பதை ஞானசம்பந்தர் கூற்றுலிருந்து அறியலாம். "சூழுமாகிய பரசமயத்திடையே தொண்டு வாழும் நீர்மையீர் உம்மைக் காணவந்தனம்" என்று கூறுவதில் இருந்து இவர் காலத்தை நோக்கி ஆற்றிய பணியை ஊகித்தறிய முடியும்.

தம்மைப் பேணி, தம் கணவனைப் பேணி, சைவத்தைப் பேணி, பாண்டி நாட்டையே பேணிய பெருமை மங்கையர்க்கரசியாருக்கே உண்டு. ஆன்மீகத்தோடு கலவாத அரசியல் அர்த்தமற்றது என்பதை மன்னவனுக்கே எடுத்துக்காட்டிய பெருமை இவருக்குடையது. "புகலியில் வந்து ஆண்டு கொண்டவர் தம்பால் அமணர்தாம் செய்த தீங்கு முண்டவாறு இவ்வாறாகி முடிந்ததோ" என்ற சிந்திக்கின்றார்; தாய் போல் கழறலும் தழீஇக் கோடலும், ஆய்மனைக் கிழத்திக்கு உரியவாகும்; என்றபடி வேண்டிய நேரங்களில் கணவனுக்கு உறுதியுரைப்பதில் மனைவி தவறக்கூடாது. கொண்ட கொழுநனை நன்னெறிப்படுத்தலும் இல்லாளின் முக்கிய கடனாகும். மங்கையர்க்கரசியார் சைவத்தைத் தாமும் உணர்ந்து கணவனாருக்கும் உணரவைத்தார். சிவனடியாரைச் சிவனென மதித்துப் போற்றியவர். இவருடைய தூய உள்ளத்தையும் உயர்ந்த சைவப்பற்றையும் உன்னிய ஞானசம்பந்தர், அவர் மேற் பரிவு கொண்டார். மன்னவன் குற்றமிழைத்தானென்று தெரிந்திருந்தும் பையவே சென்று பாண்டியற்காகவே என்று பாடினார். அரசியாரின் மங்கலவாழ்வுக்குக் குறையேற் படக் கூடாது என்பதே ஞான போனகர் கருத்து.

*"பாண்டிமா தேவியார் தமது பொற்பில்*
*பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்*
*ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலும்*
*அரசன்பால் அபராதம் உறுத லானும்*
*மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்*
*வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்*
*தீண்டியிடப் பேறுடைய னாத லாலும்*
*தீப்பிணியைப் பையவே செல்க என்றார்."*

தீப்பிணி பையவே சென்று பாண்டியனை வருத்தியதும் பெருமான் திருநீற்றுப் பதிகம் பாடியதால் நோய் நீங்கியதும் நாமறிந்த வரலாறுகளாகும்.

இதனாலேயே "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்று நாமும் போற்றி நின்றதோடு "போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே" என்று கூறி அரசியாரின் மாண்பினை உலகுக்கு அறிவிக்கின்றார்.

இன்னும் தவக் கோலத்தோடு வாழ்ந்த திலகவதியாரையும், சங்கிலியாரையும் நாம் மறக்க முடியாது. தூண்டு தவ விளக்கனை யார் என்று திலகவதியார் போற்றப்படுகிறார் தூண்டுசோதி விளக்கமாகக் என்று சங்கிலியாக போற்றப்படுகிறார். தந்தையார் புகழனாருடைய கால்வழி யற்றுப் போகாமல் பாதுகாத்தவர் திலகவதியாரே. மருணீக்கி யார் சமணம் புக்க செயலைத் தாங்க மாட்டாது "அடியேன் பின் வந்தவனை மீண்டு வினைப் பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டுமென்று" இறைவனிடமே விண்ணப்பித்தார். இதனை ஏற்றுக் கொண்ட எம்பெருமான் "உன்னுடைய மனக்கவலை ஒழி" என்று ஆறுதல் கூறியது, மருணீக்கியாருக்குச் சூழ்நோய் கொடுத்து ஆட்கொண்டார். தம்பியாருக்குத் திருநீறணி வித்து திருப்பதிகம் பாடுவித்து எம்பெருமான் வாக்காக "நாவுக்கரசு என்னும் நாமம் உலகேழினும் மன்னுக" என்ற பெருநிலைக்கு ஆக்கி வைத்தார். இதனாலேயே "உற்றவிடத்து உய்வு நெறி தருவாராய்த் தம்முன்பு வந்தார் பின் தாம் வந்தார்" என்று, திருநாவுக்கரசர் புராணத்திற் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

இன்னும் சங்கிலியாருடைய தவ வாழ்வையும் நாம் அறிகின்ற போது பெற்றோர்கள் அவருக்குத் திருமணம் பேசியபோது.

*"இன்றுஎன் திறத்துநீர் மொழிந்ததிது*
*வென்பரிசுக் கிசையாது*
*வென்றி விடையார் அருள் செய்தார்*
*ஒருவர்க் குரியேன் யான்."*

என்று மொழிந்த திறன் அவரினுறுதிப் பாட்டையும் தவக்கோல விருப்பையும் எடுத்துக் காட்டுகிறது. இதனாலேயே, தம்பிரான் தோழரையும் விஞ்சிச் சங்கிலிக்கு அருள் கொடுத்த சிறப்பை சத்தியம் கேட்ட நிகழ்ச்சியின் மூலம் நாமறிகிறோம். தம்பிரான் தோழரை மணம் புரிந்து கொள்ளும்படி சங்கிலியிடம் இறைவன் இரு தடவைகள் எழுந்தருளிச் சென்றதை, "வஞ்சியிடைச் சங்கிலியார், வழியடிமைப் பெருமையோ" என்று வியப்போடு எடுத்துக் காட்டுகிறார் சேக்கிழார். எனவே இம்பர் மனைத்தவம் புரிந்து திலகவதியார் பணியாற்றியதும், திருவொற்றியூர் ஆலயத்திலேயே பூமாலை கட்டும் தொண்டிற் சங்கிலியார் ஈடுபட்டதும், சைவக் கன்னியர்களின் அருட பணிகளுக்குச் சிறந்த சான்றுகளாக அமைகின்றன.

இவ்வாறு சைவத்திற் பெண்கள் பெரும் பங்கு கொண்டு, அதனை மேலோங்க வைத்த சம்பவங்கள் பலவுள. இவர்களில் அன்றாட வாழ்க்கையிலும் நிகழ்ச்சிகளிலும், சமய உணர்வு உயிர் நாடியாக வரைந்து அரன் பூசை, அடியார் பூசை, விருந்தெதிர்தல், திருத்தொண்டு புரிந்து, சிவ சின்னம் பேணல், தற்காத்தல், தற்கொண்டார்ப் பேணல், கற்பு நெறி பிறளாமை யாகிய பெரும் பண்புகளுடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்த வழியைச் சைவ மங்கையர்கள் பின்பற்றி வாழ முயல வேண்டும். சைவத்தின் பெருமையையும், சித்தாந்தக் கருத்துக்களையும், திருமுறைகளையும் சைவ மங்கையர்கள் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். குடும்பத்தினருக்கும் இவற்றைப் போதிப்பதிற் சிறந்த சைவ ஆசிரியராகப் பெண்கள் விளங்க வேண்டும். இல்லங்களிலே, வாரத்திற் கொருமுறை கூட்டுப் பிரார்த்தனைகளும், திருவிளக்குப் பூஜைகளும் நிகழ்த்திப் பயின்று கொள்ள வேண்டும் வருடமொருமுறை, தலயாத்திரை செய்வதில் பெண்கள் ஈடுபட வேண்டும். திருமணங்களை நிறைவேற்றி வைத்தல், அநாதை இல்லங்கட்கு உதவுதல், வாழ்க்கையிலே விரக்தியுற்றோர்க்கு ஆறுதல் கூறி நல்வழிப்படுத்த ஆகியவற்றில் ஈடுபடுவதும் சைவ மங்கையரின் பெருங்கடனாகும்.

குடும்ப வருவாயில் குறிப்பிட்டவொரு விகிதத்தைச் சமயப் பணிக்கு ஒதுக்கி வைத்து வாழப் பயின்று கொள்வதோடு சிறந்த சைவ கலாச்சாரத்தோடு வாழும் நெறியினையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு சமய வாழ்வில் நாமமும் எமது பங்கை ஆற்றி வருவோமானால் வீடும் நாடும் சிறந்து தெய்வ ஒளி வீசும் என்பதற்கு ஐயமில்லை.

*(17.5.90 அன்று சென்னை சைவ சித்தாந்த சமாஜ 74வது ஆண்டு விழாவின் மங்கையர் மாநாட்டில் நிகழ்த்திய உரையிலிருந்து)*

# 'பெண்ணெனும் பேறு'

வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன்

''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே''

முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாய், பின்னைப்புதுமைக்கும் போர்த்தும். அப்பெற்றியதாய், மூவா இளநலங்காட்டி, முதுமை அழகைக்கூட்டி காலம் இறந்து நிற்கும் ஒப்பற்ற பழம்பெரு சநாதன மதம் இந்து மதம். இந்து மதம் என்ற நூலில் பல்வேறுவகைப்பட்ட பல்வேறு தனித்தன்மை கொண்ட சமயங்கள் மணிகள் போலக் கோக்கப்பட்டிருக்கின்றன இந்துக்கள் ஆகிய நாம் பல்வேறு தத்துவங்களை அனுசரிக்கின்றோம். பல்வேறு தெய்வ வழிபாடுகள், பல்வேறு சடங்குகள், ஆனாலும் எல்லோரும் ஒட்டுமொத்தமாக இந்துக்களே . உலகில் வேறு எந்த மதத்திலும் காணப்பெறாத புதுமை இது. விரிந்து கொடுத்துத் தன்னை அடைந்தோரைக் காக்கும் கருணையில் நெகிழ்ச்சிதான் இம்மதத்தின் ஆணிவேர்.



*"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"*

என்ற திருமூலரின் ஓங்கிய குரலே இந்துமதத்தின் தாரக மந்திரம்.

இசைநிகழ்வில், வெவ்வேறு இராகங்கள் வேறு வேறு பாடல்கள். மனோரீதியான கற்பனைகள் ஆனால் அத்தனைக்கும் ஓர் அடிப்படை நிர்ணயம் உண்டு. அதுதான் ஆதார சுருதி. சுருதியில் இருந்து விலகாதவரை இசைக்கு மதிப்பு உண்டு. அதுபோலவே வேதம் காட்டும் வழியிலிருந்து விலகாதவரை இந்துவிற்கும் பெருமையுண்டு. நாம் வாழும் வாழ்க்கை வேறு. நமது முன்னோர் வாழ்ந்த முறைவேறு வாழ்க்கை ஆனால் சமயம் உள்ளதாகச் சொல்லிக் கொள்கின்றோம். ஆனால் நமது முன்னோர்களோ, வாழ்க்கையைச் சமயமாக்கி, வீரம், காதல், விளையாட்டு என்ற எல்லாவற்றிலும் ஆன்மீகப் புனிதங்களைக் காணும் பக்குவம் பெற்றிருந்தனர். இகம், பரம் என்ற வேற்றுமைகளில் ஒற்றுமையைக் கண்டனர். ஒவ்வொரு விநாடியும் இறை நினைவுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தனர். வேதகாலப் பெருமக்கள் ஒன்றேயான சக்தியைக் கண்டு ஆனந்தங் கொண்டனர். அதிலே மெய்ப்பொருளை, சத்தியத்தை, ஒழுங்கை உருக்கூட்டினர். பிறப்பிலிருந்து, இறப்புவரை வேத இசையிலேயே வாழ்ந்து மடிந்தனர். இந்து சமயத்தின் பல்வேறு பகுப்புக்களையும் வேதம் என்ற கொடியால் கட்டி

ஒருங்கிணைத்தார்கள். வேதத்திற்கு பேதம் தெரியாது. தன்னை உயர்த்திக் கொண்டு மற்றவர்களை தாழ்த்தத் தெரியாது. வாழ்வின் ஜீவனான அறத்தையும் ஒற்றுமையையும் அது வலியுறுத்துகின்றது. இது எல்லாக்காலத்திற்கும், எல்லா மதங்களுக்கும், எல்லா நாடுகளுக்கும் பொதுவானது. மொழி, மத, இனங்களைக் கடந்து காலம்காலமாக அணுத்துணையும் அசையாது நிற்கும் அதிசய மேல்வரிச்சட்டம்.

*"லோகா சமஸ்தாசுகினோ பவந்து"*

இது தான் வேதக் கொள்கை, இந்து மதத்தின் கொள்கை. இந்து மதத்தில் காணும் மற்றுமொரு விழுமிய கொள்கை பெண்மையின் ஏற்றம். இதுவே ஏனைய மதங்களில் அதிக வற்புறுத்தல் பெறாத செய்தி. அன்னையை தெய்வமாக மதிக்கும் பண்பு. . . . இல்லை தெய்வத்தையே அன்னையாக மாற்றும் மாண்பு. அதர்வ வேதத்தில் நீபெண், நீயே ஆண் (லத்வம்ஸ்திரீ, த்வம் புமான்அஸி) என்று பரம்பொருளையே பெண்ணாகப் போற்றும் வாக்கியங்கள் காணப்படுகின்றன. அருள் மலரும் காலைப் பொழுதை "உஷை" என்ற பெண்ணாகக் கண்டவர்கள், அச்சம் தரும் இரவுப்பொழுதை "ராத்ரீ" என்ற பெண்ணாகக்கண்டு வழிபட்டனர்.

*"ராத்ரீம் ப்ரபத்யே ஜனனீம். ஸ்ர்வபூத நிவேசனீம்!*
*பத்ராம் பகவதீம் க்ருஷ்ணாம் விஸ்வஸ்ய ஜகதோ நிசாம்!*

காலஸ்வரூபிணியான அன்னையை வேதமந்திரம் போற்றுகின்றது. அதுமட்டுமல்ல இவ்வுலகைப்படைத்துக் காத்து, அழிக்கும் முப்பெரும் செயல்களைச் சக்தியுருவில் கண்டார்கள். அண்டாண்ட கோளங்களையும் அடக்கியாளும் பெண்மையை இராஜராஜேஸ்வரியாய்க் கண்டு களிகொண்டனர். கல்விக்கும், செல்வத்திற்கும், வீரத்திற்கும் கலைமகளையும், திருமகளையும், மலைமகளையும் அதி தெய்வமாக ஆக்கி உவந்தனர். வாழ்வின் எல்லாக் கோணங்களிலும் பெண்மைக்குப் பெருமை சேர்த்தனர் நம் முன்னோர். வாழ்வை வளமாக்கும் பாரிய பொறுப்பைப் பூவையரின் பூங்கரங்களிலே ஒப்படைத்தார்கள். ஒரு பெண் இல்லறத்திலே மனைவியாக மட்டுமில்லை. மதி அமைச்சனாக, நண்பனாக, அரசனாக, பணியாளனாகப் பல கோணங்களில் பெருமை சேர்க்கின்றான். கணவன் தவறிளைக்கும் பொழுது இடித்துக் கூறி ஏற்றமுறச் செய்த ஏந்திழையார்களை நாம் அறிவோம்.

*"தீண்டு வீராகில் திருநீலகண்டம்"*

எனச் சிவன் மேல் ஆணையிட்டு, அற்புறு புணர்ச்சியின்மை, அயலறியாமை வாழ்ந்து பண்பையும், பதியையும் காத்த திருநீலகண்டரின் மனைவி.....

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறியறியாத்தவத்திருவாட்டி, தென்னவன் தேவி, மங்கயர்க்கரசி அன்பு ஒன்றையே ஆயுதமாக்கி, தவறிழைத்த கணவனைத் திருத்தி சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட வீரப்பெருந்திரு......

பிறர் பொருளை வெளவி வளர்ந்த கள்ளத் தொழில் கைதேர்ந்த நீலனை, யார்க்கும் பணியாத அஞ்சா நெஞ்சனை, தன் ஆடற்கலையால் வென்று தன்னைப் போலவே மாலவன் அடியார்களிடம் மனம் கொள்ள வைத்து. "பீதக ஆடைப்பிரானார் பிரமகுருவாகி வந்து" அஷ்டாட்ஷரத்தை உபதேசிக்கும் பேறு பெறச் செய்து, நீலனைத் திருமங்கையாழ்வாராக மாற்றியவள் "குமுதவல்லி" என்ற ஆடற்கலை அரசி.

சிறுவயதில் பெற்றோர்களை இழந்து அன்பிற்காக ஏங்கித் தவித்தவன் இராமன் போலா. அந்த அன்பினை தன் மனைவியின் வடிவத்தில் கண்டு அவன் மீது ஆறாக்காதல் கொண்டான். ஒரு நாள் இராம் போலாவைப் பிரிந்து இரத்தினாவளி பிறந்தகம் செல்ல, அவளின் பிரிவுத்துயர் தாளாது கொட்டும் மழை என்றும் பாராது, வெட்டும் மின்னலென்றும் கருதாது, ஓடோடி வந்து அழகிய தன் மனைவியிடம் தனது ஆறாக் காதலைப் புலப்படுத்துகின்றான். அழியும் தன் உடல் மேல் வைத்த அன்பை அழியா அழகான இராமபிரானிடம் வைத்தால் பிறவியெடுத்த பயன் கிடைக்குமே என்று பரிவாக உரைத்தாள் இரத்தினாவளி. மறுவிநாடியே இராம்போலா அழிந்தான். துளசிதாசர் உதயமானார். "இராமசரிதமானசம்" என்ற அமரகாவியம் எமக்குக்கிடைப்பதற்கு அடிகோலியவள் பெண்தான்.

அது மட்டுமல்ல உயர்ந்த நோக்கங்கள்

உலகினில் நிறைவேறத் தியாகத்தியில் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட பெண்களும் உண்டு.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் வாசஸ்பதிமிச்ரர். அனைத்து சாஸ்திரங்களிலும் கரைகண்டவர். ஆதி சங்கரர் எழுதிய பிரம்ம சூத்திர பாஷ்யத்திற்கு மிக அரிய முறையில் விளக்கம் அருளி இருக்கிறார். அதற்கு வாசஸ்பதீபம் என்று பெயர். அதற்கு உரைவிளக்கம் எழுதும் காலத்தில் தான் அவருக்கு திருமணம் நிகழ்ந்தது. திருமணம் அவரது எழுத்துப் பணியை தடைசெய்யவில்லை. தங்கு தடையற்ற பிரவாகம் போல் பொங்கிப் பெருகியது. வாசஸ்பதி மிஸ்ரரின் இளம் மனைவியின் இளமை நலமும் அனலின் மெழுகாகக் கரைந்தது மிஸ்ரர் கவனிக்கவில்லை ஆண்டுகள் உருண்டன. அழகிய புத்தகம் உருவாயிற்று. தலைநிமிர்ந்தார் வாசஸ்பதிமிஸ்ரர். அவர் கண்டது தலை நரைத்துத் தோல் சுருக்கமுற்ற மனைவியின் முதுமையை. மிஸ்ரரின் மனம் உருகியது. தனது மனைவியின் மௌனத் தியாகம் அவரது மனத்தை வாட்டியது. தான் எழுதிய அந்த ஒப்பற்ற நூலுக்கு தனது பத்தினியின் பெயரான ''பாமதி'' என்ற நாமத்தையே சூட்டி தியாகத்தின் சின்னமாக நிலை.

தம்பியார் உளதாக திலகவதியார் செய்த தியாகம். அம்பொன் மனிநூல் தாங்காது. அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி கால வெள்ளத்துள் தன்னைக் கரைத்துக் கொண்டு திருநாவுக்கரசு என்னும் அரும் பெரும் ஆணிமுத்தை அளித்தது.

தனக்குக் கிடைத்த இந்த பொருட் செல்வத்தை விலக்கி தனது கணவரான யாக்ஞ வல்லியரிடமிருந்து ஞானச் செல்வத்தைப் பெற நிழல் போல் அவரைத் தொடர்ந்த வேதகால வனிதையான "மைத்ரே"யியின் மாண்பும் எண்ண இனிப்பவை.

இப்படிக் கல்வியாலும், ஒழுக்கத்தாலும், தியாகத்தாலும், இந்துமதப் பண்பாட்டைக் காத்த மங்கையர்களின் வரலாறுகள் வற்றாத ஜீவ ஊற்றுக்கள், அதைக் கருத்திற் கொண்டு தான் கவிமணி அவர்கள்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா"

என்று முழங்கினார் போலும். ஆம் பெண்மையே ஒரு அரிய தவம் தான்.



## நவம்பர் 19 பெண்கள் தினம்

பெண்ணுக்குப் புகழும் பெருமையும் சேர்ப்பது பாரத நாட்டுப் பண்டைய பழக்கம்

பாரதப் பண்பாடு - கலாசாரம் அனைத்தும் பெண்களாலேயே போஷிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டு ஆண்டாண்டு காலமாக இன்றும் நிலைத்திருக்கின்றது என பகவான் பாபா கூறினார்.

ஒவ்வொரு வருடமும் நவம்பர் 19ம் நாளை பெண்கள் தினமாகக் கொண்டாட வேண்டுமென பாபா நியமித்திருக்கிறார். அன்று பெண்களே நாதஸ்வரம் வாசிக்க மங்கையொருத்தி குடை பிடிக்க மங்கையரே வேதம் ஓத பாபாமேடைக்கு வந்து தரிசனம் தந்தார். எழுபது பசுக்களையும் கன்றுகளையும் தானம் செய்து அன்றைய நிகழ்ச்சியில் உரைகள் யாவும் பெண்களாலேயே நிகழ்த்தப் பெற்றன.

# என்னடா மனிதா நீ?

திலகவதி I.P.S

கலை பல கற்றுத் தேர்ந்தாய்
கருத்தரங்கினில் முன் நின்றாய்
மலையெனும் மாண்பி னோடே
வானுற வளர்ந்தாய் ! செம்பொற்
சிலை நிகர் வடி வினாளை
திருமண மாலைசூட்ட
விலை வேண்டி நிற்கின்றாயே
விலை மகன் ஆயினா யோ?

என்னடா மனிதன் நீயோர்
ஏந்திழை இன்கை பற்றப்
பொன் பொருள் மெத்தை பீரோ
பூந்துகில் ஆடை கட்டில்
இன்னமும் பாத்திரங்கள்
ஏதேதோ வேண்டு மென் பாய் !
கன்னலைச் சுவைப்பதற்கும்
கைக் கூலி கேட்கின்றாயே!

விலை போக வசதி யின்றி
வெகு நாள் பின் மணம் பெற்றாலும்
மலை முடி மீதில் நிற்பாள்
மகனுக்கு மணம் பேசுங்கால்
கலை பல கற்றான் என் சேய்
கன்னிகா தான மாயும்
சிலை நிகர்த்தாளைத் தாரீர்
சீர் வரிசையி னோடென்பாள்

உரை - செயும் அறிஞர் வாக்கால்
உளம் திருந்தினன் யான் என்பாய் !
திரை யினில் காட்சி கண்டே
தெளிந் தனள் சிந்தை யென்பாய்
திருமகள் எனும் கன் னிக்குத்
திருமணம் முடிக்க வேண்டி
வரன் எனத் தேடி நின்பால்
வர தட்ச ணைகேட்பாயே !

கொள்கை யால் உயர்ந் தோன் என்பாய்
கொழுஞ்சுவை அமிழ்தை உண்ண
கொள்கின்ற கையன் ஆகி
கொடு கொடு கொடுகொடென்றே
கள்வ னாய்க் கொள்ளை கொள்ளும்
கயவ னாய்ப் படு பாதாளப்
பள்ளத்தில் வீழ்த்துவாய் நின்
பைங்கிளி பிறந்த வீட்டை

வரதட்சணை வாங்கு வோனை
மனிதனாய் மதித்தற் கில்லை
வரதட்சணையால் வாழும்
வாழ்வு உயிரில்லா வாழ்க்கை
வரதட் சணையால் வாழ்வோன்
மானத்தை விற்று வாழ்வோன்
வரதட்சணை பெறாதோனே
வணக் கத்துக் குரிய தேவன்

- நன்றி 'அலைபுரளும் கரையோரம்'

# அர்த்தநாரீஸ்வர தத்துவம்

# ஆண் பெண் சமத்துவம்

குமாரசாமி சோமசுந்தரம்



"மாது குலாவிய வாள்நுதல் பாகனை" – 'திருமந்திரம்
"அஞ்சன மேனி அரிவை ஓர் பாகத்தன்" –திருமந்திரம்
"நீல அங்க மேனியன் நேரிளை யாளொடு
மூல அங்கம் ஆக மொழிந்த திருக் கூத்தின்
சீல அங்க வேதத்தைச் செப்ப வந்தேனே" – திருமந்திரம்

"நேரிழை ஆவாள் நிரதிச ஆனந்தப்
பேர் உடையாள் ............" – திருமந்திரம்
"சேர்ந்திருந்தேன் சிவமங்கை
தன் பங்கனை" – திருமந்திரம்

பரம் பொருள் ஒன்றுதான் உள்ளது. அதுவே சிவம் சிவத்துடன் சக்தியும் உள்ளடங்கிய நிலையில் இருக்கின்றது. அன்பு, அருள், கருணை என்பன சக்தியின் தன்மைகள். குளிர்ச்சி அதன் பண்பு. தாய்மை அதன் உணர்வு. ஆற்றல் அதன் செயல்த் திறன் – வல்லபம். இச்சை, கிரியை, ஞானம் என்பன அதன் விரிவு. ஆக்குதல், இயக்குதல், ஒடுக்குதல் என்பவற்றுடன் மறைத்தல், அருளுதல் என்பனவும் சக்தியின் தொழிற்பாடுகள். "அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது" இங்கு "அவன்" என்னும் பதத்தினுள் அவளும் தொக்கி நிற்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அர்த்த நாரீஸ்வர தத்துவம், சிவமும் சக்தியும், பாதி ஆண், பாதிபெண் என்னும் நிலையில் இணைந்திருத்தல் ஆகிய உண்மையை உணர்த்துகிறது. திருமூலரே முதன் முதலில் இத்தத்துவத்தை உலகிற்கு வழங்கியவர் ஆவர். "வாள்நுதல் பாகன்", "அரிவை ஓர் பாகத்தன்", "தானே மழை பொழி தையலும் ஆய் நிற்கும்", "சிவமங்கை தன் பங்கன்" போன்ற திருமந்திரப் பாடல் தொடர்கள் இதற்குச் சான்றுகள்,

"தோடுடைய செவியன்" – சம்பந்தர் தேவாரம்
"அம்மையே, அப்பா, ஒப்பிலாமணியே" –திருவாசகம்
"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" – திருவருட்பயன்
"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி
யாங்கே மாதொருபாகனார் தான் வருவர்"
– சிவஞானசித்தியார்

இவ்வாறு சைவத் தோத்திர சாத்திர நூல்களும் அர்த்தநாரீஸ்வர தத்துவத்தை உணர்த்துகின்றன. சிவ சக்தி தத்துவமாக மலர்ந்துள்ளது.

சிவசக்தி தத்துவம் ஆன்மிக நோக்கையும், உலகியல் நோக்கையும் உள்ளடக்கிய மகா தத்துவம். மக்கள் இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழவும், அவ்வாறு செம்மை வாழ்வு வாழ்ந்து தெய் வீக நிலைக்கு உயர்வு பெறவும் வழிகாட்டுகின்ற சைவ நெறிக்கு ஆதார சுருதியாக இத் தத்துவம் அமைகிறது. ஆண், பெண் சமத்துவத்திற்கு வலுவும் வனப்பும் வடிவமும் தருவதாகவும் அது விளங்குவது அதன் தனிச்சிறப்பாகும். மேன்மை கொள் சைவ நீதி ஆண், பெண் பாலாருக்கிடையே ஏற்றத்தாழ்வுகளை அனுமதிப்பதில்லை. எவரும் எவருக்கும் அடிமையில்லை என்பதைத் தெளிவாகக் காட்டும் வகையில் அர்த்தநாரீஸ்வர வடிவ தத்துவம் அமைந்துள்ளது. சைவ தத்துவச் சிந்தனையின் சிகரம் என இதைக் கூறலாம்.

சசல உயிர்களுக்கும் அம்மையும் அப்பனும் ஆக விளங்கும் பார்வதி பரமேஸ்வரன், சொல்லும் பொருளும், கனியும் சுவையும், பண்ணும் இசையும், மணியும் ஒலியும் போன்று இணைபிரியாதுள்ளனர். இவ்வாறு சிவமும் சத்தியும்

இணைந்துள்ளமை எனுந் தத்துவம், மற்றும் அவற்றிற்கிடையே பேதங்கள் கற்பிக்கப்படாமை எனும் நீதி ஆகியன உலக இயக்கத்தின் தத்துவத்திற்கும் உலக நீதிக்கும் ஆதாரமாகின்றன. ஆணும் பெண்ணும் இணைவதினாலேயே உலகம் நடைபெறுகிறது. இசைவும் இணக்கமும் அவர்களிடையே இருக்கும் போது அமைதியும் மகிழ்ச்சியும் இன்பமும் ஏற்படுகின்றன. குலைவு ஏற்பட்டால், சமூகத்தில் சீரழிவுகள் உண்டாதல் தவிர்க்கமுடியாமல் போய் விடும். குலைவு ஏற்படக்காரணம், ஆண் ஆதிக்கம் அல்லது பெண்ணாதிக்கம் தலைதூக்கும் போது ஆகும். சைவ நீதி தளர்ச்சியுறுதலே ஆதிக்க மனப்பான்மைக்கு வழிவகுக்கிறது.

சைவசித்தாந்தத்திலே இறைவனாகிய சிவனுக்கு இரண்டு நிலைகள் உள்ளமைபற்றிப் பேசப்படுகிறது. ஒன்று சொரூப நிலை. இதில் இறைவனுக்கு எத்தகைய வடிவமோ, நாமமோ, குணங்களோ, தொழிலோ இருப்பதில்லை. அதேவேளை உருவ நிலைகளைத்தாங்கி நாமங்கள், குணங்குறிகள் தொழில்களுடன் கூடியதை தடத்த நிலை என்பர். உயிர்களுக்கு உதவும் பொருட்டே இந்நிலையில் இறைவன் உள்ளான். இவ்விரண்டு நிலைகளிலும் சிவமும் சக்தியும் ஒன்றே என்பது கருத்திற் கொள்ளற்பாலது. சொரூப நிலையில் சிவனிடம் சக்தி ஒடுங்கியிருக்கும் தடத்தநிலையில், சிவம் உயிர்களின் மீது கொண்டுள்ள அளப்பெருங்கருணையினால் அவற்றை உய்விக்கும் பொருட்டு ஐந்தொழில்களைச் செய்ய உருவங்கள் தாங்குகின்றது. அப்பொழுதும் சக்தி பின்னமிலான் ஆகவே சிவனின் நிலை உள்ளது. சக்தி, சிவத்திடமிருந்து விரிந்து பரந்து அவ்வவ் சிவமூர்த்தங்களுக்குரிய வடிவங்களாய் விளங்கும்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் முறையே பிரமா, விஷ்ணு உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் மூர்த்திகளாக அதிட்டித்து நின்று சிவனே புரிகிறான். இவ்வேளைகளில் இம்மூர்த்திகள் சரஸ்வதி, இலக்குமி, உமை, மகேஸ்வரி, மனோன்மணி ஆகிய சக்தி பேதங்களின் வாயிலாகவே இத்தொழிகள்களை ஆற்றுகின்றனர். சத்தியிலக்கணம், இவ்வாறு சிவனைப் பிரியாதவாறு அமைகின்றது, உலகில் உயிர்களை நோக்கிச் சிவன் ஆற்றுவன அனைத்தும் சக்திவாயிலாகவே நிகழ்கின்றன, சக்தியுடன் இணைந்தே நடாத்தப் பெறுகின்றன. சக்தியில்லாமல் இயக்கமில்லை என்பது உணர்தற்பாலது உலகநிலையிலும் பெண்ணின் முக்கியத்துவம், எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடலாகாது என்பதைச் சைவம் வலியுறுத்துவதாக இது அமைகின்றது.

சிவன் சக்தியின் வேறன்று, சக்தி. சிவனின்வேறன்று இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியும், ஒன்றை ஒன்று தாங்கியும் உள்ளன. இவ்வாறு ஒன்றை விட்டு ஒன்று பிரிக்க முடியாத வகையில் ஏற்பட்டிருக்கும் இந்த இயைபை "தாதான்மிய சம்பந்தம்" என்று சைவசித்தந்தம் குறிப்பிடும்.

சிவம் சத்தியின் இத்தகைய ஒருமையில் இருமைத் தொடர்பு, உலகத்தவர்க்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளமை சிறப்புடைத்தது. "காதலிருவர் கருத்தொருதித்து ஆதரவு பட்டதே இன்பம்" என ஔவையார் கணவன் மனைவிக்கிடையேயான ஈறில்லா இன்பத்திற்கு வரைவிலக்கணம் தருகிறார்.

கணவனும் மனைவியும் சமத்துவம் பேணி, சுதந்திரம் போற்றி, புரிந்தணர்வோடு, கருத்தொருமித்து ஆதரவுடன் நடத்துகின்ற இல்லறமே நல்லறம் ஆகும். ஆங்கு நிலவும் இன்பமே ஈறில்லா இன்பம். அன்பினும் காதல் பெரிது அன்பு நீர் என்றால், காதல் அதன் ஆவி வடிவத்தைப்போன்றது. ஆவி விரைவாகச் சென்று இருவரையும் பிணைக்கும் தன்மைமயது. கணவன் மனைவியிடம் நிலவும் அன்பினை காதல் என்கின்றனர். கணவனுக்கும் மனைவிக்குமிடையில் பேதம் இருக்கலாகாது எந்நிலையிலும் இருவரும் ஒருவரே இந்நிலையிலேயே இன்பம் பொங்கும், குடும்பத்தில் செழிப்பும் அமைதியும் நிலைக்கும் என்பதை உலகிற்கு உணர்த்துவதாக சிவசக்தி சங்கமம் எனும் சைவத்துவம் விளங்குகிறது.

அநேகமான பிரச்சினைகள் உரிமை தொடர்பாகவே தோன்றுகின்றன. உரிமை கேட்டுப்பெறுவதல்ல இயல்பாகவே அவரவர்களுக்குரிய உரிமையை அனுபவிக்கப்பிறர் இடையூறாக இருக்கக்கூடாது. சக்தி, சிவனிடம் தனது உரிமைகளைக் கேட்டுக் பெறவில்லை. சக்தி தனது

உரிமைகளை அனுபவிக்கும் போது சிவன் தடையாக இருப்பதில்லை. சிவனின் தொழில்களுக்குச் சக்தி உடந்தையாக இருக்கிறதே தவிர உபத்திரமாக இருக்கவில்லை. இதுவே சைவநீதி. உலகத்தவர் சைவ நீதியை மதித்து அனுசரித்தால் ஆணிடம் பெண்ணோ, பெண்ணிடம் ஆணோ தத்தம் உரிமைகளைக் கேட்டுக் கையேந்தி நிற்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட இடமில்லாமல் போயிருக்கும்.

கடமைகள் செய்வதைத் தளர்த்தி உரிமைகள் கோருவதும் நீதியாகாது. சைவம் உடன்பாடுமன்று..

ஆண் பெண் இயைந்த வாழ்வே, உலகில் நாம் வேண்டிநிற்பது. முரண்பட்ட வாழ்வு துன்பத்தையே விளைவிக்கும். பிரபஞ்சப் படைப்புக்களில் ஆண், பெண் வேறுபாடு உயிரியல் ரீதியாக உள்ளது. இவற்றிற்கெல்லாம் சிவம் என்னும் மூலகர்த்தா, சத்தியும் சிவமும் ஆக இருத்தலின் பிரதிபலிப்பே என்று அறிஞர் கூறுவர். அருவுருவத்திருமேனியாய் விளங்கும் சிவலிங்கம், சத்தியுஞ் சிவமுமாய் இருக்கிறது. கீழே பீடமாய் அமைந்த பாகம், சக்தி மேலே இலிங்கமாய் இருக்கும் பாகம் சிவன் என விளக்கம் தரப்பட்டுள்ளது. சிவலிங்க வடிவமைப்பில், சிவத்தின் உள்ளடக்கமாக ஒன்றாய் விளங்கிய சக்தி, சிவத்திற்கு ஆதாரமாய், பீடமாய் விளங்குகின்றதை அவதானிக்லாம். குடும்பத்தின் தலைமை இருவரிடம் உள்ளது. குடும்பத்தலைவன், குடும்கத்தலைவி ஆகியோரை அவ்விருவரும் ஆவர். வேறெந்த சமூக நிறுவனத்திலும் தலைவர் ஒருவரே. குடும்பத்தில் தலைமையை இருவர் பகிர்ந்து கொள்கின்றனர். இந்த வகையில் ஆண் பெண் இயைந்த வாழ்வு எய்தப்படுகிறது. கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் தாங்கி, புரிந்துணர்வோடு வாழும் போது ஒருவர்க்கொருவர் ஆதாரம் ஆக விளங்கும் போதே குடும்ப வாழ்வு செழிக்கும்.

சக்தியும் சிவமும் ஆக இணைந்திருக்கும் சிவலிங்க அமைப்பு எத்துணை தத்துவம் நிறைந்தது என்பது உணர்தற்பாலது. சிவமுஞ் சக்தியும் இணைந்திருப்பதாலேயே உலகம் நடைபெறுகிறது. குழப்பமின்றி இயல்புநிலை நிலவுகிறது. கணவனும் மனைவியும் மனமொத்து முரண்பாடுகள் இன்றி இணைந்திருப்பதினாலேயே குடும்பம் வாழ்கிறது. சுபீட்சமும் மகிழ்ச்சியும் குடும்பத்தில் நிறைகின்றன. ஆணும் பெண்ணும் இயைந்த வாழ்வையே உலகம் இன்று வேண்டி நிற்பதை நாம் உணரவேண்டும். இத்தகைய இயைபிற்கும் இணக்கத்திற்கும் எதிரான சக்திகள், சமூக விரோதமானவை, நீதிக்குப் புறம்பானவை எனக் கொண்டு அவற்றிலிருந்து விலகியிருப்பதே நல்ல நெறியாகும்.

''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கையெல்லாம்'' என்கிறார் அருணந்தி சிவாச்சாரியார். அவள் என்பது இங்கு சக்தியைக்குறிக்கும், சக்தியின்றிச்சிவம் இயங்குவதில்லை. தனு, காண, புவன. யோகங்கள் இனைத்தும் சக்திமூலும், சிவமும் சக்தியும் இணைந்ததன் பேறாக உருவாக்கப்பட்டவையே. உலகின் வாழ்வும் வளமும் ஆண் பெண் இயைபிலேயே தங்கியுள்ளது. ஆண், பெண் சமத்துவசத்திலேயே சுமூகமான இயைபு தோன்ற வழியேற்படும் அதுவே மேன்மை கொள் சைவ நீதியும் ஆகும்.

*“திருநீறிட்டார் கெட்டார்” என்பது ஆன்றோர் மொழி.*

*என்ன! பிற சமயத்தவன் திருநீறிடும் எம்மைப் பழித்து இழித்துப் பேசுகிறான் என எண்ணுகிறீர்களா? இல்லை. இதற்கு ஆழமான இரண்டு கருத்துக்கள் உண்டு.*

*ஒன்று, தினமும் தவறாமல் “சிவ சிவ” என்ற உச்சாடனத்தோடு பக்தியுடன் பல தடவைகள் திருநீற்றைப் பூசுபவர், யார் கெட்டார்? ஒருவரும் கெட்டுப் போகவில்லையே என்பது ஒன்று.*

*மற்றொன்று, பக்தியோடு இறைவனை வழிபட்டு எம் சிவசின்னமான திருநீற்றைப் பூசுபவருக்கு நான் என்ற மமதை ஆணவம் அகங்காரம் என்பன தாமாகவே கெட்டுவிடும், அழிந்துவிடும் என்பதாகும். (திருநீறிட்டார் அகங்காரம் கெட்டார்).*



# சக்தி

உலகப் படைப்பு சக்தி
உலகப் பெருக்கம் சக்தி
சக்தியின் நிறைவே சகத்தின் நிறைவு
சக்தி மறைய சகலதும் மறையும்

எதிர்க்கும் சக்தி இல்லையென்றால்
'எய்ட்ஸின்' நோய்க்கு உயிர்கள் இரை
எங்கும் எதிலும் தங்கும் சக்தி
மங்கா உயர்வு பொங்கச் செய்யும்


சக்தி சக்தி பெண்ணே சக்தி
கடலும் பெண்ணே ககனமும் பெண்ணே
மண்ணும் பெண்ணே விண்ணும் பெண்ணே
விரி நீர்க் கடலும் எரியும் தீயும் எல்லாம் பெண்ணே

பெண்ணின் பெருமை பேணப்பேண
மண்ணில் மனிதர் விண்ணுக்குயர்வர்
பெண்ணைப் போற்றி பெறுக சக்தி
எல்லா வளமும் தருவாள் சக்தி

*சுகுந்தி ராஜகுலேந்திரா*

# இசையும் சமயமும்







திருமதி. பாலம் லக்ஷ்மணன்

என்பு தோன்றி ஊன் இன்றி இளைத்த யாக்கையராய் ஒருவர் வீதியிலே நடக்கின்றார். தலையிலே விறகுக்கட்டு. அரையிலே அழுக்கு மூழ்கிய கதராடை கையில் ஒரு பழைய யாழொன்றைத் தாங்கியபடி வருகின்றார். ஒரு திண்ணையிலே அமர்கின்றார். யாழை மீட்டிப் பாடுகின்றார் சாதாரிப்பண்ணைக் கைவிரல்கள் யாழின் நரம்புகளிலே ஊஞ்சலாடுகின்றன. அந்த நரம்போசையும் இசையெழுப்பும் மிடற்றோசையும் பின்னி இசைகின்றன. உயிரைப் பின்னி இழுக்கின்றதே இந்த ஓசை என்னவென்று கேட்போர் வியப்புறுகின்றனர். 'இழுமென்றொலிக்கும்' அருவியின் ஓசையா, முழவின் ஒலியால், வலம்புரி முழங்குகின்றதா, கொழுது இசைவண்டின் தாரியா, மூங்கிலிலிருந்து மெல்ல மெல்லக் கீழே வந்து விழுகின்ற சிறுதளிரா, நெளிந்து மின்னும் மீனைச் சரக்கென்று வந்து கொத்தும் மீன் கொத்தியின் வேகமா, எதுவென்று தெரியாத வண்ணமாக எல்லாமாக அந்த இசை, உணர்வின் உணர்வைத்தட்டி எழுப்புகின்றது. ஆண்டவனே இசைஞனாக வந்து பாடுகின்றார். அந்த இசையை அனுபவிக்கும் பக்தனின் மனநிலையை பக்தர் நினைத்துப் பார்க்கின்றார். ''கண்ணிறைநுதலோன் சாமகண்டத்தில் எழுந்த முல்லைப்பண் நிறைந்த தேவகீதம், சராசர உயிரும் பாரும், விண்ணின் திசைகள் எட்டும்'' விழுங்கித் தன்மயமாக்கிற்று. கேட்போர் உள்நிறை உயிரையும் மெய்யையும் உருக்கிற்று. அந்த நிலையிலே ஐம்பொறிகளும் செவியாகிவிட்டன; ஐம்புலன்களும் பண்ணோசையாகி விட்டன என்று உணர்ச்சி வேகத்தின் வெளிப்பாட்டைக் கவிஞன் வர்ணிக்கின்றான்.

வேறொரு காட்சி; கோகுலத்தில் கண்ணன் குழலூதுகின்றான் கறவைக்கணம் கால் பரப்பிட்டுக் கவிழ்ந்து இறங்கிச் செவியாட்டாமல் கிடக்கின்றன. மான் கணங்கள் மேய்கை மறந்தன. மேய்ந்த புல்லும் கடைவாய் வழியே சோருகின்றது. மான்கள் எழுதுசித்திரங்கள் போல நிற்கின்றன. ''மரங்கள் நின்றும் மது தாரைகள் பாயும்; மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்.''

சங்கக் காட்சி ஒன்று; குறிஞ்சி நிலத்திலே தினைப் புனம் காக்கின்றாள் ஒரு மங்கை. தெள்ளிய சுனையிலே நீராடி வந்துள்ளாள். பரண் மேல் நின்று காற்றில் தன் கூந்தலை ஆற்றிக் கொண்டிருக்கின்றாள். உள்ளம் நிறைந்த களிப்பு பாட்டாக அவள் வாயில் வெளிப்படுகின்றது. குறிஞ்சிப் பண்ணை இசைக்கின்றாள். தினைப்புனத்தில் கதிர்கள் நன்கு முற்றியிருக்கின்றன. அதை நாடி வந்த யானை அந்த இசையிலே சொக்கி நிற்கின்றது. கதிரும் கொள்ள வில்லை தன் பசியும் மறந்து அம்மங்கை பாடும் பாட்டிலே மயங்கி நிற்கின்றது மதகளிறு.

இசையின் பெருமையை விதந்துரைக்கும் காட்சிகள் இவை. இசை இசைவிக்கும் பெருமை பெற்றது. எதை எதனோடு இசைவிக்கின்றது; நம்மை நம்மோடு இசைவிக்கின்றது. நம்மை இறைவனோடு

இசைகின்றது என்றெல்லாம் இசைக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே போகலாம்.

சமயம் என்பது என்ன? சமயத்திற்கு இணைப்பது என்ற பொருளுண்டு. ஆங்கிலத்தில் religio என்று கூறினால் அதற்கு சேர்ப்பது என்று பொருள். சமயம் என்பதற்கு வினையடி சமை என்பது , எனவே பக்குவப்படுத்தல் என்பதும் கருத்தாகின்றது. நம்மை இறைவனோடு இணைக்க, இறைவனது படைப்பாகிய இவ்வுலகத்தோடு இயைந்து வாழ நம்மை சமைக்கின்றது சமயம். சத்திய நாட்டத்தை எற்படுத்துவது சமயம். நமது அகவாழ்வையும் இணைக்கின்றது பக்தியை வளர்க்கின்றது. அன்பு நெறியில் நாட்டம் ஏற்படுத்துகின்றது. எல்லாவற்றிலும் இறைவனைக்கண்டு அன்பு செய்யும் பெருநெறியாகச் சமயம் நமது வாழ்வைச் செம்மைப் படுத்துகின்றது.

இச்சமய உணர்வின் முழுவெளிப்பாடு இசையிலேயே சாத்தியமாக இருக்கின்றது. பாணபத்திரன் என்ற பாடகன் ஆலவாய் பெருமானுடைய கோயிலில் பாடும் பணியை பணியாகக் கொண்டவன். பெருமழை பொழிகின்றது. அதையும் பொருட்படுத்தாது ஆலயத்தை அடைகின்றான். மழையில் நனைந்து சேறாகிவிட்ட கால்களுடன் வந்து நின்றான் அவன் பக்தியே வடிவமானவன். அவனின் நிறைந்த அன்பே இசையாக அரும்புகின்றது. என்புருக்கும் அமுத இசை பாடுகின்றான். அவனிருப்பதற்குப் பலகையிட்டு மகிழ்கின்றான் ஆலவாய்ப்பெருமான்.

ஆனாயர் என்ற அடியார் குழலினையாலேயே இறைவனைப் பக்திபண்ணுகின்றார். கொன்றை மரமொன்று காணுகின்றார். சரக்கொன்றை மரம்; சரம் சரமாக மலர்களை தாங்கி நிற்கின்றது. இறைவன் திருமுடியினை அணிசெய்யும் கொன்றையங் கண்ணியை நினைவூட்டுகின்றது. அக்கொன்றை மரமே இறைவனாகிவிடுகின்றது. நெகிழ்ந்த அன்பு அவர் தம் வாய்க் குழலில் இசையாக வெளிப்படுகின்றது. 'அன்பூறி மிசைப் பொங்கும் அமுத இசை குழலொலியாக . எவ்வுயிரும் என்பூடு கரைந்துருக்கும்' இசையாக மலர்கின்றது. தூய இசையால் இறைவனை வழிபாடு செய்த பக்தர் ஆனாயர். நாதோபாசனையே அவர்தம் வாழ்க்கை நெறியாக அமைந்தது.

இறைவன் புகழ் பாடுகின்றார் ஒரு ஆதிமனிதர். 'மரணத்தின், பள்ளத்தாக்கில் சாவின் நிழலில் நடக்க வேண்டுமெனினும் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை' ஏன் தெரியுமா? இறைவனே நீ என்னுடன் இருக்கின்றாய் உன் கோலும் தடியும் என்னைக் காக்கும். மக்களே வாருங்கள் எல்லோரும் பாடுங்கள் அவன் புகழ்; யாழைக் கொண்டு வாருங்கள்; குழலைக் கொண்டு வாருங்கள். பேரிகை அடிப்போம்; தாளங்கள் கொட்டுவோம்; வெற்றிகீதம் இசைப்போம். உயிருள்ளவெல்லாம் அவன் புகழ் பாடட்டும் என்று மேனாட்டுக்கீதம் ஒன்று. அந்தப்பாட்டு – Psalm என்ற இசையமைப் புடையது அந்தப்பாட்டு முழங்குகின்றது. தெய்வீகப் பாட்டு O Praise the lord என்று தொடங்கும் பாட்டு.

Praise him with fanfares on the trumpet
Praise him upon lute and harp
Praise him with the flute and strings
Praise him with clash of cymbols
Let everything that has breath
Praise the lord,
O praise the lord என்று முடிகின்றது. தெய்வீகம் நிறைந்த தேவகானமாகக் காதில் விழுகின்ற Psalm இது.

தமிழை இயல், இசை, நாடகம் என்று மூன்றாகப் பிரித்து முத்தமிழ் என்று வழக்குவது. மிகப்பழைய இலக்கிய மரபாகும் இயல் தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் இடையில் இசைத் தமிழை வைத்து இசைத்தமிழ் என்று வழங்குகின்றது. 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று அவ்வைப் பிராட்டி வேண்டுகின்றாள். நம்பியாண்டார் நம்பி 'முத்தமிழாகரன்' என்று ஞானசம்பந்தப் பெருமானைக் குறிக்கின்றார். இயற்றமிழுக்கும் இசைத்தமிழ் பேசப்படுகின்றது. இது அவ்விரண்டுக்கும் உயிர் நாடியாக இசை அமைந்திருப்பதைக் காட்டுகின்றது.

இயற்றமிழில் நான்கு விதப் பாவினங்களைச் சொல்லுவார்கள். ஆசிரியப்பா. வெண்பா, வஞ்சிப்பா,

கலிப்பா என்பனவே அவை. அவற்றுக்கு ஓசையிலக்கணம் வகுக்கப்பட்டிருக்கின்றது. ஆசிரியப்பாவுக்கு மயில் அகவுதல் போன்ற ஓசை; வெண்பாவுக்கு ஒருவர் மொழிய மற்றவர் சொல்லுதல் போன்ற செப்பலோசை; வஞ்சிப்பாவுக்கு தூங்கலோசை; கலிப்பாவுக்குத் துள்ளலோசை என்று கூறுவார்கள். இந்த ஓசைப் பண்புகள் இயற்றமிழ்ப் பாடல்களுக்கு இன்றியமையாதவை; எனவே இசைத்தமிழுக்கும் இயற்றமிழுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்பது வெளிப்படை. நாடகத் தமிழுக்கு இசையின் அத்தியாவசியம் பற்றிக் சொல்லத் தேவையில்லை. இங்ஙனம் இசைத் தமிழ் ஏனைய இரண்டிற்கும் வலிகொடுத்து ஒளிகொடுத்து விளங்கும் பெருமைபெற்றது.

இசைத்தமிழ் என்பது என்ன? பண்ணோடு பாடும் பாடல்கள் தாளத்தோடு பாடும் பாடல்கள், அதாவது இசை முறைகளோடு பாடப்படும் பாடல்கள் இசைத்தமிழ் எனப்படும். மொழிக்கு ,மூத்தது ஒலி. ஒலிக்கு மூத்தது நாதம். பிரபஞ்ச தத்துவத்துக்கே நாதம் அடிப்படையாக இருக்கின்றது. ஓங்காரம் என்றும் பிரணவப் பொருள் என்றும் குறிப்பிடப்படுவது இந்த நாதமே. இந்த நாதோதயமே அறிவென்ற வெளிச்சத்துக்குக் காரணமாக அமைகின்றது. தேவகீதமாக விளங்குவது நாதம் என்று குமரகுருபரர் பேசுகின்றார். முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதுகின்ற அடியார்க்கு நல்லார் நாதத்தின் பரப்பையும் விளக்கத்தையும் வரையறை செய்து காட்டுகின்றார். பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் இசையென்று பெயராம் என்று விளக்குகின்றார். நெஞ்சு, மிடறு, முதலிய பெருந்தானங்கள் எட்டாலும் எடுத்தல், படுத்தல், முதலிய கிரியைகள் எட்டாலும் பண்ணிப் படுத்தப் படுவது பண்" என்று மேலும் அதை விவரிக்கின்றார். ஆதி இசைகள் பதினாயிரத்துச் சொச்சம் என்று வேறு கூறுகின்றார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே விதியும், ஒழுங்கும், உருவமும் பெற்ற ஒரு பெருங்கலையாக, கடலாக வழங்கும் இசைத்தமிழுக்குக் காலம் கற்பிக்க முற்படும் போது இறைவனைப் போல் இசையும் அநாதியானது என்ற உணர்வு ஏற்படுகின்றது. இறைவனை இசையிலும் 'இசையில் இறைவனையும் காணும் உணர்வு கைவரப் பெறுகின்றது.

சமயம் எப்பொழுது தோன்றிற்று என்ற கேள்விக்கு விடையளிக்கின்றார் ஒரு பேரறிஞர். மனிதகுலம் தோன்றிய நாள்முதல், அதற்குக் கண்பார்க்க ஒளிகாட்டி, கால் நடக்கப் பாதை காட்டி வாழ வழிகாட்டும் வாழ்க்கைத் தத்துவமாக அது விளங்கி வந்திருக்கின்றது என்கின்றார். அந்த உணர்வின் வசப்பட்டார், பார்க்கின்ற இடமெல்லாம் பரமனுடைய காட்சியையே கண்டார்கள். இயற்கையை எல்லாம் இறைவன் வடிவாகக் கண்டார்கள். நீலநிறத்துச் சிறுபிள்ளையை நீலத்திலே எல்லாம் கண்டார்கள். குன்றாடு கொழுமுகில் , குரைகடல், குவளைகள் எல்லாவற்றிலும் கணமயில் போல் நிறமுடைய நெடுமாலைக் கண்டார்கள். பாடுமின் பாடிப் பாடித் தேடு மின் என்று பரமனையே பாடுவார்களானார்கள். 'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே' என்று என்று ஒருவர் பாடினார். அந்தக் களிப்பு இசைக்கும் பொருந்தும் இறைவனுக்கும் பொருந்தும். நெஞ்சக் கனகல்லை நெக்குருகச் செய்வது இறையுணர்வு. பாலைப் பண்கேட்டுத் தம் கைப்படை நழுவவிட்டுப் பகை மறந்து வன் தொழில் மறந்து உருகி நிற்கின்றனர் ஆறலைக் கள்வர்.

இசையும் இறை உணர்வும் ஒன்றோடொன்று பின்னி இணைந்த பேருணர்ச்சியாகி உணர்ச்சிப் பிரவாகமாக விளங்குகின்றன.

இறையருள் பெறக் குருவருள் சித்திக்க வேண்டும். குருவருள் துணையின்றித் திருவருள் கைவராது என்று சாத்திரங்கள் கூறுகின்றன. மந்திரங்களை உச்சரிக்கும்போது அவற்றைச் செய்த முனிசிரேட்டர்களுக்கு வந்தனம் சொல்லியே அவற்றைச் செபிக்கத் தொடங்கும் மரபு ஒன்று உண்டு. சங்கீதத்துக்கும் அதோடு தொடர்பு பெற்ற மெய்ஞ்ஞான பரம்பரை ஒன்று வாழையடி வாழையாகத் தோன்றி வளர்ந்துள்ளது; அந்த ஞானப்பரம்பரை நமக்கு அத் தெய்வீகக் கலையைக் கையளித்து வந்திருக்கின்றது. நந்தி மத்தளம் கொட்ட நாரதர் தாளம் போட காலைத்தூக்கி நின்றாடுகின்றான் இறைவன். காதில் கந்தருவத்தையே குழையாக அணிந்திருக்கின்றான். அவனது கையுடுக்கையிலிருந்தே சப்த சுரங்களும் உதிர்ந்தன என்பனவும், வீணை வாசிக்கின்ற வீணாதார தட்சிணா மூர்த்தித் திருக்கோலமாக

வீற்றிருக்கின்றான் எம்மிறை என்பதுவும், சங்கீத ராகங்களை யெல்லாம் தேவர்களாகவும் தேவதைகளாகவும் வணங்குவது என்பதுவும். இசை தெய்வீகம் பொருந்தியது என்பதை விளக்குவதாக அமைந்துள்ளன.

சங்கம் வளர்த்த மிகப் பழைய நூல்களாகிய பரிபாடல் போன்றவை இசையோடு கூடிய துதிப்பாடல்கள் நிரம்பியவை. இப்பொழுது விரிந்து காணப்படும் கர்நாடக இசை செழிப்புற்று வளர்வதற்கு ஆதாரமாக விளங்கும் பண்முறைகள் தோன்றிய காலம் சங்ககாலம். சிலப்பதிகாரத்தில் நிருத்தம் கீதம் வாத்தியம் என்ற மூன்றும் விளக்கமாக விவரிக்கப்படுகின்றன. இம் மூன்றையும் சேர்த்துக் குறிப்பிடும் தமிழ்ச் சொல் கொண்டாட்டு என்பது நல்ல 'கொட்டாட்டுப் பாட்டாகி நின்றான் இறைவன் என்ற ஒரு குறிப்பை பழைய இலக்கியங்களிலே காண்கின்றோம் சேர்ந்து பாடுகின்றார்கள் ஆய்ச்சியால் குரவைக் கூத்தாட்டு ஆடுகின்றார்கள். சேர்ந்து பாடுகின்ற ஒரு மரபையும் இப்பொழுது ஆலயங்களிலே கோஷ்டிகானமாக, Church Choir ஆக உருவெடுத்துள்ளது. ஏழிசைச் சூழல் என்று ஒரு கலையரங்கு குறுப்பிடப்படுகின்றது. அங்கே காணுகின்றோம். மேல் நாடுகளிலே இந்த மரபே இப்பொழுதுள்ள இசைக்கலை மன்றங்களை ஒத்தது போலும் இது.

இசையும் சமயமும் கைகோத்துக் களி நடனம் செய்த காலம் தென்னாட்டில் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடிய காலமாகிய நாயன்மார் காலம். இசையின் பொற்காலம்; பக்தியின் பொற்காலம், 'தமிழோடிசை பாடமறந்தறியாத திருநாவுக்கரசுப் பெருந்தகை 'இசைகற்று வல்லார் சொல்லக்கேட்டுக் கண்ணாரக் கண்டு அதை நனவாக்கிய திருஞானசம்பந்தர், 'ஏழிசையாய் இசைப்பயனாய்' – இறைவனைக் கண்ட சுந்தரர் என்ற மூவர் வாழ்ந்த காலம். வாழ்வைச் செம்மைப்படுத்தும் சக்தியாக, சத்தியமாக, வாழ்வின் உச்சமாக விளங்கும் ஒளியாகச் சமயம் விளங்கிற்று. அந்த சத்தியத்தின் குரலாக இசை மிளிர்ந்தது.

இம்முவர் காலத்துக்குப் பின் வந்தவரான மணிவாசகப் பெருமான். அவரது பாடல்களிலே அவர் நாதத்தையும் ஆராதித்தார் என்பது நன்கு வெளிப்படுகின்றது. பெண்களை சேர்ந்து பந்து அடிக்கின்றார்கள். அம்மானை பாடுகிறார்கள். சிறகடித்தும் பறந்து விளையாடுகின்றார்கள். பூக்கொய்ய ஒரு பாட்டு என்றெல்லாம் இசையின் விகசிப்பை அங்கே காணுகின்றோம். மாணிக்க வாசக சுவாமி வீணையிசை நன்கு கைவரப் பெற்றவரோ என்று கூட நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகின்றது. அவரது போற்றித் திருவகவலைப் பாடும்போது வீணையில் தாளம் மீட்டும் லயத்தின் இசையிலே ஒன்றுகின்ற ஒரு லயம்–அங்கு பளிச்சிடுகின்றது. 'போற்றி போற்றி, புராணகாரண, போற்றி போற்றி சய சய போற்றி என்ற பகுதிகள் இவ்வுண்மை யை நன்கு காட்டு வனவாக அமைகின்றன.

பக்தியும் பாட்டும் சேர்ந்தவையாக அமைந்தவையே வைணவ அடியார்களுடைய திவ்யப்பிரபந்தங்கள்: 'பூதமுதல் நாகன் சீர்ப் பூங்கழற் கீழ்ப் பசுந்துளவால் ஏதமிலாப் பூமாலை பாமாலை எனும் இரண்டும் ஆதரவினால் கட்டி அருளாட்சி' செய்தன ஆழ்வார்களுடைய நான்கு ஆயிரங்கள். ஆழ்வார்கள் இறைவனைத் தவிர வேறு எவரையும் பாடமாட்டோம் என்று உறுதிபடைத்தவர்கள். இசையின் வடிவமே நாரணன் வடிவம் நாதத்தின் வடிவமே என் திட நம்பிக்கை படைத்தவர்கள் 'யாழ்பயிலும் நூல் நரம்பின் முதிர் சுவையே' என்று பாடுகின்றார் நம்மாழ்வார். பாட்டினால் உன்னை என் நெஞ்சத்து இருந்தமை காட்டினாய் என்று திருமங்கையாழ்வார் பாடுகின்றார் குழந்தைக் கண்ணனைப் பாடுகின்றார் பெரியாழ்வார். பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் இறை வடிவை அங்கு காணுகின்றோம். கண்ணனைத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டுப் பாடுகின்றார். செங்கீரை ஆடுக என்றும் சப்பாணி கொட்டாய் என்றும் பூச்சூட வருவாய் என்றும் உள்ள முருக்கும் பிள்ளைத்தமிழ் பாடுகின்றார் பெரியாழ்வார். இந்த இசை அமைதிகளினால் பக்தி உணர்வு பிரவாகித்து விளங்கும் ஒரு சமுதாயம் அமைப்பினையும் காணக்கூடியதாக விருக்கின்றது.

பல்லவர்சோழர்காலங்கள் இசையும் சமயமும் மேன்மை பெற்று விளங்கிய காலம். மாமல்லை என்ற கடலோர நகரில் கல்லில் காப்பியம் வடித்தவர்கள் பல்லவ மன்னர்கள். பல்லவ மன்னன் முதலாம்

மகேந்திரவர்மனுக்கு இசையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அவனைப்போலவே இசையாராதனை செய்தவன் காஞ்சி சைலாசநாதர் கோயிலைக் கட்டிய இராஜசிம்ம பல்லவன். ஸ்ரீ வாத்ய வித்யாதர; ஸ்ரீ ஆதோத்ய தும்புரு, ஸ்ரீ வீணாநாரத என்றெல்லாம் அவனுடைய விருதுகள் கல்வெட்டுடில் காணப்படுகின்றன. அவன் மாமல்புரத்துக்கு மூன்றுமைல் தள்ளியுள்ள சாதுவன் குப்பம் என்ற கிராமத்தருகில் அதிரணசண்டேசுவராலயம் என்று சிவபெருமானுக்கு ஒரு கற்கோயில் அமைந்துள்ளனான். அக்கோயிலுக்கருகில் புலிக்குகை என்ற குடைவரை மண்டபம் ஒன்று இருக்கின்றது. கீதவாத்திய உபசாரங்களால் இறைவனை ஆராதிப்பதற்காகச் சமைக்கப்பட்ட சங்கீத மண்டபம் இது என்று விளங்குகின்றது. கடலை நோக்கி அமைந்த இசை அரங்கு இந்த அரங்கின் குகையமைப்பால், அதிலிருந்து பாடுபவர் இசை, குகையில் வியாபித்துச் சுவரில் மோதிச் செவிக்கு இனிமை அளிக்கும் வகையில் அடக்கமாக ஒலிக்கின்றது, அலையோசை இதைப் பாதிப்பதில்லை புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் விதந்து எழுதுகின்றார்.

தஞ்சைப் பெருவுடையார் கட்டிய சோழப் பெருமன்னனாகிய இராஜஇராஜசோழன் காலமே தேவாரங்கள் கண்டெடுக்கப்பட்ட காலம். அவற்றுக்குரிய பண்கள் பற்றி அறிவதற்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபிலே வந்த பெண் ஒருத்தி உதவி செய்தாள். ஆலயங்களிலே தேவாரங்களை பண்ணோடு பாடும் வழக்கம் ஏற்பட்டது.

பல்லவ சோழப் பேரரசர் காலத்தில் தமிழ் நாட்டில் எழுந்த கற்கோயில்கள் கடவுளர் கோயில்களாக விளங்கியதோடு கலைக் கோயில்களாகவும் விளங்குகின்றன. திருக்கோயில்கள் மக்கள் வழிபடும் தலங்கள் என்பது மட்டுமன்றி, மக்கள் கூடும் பொது விடங்களாகவும் விளங்கின. சிற்பமும் , ஓவியமும், இசையும் இசைக் கருவிகளும் இங்கே செழித்துவளர்ந்து செம்மைப்பட்டன.

ஆலயங்களின் நித்திய நைமித்திக கருமங்களிலே இசை மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இசைக் கருவிகளில் கோயிலுக்கென்றே விளங்கி வருவது நாதஸ்வர இசை. இந்த நாதஸ்வரத்தை மங்கள வாத்தியம் என்று கூறுவார்கள் . இந்த மங்கள வாத்தியமும் மற்றுள்ள வாத்தியங்களும் ஒன்று சேர்ந்து பூஜை முதலிய ஆலய வினைகளை வகைப்படுத்திக் கிரமப்படுத்தி விடுகின்றன. திருவிழாக் காலங்களிலும் சரி, அன்றாடப் பூசை நேரங்களிலும் சரி, நாதசுர இசை கேட்டு மக்கள் கோவில் பூசை, அவற்றின் நேரம் முதலியனபற்றி அறிந்து கொள்வது வழக்கம். ஒவ்வொரு ஊரிலும் கோயிலைச் சுற்றியே குடிமனைகள்; மல்லாரி வாசித்தால் சுவாமி புறப்பாடு என்பது தெரியவரும் ஸ்தம்ப பூசையா, சுற்றுப்பலியா, நைவேத்யம் வருகின்றதா, தீபாராதனையா, அர்த்தசாமப் பூசையா எல்லாவற்றுக்கும் ஒவ்வொரு தனித் தனி ராக வாசிப்பும் நாதஸ்வரத்தில் உண்டு. இங்ஙனம் பக்தியையும் இசையையும் ஒருங்கு சேர ஊட்டும் பணி; மக்கள் மனதில் இல்லறத்தையும் இறைவனையும் ஒன்று சேர்க்கும் பணி கோவிலின் பித்தியேக இசைக் கருவிகளுடையதேயாம். இங்ஙனம் ஆலயத்தை ஒட்டி வளர்ந்த இசைப் பாரம்பரியம் இருக்கின்றதே அது இந்து சமயத்துக்கே உரிய ஒரு விசேட பாரம்பரியம் என்று கூறுவது மிகையல்ல.

மேனாட்டிலும் கிறித்துவ சமயத்தில் கோயிலைச் சுற்றி ஒரு இசை வளர்ந்து வந்துள்ளது. குழு இசை, ஆர்கன் பியானோ, லயர் என்ற வாத்தியங்கள், தாளங்கள், தண்ணுமைகள் என்பனவற்றோடு ஆமந்திரிகை இசை முறைக்கு இது மூலமாக விளங்குகின்றது. ஹார்மனி இசை மரபின் இன்றைய விஸ்தார வளர்ச்சிக்கு ஊற்றாக விளங்குகின்றது.

வட இந்தியாவில் இஸ்லாத்தின் வரவால் இந்தியா பெற்ற கொடை இந்துஸ்தானி சங்கீதம். இது முதலில் அரசதர்பார்களில் பாடும் ஆஸ்தான சங்கீதமாக விளங்கினும், சமயத்தின் அடிப்படையிலேயே இது விகசித்தது. புகழ்பெற்ற இந்துஸ்தானி சங்கீத மேதை தான் சென்னுடைய குரு அனுபூதி பெற்ற அருளாளர். ஆனால் காலப் போக்கில் தர்பார் சங்கீதம் போக்கிய சங்கீதமாதயிற்று. எங்ஙனம் தென்னாட்டில் ஜமீன்தார்கள், குறுநில மன்னர் என்போர் தம்கையில்

சிற்றிலக்கியம் வளர்ந்து ஒரு ஆத்மீக வீழ்ச்சி ஏற்பட்டதோ அதே போன்று ஒரு நிலை அங்கும் ஏற்பட்டது. அதை எதிர்க்கும் முகமாக வட நாட்டில் ஏற்பட்ட பக்தி இயக்கம், கீதகோவிந்தம் பாடிய ஜயதேவர், நாம சங்கீர்த்தனம், ஜாத்ரா பஜனை போன்றவற்றின் தந்தை எனப்படும் சைதன்யர் என்ற அருளாளர்களால் பக்தியும் பாட்டும் கலந்ததொரு பேரியக்கமாயிற்று.

பதினெட்டாம் நூற்றாண்டில் திருவாரூர் தந்த அருட்செல்வர்கள் என விளங்கும் தியாகராஜ சுவாமிகள் முத்துஸ்வாமி தீக்ஷதர், சியாமா சாஸ்திரிகள் என்ற மூவரும் இறைவனுக்கு இசை மணம் கமழும் பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்கள். இம்மூவரையும் சங்கீத மும்மணிகள் என்று அழைப்பர். தியாகராஜ சுவாமிகளுடைய கிருதிகள் என்ற புதிய இசை வடிவம் ஒரு புதிய பாரம்பரியம் வளர வழி காட்டியுள்ளது. நாதோபாசனை செய்து நாதத்தால் இறைவனை அடைந்த பெரியோர்கள் இவர்கள்.

சங்கீத உபன்னியாசங்கள், கதா காலட்சேபங்கள், ஹரி கதைகள், பாகவத மேளங்கள் என்பனவெல்லாம் பக்தியை வளர்க்கும் நவீன இசை வடிவங்களாக விளங்குகின்றன.

உள்ளம் உருகிப் பாடுவதற்குப் பொருள் தெரிந்து பாடவேண்டியது மிக மிக அவசியம் என்ற உணர்வே தமிழிசை இயக்கமாக வளர்ந்தது. தமிழிசை வளரக் கலைக்கூடங்கள், கலை மன்றங்கள், என்பன வளர்க்கப்பட்டன. பழைய பண்ணிசை வடிவங்களையும் புதுப்பித்துப் பேணப் பண் மகாநாடுகள் கூட்டப்பட்டன. தேவார இன்னிசைக் கச்சேரிகள் செய்யும் ஒரு புதிய மரபு வளர்ந்தது. நமது ஈழ நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவராகிய விபுலானந்த அடிகள் பண்டைய யாழின் வடிவையும் இசையையும், அதன் இசை அமைப்பையும் ஆராய்ந்து ஆராய்ந்து தம் வாழ்நாளை அதற்கு அர்ப்பணித்தவர்கள். அவர் ஆற்றிய பெரும் பணியின் நிலைத்த அடையாளமாக 'யாழ்நூல்' இன்று விளங்குகின்றது.

'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலார்க்கு நாம் ஆயிரம் திருநாமம் பாடித்தெள்ளேணம் கொட்டோமோ' என்று மாணிக்க வாசக சுவாமிகள் பாடுகின்றது. நாம சங்கீர்த்னத்தைக் குறிக்கின்றதோ என்றொரு ஐயம் ஏற்படுகின்றது. வீடுகள் தோறும் சென்று உறங்கும் பெண்களைத் துயிலெழுப்பத் திருவெம்பாவை திருப்பாவை பாடுதல் என்பவை மிகப் பழைய காலத்தில் ஏற்பட்ட மரபுகள். இன்று அவைதான் நகர சங்கீர்த்தனமாக வளர்ந்து வந்துள்ளன எனக் கொள்ள லாம்.

பாடும் பணியே பணியாய் அருள்வாய் என்ற பிரார்த்தனையோடு லயவிந்நியாசமாக அமைந்த திருப்புகழிசையே இன்று லயசங்கீத வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்தது எனலாம்.

உள்ளத்தை உருக்குவது இசை. தூய உணர்வுகளுக்கு எல்லாம் பிறப்பிடமாக இருக்கின்றது இசை. உள நூலார் இசை பற்றிச் சொல்லும் குறிப்பு அவதானிக்க வேண்டியதொன்று,. இசை மனதின் தீயசக்திகளையெல்லாம் துப்புரவாக்கி விடுகின்ற பணியைச் செய்கின்றது என்பதே அக்குறிப்பு. இதுவே இசையின் இலட்சியமாக இருக்க வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்கின்றோம். உயர்ந்த எண்ணங்களையும் சிறந்த பயன்களையும் வளர்க்கும் ஒரு தூய மரபு இசைக்கு உண்டு. இது இன்று நேற்றுத் தோன்றியதன்று. இந்த மரபு ஆயிரங்காலத்துப் பயிராக வளர்ந்து நிலைபெற்றுள்ளது.

கீழே கீழே இழுக்கும் மனித உணர்வுகளை மேலே மேலே உயர்த்தி, உயர்ந்த குணங்களை வளர்க்கும் மரபு பக்தியும் பாட்டும் ஒன்றித்த உயர்ந்த மரபாகின்றது. மனிதர்கள் மனதில் தெய்வீகத்தை ஏற்படுத்துவது; அவரை மனத்துக்கண் மாசில்லாதவராக வாழ வழிசெய்வது என்ற உயர்ந்த இலட்சியங்களை உள்ளடக்கியே சமயம் இசையை வளர்த்து வந்துள்ளது. வார்த்தைகளால் சொல்ல முடியாததை, நுண்ணுணர்வால் மட்டும் அறியக்கூடிய சமயத்தை விளக்கும் சாதனமாக இசை அமைந்து நமது வாழ்வை வளம்படுத்துகின்றது என்பதில் எள்ளவும் ஐயமில்லை.

# சக்தி விழித்தெழுந்தால்...

பெண்ணகத்ததே
இம் மண்ணின் வரலாறு.

எல்லாப் பொருளுள்ளும்
பெண்ணின் மகத்தான தன்மையெனும்
தாய் புகுந்து தொட்டிலிடும் !

இயற்கைத்தாய் !
தேசத்தாய் !
வீரத்தாய் !

இத்தாய்மையின் பிரசவிப்பே இப்பேரண்டம் !
எல்லாக் கருத்தியலின் ஆளுமையும்
அவள் கருப்பையின் விகசிப்பே !
அவள் கருப்பையில் துயின்றவைகள்
தம் உயிர்ப்பின் ஊற்றை மறந்து
அவள் கைக்கு விலங்கிட வோ ?
சக்தி விழித்தெழுந்து கூத்திட்டால்
அவள் காலடியில் சங்கரன் !

"துவைதிலி"

# தமிழில் பெண்கள் இலக்கியப் பாரம்பரியத்தைத் தேடி....

சித்திரலேகா மௌனகுரு

அறுபதாம் ஆண்டுகளில் மேற்கைரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் மேலெழும்பிய பெண் நிலைவாதத்தின் இரண்டாவது அலை பல்வேறு அறிவுத் துறைகளிலும் புதிய போக்குகள் உருவாகக் காரணமாயிற்று. மானுடவியல், வரலாறு, பொருளியல், தொடர்பியல், இலக்கியம், உளவியல், மெய்யியல் போன்ற அறிவுத்துறைகளை பெண்நிலைப் பார்வை வழிநின்று மறுமதிப்பீடு செய்யும் போக்கு உருவாகியது.

பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே சமூகத்தில் காணப்படும் பால்நிலை வேறுபாட்டைக் கவனத்தில் கொள்ளாமலும், அவர்களது அனுபவம், அந்தஸ்து நிலை, சமூகப்பங்களிப்பு, உழைப்பின் மதிப்பு தொடர்பான விசேட அம்சங்களைப் பற்றிய அக்கறையின்றியும் ஆண் நிலை நோக்கில் அறிவுத்துறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என கருத்து முன் வைக்கப்பட்டது. பெண்களது பங்களிப்பினையும், அவர்கள் பெண்களாயிருப்பதால் உருவாகியுள்ள சில விசேட அம்சங்களையும் புறந்தள்ளியே வரலாறும், ஏனைய சமூக விஞ்ஞானத் துறைகளும் தமது ஊகங்களை அமைத்துள்ளன. இத்தகைய ஒரு விமர்சனத்தின் அடிப்படையில் பெண் நிலைவாதமானது அறிவுத்துறைகள் தொடர்பாகப் பின்வரும் கருத்தினை முன்வைத்தது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் பால்நிலை வேறுபாடு வெறுமனே உயிரியல் அடிப்படையில் அடைந்த பகுப்பு மாத்திரம் அல்ல, அது அந்தஸ்து அடிப்படையில் அமைந்தது. சமூகத்தில் ஆண்களிலும் பெண்கள் தாழ்த்தப்பட்ட நிலையில் உள்ளனர். ஆண் அதிகாரம் உடையவன். பெண் அதிகாரத்திற்கு உட்படுபவள். இருபாலாருக்கும் இடையே அசமத்துவ உறவு நிலவுகிறது. அதிகார நிலையுடைய ஆண் பாலாரால் சகல துறைகளையும் தம் மேலாட்சிக்கு உட்படுத்தவும் தமது நலன்களைப் பேணிப் பயன்படுத்தவும் முடிகிறது. இந்த அதிகார நிலை அறிவுத்துறைகளில் ஆண்மையப் பார்வை உருவாகக் காரணமானது.

இந்த ஆண்மையப் பார்வைக்கு மாற்றாக பெண்கள் மனித வரலாற்றுக்கு ஆற்றிய பங்கையும், அவர்களது பால் நிலையையும் (Gender) கருத்தில் கொண்டு அறிவுத்துறைகளின் எல்லைகளும், முறையியல்களும் விசாரிக்கப்பட வேண்டும் என்ற உணர்வின் விளைவே அறிவுத்துறைகள் தொடர்பான பெண்நிலை விமர்சனம் எழுந்தமைக்கும் அந்த அடிப்படையில் மாற்றுக் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டமைக்கும் காரணமாகும். இவை பெண்ணிய ஆய்வுத் துறை – Women Studies என்ற ஒரு கல்வித் துறையின் தோற்றத்துக்கும் வழி வகுத்தன.

மேற்கூறிய மறுபரிசீலனையும், மாற்றுக் கருத்துக்களும் இலக்கியக் கல்வி, இலக்கிய விமர்சனம் ஆகிய துறைகளில் பெண்நிலைப் பார்வை கொண்ட கோட்பாடுகளை உருவாக்கின. இலக்கியத்தில் பெண்நிலைப் பார்வையானது, மனித அனுபவங்களைப் பால்நிலையும், ஆண் பெண்ணுக்கிடையிலான அசமத்துவ உறவும் வேறுபடுத்துகின்றன என்ற கருதுகோளின் அடிப்படையில் அமைந்ததாகும். எனவே இலக்கிய கர்த்தாவின் பால்நிலை அந்தஸ்து, இலக்கிய உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது; இலக்கியத்தில் வெளிப்படும் கருத்து நிலைக்கூடாக வெளிப்படும் சார்பினை அது தீர்மானிக்கிறது.

மேலும், மொழியும் கூட ஆண் அதிகாரத்தால் பாதிப்புற்றுள்ளது. மொழியை ஊடகமாகக் கொள்ளும் இலக்கியம் ஆண் அதிகார மையங்களை மறு உருவாக்கம் செய்வதிலும் பேணுவதிலும் வல்லமையுடன் செயற்படக்கூடியதாகும். ஆனால் இத்தகைய

அம்சங்களை இலக்கியத்தில் காண்பதற்கு ஏற்கனவே நிலைநிறுத்தப்பட்டுள்ள இலக்கிய அணுகுமுறைகளும் நோக்கு நிலைகளும் பயன்படமாட்டா; ஏனெனில் அவை ஆண்நிலைச் சார்பு கொண்டவையாக அல்லது பால்நிலைப்பார்வை அற்றனவாக (Gender Blind) உள்ளன. எனவே இக்குறைபாடுகளுக்கு மாறாக கோட்பாடுகளை உருவாக்குதல் வேண்டும்.

1969 ஆண் ஆண்டு வெளியாகிய Sexual politics' (பாலின அரசியல்) எனும் நூல் மேற்கூறிய சிந்தனைகளின் ஒரு தீர்மானமான ஆரம்பமாக அமைந்தது. Kate Millet என்ற அமெரிக்கப் பெண்நிலை ஆய்வாளருடைய இந்நூல், உலகின் பேரிலக்கியங்கள் எனக்கருதப்பட்டவை எவ்வாறு பெண்களை நோக்குகின்றன; இலக்கிய உலகில் பெண்களது ஆக்கங்கள் எவ்வாறு புறக்கணிப்புக்கும் அலட்சியத்துக்கும் ஆளாகியுள்ளன என்பவை தொடர்பாகச் சில கருத்துக்களை முன்வைத்தது.

இக்கருத்தோட்டம் 1970களில் வளர்ச்சி பெற்றது. இலக்கியத்தில் பெண்கள் சித்தரிக்கப்படும் முறைமை பற்றியும், பெண்களது ஆக்கங்கள் பற்றியும் விசேடமான ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின. குறிப்பாக வட அமெரிக்கா, ஐரோப்பியப் பெண்கள் ஆய்வாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர். எலைன் ஷோவால்டர், சந்ரா கில்பற், சூசன் குபர் போன்றோரைக் குறிப்பிடலாம்.

பெண்நிலை இலக்கிய நோக்கில் இருவகைகளிற் செயற்படலாம் என எலைன் ஷோவால்டர் வாதிட்டார்.

1. பெண்நிலை விமர்சனம்
(Feminist Critique)

2. பெண் மைய விமர்சனம்
(Cyno Critics)

முதலாவது முறை இலக்கியத்தில் பெண்களின் பிம்பங்களையும், பெண்கள் சித்தரிக்கப்படும் வகை மாதிரிகளையும் ஆராய்தலும், இந்த வகை மாதிரி உருவாக்கங்களின் பின்னால் அமைந்திருக்கும் ஆண் அதிகார மையங்களை வெளிப்படுத்தலும் ஆகும்.

இரண்டாவது முறை பெண்களை எழுத்தாளர்களாகவும் இலக்கியத்தை உருவாக்கு-பவர்களாகவும் நோக்குவதாகும். பெண்கள் கையாளும் அடிக்கருத்துக்கள் கதை கூறும் முறைமை, வகைமைகள், அமைப்புக்கள் என்பவை பற்றிய ஆய்வும் இதில் அடங்குவதாகும் இவ்விரு முறைகளிலும் இரண்டாவதான பெண்மைய விமர்சனத்திலேயே பெண்கள் இலக்கியப் பாரம்பரியம் எனும் கோட்பாடு அடங்கும்.

ஒரு மொழியின் இலக்கிய மரபு அல்லது பாரம்பரிய மொன்றினை நிறுவும் போது பெண்களது ஆக்கங்களும் பங்களிப்புகளும் போதுமான கணிப்புப் பெறாமல் புறந்தள்ளப்படுகின்றன. இதனால் அவை காலப் போக்கில் மறக்கப்பட்டும் மறைந்தும் போகின்றன. இந்த நிலைமை தவிர்க்கப்பட வேண்டுமானால் பெண்களது இலக்கிய மரபு ஒன்று உணர்வு பூர்வமான முயற்சியால் கட்டி எழுப்பட வேண்டும். அவ்வாறு நிறுவப்படுகின்ற ஒரு பாரம்பரியம் தான் பெண்களது இலக்கிய ஆக்கங்களில் காணப்படும் விசேட அம்சங்களை இனங்காண்பதற்கு ஆதாரமாக அமையும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. "பெண்களது இலக்கியம்" என்று தனித்து நோக்குகின்ற இந்தப் போக்கு நிலை இன்று பல மொழிகளிலும் பரவலாகியுள்ள அதேவேளை இது பற்றிய வாத பிரதி வாதங்கள் பெண் இலக்கிய ஆய்வாளர்கள் மத்தியில் இன்னும் நிகழ்கின்றன என்பதும் இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

தென்னாசியாவின் பிராந்திய மொழிகளிலும் இந்தப்போக்கு எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்து ஆரம்பமாகியது. பெண்களுடைய ஆக்கங்களைத் தனித்தொகுதிகளாக வெளியிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண்களுக்கான நூல் பதிப்பகங்கள், பெண்கள் தொடர்பான நூல்களின் விற்பனை நிலையங்கள் என்பனவும் ஆரம்பிக்கப்பட்டன. டெல்கியில் இயங்கும் Kali for Women என்ற பதிப்பகமும் பெங்களூரின் ஸ்த்திரிலேகா என்ற நூல் விற்பனை நிலையமும் இத் தொடர்பில் குறிப்பிடத்தக்கன. எண்பதாம் ஆண்டுகளில் சில தொகுதிகள் வெளிவந்தன. குறிப்பிட்ட பெண் எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் நூல்களாக வெளிவருவது புதிது அல்ல ; ஆனால் பெண்களது ஆக்கங்கள் என்ற உணர்வுடன் தொகுப்புகளை வெளியிடுவதே புதிய போக்காகும். Inter Court Yard உள்முற்றம் என்ற தலைப்பில் இந்தியப் பிரதேச மொழிகள் பலவற்றில் பெண்கள் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பு ஒன்று வெளிவந்துள்ளது.

1986இல் இலங்கையில் வெளிவந்த "சொல்லாத சேதிகள்" என்ற இலங்கைப் பெண்கவிஞர்களின்

தொகுதியும் இப் பின்னணியில் நோக்கப்பட வேண்டியதாகும்.

சகல மொழிகளிலும் பெண்களும் இலக்கியங்களைச் சிருஷ்டித்துள்ளனர்; ஆனால் அவை அலட்சியப்படுத்தப்பட்டுள்ளன ; எனவே மறைந்தவற்றைத் தேடி எடுத்தும், ஏனையவற்றை மறுபதிப்பீடு செய்தும் யாவற்றையும் ஒன்று திரட்ட வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையிலேயே "பெண்களின் இலக்கியப் பாரம்பரியம்" என்ற கருத்தாக்கம் நிறுவப்பட்டது.

1991 ஆம் ஆண்டு என்ற தலைப்பில் கிறிஸ்துவுக்கு முன்னர் 600 ஆம் ஆண்டிலிருந்து தற்காலம் வரையிலான, இந்தியாவின் பல்வேறு மொழிகளிலும் ஆக்கப்பட்ட இலக்கியங்களின் தேர்ந்த திரட்டு ஒன்று இரு பெரிய தொகுதிகளாக வெளியிடப்பட்டது. ஹைதராபாத்தைச் சேர்ந்த ஆங்கிலப் பேராசிரியர் சூசி தாரு. பெண் ஆய்வாளர் கே. லலிதா ஆகியோர் சேர்ந்து இப்பாரிய பணியை மேற்கொண்டு இத்தொகுதிகளை வெளிக் கொணர்ந்தார். சுமார் 600 பெண் இலக்கிய கர்த்தாக்களைத் தாம் இனங்கண்டதாகவும் அவர்களில் 140 பேரின் தேர்ந்தெடுத்த ஆக்கங்களை இத்தொகுப்பில் உள்ளடக்குவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழில் பெண்கள் இலக்கியப் பாரம்பரியம் ஒன்று உள்ளது. ஆனால் அது அவ்வாறு நோக்கப்படவில்லை. தமிழில் பெண் எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. சில நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் பெண்பாற் புலவர்கள் என்ற வகையிலான நூல்கள் பெண்களை இலக்கிய உலகின் விதிவிலக்குகளாக நோக்கும் நிலைப்பாட்டிலிருந்து எழுந்தவையாகும்.

மற்றும்படி புலவர், எழுத்தாளர், இலக்கியகர்த்தா, கவிஞர் போன்ற சொற்களெல்லாம் பால் பொது சொற்களாக இருப்பினும் அவற்றால் குறிப்பிடப் பட்டுள்ளவர்கள். நடைமுறையில் ஆண்களாகவே உள்ளனர். இலக்கிய உலகு ஆண்களின் உலகமாகவே கருதப்பட்டு வந்தமையின் விளைவு இது எனலாம்.

தமிழிற் பெண்களின் இலக்கியப் பாரம்பரியம் சங்க காலத்திலிருந்து தொடங்குகின்றது. அக்காலப் பெண் புலவர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் புலவர் பெயர் தெரியாது தொகுக்கப்பட்டிருக்கும் சங்கத் தொகைப்பாடல்களிடையேயும் பெண் புலவர்களால் இயற்றப்பட்டவை இருக்கக்கூடும் தமிழ்ப்பக்தி இலக்கியங்களின் ஆரம்பகர்த்தாக்களுள் முக்கியமானவர் காரைக்கால் அம்மையார். இவருடைய செய்யுள்கள் தமிழ்க்கவிதை மரபில் ஏற்படுத்திய மாற்றங்கள் மிக முக்கியமானவை. அவருடைய பால்நிலைக்கும் அவரது செய்யுள்களுக்கும் இடையிலான தொடர்பும் போதுமானளவு அழுத்திக் கூறப்படவில்லை. புனிதவதி என்ற பெண் "காரைக்கால் பேய்" என மாற்றப்பட்டதன் காரணம் முக்கியமானது அதன் மூலமே ஆண் பக்தர், புலவர் வட்டத்துள் புனிதவதியை ஏற்றுக்கொள்ள முடிந்தது. இந்த விடயங்கள் போதுமானளவு ஆராயப்படவில்லை. தமிழ்ப்பக்தி இலக்கியத்தில் ஆண்டாளின் பங்களிப்பு முக்கியமானது.

இவ்வாறு தமிழில் பெண்களது தொடர்ச்சியான இலக்கியபாரம்பரியம் ஒன்றினை நிறுவமுடியும். எனினும் சில காலப்பகுதிகளில் இடைவெளிகள் காணப்படுகின்றன. இவை ஏன் எனச் சிந்திப்பதும் காரணங்களை காண்பதும் அவசியமாகும்.

மேலும் பெண்களது இலக்கிய பாரம்பரியம் நாட்டார் இலக்கியத்தினை உள்ளடக்கி நோக்கப்பட வேண்டியதாகும். ஏனெனில் நாட்டார் இலக்கிய உருவாக்கத்தில் கணிசமான பங்கு பெண்ணுக்குண்டு. உயர்த்தப்பட்ட அந்தஸ்து நிலையிலிருந்தோருக்கே பெரும்பாலும் எழுத்தறிவு சாத்தியமாயிருந்த நிலைமையில் பெண்கள் வாய்மொழி இலக்கியங்களின் உருவாக்கத்திலேயே அதிகம் பங்கு கொள்ள முடிந்தது என்பதைப் பல ஆய்வுகள் காட்டியுள்ளன. எனவே தமிழிலுள்ள நாட்டார் இலக்கியத் தொகுதியை பெண்மைய விமர்சனப் பார்வையுடன் அணுகுதல் பெண்கள் இலக்கியப் பாரம்பரியமொன்றினை நிறுவுகின்ற முயற்சிக்குத் துணை செய்யும்.

பாடசாலைக் கல்வி பரவலாக ஆரம்பித்த பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து எழுத்தறிவு, சமூகத்தில் பல மட்டங்களிலும் பரவலாகியது. முறைசார் பெண் கல்வியும் மெதுவாக அதிகரித்தது. இதன் விளைவே இக்காலத்திருந்து பெண்கள் எழுத்துத்துறையில் பிரவேசித்தமையாகும். அத்துடன் பெண்களின் நிலையை முன்னேற்றும்/சீர்திருத்தும் நோக்குடன், கருத்துக்கள் உருவாகியதும், அமைப்புக்கள் செயற்படத் தொடங்கியமையும் பெண்களின் எழுத்துலகப் பிரவேசத்திற்கு மறைமுகமான தூண்டுதலாகவும் அமைந்தது.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் எழுதிய பெண்கள் பற்றிய தகவல்கள் தமிழில் அதிகம் வெளிவரவில்லை. அவர்களது ஆக்கங்களும் பிரபலமாகவில்லை. இலக்கிய வரலாற்று நூல்களில் இடம்பெறும் எழுத்தாளர் வரிசையிலோ இவை இடம் பெறவில்லை. எனவே ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள பாரம்பரியத்தின் எல்லைக்குள், அதனை ஆதாரமாக வைத்துப் பெண்களின் பாரம்பரியத்தை நிறுவுதல்களைக் கைக்கொள்வதும் போதுமானது அன்று. ஏனெனில் பெண் இலக்கிய கர்த்தாக்களின் ஆக்கங்கள் கையெழுத்துப் பிரதிகளாக மறுபதிப்புப் பெறாதவையாக கவனத்தில் எடுக்கப்படாதவையாக இருக்கலாம். இந்நிலையில் இலக்கிய உலகில் பிரவேசித்து நிலை பெறுவதற்குத் தடையாக இருக்கும் சமூக நிலைமைகளையும், யதார்த்தத்தையும் பெண்களது பால் நிலை அந்தஸ்த்தையும் புரிந்து கொண்டாலே மரபுசாரா ஆதாரங்களைக் கைக்கொள்ள முடியும். கடிதங்கள், நாட்குறிப்புகள், தனிப்பட்டோரது நூல் நிலையங்கள், வாய் மொழித் தகவல்கள் என்பவற்றின் வழிதேடும் போது பெண் இலக்கிய கர்த்தாக்கள் பற்றிய தகவல்களைப் பெறலாம்.

எனினும் உத்தியோகபூர்வமான தகவல்கள் கூட புறக்கணிக்கப்பட்டிருப்பதையே நிறுவப்பட்ட தமிழ் இலக்கிய வரலாற்றில் காணமுடிகிறது. உதாரணமாக ஜோன் மர்டோக் என்பவர் தொகுத்த 'தமிழில் அச்சான நூல்களின் வகைப்படுத்தப்பட்ட நூல் விபரப்பட்டியலில்' (Classified Catalogue of Tamil Printed Books with introductory notes by John Murdoeh) இடம்பெறும் பெண் எழுத்தாளர்கள் பற்றிய விபரங்கள் கூட இலக்கிய வரலாற்று நூல்களில் இடம் பெறவில்லை என்பது கவனத்துக்கு உரியதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலேயே பெண்களின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன என்பது தேடினாலன்றித் தெரியவருவதில்லை. அன்னாள் நித்திய நாதன் அம்மாள் எழுதிய 'நல்லதாய்' எனும் நூலை லண்டன் பல்கலைக் கழகத்தின் கீழைத்தேய ஆபிரிக்க நிறுவனத்தின் நூல் நிலையத்தின் (SOAS) அடித்தள அறையொன்றிலேயே கண்டேன். ஏற்கனவே அந்நூல் பற்றிய தகவல் ஆங்கில மூலம் எழுதிய ஓரிரு நூல்களிற் காணப்படுகிறது. ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்று மாணவருக்கு இவை போல இன்னும் எட்டாத தகவல்கள் பல உள்ளன.

பழைய நூல்கள் மாத்திரமல்ல, தற்காலத்தில் வெளிவந்த பெண்களின் ஆக்கங்கள் கூட இலகுவில் மறக்கப்பட்டு விடுகின்றன. 1962இல் வெளிவந்த பவானி ஆழ்வாப்பிள்ளையின் 'கடவுளரும் மனிதரும்' என்ற சிறுகதைத் தொகுதி கூட நூல் வெளி வந்த ஆண்டுகளுக்கு பின்னர் அதிகம் கதைக்கப்படவில்லை. பெண்களது இலக்கியப் பாரம்பரியம் பற்றிச் சமீப காலத்தில் தமிழில் தோற்றம் பெற்ற ஒரு உணர்வே பவானி ஆழ்வாப்பிள்ளை, மீனாட்சியம்மாள்நடேசையர் போன்றோரின் ஆக்கங்களை மறுவாசிப்புச் செய்யவும், மறுபதிப்பு வெளியிடவும் வழி வகுத்தது.

தமிழிற் பெண்கள் இலக்கியப் பாரம்பரியம் ஒன்றை நிறுவவேண்டிய தேவை இன்றைய இலக்கிய ஆய்வாளர்களை எதிர்நோக்குகிறது. மறைந்துள்ள மறுபாதியை வெளிக்கொணர்ந்து சேர்க்காவிடின் தமிழ் இலக்கியப் பாரம்பரியம் நிறைவற்ற ஒன்றாகவே இருக்கும்.



# மாதவம் செய்து மண்ணில்......

திருமதி. திலகா மகானந்தன்

மாதவஞ்செய்து மண்ணிற்பிறந்த மங்கையர் கைகளிலே
வேதங்கள் கூறும் மெய்யறங் காக்கும் சக்தி நிறையவுண்டு
மாதொருபாகன் மங்கையுமையினைப் பாதியில் வைத்தானேன்
மாதர்களாலே தான் மாநிலம் வாழும் என்பதைக் காட்டவன்றோ.

சக்தியின்றி ஒன்றுஞ் செய்ய இயலாது தவிப்பாரைப் பார்த்திருப்பீர் (அந்தச்)
சக்திதான் பெண்கள் என்பதை உணர்ந்தவர் (பெண்ணைத்) தாழ்வாக எண்ணுவரோ
புத்திரரைப் பெறும் வெறும் யந்திரம் அல்லர் புதுமைப்பெண்கள் எல்லாம்
புத்தியினால் உலகாளும் திறமையைக் கொண்டவர் தாமன்றோ

சீதனம் கேட்டனர் விந்தைமனிதர்கள் சிந்தித்துப் பார்க்கையிலே (அவர்)
வேதனம் போதாது வீட்டை நடாத்த எனவீண் பயங்கொண்டதனால்
பாதகம் இல்லை உள்ளவர் கொடுத்தால் நீதி எனக்கொள்வோம்
வேதனையுண்டு ஊழியம் பெறும் ஏழைப்பெண்ணிடம் கேட்டுவிட்டால்

வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்த விந்தைமனிதன் ஒழிந்துவிட்டான் (எனப்)
பாட்டுக்கள் பாடிப்பரவசம் அடைந்தனர் பாரதி காலத்திலே
நாட்டிலே கற்பை ஆண்களும் பெண்களும் நன்குகடைப்பிடித்தால்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைத்திடும் வீண்பயம் ஏற்படுமா

பெண்ணென்ன ஆணென்ன பெற்றவர்க்கு அவர் கண்களே போலாவார்
கண்களிலே ஒன்று உயர்ந்தது என்று கருதுவர் உண்டோ சொல் ?
பெண்களும் ஆண்களும் சரிசமன் என்பதை இன்று உணர்ந்துவிட்டார்
சண்டைகள் போடாது சமனாக உழைத்துச் சரித்திரம் படைத்திடுவோம்

ஆணுக்கு நிகரில்லைப் பெண் எனச் சொல்லி வேதனையை வளர்த்தார்
தேனுக்கு நிகரா பால் ? எனக்கேட்டால் என்ன பதிலைச் சொல்வீர் ?
வீணுக்கு வம்பை வளர்க்காமல் நாமெல்லாம் வேண்டியதைச் செய்வோம்
ஆணுக்குத் துணையாய் எப்போதும் நடந்து அகிலந்தனைக் காப்போம்.

# ஒரு காலைப்பொழுதில் இருமூத்த உறுப்பினர்களுடன் நேர் காணல்

*(கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினராகிய திருமதி. விசாலாம்பாள் அரியக்குட்டியுடனும், இம்மன்றத்தின் தலைவியாகச் சிலகாலம் பணிபுரிந்த திருமதி. ஆழ்வாப்பிள்ளையுடனும் எமது ஆசிரியர் குழுவினர் நடத்திய கலந்துரையாடல்)*

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தின் யார்க்கும் அஞ்சாத நெறி'களுடனும் பெண்கள் வாழ வேண்டுமென பாரதி கனவு கண்டான். அக்கனவிற்கு உருவம் கொடுப்பதுபோல பல பெண்கள் ஆர்வத்துடன் முன்னேறி வருகின்றனர். பெண்களின் வளர்ச்சிக்காக அமைந்த கொழும்பு மகளிர் இந்துமன்றம், அமைப்புகள் சிலவற்றைப்போலவே பல பணிகளில் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சியான செய்தியே.

இனிமையானதொருகாலைப் பொழுதிலே அனுபவம், அறிவு, இம்மன்றத்தின் அங்கத்துவம் ஆகியவற்றில் மூத்தவர்களான இவ்விரு பெண்மணிகளுடனும் கலந்துரை - யாடுவதில் மகிழ்ச்சியடைந்ததோடு,சில விளக்கங்களையும் பெற்றுக் கொண்டோம். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எமது கலந்துரையாடலை ஆரம்பித்தோம்.

கேள்வி : வணக்கம் திருமதி அரியக்குட்டியவர்களே! திருமதி ஆழ்வாப்பிள்ளையவர்களே! 'கொழும்பு இந்துமகளிர் மன்றம்' என இருக்கவேண்டிய இம்மன்றத்தின் பெயரை 'கொழும்பு மகளிர் இந்து மன்றம்' எனப் பெயரிடக் காரணமென்ன?

திருமதிகள். அரியக்குட்டியும், **ஆழ்வாப்பிள்ளையும்:-** நல்லதொரு கேள்வியை எழுப்பியுள்ளீர்கள். வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகமும் கொழும்பு இந்து மகளிர் மன்றமென்றிருப்பதால் சில சிக்கல்கள் இப் பெயரால் ஏற்பட்டது. எனவே நாம் அம்மன்றத்திலிருந்து வேறுபடுத்திக் காண்பிப்பதற்கென்றே, கொழும்பு மகளிர் இந்துமன்றம் எனப் பெயரிட்டோம். பெயர் வேறுபாடே தவிர, எமக்கு அவர்களோடு எவ்வித பிரச்சினைகளுமில்லை.



**கேள்வி :** இம் மன்றம் 1965ல் ஆரம்பிக்கப்பட்டதென அறிகிறோம் இப்படியொரு மன்றத்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனதில் எப்படி உதயமானது?

**திருமதி. விசாலாம்பாள் அரியக்குட்டி:** தமிழகத்திலிருந்து 'தீபம்' என்றொரு பத்திரிகை வெளிவந்தது, உங்களுக்கு ஞாபகமிருக்கலாம் அதன் ஆசிரியர் திரு. நா. பார்த்தசாரதி என்பவர். அவர் கொழும்புக்கு வருகை தந்து பல இலக்கியக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். நானும் சில பெண்களை அழைத்துக் கொண்டு அக்கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். பேச்சு முடிவில் நாம் அவரை அறிமுகப்படுத்திக் கொண்டு அவருடன் கதைத்தோம். அவரே எமக்கு இச்சிந்தனைக்கு வித்திட்டார். பெண்கள் பலர் சேர்ந்து ஒரு அமைப்பாக இயங்கினால் பல காரியங்களைச் சாதிக்கலாமே என அவரே எம்மைத் தூண்டிவிட்டார்.

**கேள்வி:** நல்லது. அரிய ஒரு எண்ணத்தீபத்தை ஏற்றி உங்கள் உள்ளங்களில் ஒளியூட்டிய அப்பெரியாரை நன்றியோடு நினைவு கூரும் இவ்வேளையிலே, ஆரம்பகால உறுப்பினர்கள். . . . மன்றம் அமைந்த விதம். . . இயங்கியமுறை . . . இவைபற்றி. . . . .

**திருமதி. வி. அ. :** ஓகோ! அந்த இனிமையான நாட்கள்! நினைக்கவே எனக்கு கொள்ளை மகிழ்ச்சியாயிருக்கிறது. (என 2 நிமிடங்கள் பழைய நினைவுகளில் மிதந்தபடி, கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு தொடர்ந்தார்) அப்போது கல்விப் பகுதியில் கடமை புரிந்த திரு. சரவணமுத்து என்ற பெரியாரும் எம்மை ஊக்கப்படுத்தினார். நல்ல பல திட்டங்களுடன் நாம் இம்மன்றத்தை ஆரம்பித்தோம். இந்தவேளையில் காலம் சென்ற எமது ஆரம்பகாலத்தலைவி திருமதி. லீலா சுப்பிரமணியத்தை நாம் அன்போடு நினைவுகூரவேண்டும். அவவின் தலைமைப் பொறுப்பு, சுறுசுறுப்பு துணிச்சல்பற்றிக் கேட்கவாவேண்டும்?

**கேள்வி:** ஆமாம்! தலைமைத்துவம் சிறப்பாக இருந்தால், யாவுமே சிறந்து மிளிரும்தான்.

**வி. அ. :** அவவோடு செயலாளராகச் செல்வி. சற்சொருபவதி நாதனும் பொருளாளராக செல்வி. வள்ளிநாயகி கணபதிப்பிள்ளையும் திருமதிகள் ஜேர்மையா, இராஜேஸ்வரி முதலியார், அமிர்தலிங்கம் கனகரத்தினம், மகேஸ்வரி நடராஜா, சற்குணானந்தன் முதலியோர் நிர்வாக உறுப்பினர்களாக இருந்து செயலாற்றினர். இன்னும்... இன்னும்... (ஆழ்ந்து யோசித்தபடியே...)

காலம் செல்லச் செல்ல திருமதி. ஆழ்வாப்பிள்ளை , திருமதி பாலசிங்கம், திருமதி. ரெங்கநாயகி பத்மநாதன் இன்னும் சிலரும் சேர்ந்து கொண்டு எம்மோடு ஒத்துழைத்தனர்.

**கேள்வி:** கூட்டங்கள் வைத்து உங்கள் செயற்பாடுகளைத்திட்டமிடுவீர்கள். அப்படித்ததானே! மாதாந்தக் கூட்டங்களை யெல்லாம் எங்கே, எப்படி நடத்தினீர்கள்.

**வி. அ.:** வெள்ளவத்தை IBC வீதியில் வீடொன்றை வாடகைக்கு அமர்த்தி -யிருந்தோம். உற்றார் உறவினரோ, கொழும்பில் தெரிந்தவர்களோ இல்லாத, வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்து வரும் பெண்கள் தங்கியிருக்க, படிக்க, வேலைபார்க்க அந்த விடுதியை ஒழுங்கு செய்திருந்தோம்.

**கேள்வி:** பெண்பிள்ளைகளுக்குரியதான விடுதியை நடாத்துவதென்றால் மிகவும் சிரமமே! உணவு, பாதுகாப்பு, இடவசதி எல்லாம் ஒழுங்காக இருக்கவேண்டுமே! எப்படிச் சமாளித்தீர்கள்?

**வி.அ. :** ஓமோம்! சிரமம்தான். என்றாலும் சமைப்பதற்கு ஒருவேலையாளும், மேற்பார்வைக்கும் விடுதியிலுள்ள பெண்பிள்ளைகள் வருத்தமுற்றால் வைத்தியரிடம் காண்பித்து உதவிசெய்ய என ஒரு பெண்மணியையும் வேலைக்கமர்த்தியிருந்தோம்.

**கேள்வி:** விடுதியில் தங்கயிருப்போரிடம் எவ்வளவு பணம் அறவிட்டிருப்பீர்களென்று சொல்ல முடியுமா?

**வி. அ:** அப்ப என்ன! சாமான்களெல்லாம் வலுமலிவுதானே கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்! எம்மன்றத்தின் அங்கத்துவப் பணம் 5ரூபாதானே! ஹொஸ்ரல் பீஸ் நூறு ரூபாதான்.

**கேள்வி:** சரி சரி! விடுதியோடு வேறெந்த வகைகளில் உங்கள் செயற்பாடுகள் விரிவடைந்தன?

**திருமதி ஆழ்வாப்பிள்ளை:** நான் சில காலத்தின் பின்னர்தான் இம் மன்றத்தில் இணைந்து தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டேன். எனது காலத்துக்கு முன்பே, அதாவது லீலா சுப்பிரமணியம்

தலைவியாயிருந்தபோதே தேவார வகுப்புகள், நவராத்திரியின் போது பூசை, விழாக்கள் கொண்டாடுதல் என்பன இடம் பெற்றன. நவராத்தியின்போது பெண்பிள்ளைகளுக்கு கும்மி கோலாட்டம் பழக்குவித்தல், பெரியார்களை அமைத்துச் சொற்பொழிவு நிகழ்த்துதல் நடைபெற்றன.

**வி. அ:** ஓமோம்! நல்லூர் ஆதீன சுவாமிநாதத்தம்பிரான் அவரது சிஷ்யன் கணேஷசுந்தரம் ஆகியவர்களையும் அழைத்து கதாகலாட்சேபம் நடாத்தியுள்ளோம்.

**கேள்வி:** *சில காலம் இம்மன்றம் இயங்கமுடியாமல் இருந்ததே! அதற்கு எப்படிப் புத்துயிர் ஊட்டி இயங்கவைத்தீர்கள்?*

**திருமதி. ஆழ்வாப்பிள்ளை :** நாட்டில் நடைபெற்ற வன்செயல்களால் யாவும் ஸ்தம்பிதமடைந்துவிட்டன. என்றாலும் சற்சொரூபவதி, ஜமுனா, இந்திராணி போன்ற சிலர் உற்சாகமாக உழைக்கமுன் வந்து திட்டமிட்டுச் சில பணிகளை நடாத்த முடிந்தது. சக்தி விழா பட்டிமன்றம், வில்லுப்பாட்டு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுடன் இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப் பெற்றது.

**கேள்வி:** *சமூக சேவை சம்பந்தமாக ஏதாவது சொல்ல முடியுமா?*

**திருமதி. ஆழ்வாப்பிள்ளை :** ஏழைகளுக்கும், நோயாளர்களுக்கும் விசேட தினங்களில் உணவு பார்சல் விநியோகித்துள்ளோம். சிறைச்சாலையிலுள்ளோர், அங்கயீனமுற்றோர் போன்றோரையும் சந்தித்து கலந்துரையாடி, அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்துள்ளோம். பல சமய விழாக்களை நவராத்திரி விழா போன்றவற்றையும் சிறப்பாகக் கொண்டாடியுள்ளோம். ஊக்கமும் உற்சாகமும் மிக்க பலர் இம்மன்றத்தோடு இணைந்து கொண்டுள்ளதால், மேன்மேலும் இம்மன்றம் நல்ல பல செயல்பாடுகளை நிறைவேற்ற எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**கேள்வி:** *பெண்களாகத் தலைபோட்டு நல்ல பல காரியங்களை நடத்தியிருக்கிறீர்கள். சந்தோஷம். எத்தனை பெண்கள் உங்கள் விடுதியில் தங்கியிருந்தார்கள் என நினைவுகூர முடியுமா?*

**வி. அ.:** சுமார் முப்பது பேர் வரை சொல்லலாம். இடர்களைக் களைவதற்காக நாம் இறுக்கமான கட்டுப்பாட்டுடனே விடுதியை நடாத்தினோம். மாலை 7 மணிக்கு முன் யாவரும் விடுதிக்கு வந்து சேர்ந்து விட வேண்டும். கட்டுப்பாடு ஒழுங்கு நன்கு பேணப்பட்டது. அதனால்தான் வெற்றிகரமாக அதனை நாம் நடாத்த முடிந்தது. விடுதியில் தங்கி பல்கலைக்கழகத்தில் படிப்போருக்கும், வெளியே வேலை பார்ப்போருக்கும் சமைத்து மதிய உணவு அனுப்பி வைக்கும் முறையும் இருந்தது.

**கேள்வி :** *இது சம்பந்தமான உங்கள் கசப்பான உணர்வொன்றைக் கூறுங்களேன்.*


**வி. அ.:** விடுதியில் சமைக்கும் வேலையாளுக்கு போக்குவரத்து வசதிக்காக ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்தோம். அவன் ஒரு நாள் சாப்பாடுகளை விநியோகிக்க எடுத்துக் கொண்டு போனவன் . . . போனவன் தான் . . சைக்கிளும் திரும்பவில்லை. ஆளும் வரவில்லை. . . இப்படி எத்தனை எத்தனை சம்பவங்கள்

**கேள்வி:** *இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கொழும்புக்கு வந்தபோது . . . .*

**வி. அ.:** ஓமோம்! நிறையச் சொல்ல இருக்கு. எனக்கூறி (மனம் மகிழ்ந்து உளம் குளிர்ந்து) சே! அது மறக்க முடியாத ஒரு சந்தர்ப்பம். பாரதப் பிரதமரின் விருந்துக்கு நாம் சென்றிருந்தோம். எனது அதிர்ஷ்டம்! அவவுக்கு எதிர்ப்புறமிருந்த மேசையில்தான் நான் அமர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. பெண்களுக்கெல்லாம் துணிச்சலை ஊட்டி அரசியல் வழிகாட்டியாகவும் வாழ்ந்த அம்மாபெரும் பெண்மணியோடு சேர்ந்து விருந்துண்டது என் வாழ்வில் மறக்க முடியாத சம்பவமே . . . எனக்கூறி ஆனந்தத்தில் ஆழ்கிறார்.

வணக்கம் கூறி எம் உரையாடலை முடித்துக் கொண்டோம்.

*(இந்நேர் காணலை நடத்தியவர்கள்.*
*திருமதி. பத்மா சோமகாந்தன்*
*திருமதி. அபிராமி கைலாசபிள்ளை*
*திருமதி. சுலோசனா செல்வகணேஸ்*
*திருமதி. ஸ்ரீ ரஞ்சனி விஷ்ணுகாந்தன்*
*திருமதி. வசந்தா விமலேந்திரன்)*



# இளம் பருவப் பெண்களை வளர்க்கும் பணியில் தாயின்பங்கு

திருமதி. ஆர். சுந்தரலிங்கம்

குழந்தைகள் பெற்றோரின் செல்வங்கள் மாத்திரமல்ல. நாட்டின் செல்வங்களுமாகும் எனவே அவர்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்தெடுத்து நமக்கும் நாட்டு மக்களுக்கும் அவர்களால் பயனடையச் செய்வதில் நாம் முனைப்போடு பாடுபடவேண்டும்.

"டீன் ஏஜ்" என்பது குழந்தைப் பருவத்தைக் கடந்த இளைஞர் பருவத்துக்குப் இடைப்பட்ட குமர்ப் பருவம் எனக் குறிப்பிடலாம். இப்பருவம் குழந்தைப் பருவத்தின் திருப்பு முனை. பிள்ளைகளை மனத்தாலும் உடலாலும் பெரிதும் ஆட்டிப்படைக்கும் பருவமும் இதுதான். எனவே பெற்றோர் இப்பருவப் பிள்ளைகளை மிக்க அவதானத்தோடும் அக்கறையோடும் பராமரிக்க வேண்டும்.

பிள்ளைகள் இப்பருவத்தில் தான் விஷயங்களைப் புரிந்தும் புரியாமலும் சலனப்பட்டும் சஞ்சலப்பட்டும் வழிமுறை தெரியாமல் தடம் புரள்வர்.

மனதில் மட்டுமல்ல உடம்பின் வளர்ச்சியிலும் பாலுணர்வுக் கலன்கள் மாற்றமடைவதும் நரம்புகள் சடாரென வளர்ச்சியடைவதும் தம்மைக்கட்டுப்படுத்த முடியாமல் பிள்ளைகள் தடுமாறுவதும் நடைபெற இவை காரணமாகின்றன.

இவ்வயதில் ஆண் பெண் இருவரும் ஒத்தபடி வளர்ந்தாலும் பெண்களின் உடம்பில் ஏற்படும் மாற்றங்கள் அவளுக்குக் கூடுதலான நாணத்தையும் கவர்ச்சியையும், ஏற்படுத்துகின்றன. இவர்களைச் சமூகம் நோக்குவது சமூகத்தை இவர்கள் நோக்குவதும் ஒவ்வொரு கோணங்களாக செய்கைகள் நடவடிக்கைகளில் வேறுபாடு தோன்றும்.

எங்கே பிள்ளைகள் தவறி விடுவார்களோ சமூகம் அவர்களைப் பழிவாங்கிவிடுமோ என்ற நோக்கில் பெற்றோரும் அங்கே போகாதே, இதைச் செய்யாதே என்று எடுத்ததற் கெல்லாம் கட்டுப் படுத்தத் தொடங்கி விடுவர். ஓய்வு நேரங்களில் கற்பனையில் மூழ்குதல் பகற்கனவு காணுதல், தம்மோடொத்தவர்களோடு தம்மை ஒப்பிட்டுப் பார்த்தல் ஏன்? எதற்கு? எப்படி? என எடுத்ததற் கெல்லாம் விளக்கத்திலும் வியாக்கியானத்திலும் ஈடுபடுதல், ஒப்பிட்டு ஆராய்தல் இப்பருவத்தின் கோளாறுகள் தான்.

பல விடயங்களை உள்வாங்குவதில் ஆர்வமுள்ளவர்களுக்கு சரியான வழிகாட்டல் அவசியம். பெற்றோரும் – பிரதானமாகத் தாயானவள் பிள்ளைகளின் பருவ உணர்வுகளையும், ஒட்டங்களையும் நன்கு உணர்ந்து சரியான வழிகாட்டலைச் செய்யவேண்டும். பிள்ளைகளின் குறைபாடுகளைக் கண்டு கோபித்தலோ அடிக்கடி அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டிக் கேலி செய்தல் ஏசுதல் தண்டித்தல் ஆகிய வற்றால் நற்பலனை விட எதிர்வினையே அதிகமாகத் தொழிற்படும். கண்டித்தாலோ அல்லது தண்டித்தாலோ தமது சுதந்திரம் ஆர்வம் பறிபோய்விட்டதென்றே பிள்ளைகள் கதறுவர்.

எனவே தாய் தன்கோபத்தை அடக்கிக்கண்டிப்பையும் கடுமையையும் விடுத்து இந்த வயதுப் பெண்களைத் தமது தோழிபோல கருதி அன்பு காட்ட வேண்டும். அவர்களுடைய சந்தேகங்கள், புதிர்களுக்கு அவர்கள் விளங்கி ஏற்கக் கூடிய வகையில் நாம் விளக்கம் கொடுக்கவேண்டும். தாய் மகளுக்கிடையே சிறந்த புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். தாயின் வழிகாட்டல் தன்னை மேன்மையுறச் செய்யுமென மகளும் மகள் மீது தனக்கு நல்ல எண்ணமும் நம்பிக்கையுமுன்டென்பதைத் தாயும் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்தோடு மகளிர் ஆர்வங்கள் கல்வி படிப்பு, நெருங்கிய தோழிகள் ஆசிரியர்கள் வகுப்பில் நடந்த சுவையான நிகழ்வுகள் திரைப்படக் கருத்துக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பத்திரிகைகள் தொடர்பான அபிப்பிராயங்கள் வீட்டில் நடைபெறும் சம்பவங்கள் பற்றியெல்லாம் பிள்ளைகளுடைய கருத்துக்களுக்குப் பெற்றோர் காது கொடுத்து அவர்கள் சறுக்கும் போது சரியான பாதையைச் காண்பிக்க வேண்டும். அதைவிட்டு 'அந்தக் தங்களுடைய பழைய

ஏடுகளைக்கிளறி அதையடியொற்றியே பிள்ளைகளும் நடக்க வேண்டும் என்று வற்புறுத்தக் கூடாது. 'தலைமுறை' இடை வெளியை பெற்றோர் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் அந்நிய கலாச்சார ஊடுருவலும் நம்மை இப்போ ஆட்டிப் படைக்கின்றன. இதற்கெல்லாம் தாயானவள் ஈடுகொடுத்துப் பிள்ளைகளுக்கு சரிபிழைகளைத்தானே தீர்மானிக்கக் கூடியதாக நெறிப்படுத்தல் பிரதானமான கடமையாகும். பிள்ளைகளுடைய நண்பர்கள் மீதும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எத்தகைய நண்பர்களோடு இணங்கலாம், யாரோடு அதிகம் பழகக் கூடாது என்றெல்லாம் தாய் பிள்ளைக்குச் சொல்லி வைக்க வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் திரைப்படங்கள் பிள்ளைகளின் மனதைக் கொள்ளை கொள்வதில் முதலிடம் வகிக்கின்றன.

அரை குறை உடையில் ஆடுவதும் – காதல் செய்வதும் காதலனுடன் ஓடிப்போவதும் தான் வாழ்க்கை என்பது போன்ற பிரமையை இளம் இதயங்களில் இவை பதித்துவிடுகின்றன. கவர்ச்சி என்ற பெயரில் காதல் காட்சிகள், அருவருப்பான சம்பவங்கள், ஆபாசக் காட்சிகள் பிஞ்சு நெஞ்சங்களின் வக்கிரங்களைத் தூண்டிவிடுகின்றன.

இந்த வகையில் அவர்களுக்கு வாழ்வில் யதார்த்தத்தை உணர்த்தும் பொறுப்பு நமதாகிறது.

நிழலான திரைப்படத்தில் காணும் வாழ்க்கை வேறு.... நிஜத்தில் நாம் வாழும் வாழ்க்கை வேறு – ஹீரோ ஹீரோயினின் பகிரங்க ஆட்டபாட்டங்களை கண்டு கொள்ளாத திரைப்பட சமுதாயம் வேறு.... ஒரு ஆணும் பெண்ணும் சகஜமாய் பேசிக்கொண்டாலே சந்தேகக் கண்ணோடு நோக்கும் அசல் சமுதாயம் வேறு என்பதை சுவையான தெளிவான உரையாடல் மூலமே அவர்களுக்கு புரிய வைக்கலாம்.

வெள்ளித்திரையின் போலி மாயா ஜாலங்களில் மயங்குவதும்... எதிர் காலத்தை பாழடித்துக் கொள்வதும் எத்தனை முட்டாள்தனம் என்பதை சரளமான முறையில் எடுத்துச் சொல்லலாம் நிஜவாழ்வில் அங்ஙனம் அறியாமையால் தவறிப்போய் துன்பத்திற்கு ஆளானவர்களைக் கூட உதாரணம் காட்டலாம் தவறில்லை.

இத்தகைய விஷயப் பரிமாற்றங்கள் நம் பெண்களுக்கு வாழ்க்கையின் நிஜபரிமாணத்தைக் காட்டும். சுற்றியிருக்கும் சமுதாயத்தை இனம் காட்ட உதவும் ஒழுக்கமாயிருக்க வேண்டியதன் அவசியத்தை நினைவில் நிறுத்தும். அதன் எதிரொலியாய் தெளிவும் முதிர்ச்சியும் அவள் நடவடிக்கைகளில் வெளிப்படத் துவங்கும்.

இளம் பெண்களுக்கேயான பொதுவான பிரச்சினை இன்னும் ஒன்றும் உண்டு அது.

பள்ளிக்கு.... கல்லூரிக்கு செல்லும் வேளைகளில் பின் தொடர்ந்து.... சந்தடி சாக்கில் கிண்டல் செய்வது.... டெலிபோனில் கண்டதையும் பேசி விஷமம் செய்வது போன்ற சில்லறைத் தனங்களில் ஈடுபடும் சில ரவுடிரோமியோக்களின் தொல்லைதான் !

இவ்விதமான பிரச்சினை வரும்போது ஒரு சில பெற்றோர்கள் நிதானம் இழக்கின்றனர். அநாவசியப் பதட்டத்துக்கு ஆளாகின்றனர். தம் பெண்ணையும் பதட்ட நிலைக்குத் தள்ளுகின்றனர்.

'நீ தலைகுனிந்து அடக்க ஒடுக்கமாய் போயிருந்தால் அவன் உன் பின்னால் சுற்றப் போகிறான்? எல்லாம் நீ கொடுக்கும் இடம்... என்னவோ தப்பு அத்தனையும் அவள் பேரில்தான் என்பது போல் குதர்க்கம் பேசுவார்கள்.


'டெலிபோனில் பேசியது யார்? அவனை உனக்கு எத்தனை நாளாகப் பழக்கம்? ' – குற்றவாளியை விசாரிக்கும் தோரணையில் துருவுவார்கள்.

ஏற்கனவே அதிர்ந்து போயிருப்பவளை இது மாதிரியான குற்றச்சாட்டு எந்த அளவு பாதிக்கும் என்பதைக் கொஞ்சமும் சிந்திப்பதில்லை இவர்கள். இன்னும் இயல்பான போக்கைக் கட்டுப்படுத்தி வைக்கும் நிலையிலிருப்பார்கள் பெற்றோர்கள்.

வேண்டாம் எவருக்காகவும் நம் பெண்மீது நமக்கிருக்கும் நம்பிக்கையைக் குறைத்து வெளிப்படுத்த வேண்டாம். அடக்கி அடக்கி வளர்த்த அந்தக் காலத்து பெண்களை விடவும் சுதந்திரமாய் வளரும் இந்தக் காலத்துப் பெண்களுக்குத் திட சிந்தனையும் ...சுய கட்டுப்பாட்டுணர்வும் அதிகம் என்பதை நம் பெண்ணே அவர்களுக்கு நிச்சயம் நிரூபித்துக் காட்டுவாள், என்ற வகையில் எம் பெண்களுக்கு நான் அறிவுறுத்தி நல்லபாதையில் வளர வழிகாட்ட வேண்டும்.

# தாயின் அருமை

(குமுதினி மகாதேவன்)



என் தாய் நீயம்மா
உன் சேய் நானம்மா
என்னை பெற்றெடுக்க நீ பத்து
மாதங்கள் தான் எடுத்தாய்
ஆனால் நான்- உன் அருமை தெரிய பத்து
ஆண்டுகள் எடுத்தேனே!

நீ பட்ட வேதனை கொஞ்சம் நஞ்சமல்ல
உன்னால் நான் அடைந்த இன்பங்களும்
கொஞ்சம் நஞ்சமல்ல
என்னை இன்பமூட்ட நீ
இவ்வளவு வேதனைப்பட்டும்
நான் உன் வேதனையை அறியாமல்
என் இன்பத்திலேயே மூழ்கினனே !

நான் செய்த தவறுகள் தான் எத்தனை, எத்தனை?
அப்போதெல்லாம் என்னை நீ பொறுத்தாய், சகித்தாய்
அன்புடன் திருத்தி நல்வழிப்படுத்தினாய்
வாழ்வில் நான் உயர உயர வழிகாட்டினாய்
என் மேன்மைகண்டு உளம் மகிழ்ந்து நிமிர்ந்தாய் தாயே
உன்னைப் போல் ஒரு தாயின் சேயானதற்கு
என்ன தவம் செய்தேனோ? ஏற்றம் மிகப்பெற்றேன்
உன் அருமை அறியாத இத்தனை காலமும்
எத்தனை வேதனை

இனி எத்தனை பிறவிகள் எடுத்தாலும், உன்
மகளாக நான் பிறக்க வரம் வேண்டும் தாயே!

# நவீன சமூகமும் சிறுவர் துர்ப்பிரயோகமும்

## - ஓர் அறிமுகம்

திருமதி. பூமணி குலசிங்கம்



"இன்றைய சிறுவர் நாளைய குடிமக்கள்" என்பது ஆன்றோர் வாக்கு. இச் சிறுவர்களைத் தகுந்த முறையில் பேணிப் பராமரித்து பூரண விருத்தியினை அடைவதற்கு வசதிகளைக் கொடுத்து, சமூக இயல்பினையாக்கி நாளைய சமூகத்தை வழிநடத்தக் கூடியவராக்குவது சமூகத்தின் பொறுப்பும் கடமையுமாகும். இப்பொறுப்பின் பெரும் பங்கு பெற்றாருக்கும் குடும்பத்திற்குமே உரியது. இதனைத் தொடர்ந்தே சமவயதினர் பாடசாலை, சமய நிறுவனங்கள் வெகுசனச் சாதனம் என்பனவற்றின் செல்வாக்கு இடம் பெறுகிறது. வேண்டுமென்ற அவாவினால் சிறுவர்களைப் புறக்கணித்தும் தம் கடமைகளிலிருந்தும் விலகுகின்றதை நாம் காண்கிறோம். இவர்களாலும் தம் சுயநலத்திற்கு உபயோகிப்பதுமுண்டு. சிறுவர்கள் களங்கமற்றவர்கள், எது சரி எது பிழை என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றலற்றவர்கள் அத்துடன் அனுபவமும் அற்றவர்கள் என்றும் பிறரால் பல வழிகளிலும் தாக்குப்படக் கூடியவர்கள். எனவே இவர்களை அன்புடன் பேணிக் காத்துப் பராமரித்துப் பொருத்தமான அறிவு, திறன் மனப்பாங்குகளை அனுபவ மூலம் வளர்ப்பது மூத்தோர், பெற்றோர், நிர்வாகிகளின் கடமையும், பொறுப்புமாகும். இவ்வாறு இவர்கள் வழிநடத்த முயலாவிடின், எதிர்கால சமூகம் பெரும் ஆபத்துகளுக்கு உள்ளாகும் என்பதில் ஐயமில்லை.

**இன்றைய நிலை :-** 21ம் நூற்றாண்டிற்குக் காலடி வைக்கவுள்ள இச் சமயத்தில் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. லௌகீக வாழ்க்கைக்குப் பழக்கப்படும் மக்கள் பொருளாதார அபிவிருத்தியிலும் வர்த்தக வளர்ச்சியிலுமே கவனத்தைச் செலுத்துகின்றனர். பணம் சம்பாதித்து அதிகாரம் பெறுவது மனித சமூகத்தின் முக்கிய நோக்காக விளங்குகின்றது. எனவே நெறி முறையான வாழ்வு சீர் குலைகின்றது காரணம் எவ்வழியிலும் பணம் தேட முடியுமென்ற எண்ணம் தலைதூக்கியுள்ளதனால் தொழிலாளர்களை அடிமைப்படுத்தியும் சுரண்டியும், நீதிக்கு மாறாக நடந்தும் கொள்ள, இலாபத்தைப் பெறுகின்றனர். அத்துடன் சிற்றின்பத்தினை நாடுபவராகவும், குடும்பப் பொறுப்புகளையும் கடமைகளையும் முறையாக கடைப்பிடிக்காமையால் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். மேலும் பெண்களும் தொழில் பார்ப்பதனால் சிறுவர்கள் பெறும் அன்பு, ஆதரவு பராமரிப்புக்குன்றுகிறது. இதனால் தேவைகள் நிறைவேற்றப்படாத சிறுவர்கள், புறக்கணிப்பிற்குட்பட்டு, உள உடல் நலப் பாதிப்படைகின்றனர். அமைதி அற்றவர்களாயும் எதிர்ப்பு நடத்தையுடையோராகவும் விளங்குகின்றனர். பாடசாலைக் கல்வி வளங்களைத் தக்க முறையில் பயன்படுத்தி முடியாதோராகவும், இடை நடுவில் சிலர் விலகுவர். சிலர் வன்செயல்களில் ஈடுபட்டும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியும் விளங்குகின்றார். இத்தகைய ஆபத்துக்களுக்கு சிறுவர்கள் உட்படுவதைச் சமுதாயம் தடுக்கவும் முற்றாக நீக்கவும் முயல வேண்டும். மூத்தோரது புறக்கணிப்பினாலும், துர்ப்பிரயோகத்தினாலும் சிறுவர் பாதிப்படையா திருப்பதற்கு சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1990ம் ஆண்டில் ஐக்கிய நாடுகளினால் உருவாக்கப்பட்டுள்ளது. இச்சமவாயத்திற்கு அங்கீகாரம் வளங்கிய 90 நாடுகளும் சிறுவர் உரிமைகளைப் பேணுவதாக உறுதியளித்துள்ளன. இச்சமவாயத்தில் சிறுவர் என்ற பதம் 0-18 வயதானோரை அடக்குகின்றது. இதில் 54 உறுப்புரைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில சிறுவரின் வரைவிலக்கணம், பாகுபாடு கட்டாமை உரிமைகளை நடைமுறைப்படுத்தல், பெற்றோரின்





வழிநடத்தலும் பொறுப்பும், உய்வும் மேம்பாடும் தனித்துவத்தைப் பேணல், சிறுவர் கருத்தை மதித்தல், அந்தரங்கத்தைக் காத்தல் துர்ப்பிரயோகம் புறக்கணிப்பிலிருந்து பாதுகாத்தல், அகதிப் பிள்ளைகள் ஊனமுற்ற சிறுவர், சுகாதாரச் சேவைகள் சமூகப் பாதுகாப்பு கல்வி, ஓய்வும் விளையாட்டும், பாலியல் துர்ப்பிரயோகம், சிறுவர் உழைப்பு, தெரு ஓரச் சிறுவர்கள், சுதந்திர மறுப்பு, புனர்வாழ்வும் பராமரிப்பும், பாலிய நீதிபரிபாலனம் முதலியனவாகும்.

**<u>சிறுவர் துர்ப்பிரயோகம் :-</u>** பாதுகாப்பும் பராமரிப்பும் முறையாக அமையாதவிடத்து சிறுவர் புறக்கணிக்கப்பட்டும், துர்ப்பிரயோகிக்கப்பட்டும் வருவதாக நம் நாட்டிலும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. சமுதாயத்தின் அடிப்படைக் கூறு குடும்பத்தைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் இதன் தலையாய கடமையாகும்.

சில சமூக விரோதமான செயல்களை இச்சமவாயம் இனங்கண்டுள்ளது.

(i) விவாகமாகாதோர் பிள்ளைகளைப் பெற்று அவர்களைக் கைவிடுதல்

(ii) விற்பனை பரிவர்த்தனை, கடத்தல், தத்தெடுத்தல் என்பனவற்றிற்கு ஆளாக்குதல்

(iii) அதிகார பலத்தினால் பலவந்தமாகப் பெண்பிள்ளைகளை பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கல்.

(iv) தகாப் புணர்ச்சிகளில் ஈடுபடுத்தல்.

(v) பாலியற் புகைப் படங்கள் பிடிப்பதற்குச் சிறுவரைப் பயன் படுத்தல்.

(vi) சிறுவர் விபச்சாரம்/ ஆண்பிள்ளை விபச்சாரம்.

(vii) சிறுவர் உழைப்பும் சுரண்டலும்.

(viii) இராணுவத்தில் சேருவதற்கு வற்புறுத்தல் போன்றன.

(ix) உடல் ஊணத் தாக்கங்கள் சித்திரவதை மூலம் துர்ப்பிரயோகத்திற்கு ஆளாகும் சிறுவர்களையும் சமவாயம் பகுப்பாய்வு செய்துள்ளது. இவர்கள் பின்வருமாறு

(1) குடும்பங்களினால் புறக்கணிக்கப்பட்ட சிறுவர்கள்.

(2) அகதிப் பிள்ளைகள்.

(3) சிறுபான்மையோரின் பிள்ளைகள்.

(4) பழங்குடிப் பிள்ளைகள்.

(5) ஊனமுற்ற சிறுவர்கள்

(6) தெருஓரச் சிறுவர்கள்.

(7) இராணுவத் தாக்குதலுக்கு ஆளாகிய சிறுவர்கள்.

(8) குடும்பப் பிணைப்பற்ற சிறுவர்கள்.

மேலும் துர்ப்பிரயோகம் ஏற்படும் நிலமைகளும் சமவாயத்தில் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் சில,

(1) சமூகத்தில் ஏற்படும் பாகுபாடுகள்

(2) குடும்பத்திலேயே ஏற்படும் துர்ப்பிரயோகமும், புறக்கணிப்பும்

(3) சிறுவர் உழைப்பும் – வீட்டு வேலைகளுக்கு விடப்படும் சிறுவர்கள்

(4) பாலியல் துர்ப்பிரயோகம்– குடும்ப உறுப்பினரும், சுற்றத்தாரும் காரணமாகின்றனர்.


(5) போதைப் பொருள் துர்ப்பிரயோகம்

(6) தெரு ஓரச் சிறுவர்கள்

(7) விற்பனை பரிவர்த்தனை கடத்தல்

(8) சித்திரவதை, சுதந்திர மறுப்பு

(9) ஆயுதம் தாங்கிய பிணக்குகள்



இவ்வாறான நிலமைகளுக்கான பிரதான காரணங்கள், நவீன விஞ்ஞான பொருளாதார மாற்றமும் அதனாலான சமூக மாற்றமும் குடும்பச் சிதைவு, ஒழுக்க நெறிச் சீர்கேடு, நீதியின்மை, வறுமை என்பனவாகும்.

சமூகவியல் அறிஞர் ''மக் ஐவரும் பேச்சும்'' (Mac Iyer & Page) என்பாரின் கருத்துப்படி குடும்பத்தின் பணி – (அ) பாலியல் தேவைகளை நிறைவேற்றல் (ஆ) பிள்ளைகளைப் பெற்றுக் காத்துப் பராமரித்தல் (இ) கலாச் சாரப் பண்புகளை;க . ஊட்டுதல் (ஈ) நெறிமுறையான வாழ்க்கைக்கும் சுகாதாரப் பழக்கங்களும் பழக்குதலுமாகும் நவீன குடும்பமானது விவாகத்தின் புனிதத்துவத்தை பாலியல் உறவு வளர்வதற்கு உள்ள வேறு சந்தர்ப்பங்கள் இழந்துள்ளது. அத்துடன் குடும்ப வாழ்வும் சீர்குலைகின்றது. பெற்றோரும் பொறுப்பற்றவராதல். இவை சிறுவர் எதிர்காலத்துக்கு பாதகமானவையாகும்.

<u>முடிவு:</u> தேகாரோக்கியத்துடனும் குடும்ப பாதுகாப்பில் மகிழ்வுடன் வாழ்ந்து பூரண விருத்தியினை அடைய வேண்டிய காலத்தில் முதியோரே இவ்வாறான ஆபத்துக்களுக்குச் சிறுவர்களை உட்படுத்துவது மிகவும் பரிதாபமான நிலைமையாகும் ''சிறுவர் விருத்தியில் குறுக்கிடும் தவிர்க்கக்கூடிய தடைகளே துர்ப்பிரயோகம் என 'கென்றி கெம்ப்' (Henry Kemp) என்ற உழவியல் அறிஞர் கூறுகிறார் இது பிள்ளையை பின் தங்கிய நிலைக்குத் தள்ளி உள நலனையும் பாதிக்கின்றது பிள்ளையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்குமான செயல்களை நாளைக்கு என பின்போடவே முடியாது அது இன்றைய செயலாகும் எனவும் இவ்வறிஞர் கருத்துதெரிவிக்கின்றார். முதியோரே சிறுவர்களுக்கு எல்லா வழிகளிலும் ஓர் எடுத்துக்காட்டாக வாழ வேண்டும் சிறுவர்களது உடல் உள மன எழுச்சி சமூக ஒழுக்க நெறிவிருத்திகளுக்கான ஊக்குவிப்பு முயற்சிகள் தொடர்ந்து தடையின்றி நிகழும் போது சிறுவர் பூரண விருத்தியடைகின்றனர். இது தன்னம்பிக்கையினையும், துணிவினையும் பிறப்பித்து பிறர் நலம் கருதும் ஓர் ஆரோக்கியமான நாளைய சமூகத்தை உருவாக்க வலியது இதற்கும் பெற்றோர் , முதியோர். , பாடசாலை, சமயநிறுவனங்கள் , நிருவாகிகள், அரசு சமூகம் என்பன ஒருங்கிணைந்து செயற்படுவது அவசியம். அப்பொழுது சிறுவர் தம் உரிமைகளை இயல்பாகவே பெறுவதுடன் ஒழுங்கும் அமைதியும் படைத்த ஓர் எதிர்கால சமூகத்தினை உருவாக்கக்கூடியவராவர்.

## பூரண கும்பம்

பூரண கும்பம் நாளாந்தம் நம் வாழ்வில் பூரணத்தை நல்குவதே போல் கும்பாபிஷேகம் யாகம், வேள்வி முதலிய கோவில் கிரியைகளிலும் இறைவன் வீதியுலாவரும் வேளைகளில் மண்டபப்படி திருமணத் தம்பதிகளை ஆலத்தி சுற்றி மங்கலகரமாக வாழ்த்துவதற்கும் மனைகள் தோறும் நிறைகுடம் வைக்கின்றோம். நாட்டின் மிகப்பெரியவர், ஞானியர், யோகியர் முதலானவர்களை வரவேற்கும் போது பூரண கும்பம் கொடுத்தல் சைவத் தமிழ் நாகரிகம். எல்லாவிதமான சைவக்கிரியைகளிலும் பூரண கும்பம் இடம் பெறுகிறது. ஆலயங்களில் எல்லாவித அபிடேகங்களிலும் பூர்ணகும்பம் இடம் பெறும். பஞ்சபூதங்களின் ஊரன் முறையில் நீர் நான்காவது பூமி நீரிலேயே தோன்றி நீரிலேயே அழியும். நீர் எம்மைச் சுத்திகரிக்கிறது. உடை, உறைவிடங்கள், பண்டங்கள் பாத்திரங்களைச் சுத்தமாக்குகிறது. நீர் எமக்கு உணவாகிறது உணவைப் படைக்கிறது. நீரின்றி உலகம் அமையாது,நாம் வாழ மாட்டோம். நீரின் புனிதம் தெய்வீகம் கருதி அதிலே இறைவனை ஆவாகனம் செய்து வழிபடுவதே பூரணகும்பம் வைத்தலின் நோக்கம். இது மனநிறைவைக் குறிக்கிறது. பசுவின் சாணத்தில் ஒரு கைப்பிடியளவை உருட்டி வைத்து அதற்கு ஒரு அறுகம்புல்லைச் சாத்தின மாத்திரத்தே அது பிள்ளையாராகி விடுகிறது. பிள்ளையார் அதிலே ஆவாகனமாகி அதிட்டித்து அருள்பாலிக்கின்றார். பூரண கும்பத்தில் இறைவன் எழுந்தருளுவதில் வேறொரு உட்கருத்தும் உண்டு நமது உடம்பாகிய மனையகத்து உள்ள கோயிலாக இறைவன் எழுந்தருளுவான் என்பதையும் பூரணகும்பம் காட்டுகிறது பூரணகும்பம் மங்கலங்களில் ஒன்றாய் உள்ளதோடு மங்கலத்தையும் உண்டாக்குவதாகும். எங்கும் அருவமாக உள்ள இறைவனுக்கு நீர் ஓர் உருவகுமாகும். செழுநீர்த்திரள் என்ற அப்பர் அடிகள் அருமையாகப் போற்றுகிறார். நீர்த்திரளை.

கும்பத்தில் நிறைத்த நிறைகுடத்து நீரை மக்கள் மிதித்துச் செல்லும் இடங்களிலோ தெரு வீதிகளிலோ ஊற்றுதல் பாவமானது. அந்நீரை கால் படாத இடத்திலே சேர்த்துவிடல் வேண்டும்.



# தொலைக்காட்சி நாடகங்களில் பெண்கள்

சாந்தி சச்சிதானந்தன்

பெண்களைப் பற்றிய எந்நிலைப் பாட்டினையும் ஆராயுமிடத்து, ஒரு சமூகத்தின் அந்தந்தக் காலகட்டத்திற்குரிய மேலாதிக்கக் கருத்தியலினை ஆழ நோக்குவது அவசியமாகின்றது. *மிசேல் பரட்* (Michele Barrett) என்னும் பெண் ஆய்வாளர் "அர்த்தங்கள் உருவாவதும், அவை ஆட்சேபணைக்குள்ளாக்கப்- படுவதும், அவற்றை உருமாற்றுவதும், மீள உருவாக்குவதுமான நடைமுறைகள்" அறிவு சார்ந்த கருத்தியலின் தோற்றப்பாடும் அதன் இயங்குதலும் எனக் கொள்ளலாம் என்று கூறியுள்ளார். அர்த்தங்களாவன தொடர் பாடலின் மூலம் உருப் பெறுவதால், கலைப்படைப்புக்கள் கருத்தியலில் உருவாக்க நடைமுறையின் முக்கியகளமாக அமைகின்றது என உய்த்தறியலாம். இதன் காரணமாகவே பெண்நிலைவாதக் கோட்பாட்டிற்கு இயைபவர் பலரும் கலைப்படைப்புக்களில் பெண்கள் சித்தரிக்கப்படும் முறைமையினைப் பற்றிப் பல தரப்பட்ட விவாதங்களை இன்று கிளப்பியுள்ளனர்.

இன்றைய கலைப்படைப்புக்கள் பல தற்கால சமூகத்தில் விரவியுள்ள ஆணாதிக்கக் கோட்பாடுகளின் ஆளுமைக்குட்பட்ட வெளிப்பாடுகளே என்பது அவர்களின் ஏகோபித்த முடிவாகும். கலை மரபுகளில் பெண்கள் ஒரே தன்மைத்தானவுருக்களில் வெளிக்கொணரப்படுகின்றனர். தங்கள் நிலைமைகளுக்குத் தாங்களே உடந்தையாவது போன்று காட்டப்படுகின்றனர், ஒரு புறம் அற்பமென ஒதுக்கித் தூற்றப்படும் அதே வேளையில் தாய் என்றும் தெய்வம் என்றும் போற்றப்பட்டு ஈடு செய்யப்படுகின்றனர். கலை வெளிப்பாடுகளின் சமூக நடைமுறைகளினை (social Practice) ஆய்வுக்குட்படுத்துவதன் மூலம் இத்தன்மைகளை மேலும் உணரலாம். எந்த ஊடகத்தினூடு தரப்படுகின்றது, யாரால் யாருக்காக என்னும் வினாக்களினை எழுப்புவதன் மூலம் அவ்வக் கலைகளின் விசேடத் தன்மைகளைப் புரிந்து கொள்ளலாம். இவ்வகையில் தொலைக்காட்சி என்னும் ஊடகம் ஒலி, ஒளி என்னும் அம்சங்களை உள்ளடக்கிய தால் வானொலி, பத்திரிகை போன்ற ஊடகங்களில் இருந்து வேறுபடுகின்றது. அதே சமயத்தில் தான் தொடும் இரசிகர்களின் தன்மையினைப் பொறுத்து ஒத்த இயல்புள்ள திரைப்படங்களிலிருந்தும் வேறுபாடு இருப்பதைக் காணலாம்.

தொலைக்காட்சியினைப் பார்ப்பதற்கு ஒய்வுநேரம் ஒதுக்க வேண்டிய தில்லை. ஏதேனும் கைவேலையைச் செய்து கொண்டே இதனைப் பார்க்கலாம். நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களைப் பார்வையாளர்கள் அவ்வப்போது தங்களுக்குள் பரிமாறி அதன் நுணுக்கங்களை, புரியாதனவற்றை புரிந்துகொள்ளலாம். அதன் காரணமாக இது ஒரு சமூகத் தன்மைத்தது (Social Phenomenon) எனக் குறிப்பிடப்படுகின்றது. எமது நாட்டில் உயர், கீழ் மத்தியதரவர்க்கப் பிரிவினரே இதை நுகர்வோராய் கூடியளவு இருப்பினும், இன்று படிப்படியாக நகர்ப்புறச் சேரிவாசிகளையும் பிரதேச சிற்றூர் வாசிகளையும்

ஈர்த்ததாகக் கொண்டுவிட்டது. கையெட்டும் தூரத்தில் தத்தமது இருப்பிடங்களிலேயே கிட்டுவதனால், வீடு என்னும் வரையறைக்குள்ளேயே பெரும்பாலும் இயங்கிக் கொண்டிருக்கும் பெண்களே இதன் முக்கிய பார்வையாளர்களாக இருக்கின்றனர்.

தொலைக்காட்சியின் அண்மித்த நிலை அதில் வரும் பேச்சாளர்களையும் நடிகநடிகையரையும் மக்களுக்கு மிக நெருங்கியவர்களாகவும் பரிச்சயம் கொண்டவர்களாகவும் தோற்றமளிக்கச் செய்கிறது. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகச் செய்தி வாசிப்பவர்களைப் காட்டலாம். இவர்கள் நமது நாட்டின் லட்சோப லட்சம் மக்களது வரவேற்பறையில் தினமும் நடமாடி மறைபவர்கள் என்றும் நாம் கூறினால் மிகையாகாது. இதே போன்றே வாரத்தொடர் நாடகங்களில் மீண்டும் மீண்டும் தோன்றும் நடிகர்கள் நடிகைகள் தாங்கள் ஏற்று நடிக்கும் பாத்திர உருக்களில் பார்வையாளர்களின் குடும்ப அங்கத்தவர்களில் ஒருவராகவே மாறிவிடுகின்றனர். இதனால் இயல்பான கதைப்போக்கும் சிறந்த கதாபாத்திரங்களுமுடைய நாடகங்கள் அதிகளவு பிரபல்யம் அடைகின்றன. (திரைப்படங்களைப் பொறுத்தவரை இதற்கு ஏறுமாறான போக்கு காணப்படுவது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்) வீட்டில் ஆறுதலாக அசந்திருக்கும் நிலையில் இவ்வாறு பரிச்சயமானவர்களினூடாக வரும் செய்திகள் மக்கள் மனதில் ஆழமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது மட்டுமன்றி, மனிதர்கள் இயல்பாகவே கைக்கொள்ளும் தேர்வு என்ற நடைமுறை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அற்றுப்போய்விடுகின்றது. ஓய்வுநேரம் ஒதுக்கி, முயற்சி எடுத்து மேலதிக செலவு செய்து ஒரு திரைப்படத்தைப் பார்க்க வேண்டியிருப்பதால் ஓரளவாயினும் தரம் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் மக்கள், தொலைக்ககாட்சியினூடாக வரும் சகல நிகழ்ச்சிகளையும் பாரபட்சமின்றிப் பார்க்கத் தலைப்படுகின்றனர். பார்வையாளர்களை இவ்வாறு செயலிழக்கவைத்து அவர்கள் கற்பனா சக்திக்கு ஏதும் இடம் கொடாமல் சகல விடயங்களையும் அப்படியே ஏற்கவைக்கும். இதனை ஆங்கிலத்தில் (Idiot box) (முட்டாள் பெட்டி) என்று அழைப்பதில் ஆச்சரியமேதுமில்லை. ஆகவே பல்வேறு வெகுசனத்தொடர்பு சாதனங்களிலும் மிகுந்த தாக்கம் விளைவிப்பது தொலைக்காட்சியே. வயது வரம்புகளின்றி சகலரும் நேசிக்கும் தொலைக்காட்சியில் மக்களால் அதிகளவு விரும்பிப் பார்க்கப்படும் நிகழ்ச்சிகளாக நாடகங்களும் முழுநீளப்படங்களும் அமைந்துள்ளன.

கடந்த 1991–1993ம் ஆண்டுகளில் இலங்கைத் தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பாகிய குறுநாடகங்கள், தொடர்நாடகங்கள், முழுநீளப்படங்கள் ஆகியவற்றில் பெரும்பாலானவை தமிழ்நாட்டில் தயாரிக்கப் பட்டவையாக இருந்தன. இலங்கைத் தயாரிப்புக்களாக சில குறுநாடகங்களும் நகைச்சுவைக் கதம்பங்களும் ஒளிபரப்பாயின. இந்நாடகங்களின் ஊற்றுப் புலங்கள் சமூக அமைப்பிலும், சாதி வர்க்கங்களிலும் தயாரிப்பு நடைமுறைகளிலும் பெருமளவு வேறு பட்டிருப்பினும் ஆணாதிக்கக் கோட்பாட்டினை நிலை நிறுத்துவதில் ஒத்து இயங்குவதாகக் காணப்பட்டன. உரு, கதைப்பின்னல், நிகழ்ச்சிகள், காட்சியமைப்புக்கள், நேராகவேனும் மறைமுகமாகவேனும் தரப்படும் செய்திகள் என்பன மீண்டும் மீண்டும் பெண்களுக்கான வகைமாதிரிகளை உருவாக்கிய வண்ணம் இருந்தன.

பெண்களுக்கு இந்நிகழ்ச்சிகளினூடாக உருவகப்படுத்தப்படும் ஒரே தன்மைத்தான எவை என்பதை நோக்குவோம். பெண் கதாபாத்திரங்கள் அனேகமாக நல்ல பெண், தீய பெண் என மிகத் தெளிவாக வரையறுக்கப்படுகின்றனர். பூர்ணம் விஸ்வநாதன் தயாரித்தளித்த முரண்பாடுகள் என்னும் தொடர் மற்றும் சில புதிய அலை நாடகங்கள் போன்றவையே இதற்கு விதிவிலக்கு. ஆண் கதாபாத்திரங்கள் ஸ்தீரி லோலர்களாகவும் போதை மருந்துக்கு அடிமைப்பட்டவர்களாகவும் இருக்கலாம். . ஆனால் இவர்கள் திருந்த இடமுண்டு. இவ்வகையாகப் பிழையான வழிகளில் தவறிவிடும் பெண் கதாபாத்திரங்களோ எவ்வகையிலும் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆண்கள் தீயவர்களாயிருந்து நல்லவர்களாக மாறலாம். பெண்களின் ஆணவம் மற்றும் இரக்கமற்ற சிந்தை போன்றவைதான் திருத்தப்பட வேண்டப்படுகின்றதே தவிர அவர்கள் வேறெந்த வகையிலும் தவறிவிடின் குடும்பத்துக்கு ஒவ்வாதவர்களாக கதைப்போக்கில் தூக்கியெறியப்பட்டு விடுவர். நல்லவை என்பன பாரம்பரியத்துடன் உருவகப் படுத்தபடுகின்றது, தீது என்னும் கருத்து நவீனத்துடன் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. நவீன சிந்தனையுள்ள பெண்– மேற்கத்திய கலாச்சாரத்தில் ஊறிய பெண்– தீய பெண் என்னும் சமன்பாடு, உலகளாவிய ரீதியில்

சட்டலைட் தொடர்புகள் ஏற்பட்டு நாம் உபயோகிக்கும் குண்டூசி கூட வெளிநாட்டு சமாச்சாரம் என ஆன பின்னரும் நம்மவர்களைத் தொடர்கின்றது. பாரம்பரியத்துக்கு மாறுபாடான வகைமாதிரிகளை அங்கீகரிப்பது போன்று காட்டும் நாடகங்களும் சில நுணுக்கங்களைக் கையாண்டு இந்த நன்று–தீது, நவீனம்–பாரம்பரியம் என்னும் சமன் பாட்டினைத் தங்கவைத்துக் கொள்கின்றன. உதாரணத்துக்கு காதலுடன் பழகி கல்யாணத்துக்கு முன்பே கர்ப்பந்தரித்த பெண் கழுத்தளவு கூந்தலுடன் சல்வார் கமீஸிலும் நீள் சட்டையிலும் காட்சியளிப்பதையும், பின்பு மனந்திருந்தி குடும்பம் ஒன்றில் ஈடுபடத் தொடங்கியதும் அதே பெண் திடீரென முழங்கால்வரை பின்னலுடன் சேலையில் வளைய வருவதையும் காட்டலாம்.

திரைப்படங்களைப் போலன்று தொலைக்காட்சியின் பார்வையாளர்கள் இரசிகர்கள் ஏற்கனவே பழக்கப்பட்டவர்கள் என்பதனால் வண்ண வண்ணக் காட்சியமைப்புக்களும் கிளுகிளுப்பூட்டும் கவர்ச்சிக்காட்சிகளும் புகுத்தி இரசிகர்களை ஈர்க் வேண்டிய அவசியம் தொலைக்காட்சிக்கு இல்லை. அதுவும் எமது நாடுகளில் ஏராளமான அலைவரிசைகளில் நிகழ்ச்சிகள் தனியார் நிறுவனங்களினாற் தரப்படாமையினால் தரப்படுத்தல் மூலம் நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ளூர் இரசிகர்களைப் பங்கு போடவேண்டியிருக்கும் போட்டியும் கிடையாது. இதனால் தொலைக்காட்சி நாடகங்களில் நடைமுறை ரீதியாகப் பிரச்சினைகள் அணுகப்படுவதைக் காணலாம். பெண்கள் இக்கதைகளுடன் ஐக்கியப்பட்டு அவ்வக் கதாபாத்திரங்களுடன் தம்மை இனங்காணும் போக்கில் மேற்குறிப்பிடப்பட்ட விழுமியங்கள் அவர்களுக்கும் புகுத்தப்படுகின்றது. தீயது என இனங்காணப்பட்ட பாத்திரங்களிடமிருந்து தம்மை விலக்கிக் கொள்ளவும் நல்லது என இனங்காணப்படும் பாத்திரங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ளவும் முயல்வர்.

இந்த வகைமாதிரி பாத்திரங்களுக்கு பொறுமை முக்கிய அணிகலன். சமூகத்தின் கொடுமை, ஆண்கள் இழைக்கும் துன்பம், கணவனது முட்டாள்தனமான வீம்பான நடவடிக்கைகள் இப்படிப்பட்ட பலவற்றை பொறுத்துக் கொள்ள வேண்டும். "நான் இத்தனை வருஷங்களாகக் குடும்பம் நடத்துகிறேன் ஒரு கேள்வி கேட்டிருப்பேனா" இப்பதான் பொறுக்கமுடியாமல் (கணவனுடைய மூட நடவடிக்கைகளை) முதல் கேள்வி கேட்கிறேன் என்ற ரீதியில் பேசும் மனைவி கதாபாத்திரங்கள் பல. ஒரு நாடகத் தொடரில், தன் முதல் மனைவி இறந்த பின்னும் அவள் நினைவில் மூழ்கியிருக்கும் கணவனை இரண்டாந்தாரமாக மணந்த இளம் பெண்ணொருத்தி, புகுந்த வீட்டாரின் அவமதிப்புக்களையும் பொறுத்துக்கொண்டு அவர்களெல்லோருக்கும் சேவை செய்து அக்குடும்பத்தை உயர்த்தி விடுவதாகக் காட்டப்பட்டுள்ளது. கணவனின் ஆதரவுகூட இல்லாதவொரு இடத்தில் தியாக மனப்பான்மையுடன் கணவனின் நன்மைகளைத் தனதுவிருப்பு, வெறுப்புக்களுக்கு மேலாகக் கருதி அந்த வீட்டில் வாழ்ந்ததற்காக அவள் போற்றப்படுகிறாள். ஈற்றில் சகலராலும் அவள் ஏற்றுக்கொள்ளப்படும் மகிழ்ச்சியான முடிவும் தரப்படுகின்றது.

இன்னொரு தொடரில் திருமணத்துக்கு முன் வேறொரு ஆணைக் காதலித்த பெண் தன் குடும்ப வாழ்வில் உணரும் அவஸ்தைகள் காட்டப்படுகின்றன. காதலன் இருக்கும் ஊருக்கு கணவன் மாற்றலாகிப் போவது தொடங்கி அவனையும் அங்கு அகஸ்மாத்தாக சந்தித்து பின்னர் இந்த விடயம் கணவனுக்கு தெரிய வருமோ வருமோ என தொடர் நீள இவள் சித்திரவதைக்குள்ளாகின்றாள்.

சில கதைகள் பெண்களின் நடைமுறைப் பிரச்சினைகள் பலவற்றைப் பிரதிபலிப்பதாக ஆரம்பித்தாலும் அவற்றின் முடிவுகள் எவ்வாறேனும் திரிக்கப்படும் விளைவுகளும் உள்ளன. உதாரணமாக தான் தொழிலில் பெயரெடுக்க வேண்டும் என ஏக்கத்துடன் செயல்படும் பெண் கடைசியில் வீட்டில் கவனக்குறைவால் உணவின்றி வாடும் கணவரையும் இறக்குந்தறுவாயில் இருக்கும் குழந்தையினையும் கண்டு மனந்திருந்தி வீட்டோடு வரும் சம்பவக் கோவையினைக் காட்டலாம். இன்னொரு உதாரணம், காதலில் தோல்வியுற்று குழந்தையுடன் நிராதராவாக இருக்கும் பெண்ணை விரும்பி ஒரு நல்ல இளைஞன் மணமுடிக்கும் கதை. இதில் இழிவெனக் கருத இடமில்லையென இயக்குனர் நமக்கு உணர்த்துகின்றாராக்கும் என நாம் அசந்திருக்கும் வேளையில் அந்தப் பெண் இறக்கும் காட்சி வருகின்றது.

நான் விட்ட தவறை என் மகள் செய்யாமல் பார்த்துக்கொள்ளுங்கள் எனக் கணவனிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு கண்ணை மூடிவிடுகிறாள் . கதையின் கருவானது அந்த மகள் தன் தாயின் வரலாற்றிலிருந்து வேண்டிய படிப்பினைகளைப் பெற வேண்டும் என்ற ரீதியிலிருந்தது.

ஒரு நாடகத்தில் தோன்றும் நகைச்சுவை மற்றும் நகைச்சுவை நாடங்கள் பெரும்பாலும் கணவனை ஆட்டிப் படைக்கும் மனைவியைப் பற்றியதாக இருக்குமென்று உண்மையிலேயே கண்ணை மூடிக்கொண்டு சொல்லி விடலாம். இவர்கள் சேலை, நகைகள் பற்றி அக்கறை கொண்டவர்களாவும் அயலவர்களைப் பற்றி வம்பு பேசி காலத்தைக் கழிப்பவர்களாயும் காட்டப்படுவர். உறவினர் மற்றும் நண்பர்களின் அந்தஸ்திற்கு சமமாகத் தாமிருக்கப் போடும் போட்டியில் கணவரைச் சித்திரவதை செய்பவர்களாகக் காட்டப்படுவர். சுருங்கக்கூறில் இந்த கதாபாத்திரங்களின் அறிவித்தனங்களை இரசிப்பதே நகைச்சுவையாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறாகத் தொலைக்காட்சி நாடகங்களினது பொதுத் தன்மைகள் இருப்பினும், வளர்ந்து வரும் பெண்கள் இயக்கத்தின் தாக்கமும் இவற்றில் இல்லாமலில்லை. உண்மையில் மற்றைய வெகுசனத்தொடர்புச் சானங்களுடன் ஒப்பு நோக்கில் தொலைக்காட்சியில் இவ்வகைக் கருத்துக்களின் தாக்கம் அதிகம் எனலாம். முதலாவது, மற்றெவற்றையும் விட மத்தியதர வர்க்கத்தினரை இலக்காகக் கொள்ளுவதில் அவர்கள் மத்தியில் வளர்ந்து வரும் தாராளவாதத்தினை தொலைக்காட்சி நாடகங்கள் பிரதிபலிக்கின்றன. அடுத்ததாக திரைப்படங்களைப் போன்று சந்தையின் பூரண கட்டுப்பாட்டில் இயங்காமையால் பெண்கள் தொடர்பான சமூகப் பிரச்சினைகள் பலவற்றை படமாக்க முடிகின்றது. அத்துடன் ஏராளமான முதல் வசூல் போன்ற அம்சங்கள் இல்லாமையினால் நாட்டின் பொருளாதார அரசியல் லகான்களைக் கட்டி இழுக்கும் கனவான் வர்க்கத்தின் பிடியில் சிக்காமல் இதுவரை தொலைக்காட்சி நாடகங்கள் இருந்திருக்கின்றன.

1980களில் தமிழ்நாட்டில் வீடியோ கலைஞர்களின் மத்தியில் இந்தப் போக்கு ஊடுருவிப் பரவியது. இவர்கள் படைப்பில் ஓரிரண்டு பெண்கள் பிரச்சினைகள் பற்றிய பிரச்சார நாடகங்களாக இருப்பினும் ஏனையவை கலையம்சங்களுடன் மிளிர்ந்திருக்கின்றன, மக்கள் மத்தியில் வரவேற்பும் பெற்றிருக்கின்றன.

சித்திரப்பாவை அகிலனுடைய ஞானப்பீடப் பரிசு பெற்ற நூலின் குறுந்திரையாக்கமாகும். இவர் ஐம்பதுக்கும் அறுபதுகளுக்குமுரிய எழுத்தாளராகையால் அவருடைய கதையும் அந்த தசாப்தங்களுக்குரிய சமூகப் பின்னணியில் பின்னப்பட்டிருக்கிறது. சுஹாஸினி மணிரத்தினத்தினால் எழுதி இயக்கப்பட்ட "பெண்" தொடரில் உள்ள நாடகங்களை தொண்ணூறுகளின் பிரதிபலிப்புகளாகக் கொள்ளலாம். பழமையில் புதுமையைக் காண விழையும் சித்திரப்பாவைக்கும், நவீனத்திலும் நவீனமாகத் தோற்ற முயலும் "பெண்ணிற்கும்", காலத்திலும் கட்டமைப்பிலும் வேறுபாடுகள் இருப்பினும் அவரையிரண்டும் தொண்ணூறுகளில் கருத்தூட்டி உயிர் கொடுக்கப்பட்ட நாடகங்கள் என்ற முறையில் ஒத்திருக்கக் காணப்படுகின்றன.

பெண்களின் பிரச்சினைகளைக் கருவாக வைத்துச் சிருட்டிக்கப்படும் கலைப் படைப்புக்களில் பொதுவாகவே சில குறைபாடுகளை நாம் காணலாம். இவை பெண்கள் பிரச்சினை என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான போராட்டம் எனவும் இம்முரண்பாடு தனிமனிதரீதியில் அணுகப்பட்டுத் தீர்க்கப்படவேண்டும் என்ற வாதங்களுக்கு அடிமையாகிவிடுகின்றன. பெண்கள் மீதான ஒடுக்குமுறையினைச் சுட்டுவதில் மிதவாத பெண்ணிலைவாதிகள் காத்திரமான பங்கு அளித்திருப்பினும் இவ்வொடுக்குமுறை சாதி, வர்க்கப்பாகுபாடுகளினால் ஆளுமை செலுத்தப்படும் பலத்த சமூகப் பின்னணியில் இதனை இவர்கள் நோக்குவதில்லை. இக்காரணிகளில் முக்கியத்துவம் பெற்றது வர்க்கப் பாகுபாடாகும். மாலினி பட்டாச்சார்யாவின் கூற்றில், "பால்நிலையினை வரலாற்று ரீதியாக காலநிலைகளின் வளர்ச்சிப் படிகளாகக் காட்ட வர்க்கம் நமக்கு உதவுகின்றது. நமது சமூகத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்குமிடையே நிலவிய உறவுமுறையின் பரிணாம வளர்ச்சியானது

தனக்கேயுரிய நியாயங்களுடன் தனித்துவமாக இயங்குவது போல் தோன்றினாலும் அவ்வச் சமூக அமைப்பில் இதற்கு உற்பத்தி உறவுமுறைகளின் அடிப்படையிலேயே இதன் விளக்கத்தினை நாம் பெறலாம். . . சகல விதமான உறவுகளின் சிக்கலான இடையீடுகளினூடே பால் உறவுகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. இந்த விளக்கம் குறையுறுவதனால் அகமும் புறமுமாக இரு உலகங்களைச் சிருஷ்டிக்கின்றனர், இங்கு தொழில் சார்ந்த இடங்களையும் சந்தைக்கென உற்பத்தி செய்யும் நிலையங்களையும், போர் அரசியல் ஆகியவனவற்றை உள்ளடக்கிய உலகத்தினைப் புறம் எனவும், குடும்பம் தனிநபர் சார்ந்த உலகத்தினைப் புறம் எனவும், குடும்பம் தனிநபர் சார்ந்த உலகத்தினை அகம் ஏனவும் கருதும் போக்குகள் மேலோங்குகின்றன. ஆகவே பெண்கள் விடுதரைக்கான போராட்டமானது தனிப்பெண்கள் தம் சொந்த வாழ்வில் மேற்கொள்ளுவதாகக் காட்டுவதல்லாது ஒரு குழுவினரின் போராட்டமாகப் பார்க்கப்படுவதில்லை.

இற்றைக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்னரே அகிலன் பிடித்தமில்லாத கல்யாணத்திலிருந்து பெண்கள் மீளவேண்டும் என்னும் கருத்தினை சித்திரப்பாவையில் கூறியிருப்பது மெச்சத்தகுந்த விடயமே.

ஆண் பெண் உறவுகளை ஆற அமர இருந்து அலசும் அவகாசம் ''பெண்''ணிற்கு இல்லை, ஒவ்வொரு குறுநாடகமும் இருபதே நிமிடங்களில் கூற வந்ததை முற்றுப் பெற வைக்கவேண்டும். இதைச் செவ்வனே உணர்ந்து பெண்கள் முகம் கொடுக்கும் சில பிரச்சிகைளை எளிமையான வடிவில் எம்முன் கொணர்கிறார் சுஹாசினி. நல்ல கலையுணர்வும் தொழில்நுட்பத்திறனும் இவர் படைப்புகளுக்கு மெருகூட்டுகின்றன. முழுக்கமுழுக்க மத்தியதர வர்க்கத்தினரைச் சார்ந்தவர்களாகவே எல்லாக் கதாபாத்திரங்களும் இருப்பதனால் சிக்கலின்றிக் கதையை நகர்த்தக் கூடியதாக இருக்கின்றது. இவர் எண்பதுகளையும் தொண்ணூறுகளையும் சார்ந்தவர் என்பதினாலும் தானும் ஒரு பெண் என்ற காரணத்தினாலும் அகிலனை விடக்கூடிய அனுதாபத்துடனும் புரிந்துணர்வுடனும் தன்னுடைய கதாபாத்திரங்களை இவர் அணுக ஏதுவாக இருக்கின்றது.

''பெண்'' தொடரில் உள்ள எட்டு நாடகங்களிலும் ராஜி மாதிரி பொண்ணு மனைவியை அடிக்கும் கணவனைப் பற்றியது பெண்ணின்மேல் கட்டவிழ்க்கப்படும் வன்முறையானது அவன் ஆத்மாவையே நிர்மூலமாக்கும் செயல் எனக்கருதி ஆணித்தரமாக மனைவி ராஜி கணவனை எதிர்க்கிறாள். அவளுக்குப் பக்கபலமாக மாமியாரும் துணை நிற்கிறாள். இந்த நோக்கத்தில் இரு பெண்களும் வெற்றி பெற்றாலும் அந்தக் கணவன் மனைவிக்கிடையில் நிலவிய அசமத்துவ உறவினைப் பற்றிய சில கேள்விகள்தானும் எழுப்பப்படவில்லையே என் ஆதங்கம்தான் மேலிடுகின்றது.

''குட்டி ஆனந்த'' நாடகத்தில் மருத்துவப் பரீட்சையில் சித்தியெய்தி ஹவுஸ் சேர்ஜனாக பணிபுரியும் ஒரு பெண் வைத்தியரைப் பற்றி கதை. தன் நோயாளர்களின் பிரச்சினைகளைத் தாங்கமுடியாத மென்மையான உணர்வுகளைக் கொண்டவள். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிச் சிறுவன் ஆனந்தில் பாசம் கொண்டு அவனைப் பராமரிக்கின்றாள். இக்காரணத்தினால் தன் காதலனையும் சந்திக்க முடியாமல் நேர்ந்திருக்கின்றது. பையனின் அவசரசிகிச்சை நிகழ்ந்த அன்று தான் நிச்சயதார்த்தத்தில் கலந்து கொள்ளத் தவறுகிறாள். சம்பந்தியும் உறவினர்களும் கலைந்து போனபின்னர் ஒரு பிரளயமே நிகழவிருப்பது போல வீட்டினுள் நுழைந்த அவள் காதலனின் மார்பில் தலை புதைத்து ஆனந்தைத் தங்களால் காப்பாற்ற இயலாமல் போனதைக் கூறி "எனக்கும் ஆனந்தைப் போல ஒரு மகன் வேணும்'' என்று விம்முகிறாள். இங்கு கடமையுணர்வு கொண்ட ஒரு வைத்தியர் என்பதைவிட தாய்மையுணர்வால் உந்தப்பட்ட பெண்ணாய்த் தான் பார்வையாளர்களுடனும் தன் வருங்கால கணவனுடனும் ஒன்றித்து விடுகின்றாள். கடமைக்கு முன்னுரிமை கொடுத்ததினால்தான் நிச்சயதார்த்தத்திற்கு வரமுடியவில்லை என்று அவள் கூறியிருந்தால் அங்கீகாரம் பெற்றிருப்பாள் என்பது சந்தேகமே.

''மிஸிஸ் ரங்கநாத்'' நாடகம் கணவன் விபத்தில் பலியாக தன் வாழ்க்கையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிக்கும் பெண்ணைப்பற்றியது. இரு இளம் பிள்ளைகளைப்

பராமரிக்க வேண்டிய பொறுப்புடன் தன் கணவனின் சொந்தத் தொழிலாக இருந்த அச்சகத்தினையும் நிர்வகித்து வெற்றி பெறுகிறாள். ஆண் துணையில்லாதவர்கள் என்று உலகத்தினால் நோக்கப்படுவதால் விதவைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஸ்பஷ்டமாக வெளிக் கொணரப் பட்டிருக்கின்றன. இனியும் எப்படி இந்த பெரிய வீட்டுக்கு வாடகை கட்டப்போறீங்க என்று அவநம்பிக்கை தெரிவிக்கும் வீட்டுக்காரர், இவள் பொட்டு வைத்திருப்பதைப் பார்த்து விட்டு கலிகாலம் எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொள்ளும் இன்சியூரன்ஸ் கிளார்க், வீட்டில் இருந்து சமைப்பியா அத விட்டுட்டு எங்க பிராணனை வாங்கிறியே என்று எரிந்து விழும் கம்பெனி செகரட்டரி இவ்வாறாகப் பலரைக் கொண்டு நிறுத்தி ஒரு பெண்ணின் சுயகௌரவத்தையும் தன்னம்பிக்கையும் வேரோடு சாய்க்க என்னென்ன ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று எடுத்துரைக்கப்–படுகின்றது. பாரம்பரிய விழுமியங்களின் ஊற்றாக இருக்கும் மதத்தினை உருவமேற்றும் கோயில் சந்நிதானத்திலேயே, இறுதியில், பூசாரி கையால் குங்குமம் வாங்க இவள் துணிவது சிகரம் வைத்தாற் போன்ற காட்சி ஆகும்.

''அப்பா அப்படித்தான்'' ''வார்த்தை தவறிவிட்டாய்'' போன்ற நாடகங்கள் தந்தைவழிச் சமூகங்களின் பிம்பங்களான அப்பாக்ளைக் காட்டுகின்றன. தான் பார்த்துத் தேர்ந்தெடுக்காத மாப்பிள்ளையென்ற ஒரே காரணத்தினால் மகளின் காதலனை நிராகரிக்கும் அப்பா, பொறுமை உபதேசித்து துரோகமிழைக்கும் கணவனுடன் மீண்டும் இணையும்படி மகளுக்குக் கூறும் அப்பா, மூத்த மகள் திருமணத்தன்று வேறு பையனுடன் ஓடிவிட, தனது கௌரவம் காப்பாற்றப்படவேண்டுமே என்பதற்காக இளைய மகளை அதே மணவறையில் திருமணம் செய்து வைக்கும் அப்பா, இந்த அப்பாக்கள் பெரும்பாலும் காலை நேரங்களைப் பூஜையறையில் செலவழிப்பர், இவர்களின் மனைவிகளோ அடுப்படியும் அதுவுமாக வேலையில் ஓடியாடித் திரிவர். சாஸ்திரங்களும் சமயமும் ஆண்களினால் அபகரிக்கப்பட்டதை அங்கீகரிப்பது போன்று காட்சியமைப்புக்கள் சொல்கின்றன.

''ஹேமாவுக்கு கல்யாணம்'' நாடகம் திடமான சுய உணர்வுகொண்ட மகளுக்கும் அவளுடைய தாய்க்குமிடையேயுள்ள உறவினைச் சித்திரிப்பது. தாய்க்கு மகனில்லாத குறையைத் தீர்த்த மகள் ஹேமா ''நீதான் என்னைப்போல, அக்கா அவ அப்பாவைப்போல'' என்கிறாள் தாய். இந்நாடகமும் ''லவ்ஸ்டோரி'' என்கிற நாடகமும் பெண்களை புத்துணர்ச்சியளிக்கும் புதிய கோணங்களில் காட்டுகின்றன. ''லவ்ஸ்டோரி'' திருமணத்தை விரும்பாது சிட்டுப்போல் சுதந்திரமாகத் திரிந்த பெண்ணைப் பற்றியது. தன்னுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று தான் வேலை செய்பவரிடம் கோரிக்கை விடும் போது தான் தன்னம்பிக்கையும் திறமையும் மிளிருகின்றன. மொத்தத்தில் சுஹாசினி பெண் கதாபாத்திரங்களை முதன்மைப்படுத்திக் கதையை நகர்த்துவதில் வெற்றி கண்டிருக்கிறார் என்றே கூற வேண்டும். ஆணாதிக்கக் கோட்பாடுகளின் சகல அம்சங்களையும் அவர் வேரோடு களையாவிடினும் அங்கங்கு அவற்றைக் கண்டித்திருக்கிறார். இவருடைய பெண் கதாபாத்திரங்கள் பாரம்பரியம் நவீனம் அல்லது நன்று –தீது என மாறாப்படிவுருக்களில் சமைக்கப்படவில்லை. பெண்களின் பிரச்சினைகளுக்கு பொதுமையான பண்புகள் உண்டென்பதை ''ராஜி மாதிரி பொண்ணு, மற்றும் ''மிஸி ரங்கநாத்'' மூலம் சுட்டிக்காட்டுகின்றார். பெண்கள் வாழ்வின் முரண்பாடுகளை பெரும்பாலும் அகம் என்ற களத்திலேயே தனிமனித உறவுகளில் இவர் தீர்க்க எத்தனிப்பினும், இத் தொடரின் பாத்திரங்கள் அத்தனையும் ஒரே வர்க்கத்தைச் சார்ந்தவையாக இருப்பதனால் கதைகள் பாதகமின்றி நகர்கின்றன. ''சித்திரப்பாவை'' ஆண் மேலாதிக்க சமூக அமைப்பில் சில அம்சங்களில் மறுசீரமைப்பு கோரியது. ''பெண்'' தொடரோ சமூகத்தில் ஆழப்புதைந்துள்ள விழுமியங்களை அங்கீகரித்தாலும் இவற்றின் வரையறைக்குள் வீட்டில், வேலைத்தளத்தில் ஆண்–பெண் உறவுகள் மாற்றமடைய வேண்டுமென யாசிக்கின்றது. எப்படிப் பார்க்கினும் இது சமூகத்தின் வளர்ச்சிப் படியில் ஒரு முன்னேற்றமே. சுருங்கக்கூறில், தொலைக்காட்சி நாடகங்களில் நம்பிக்கையின் ஒளிக்கீற்றுகள் தென்பட ஆரம்பிக்கின்றன எனலாம்.

# தடமாறும் தலைமுறைகள்




பத்மா. சோமகாந்தன்

வீடு ஓய்ந்து போய்க் கிடக்கின்றது.

ஒரே அமைதி!

வீட்டில் இருந்த பிள்ளைகள் பேரப்பிள்ளைகளின் ஆரவாரம், சத்தம், கலகலப்பு, பேச்சு, சிரிப்பு அட்டகாசம் யாவும் மறைந்துவிட்டது.

சுமார் இரண்டுவார காலம் உலகம் முழுவதும் இந்த வீட்டினுள் நிறைந்து கிடந்தது. லண்டனிலிருந்து சின்னண்ணாவும் அண்ணியும், டென்மார்க்கிலிருந்து பரமேஸ் அக்காவும் மகன் ரஜீவும், சுவிஸ்சிலிருந்து தங்கச்சியும் பிள்ளைகள் ஹரியும், ஷெரியும் ஜேர்மனியிலிருந்து தம்பி கந்தாவும் அவுஸ்ரேலியாவிலிருந்து ஜெயம் அத்தான் சக்தி அக்கா பிள்ளைகள் ஜெகா, ஜெனா, ஜெயா மூவரும் என்று பெரிய பட்டியல் போடக் கூடியதாக எல்லோரும் அங்கங்கே பக்கவேர்களை ஊன்றினாலும் ஆணிவேரான அம்மாவைத் தேடி இங்கே இலங்கைக்கு பறந்து வந்திருந்தனர்.



ஒவ்வொருவராக வந்து சேர்வதும் அவர்களை வரவேற்க விமான நிலையம் போவதும் நல்ல பொழுது போக்குத்தான். ஒவ்வொரு குடும்பமாகக் கூடக்கூட பொலிஸ் ஸ்டேசனில் பாஸ்போட்டைக் காண்பிப்பதும், பதிவதும் என்று அதுவேறு தொல்லைகள் எத்தனைதான் பொலீசில் பதிந்துவிட்டாலும் வீட்டுக்கு நள்ளிரவுச் 'செக்கிங்கின்' போது பல உருட்டுதலான கேள்விகள். பெட்டி சாமான்களைத் துவக்குமுனையால் இடிப்பதும் உள்ளே என்ன என அக்கறையோடு ஆராய்வதும் வெறும் வேண்டாத நடவடிக்கைகள். 'ஊர் ஓடுகில் ஒத்தோடு' என்பதுபோல எல்லாத் தமிழருக்கும் இந்தச் 'சோதனைகள்' உண்டு. எத்தனை தடவைகள் கதவைத் தட்டினாலும் திறக்க வேண்டும். கேள்விக்கு விடை சொல்ல வேண்டும். இப்படிப் பல வகையான அடாவடித்தனங்கள்!

அம்மா! எங்கள் உயிரும் உணர்வுமானவள்! எத்தனை கஷ்டப்பட்டு எம்மை வளர்த்து நிமிர்த்தினாள். எனக்கு இரண்டு அக்கா, ஒரு தங்கை ஒரு அண்ணா ஒரு தம்பியுமாக நாம் ஆறுமுகங்கள். எல்லாருமே தன் முகம் என அம்மா நாம் சிறுசுகளாக இருந்தபோது அள்ளிக் குழைவாள்.

பிள்ளைகள் உலகின் பல ஊர்களிலும் வாழ்ந்தாலும் அம்மாவுக்கு லேசான பெலவீனம், சுகமில்லை என்றதும் எல்லோருமே பயணம் பண்ணி பறந்து ஓடி வந்துவிட்டனர். இப்போ விடுமுறையில் அவர்கள் ஊர்வந்திருந்தபோது அம்மாவுக்கோ கொள்ளை ஆனந்தம். தாயாக இல்லாமல் பிள்ளைகளோடு குழந்தையாகக் குதித்தா. பேசினா, பாடினா, ஆடி விளையாடினா நேரம் போவதே தெரியாமல் கதைத்துக் கொண்டே இருந்தா, அம்மா அது அளவிடமுடியாத அன்புச் சமுத்திரம், வற்றாத பாச ஊற்று.

சகோதரங்கள் நாமெல்லோரும் ஒன்றாக இணையும் போது சே! அந்த ஆனந்தமே ஆனந்தம்! அக்கா விமான நிலையத்தில் தன்னைப்போல உடையணிந்திருந்த பெண்ணின் மீது கையைப் போட்ட அக்கா அத்தானுடைய மறதியை பரிகசிப்பதும் தம்பி தங்கச்சியோடு தனகுவதும் அண்ணாவின் பிள்ளைகளை அக்கா விசாரிப்பதும் கேலி பேசுவதும் வம்பு பண்ணுவதுமாக... பொழுதுகள் பறந்தன.


ஓய்ந்துவிட்ட கச்சேரி மண்டபமாக வீடு வெறிச்சோடிக்கிடந்தது. குடும்பமென்பது அன்பையும் பாரம்பரியத்தையும் கட்டிவளர்ப்பது அம்மா தம்பி, தங்கை பிள்ளை என்ற உறவுகளைப் பாசத்துடன் பிணைப்பது. இரத்தத்திலுள்ள ஹோமோன்ஸ்களின் தன்மையால் ஒரே தன்மைத்தது. நெருங்கிய பற்றைப் பிணைப்பது. குணம் நடை தன்மைகள் செயல்பாடுகள் விருப்பு வெறுப்புகள் என எல்லாம் பெரிதும் ஒத்திருப்பது. இந்தப் பாரம்பரியச் சங்கிலியின் முடிச்சுகள் தான் குழந்தைகள். அம்மா நீங்கள்தான் எமக்கு எல்லாம் என அம்மாவைச் சுற்றி

வளைவார் அண்ணா. தம்பி வளர்ந்து பெரிய ஆம்பிளையானாலும் அம்மாவின் மடியில் தொட்டிலாக்கித் தூங்குவான். அக்கா அச்சொட்டாக அம்மாதான். என்னையும் அப்படித்தான் எனது கணவன் சொல்லுவார். மற்ற அக்காவும் தங்கையும் கூட ஒரே அச்சான தோற்றம் தான் கன்னம் நாடியெல்லாம் அம்மாவைக் கிள்ளிவைத்த மாதிரி. அம்மாவின் அங்கங்களோடு இடை இடையே அப்பாவின் காது, கை, மூக்குகளைக் கிள்ளி வைத்தது போல.... உருவ ஒற்றுமை. எலும்புகள் தசைசுருங்கி புறப்பட முக்கி முனகிக் கொண்டிருந்த அம்மா பிள்ளைகள் பயணத்தால் வந்ததும் மகிழ்ச்சியால் நல்ல திட காத்திரமானவளாக மாறிவிட்டார். மாலையில் கோர்த்த பூக்களாக எம்மையெல்லாம் அம்மா பார்த்துப் பார்த்து மனம் மலருவாள்; பூரிப்பால் நெகிழ்ந்து போவாள்.

"படுக்க இருக்க சாப்பிட என எல்லொரும் ஒரே நேரத்தில் வந்தால் வீடு இடம் போதாது. இன்றைய நிலையில் பொலிசும் சந்தேகிக்கும் பிரச்சினைகளும் புதிது புதிதாக முனைக்கலாம். ஒவ்வொரு சகோதரர்களும் முன்னைப் பிள்ளையாக வந்தால் எமக்குக் கனநாள் கொண்டாட்டம் தானே" என்று முன்பு சொன்னேன்.

எனது பேச்சு அம்மாவுக்கு கோபத்தை மூட்டியது. "பிள்ளை பணம் பெரிதில்லை. வசதிகள் பெரிசில்லை. எந்த ஏழ்மையிலும் சகோதரங்கள் உறவுகளை, நிலைநாட்டி ஒற்றுமையாயிருப்பதே மனசுக்குப் பெருமைதரும் சந்தோஷம் என்ரை காலம் போட்டுது பிள்ளை. என்ரை பிள்ளை குட்டியளோ அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம் மாறிப் போட்டுதுகள். நாளைக்கு இதுகளுக்கோ இதுகளின்ரை பிள்ளைகளுக்கு ஒட்டுறவு எங்கையிருக்கு?"

'ஓகோ! இந்தச் சண்டை பிடிக்கிற ஊருக்குக் கூப்பிட்டுத்தான் ஒட்டுறவை ஏற்படுத்தப் போறியளோ! நல்லாயிருக்கு உங்கடை புத்தி' என்று அம்மாவின் பேச்சுக்கு ஒரு சூடு போட்டேன். 'இங்கே பிள்ளை நான் சொல்றதைக் கேள். என்பாடு இப்பவோ பின்னையோ என்று போய்விடும். இதுகள் வாழுற இடங்களோ லண்டனெண்டும். சுவிஸ் எண்டும் டென்மார்க் ஜேர்மனி என்றும் கண்ட கண்ட ஊர்கள் அங்கையெல்லாம் அன்பு பற்று பாசம் நேசம் எண்டதெல்லாம் விளங்குதோ தெரியாது. பிசின் மாதிரிச் சீவியமாம். வெவ்வேறை கலாச்சாரம். விண்ணானமான பழக்கங்கள்!"



"அதை நீங்க என்ன மாற்றி அமைக்கப் போறியளே!" என்று கேட்டதும் வெடித்த சிரிப்புச் சிதறியது. நீங்கள் எப்பிடியும் ஒற்றுமையாயிருப்பியள் எண்டு எனக்குத் தெரியும். நானும் கொப்பரும் வளத்த வளர்ப்பும் அப்படி. எங்கடை பரம்பரையான ஆக்களும் இப்படித்தான். சகோதரங்கள். அதுகளின்ரை பிள்ளைகள் என்றால் உயிரையே விடுவினம். அப்பிடி நினைச்சுத்தானே அம்மாவின் தம்பி மாமாவுடைய பிள்ளையை... என்ரை சொந்த மச்சான்தானே உன்ரை கொப்பர். அங்கொண்டும் இங்கொண்டமாயிருக்கிற எங்கடை பிள்ளையனின்ரை அடுத்த பரம்பரை ஒன்றுக்கொன்று தெரியாமல் ஒட்டுறவில்லாமல் மறந்துவிடும். அதுகள் வாழும் சூழலும் அப்பிடி. பிள்ளை தன்பாடு பெற்றோர் தன்பாடு எங்கள் நாட்டைப்போல பிள்ளை பெற்றோர் என்ற பாசமே வேறு.

வெள்ளைக் காரக் குட்டியள் தங்கடைகாலில் தாம் நிற்பதாக வருவித்துக் கொண்டு பெற்றோரின் பாசத்தை வெளிக்கொணராமலே அமுக்கிவிடுவினமாம். "உங்கடை கதை என்ன? பெற்ற பிள்ளைகள் என்றால் பாசமிருக்கத்தானே செய்யும்?"

'இரண்டொரு குடும்பங்கள் அப்படி இருக்கலாம். ஆனால் எம்மைப்போல அவர்கள் குடும்ப பாசம் என ஏங்கிஅதற்காக அலட்டிக் கொள்வதில்லை. பசியிருந்து களையோடு பிள்ளைகளைப் பெற்றோர் எதிர் பார்த்திருப்பதில்லை. உண்ணும் போதும் அவரவர் தத்தமது சுவை ரசனையின்படி தாய் தந்தை பிள்ளை என்ற நெருங்கிய உறவுப் பசையை அவர்கள் எம்மைப்போல் பெருக்கிக் கொள்வதில்லை.

'அந்தத் தன்மை தெரிந்தோ தெரியாமலோ, எங்கடை ஆக்களுக்கும் கொஞ்ச நாளால் தொத்திவிடும்'

குமர்ப்பிள்ளையான என்னை அடைகாத்து வைத்திருந்த அம்மா எனது திருமணத்துக்குப் பிறகு ஒவ்வொரு பிள்ளையின் அழைப்பையும் ஏற்று உலகம் சுற்றி வந்தவள். இப்போ உடல் ஓய்ந்து விட்டது. கண்டு கேட்டறிந்த அனுபவம் அவளைப் பேசவைத்தது.

'என்ன இருவரும் பயணக்காரரை அனுப்பிப் போட்டுச் சன்னதத்திலை இருக்கிறியளோ' என்றபடி மாமா பிரசன்னமானார்.

"அம்மா சாமிப் படம் முன் விளக்கை ஏற்றிவிட்டு வாங்கோ. இண்டைக்கு அந்தப் பக்கம் நான் போகக் கூடாது." பொழுது படுகிறது. சாமிக்கு விளக்கேற்றிக் கும்பிடப் போய்விட்டாள் அம்மா.

"அம்மா இல்லாத நேரம். மாமாவுக்கு சில செய்திகளைச் சொன்னால் அம்மாவின் தலைமுறையும் இன்றைய பிள்ளைகளும் எங்கை நிக்கினம் என்ற மதிப்பீட்டை எடுக்கலாம். பிள்ளையளின்ரை புதிய சூழ்நிலை எதிர்காலத்தில் புதிய வாழ்வுநிலையை ஏற்படுத்திவிடுமோ என்ற ஏக்கம் அம்மாவுக்கு மாமா! இந்த விசயத்தை கேளுங்கோ"

என்னடி பத்மா. இங்கை வந்தா உன்னோடை பறைவதே நல்ல பொழுது போக்குத்தான். என்றபடி மாமா ஈசிசெரியில் சாய்ந்து கொண்டார்.

மாமா! அம்மா பாவம் எத்தனை ஆசையோடை தன்ரை பிள்ளையள் மருமக்கள் பேரப்பிள்ளைகளென்று



பார்க்க ஆசைப்பட்டா. தலைமுறை தலைமுறையா எங்கட பழக்க வழக்கங்கள் தன்ரை பரம்பரையிலை முத்திரை குத்தப்பட வேண்டுமென்று பாடுபட்டா. ஆனால் அண்ணன்ரை அக்கான்ரை வால்கள் அம்மாவை என்ன சொன்னவை எண்டு தெரியுமோ ?

"ஏன் என்னவாம்" மாமா கேட்டார். வை திஸ் ஒல்ட் வுமன் ஸ் ஹியர்.

கவரிங் ஹெ செல்ப் வித் பிக் றோல் ஒவ் க்ளோத்ஸ். வை திஸ் இஸ் னொட் புட் இன் த ஒல்ட் ஏஜ் ஹோம். வை ஆர் தே கீப்பிங் ஹேர் இன் த ஹவுஸ்" எண்டதுகள். ஐயோ அம்மா பாவம் இதுகளின்ரை பேச்சைக் கேட்டாலே ஏங்கிப் போவா எங்கட பரம்பரை என்னமோ வடக்கும் தெற்குமாயெல்லே திரும்பி நிக்குதுகள்?"

"சாமி விளக்கேத்திப் போட்டன் பிள்ளை. நீ ஓடிப்போய் மாமாவுக்கு கோப்பிகொஞ்சம் போட்டந்து குடன் பிள்ளை" என்றபடி, அம்மா மாமாவுடன் கதைக்க வந்தா. அவர்களிருவரும் கதைத்துக் கொண்டேயிருந்தனர்.

"வாமேனை நல்ல நேரத்திலைதான் தலையைக் காட்டினாய்."

"ஏன் என்ன விசயம். ஏதோ சீரியஸோ ?"

"அப்படியொன்றுமில்லை. என்றாலும் என் மனதில் ஒரு பாராங்கல் பெரும் கனமாக முட்டி இருக்கிறது."

"எல்லாம் பச்சைப் பொய் மாமா? அண்ணா, அக்கா, தம்பி, தங்கையென்று பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டாலை வந்திருந்ததும் அம்மாவுக்கு புழுகமோ, புழுகம். மகிழ்ச்சியில் கைகாலே நிலத்தில் இல்லை. வருத்தமொன்றும் சொல்லேல்லை. முடுக்கிவிட்ட போயிங் விமானம் மாதிரி படபடவென்று பறந்து திரிஞ்சா இப்ப நெஞ்சுப் பாரமாமோ . நான் இருக்கிறன் பக்கத்திலை நெடுகவும் இருக்கிறதிலையாக்கும் என்னைப்பற்றி அம்மா கவலைப்படுவதேயில்லை. அவவுக்கு, அக்கா எண்டு வெளியிலையிருக்கிற பிள்ளையனிலைதான் பெரிய உயிர்மாமா.

"அவை போயிட்டினம், இனி அம்மா இல்லாத வருத்தமெல்லாம் சொல்லுவா."

"இல்லைத் தம்பி ... எதிர்காலத்தை நினைத்தால் எனக்குத் துக்கமாயிருக்கு" அம்மாவின் சிந்தனையில் பேரப்பிள்ளைகள் வந்து ஆட்டம் போட்டனர்.

"எயர் போட்டிலும், அங்கேயிருந்து வந்த பின்னும் என்ரை பேரப்பிள்ளைகள் கதைக்கிற விதம், பழகிற போக்கு, பேசுகிற கோலம் ....

ஹாய் ஹரி! ஹலோ ஷெரி !
மீற் பரமேஸ் ஆன்ரி அன் ராவ்
ஹாய் ! ஹாய் !

திஸ் இஸ் ஜெயம் அங்கிள் அன் திஸ் இஸ் சக்தி அன்ரி தெயர் சில் றன் ஜெகா, ஜெயா, ஜெனா

ஹாய் ஸ்கந்தா அங்கிள். ஹப்பி ரூ மீற் யூ

ஹாய் !



ஹலோ ! டார்லிங் ! நீங்கள் எல்லாருமே ஒன்றாய் சேர்ந்து விளையாடுங்கோ பிளே T. V. கேம் தெயர்

பிள்ளைகள் ஒன்றாகச் சேரவேணும் ஒருவரோடு ஒருவர்



பழக வேண்டும் அன்பு காட்ட வேண்டும் ஆட்களைத் தெரிந்து உறவு முறைகளைத் தொடரவேண்டும். இப்பிடி ஆசைப்பட்டேன். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகைள் ஒரு குலைத் தேங்காய் போல ஒன்றிணைந்து வாழ்வதின் இனிமை சொல்ல முடியுமா?

"எல்லாரையும் ஒரே நேரத்தில் இங்கு வர வேண்டுமென இத்தனை வருடங்களாக நீங்கள் முயற்சி செய்தது, முன்பே வர இருந்த மூத்தவள் பரமேஸ்வரியை பின்போடச் செய்தது, கிறிஸ்மஸ் லீவோடு வர இருந்த சின்னவனை இப்ப வரச் சொன்னதெல்லாம் என்ன புதுக்கதையே– நானும் கூட இருந்தனான்தானே! எனக்கு எல்லாப் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் சேர்த்துப் பார்க்க நீங்கள் எடுத்த முயற்சி தெரியும்தானே! ஆனால் . . . என்ன செய்யிறது அதுகளுக்கு ஒன்றின்ரை பாஷை மற்றதுக்குத் தெரியேல்லை விளங்குதில்லை.

"நல்லாய்ச் சொன்னாய் தம்பீ! அதுகள் ஒண்டுக்கு ஏதோ டொச் பாசையாம், மற்றது ஒரு போக்கான இங்கிலீஸ், தமிழே சரியாக உச்சரிக்க முடியாமல் தடக்குதுகள்!

ஜெகா அவளைவைக்கு வாயில தமிழே பூருதில்லை. இத்தனைக்கும் அப்பா அம்மா பச்சைத்தமிழர்."

"இரண்டுபேரும் வேலைக்குப் போறதாலை வீட்டில் எங்கடை தாய்ப்பாசையைச் சொல்லிக்குடுக்க நேரமும் வேணுமெல்லோ?"

"ஓமோம்! அதுக்குத்தான் ஓடியோடிப்போய் அரிவரி, முதல், ரெண்டென்று தமிழ்ப்புத்தகங்கள், இஞ்சைகிடந்த சின்னத் தேவாரப் புத்தங்களையெல்லாம் பொறுக்கிக் கொண்டு போனவை."

அவையள் நின்ற இந்த நாட்களுக்கை நானும் இந்தப் பிள்ளைகளை ஒன்றாக்கிப் பேசப் பழக வைத்திடுவம் என்று படாத பாடு பட்டன். எங்கடை இந்துக் கோயிலுக்கை இருக்கிற நவக்கிரகங்கள் மாதிரி ஒவ்வொன்றும் ஒவ்வொரு திக்குகளைப் பாத்த மாதிரித்தான் சரியாக இதுகளும் இருந்ததுகள். அதுவும் தங்கைச்சீன்ரை பிள்ளை ஷெரி வாழைப்பழத்தோலை உரிக்கிறதுக்கு தோலை உடைக்கவா? என்றாளே ஜெகா 'பக்' கென்று சிரித்துவிட்டான். அவள் கோபத்தில் எறிந்து விட்டாள் பழத்தை அந்தளவுதான். அதன்பிறகு பழத்தை போகும்வரை தொடவேயில்லை, 'சூ' பாக்கப் போனபோதும் சிங்கத்தைப் பார்த்த ரஜீவ் 'சிங்கம் சிரிக்கிறான்' என்றான் அக்கா எல்லோரும் வாய் விட்டுக் கேலியாக வெடித்துச் சிரித்தனர். அத்துடன் பிள்ளைகளுக்கு என்னவோ போல மூட் கலைந்துவிட்டது.

"பிள்ளையள் பேரப்பிள்ளையள் வந்தது, நின்றது எல்லாம் சந்தோஷம்தான், ஆனால் அவர்களுடைய அழகும் உடைகளும் நன்றாய்த்தானிருந்தது ஆனால் . . ஆனால் . . இவற்றை நினைக்க மனசு பெரும் பாரமாய் . . கருங்கல்லாய் . . . இறுகுது கனக்குது.

உனக்குமட்டுமில்லைத் தம்பி. இந்த உலகத்துக்கே நான் சொல்லத்தான் ஆசைப்படுகிறேன். நானும் கொத்தானும், என்ரை பெற்றோரும் எனது மாமன் மாமி சுற்றம் சூழல் என்று எல்லோருமே சேர்ந்து ஒரு பெண்ணை பிள்ளையை ஆளாக்குவதில் மனதாலும் உடலாலும் எவ்வளவு பாடு பட்டிருப்போம் ?"

"ஏன் உங்கடை பிள்ளையள் தங்கள் பிள்ளையளை வளக்கப்பாடு படேல்லையே! 'அக்கா'."

"இல்லையடா தம்பி! அவகரப்படாதை எங்கள் பிள்ளையள் வரை நாங்கள் எங்கள் மொழிகலாச்சாரம் என்று ஒரு பாதையைக் காட்டிவிட்டோம். ஆனால் எங்கடை இந்தப் பேரப்பிள்ளையள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாசை பேசுவது வெவ்வேறு கலாசாரச் சூழலில் வளருவது. எதைப் பற்றுவது எதை விடுவதென்று அதுகளால் கணிப்பெடுக்க முடியாது. அப்படியெல்லாம் ஒண்டுமண்டாக் குழப்பிப் போய்க் கிடக்குது பிள்ளையள். பாவம் குழந்தைகள் தடுமாறுதுகள்! இந்தப் போக்கிலை எங்களுக்கு எப்படியொரு பாரம்பரியம் வரப் போகுதோ அதை நினைக்க நெஞ்சு என்னவோ செய்கிறது எனக்கு."

"நமது கலாச்சாரம் நமது பிள்ளைகளை விட்டுக் கழலப் போகுதென்றா அக்கா இத்தனை கவலையும் தடுமாற்றமும் ?"



"சரியாய்ச் சொன்னாயப்பா சரியான வழி தெரியாமல் எங்கடை தலைமுறைகள் தடுமாறப் போகுதுகளே!" அம்மாவின் கண்களில் நீர்கோத்து நின்றது!

# நாட்டியத்தின் ஆன்மீக அம்சங்கள்

*“ உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்*
*நிலவுலாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்”*

நம் பாரத நாட்டில் புராதனமானதும் சிறப்பு மிக்கதும் நாட்டியக் கலை ஆகும். எனக்குத் தெரிந்த வகையில் பாரதம் தான் இக் கலைக்கு தேசிய வாழ்விலும், தெய்வீக வாழ்விலும் உன்னத இடத்தை அளித்திருக்கின்றது. இந்தப் புனிதக்கலையின் முன் ஏற்றத்தாழ்வு கிடையாது. இந்தக் கலை எல்லோருக்கும் பொதுவானதாகும். நாட்டிய அரங்கிற்கு 'பொது' என்ற பெயரும் உண்டு. இந்தக் கலைக்கு உணர்ச்சியும், உற்சாகமும் எடுத்துக்காட்டும் ஒப்பற்ற இறைவனிடம் இருந்தே தோன்றுவனவாகும். கடவுளின் அம்சமாகிய ஒவ்வொருவரும் இந்த நாட்டியக் கலையில் ஈடுபட வேண்டும். இந்தக் கலை நாட்டுக்கு மட்டும் உரியதன்று உலகம் முழுவதற்குமே சிறப்பாக அமைந்துள்ளது.



ஸ்ரீமதி ருக்மிணி தேவி

இந்தக்கலை உண்மையில் நிரந்தரமானது, அழிவற்றது. கடல் நீரில் பலவித வண்ணங்களுடன் ஒளிவிடும் சூரிய கிரணம் போன்றது. கலையின் உண்மை உருவத்திற்கு சூழ்நிலை மிகவும் முக்கியம் அந்த சூழ்நிலையே தேசிய வாழ்க்கை என்கிறோம். நம் இந்தியாவில் நாட்டியமும் பிற கலைகளும் தெய்வீகத் தத்துவமாக அமைந்துள்ளன. இந்திய நாகரிகத்தில் இது ஒப்பற்ற தனிச் சிறப்பாகும்.. நம்மால் மிக உயர்ந்தவற்றை அறிய முடியுமானால் மிகத் தாழ்ந்தவற்றையும் அறிய முடியும். ஏனெனில் இரண்டும் ஒன்றாகும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையின்தான் நாட்டியக் கலையின் பாரம்பரியம் நம் நாட்டில் பரவி வருகின்றது. நாட்டியம் மட்டுமே தனிக் கலை ஆகாது. உடலின் மூலமாக எல்லாக் கலைகளையும் இணைப்பது நாட்டியம் ஆகும். உண்மையில் உடலின் தன்மை கலைக்கு உடன்பட்டாலும் அது தாமச இயல்பை உடையது. அதன் உள்ளுணர்வை வெளிப்படுத்தும் தன்மையையே நாம் நாட்டியம் என்கிறோம். எனவே உடலும் உணர்ச்சியும் நாட்டியத்தைத் தோற்றுவிக்கின்றன.

உணர்ச்சி எவ்விதம் தோற்றுவிக்கின்றது. நாட்டியம் விரைவில் வளைந்து கொடுக்கும் தன்மையால் பாதிக்கப்படுகின்றது. இதைத் தூண்டுகின்றது, ஒலியாகும் சங்கீதத்தில் ஒலி அசைவு மூலம் தன் இயல்பை விளக்குகின்றது. யோகியர்க்கும் பரம யோகியான நடராஜ மூர்த்தியில் இருந்து இவை அற்புதமாக மக்களுக்கு உணர்த்தப்படுகின்றன. அவனிடம் எத்தகைய ஞானமும், கலைகளும் ஒன்று சேர்ந்து குடிகொண்டிருக்கின்றன.

நாட்டிய உணர்வு நாகரீக மக்களிடமும் அநாகரீக மக்களிடமும் இருப்பதை காண்கிறோம். நாட்டியம் எல்லோருக்கும் இன்பமளிக்கும் கலையாக மாறும் போது அதனிடம் தெய்வத்தன்மை ஏற்படுகின்றது. எல்லாச் சுவையினருக்கும் இந்தக் கலை இன்பமளிக்கும். நாட்டியத்தில் சங்கீத வித்வான் அனுபவிக்கும் இசை உண்டு. நாட்டியமே உடலுக்குச் சங்கீதமாக அமைகின்றது. சங்கீதமும் சாகித்தியமும் இசையும் பிறவாத்தியங்களில் சேர்ந்தால் அது முழுமையான சங்கீதம் என்று கூறப்படுகின்றது. சங்கீதத்தில் நாட்டியம் உள்ளது போல் நாட்டியத்தில்

சங்கீதம் இருக்கின்றது. சங்கீத உணர்ச்சி இன்றி நாட்டியம் இயங்க முடியாது. ஏனெனில் சங்கீதமே உயர்ந்த உணர்ச்சி பாவங்களுக்கு இயல்பாகவும், அசைவுகளாலும் அபிநயத்தாலும் அதன் இருப்பிடமாகின்றது. சங்கீதத்தை கை முதலிய அபிநயத்தாலும் முக பாவத்தாலும் மற்ற அங்க அசைவினாலும் தெரியப்படுத்துவதன் மூலம், நாட்டியம் ஆடுபவர் மற்றொரு கலையை வெளிப்படுத்துகின்றனர். அதுவே நாட்டியம் அல்லது நாடகக்கலையாகும். பின்னர் நாட்டியமாடுபவர் கதை சொல்பவராகவும் நடிப்பவராகவும் மாறுகின்றனர். கதையைச் சொல்வதற்கு நாடகத்தில் உள்ள ஒரு பாத்திரத்தை விளக்குவதற்கும் ஆடை முதலிய வேடங்களே ஒரு அபிநயம் ஆகும். இது நான்கு முக்கிய பிரிவுள்ள நாட்டியத்திற்கு ஒரு அம்சமாகும். தனியாக ஆடும் பரத நாட்டியத்தில் நிருத்யம் ஆடுபவனும் கதை சொல்வான். தவிர நாட்டியத்திற்கேற்றவாறு ஆடைகளும் அணிகலன்களும் அணிந்து கொள்வாள். பகட்டின்றிச் சாதாரண ஆடைகளையே அணிவாள். ஆனால் நாட்டியம் ஆடுபவள் அழகாக இருப்பதன்றி தான் கூறும் கதை பிறரை வசீகரிக்கச் செய்யும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அவளுடைய கலை நாட்டிய உருவத்தில் உள்ள சங்கீதமே ஆகும். அவனிடத்தில் ஒவ்வோர் உணர்ச்சியும் ஒவ்வோர் பாத்திரமும் அடங்கியுள்ளன. நாட்டிய நாடகத்தில் நடனமாடுபவர் ஒரு தனியான பாத்திரமாக இருந்தால் ஆடையின் தன்மை ஒரு ரகத்தை அல்லது அடிப்படையான ஒரு பாவத்தை விவரிக்கும் உண்மை விளங்குவதற்கு தன்னுடைய அனுபவமே சாதனமாக உள்ளது. இது தெய்வீக வாழ்க்கையின் முன்னேற்றத்தைத் தெளிவாக விளக்கும்.

ஆகவே நாட்டியம் மற்றைய கலைகளை ஒருங்கிணைக்கும் பாலமாகும். சித்திரத்திற்கு வண்ணம் பூசுபவர் வண்ணத்தையும் அழகையுமே நோக்காகக் கொண்டிருப்பார். சிற்பக்கலை நிபுணர் அழகான வடிவம் உருவாகுவதையே இலட்சியமாக கொண்டு இருப்பார். நடிகர் வாழ்க்கையின் பிரதிபலிப்பைத் தோற்றுவிப்பார். இசை வாணர்களும் கவிஞர்களும் பாடலின் தன்மையை கவனிப்பர். உடலையும் ஆன்மாவையும் அர்ப்பணம் செய்து மேற்குறிப்பிட்ட தகுதிகள் ஒரு நாட்டியக்காரனுக்கு இருக்குமாயின் அவனே நடராஜ தத்துவத்தின் உணர்வு ஆகிவிடுவான். அவனுடைய அங்கங்களாக, அங்கங்களின் அசைவுகளாக உலகம் இயங்குவதாக விவரிக்கின்றனர். அவள் ஆடை அணிகலன்கள் (அஹ்ர்யம்) நிலாவும் நட்சத்திரங்களுமாகும். சிவமே சாத்வீகத்தின் உண்மை உணர்வின் ரசமாகிவிடுகின்றது. அவனிடம் எல்லாம் ஒன்றாக இருக்கின்றன. அவனிடம் இருந்தே எல்லாம் தெய்வீக உணர்வுடன் தோன்றுகின்றன. இதுவே நாட்டியம் எனப்படும். இதுவே நம்முடைய பாரம்பரியமாகும்.

இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இன்னும் இந்தியாவில் உண்மையான நாட்டியத்தைக் காணலாம். பரத நாட்டியமே இந்தியாவில் உள்ள எல்லா நடனத்துக்கும் வேரும் மூலகமுமாகும். இந்தியாவில் எல்லா நாட்டியமும் பரத நாட்டியத்தின் சாரமே ஆகும். ஆனால் ஒரு சாரார் மட்டும் அந்தக் கலைக்கு பரத நாட்டியம் என்று பெயர் வைத்துள்ளனர். பரத முனிவருடைய நாட்டிய சாஸ்திரமே மிகவும் பழமையான ஆதார நூலாகும். தென்னிந்தியாவில் தஞ்சாவூர் பரத நாட்டியக்கலையின் பள்ளி என்று அறியப்பட்டாலும் காஞ்சிபுரமும் பிற இடங்களும் இந்தக் கலையை அதற்குச் சமமாகப் பயிற்சி பெறும் பெருமை பெற்றவையாகும். ஒவ்வொரு கோவிலிலும் எல்லாச் சிறப்பு நிகழ்ச்சிகளிலும் நாட்டியம் இடம் பெற்றிருந்தது. இந்தக்கலை உடற்கவர்ச்சியை மட்டும் கருதித் தெய்வீக நிலையை மறந்து விட்டதால் அழியக் கூடிய நிலையில் இருந்தது. ஆனால், உலகம் யாரைப் புறக்கணித்ததோ அவர்களின் பக்தியினாலும் நாட்டியத்தின் பால் உள்ள உண்மைத் தன்மையாலும் இந்தக்கலை அழியாமல் பாதுகாக்கப் பெற்றது.

இந்தியர்கள் மனோ பாவத்தில் பாத்திர இயல்பும் நாட்டியமும் இணந்தே செல்கின்றன. உண்மையில் அவை இரண்டும் ஒன்றே. ஒன்றில் ஒன்று உட்படாமல் இயங்க இயலாது. இறைவன் இறைவியின் வேடங்கள் புனைவதே ஒருவனைத் தெய்வீகமுள்ளவனாக்குகின்றது. இந்திய நாட்டியம் தெய்வீகம் பொருந்தியுள்ளதால் அது ஆன்மீக வளர்ச்சிக்கு பொருத்தமாக உள்ளது. பாவங்களின் மூலம் ஒருவன் கதைகளில் காணும் கடவுளின் தன்மையை சித்தரித்துக் காட்டுகின்றான். இந்திய மேதைகள், மனிதப் பண்பே தெய்வம் என்றும் தெய்வீகத் தன்மையே மனித இயல்பு என்றும் காட்டியுள்ளனர். எனவே இறைவனும் இறைவியும் புராணங்களில் மனிதனைப் போல வாழ்ந்து பேசுகின்றனர். இவ்வாறு

இந்தியா முழுதும் நாட்டியம் இருந்து வருகின்றது. தஞ்சாவூரில் பாகவதர்களின் (ஆண் நடிகர்கள்) நாட்டிய நாடகமும் ஆந்திரா நாட்டில் குச்சிப்புடியும், மலையாளத்தில் சாக்கியார் கூத்து இன்றும் நிலவி வருகின்றன. இவற்றில் மூலமாகவும் இன்னும் கேரளத்தில் நிலவி வரும் கதகளி மூலமாகவும் சமயமும், தத்துவமும், கலையும் வாழ்ந்து வருகின்றன.

நாம் நம்முடைய பரம்பரைச் செல்வத்தை மறந்து விட்ட படியால் கலைச் செல்வம் ஏறக்குறைய மறையும் நிலைக்கு வந்துவிட்டது. இன்று அந்தக் கலையின் சிறப்புக்குத் திடீரென விழிப்புணர்ச்சி ஏற்பட்டு மக்கள் எங்கு பார்த்தாலும் நாட்டியக் கலை பற்றியே சிந்திக்கவும் பேசவும் ஆரம்பித்துள்ளனர். நாட்டியம் நம் வாழ்வின் முன்னேற்ற சாதனமாக இருப்பதால் ஒரு தெளிவான மாறுதல் இந்நாட்டியக் கலையில் ஏற்பட வேண்டும். இந்தியக் கலைகள் பொதுவாக கீழ் நிலையுற்று வருகின்றன. அநாகரிகமான பண்பாடற்ற அம்சங்களை இந்தக் கலைகளில் புகுத்தி வருகின்றனர். சாதாரணமாக இராமாயண பாரதக் கலைகளைக் கொண்ட நாட்டியங்களே அநாகரிகமாக நடிக்கப்பெற்று வருகின்றன. சில சமயங்களில் மிகவும் ஆபாசமாக நடிக்கப் பெறுகின்றன. கடினமாக உழைத்து நல்ல யோசனை செய்து பக்தியுடன் நாட்டியங்களை உருவாக்க வேண்டும். பக்தி இல்லாமல் ஒழுங்கு இல்லை அதனால் இந்தக் கலையின் சிறப்பு அம்சங்கள் கைவிடப்பட்டுள்ளன. இதனால் உணர்ச்சி பாவமே இல்லை எனும் முடிவு ஏற்படுகின்றது. உள்ளிருந்து பொங்கிவரும் உணர்ச்சிகளுக்கு பதிலாக வெளியே இருந்து வரும் உற்சாகத்தை எதிர்பார்க்க வேண்டி உள்ளது. இதனால் விமர்சனத்தின் தரமே குறைந்து போகின்றது. இன்றைய கலை பிறரிடம் இருந்து தோன்றாது. தன்னுள் இயல்பாகவே தோன்ற வேண்டும் ஆழமான கிணற்றில் இருந்து புதிய நீர் ஊற்றுக்கள் தோன்றுமோ அது போலப் புதிய புதிய இலட்சியங்களும், எண்ணங்களும், நோக்கங்களும் தனக்குள்ளே தோன்ற வேண்டும். நமது பாரத தேசம் நடனத்தை ஆனந்த வடிவமாகக் கருதுகின்றது. அதனால் தான் நடராஜப் பெருமானின் நடனத்தை ஆனந்த தாண்டவம் என்கின்றோம். இதுவே யோகிகளின் ஆனந்தம். யோகிகளின் தன்மை எவ்வாறு உள்ளது? தன் உடல் மறந்த ஒருவரே யோகியாவர் அந்த 'தன்னை மறந்த நிலை' வெறுப்பினால் ஏற்படவில்லை. தன்னையே தன் வசப்படுத்தும் சக்தியினால் ஏற்பட்டதாகும். உடலுக்கு நன்கு பயிற்சியளிப்பதன் மூலம் பக்குவப்படுத்திய பிறகே ஒருவன் அதை மறக்கின்றான். ஒரு கலை மற்றொரு கலையை மறப்பதன் தத்துவமே இதுதான். எனவே நடனமும் தன்னை மறக்கச் செய்வதால் ஒரு யோகம் என்று கூறப்படுகின்றது. இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும் நாடோடிக் கலைகள் இருக்கின்றன. தனியாக ஆடும் கலையாகவும், கூட்டாக ஆடும் கலையாகவும், நாட்டிய நாடகமாகவும் அவை இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் வாழ்க்கையின் தனித்தன்மையைச் சுற்றியுள்ள சூழ்நிலையைப் பற்றிய கிளைப்புகளை ஒவ்வொரு வகையில் பிரதி பலிக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொன்றில் இருந்து மாறுபட்டுள்ளது. குஜராத்தில் கர்பராசவீயை, கேரளத்தில் கைகொட்டிக் களி, தமிழ் நாட்டில் கும்மி, கோலாட்டம் அஸ்லாம் ஒரிசாவில் கிராமிய நடனங்கள். ஒவ்வொருவரின் சிந்தனைக்கும் ஏற்ற வண்ணம் நாட்டியம் தாழ்ந்த நிலையில் இருப்பவரில் இருந்து உயர்ந்த நிலையில் இருப்பவர்களுக்கும், குழந்தை பருபத்தினருக்கும் வயது வந்த பருவத்தினருக்கும் சங்கீத மூலம் இந்தக்கலை நாட்டில் நிரப்பப்படுகின்றது.

இந்துக்கள் இந்து மதத்தின் சாரம் எது என்பதை எப்போது உணர்கின்றர்களோ அப்போதுதான் கலை புத்துயிர் பெற்றுப் பழைய உயர்ந்த நிலையை எய்தும். நாட்டியம் பரிசுத்தமான நிலையில் மக்களுக்கு மீண்டும் கிடைக்கும். நாட்டியம் புத்துயிர் பெற முயற்சி செய்யப்படுகின்றது. இந்த முயற்சி வெற்றிகரமாக தொடர நாம் இந்தக் கலையின் ஆன்மீகச் செய்தியை உணர்ந்து கலையை நாம் வாழ்வின் ஒரு பகுதியாக்க வேண்டும். அப்போது தான் நம்முடைய உண்மையான வாழ்க்கை கலைக்கு தொண்டாற்றத் தொடங்கும். இந்தியா எழில் மிக்க நாடாக விளங்கும். இந்தக்கலையே முனிவர்கள், மனிதத்தன்மையின் பாதுகாவலர்கள் அளிக்கும் செய்தியைச் சுமக்கும் சரியான சாதனமாகும்.

# செண்பகமே செண்பகமே



சாந்தி பாலசுப்பிரமணியம்

**ஊர்** ஜனகபுரம் கடற்கரை ஓரமாக அமைந்த சின்னஞ்சிறு கிராமம். கூட்டிக் கழித்தால் பதினைந்து குடிசைகள். மீன் பிடிப்பது இவர்களின் ஜீவநாடி இத்தொழிலையே ஜீவனமாகக் கொண்ட நடுத்தர வயது ஆண்மகன் ராமன். அவன் ஒரு கலைஞனும் கூட, துணிச்சல், சாதூர்யம், அமைதியான மனச்சுபாவம், உதவிக்கரம் நீட்டும் பெருந்தன்மை அவனை அந்தச் சிறு ஜனத்தொகையில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் நிறுத்தியிருந்தது.

அவன் நேசிப்பது இந்தக் கடலைத்தான். ஆனால் அதை விட ஆயிரம் மடங்கு அவன் நேசிப்பது தன் மனைவி செண்பகம், மகன் ரகு, மகள் அஞ்சலி, இரண்டுமே குழந்தைகள். அன்று மாலை வழமைபோல ஆர்மோனியப் பெட்டி இசைக்கிறது. இது ராமனுடைய தாத்தா பாவித்த இசைப்பெட்டி உடைந்து போனதுதான் ச–ரி–க– (ம.ப) இல்லை. த–நி–ச–சா என்றாலும் வானொலிப் பெட்டிகூட இல்லாத அந்தச் சனத்துக்கு இந்த இசைபெட்டியும் அதில் வரும் உடைந்த இசையை உயர்த்திக் கொடுக்கும் ராமனின் குரலும் அந்த கூட்டத்திற்கு ஒரு நன்கொடைதான். ''கடலோரம் வாங்கிய காற்று குளிராக இருந்தது நேற்று'' ராமனின் பாட்டை அக்கம் பக்கம் உள்ள அனைத்துக் குடிசைகளிலும் உள்ள காதுகளும் கேட்டு ரசிக்கும். குடிசை வாசலிலே அமர்ந்திருக்கும் ராமனின் மடியில் அஞ்சலி தன் எதிரே மணற்தரையில் பாதி விழியில் தூங்கி விழிக்கும் மகன் ராமு.

''என்னங்க பொறப்படுங்க அக்கம் பக்கம் எல்லாம் கௌம்பிட்டாங்க நீங்க மட்டுதாங்க எப்பவும் லேட்டு'' என்று கூறியபடி தனது நீண்ட கருங்கூந்தலை வருடிக் கட்டிக் கொண்டு படலைக்குள்ளிருந்து வெளியே வந்தாள் செண்பகம். ராமனின் மடியில் கிடந்த அஞ்சலியைத் தூக்கித் தன் இடுப்பிலே வைத்துக் கொண்டு மகன் ரகுவை நோக்கினாள். தன் கண்முன்னே தோன்றும் வெள்ளி நிலாவைப் பார்ப்பது போல செண்பகத்தின் முகத்தை கண் சிமிட்டாது பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. அவளது நெற்றியில் இருந்த குங்குமப் பொட்டை அவளுடைய கூந்தலின் ஒரு பகுதி சாடையாக மறைத்தது மேலும் அவளது முக அழகிற்கு மெருகூட்டியது.

''சும்மா நின்னா எப்படி?'' பொறப்படுங்க அமைதியாகக் கேட்டாள் செண்பகம் சரி பொறப்படுவோம் என்றவாறு அவளது தோளைப் பிடித்தவாறு எழுந்து நின்றான் ராமன். 'இன்னைக்கு என்ன காத்து ஒரு மாதிரியாக இருக்கு' என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் 'தம்பி' என்றுகொண்டுவந்தார் அடுத்த வீட்டு முத்துத் தாத்தா. அவர் பதின்மூன்று வயது முதல் அறுபத்தைந்து வயதுவரை மீன்பிடித்தே ஓய்ந்து போனவர் இப்பொழுது அவர் வயது எண்பது. '' தம்பி, இன்னைக்கு வேற எதுவுமில்லை, ஒத்த காசு வீசற நாள் இந்த நாளுல ஏராளமான மீனு புடிபடும் நாளைக்கு காலையில நீயே வந்து எனக்கிட்ட சொல்லுவ பாரு என்றார். அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி செண்பகம் ராமன் அருகே ஓடிவந்தாள். ஏங்க தாத்தா சொல்லுற மாதிரி இன்னைக்கு நெறைய மீன் கெடச்சா நான் கேட்கிறதொன்று வாங்கித் தருவீங்களா?'' என்றாள். ராமனின் முகம் பூப்போல் மலர்ந்தது. ''என்னம்மா உனக்கில்லாதது வேறே யாருக்கு? என்னசொல்லு என்றான் ''ரொம்ப நாளா நினைச்சுக்குட்டு இருந்தேனுங்க. இன்னைக்குத்தான் சொல்லனுமுன்னு தோணிச்சு எனக்கு ஒரு சோடி கொலுசு வாங்கி கொடுங்க'' என்றாள். நாளைக்கு திரும்பி வந்ததும்

முதல் வேலை அதுதான் என்று தனது வழமையான புன்னகையோடும் தன் மனைவியின் கொலுசு நினைவோடும் விடைபெறுகிறான் ராமன்.

வழமைபோல தன் பாதையில் படகை ஓட்டிச் செல்லும் ராமனைக் குளிர்காற்று லேசாக அடித்து விட்டுச் செல்லுகிறது. செண்பகம், பிள்ளைகளின் முகங்கள் தன் மனத்திரையில் வந்து வந்து மறைந்து மறைந்து போகின்றன. இந்த கடற்கன்னி இந்த நடுகடலில் இவ்வளவு அமைதியாக இருக்கிறாளே ஏன் கரையில் மட்டும் தன் கரங்களைத் தட்டி ஆர்ப்பரிக்கிறாளே என்று வியந்த வண்ணம் செல்லமாகத் தன் கைகளால் தண்ணீரை அடித்து விட்டு செல்லுகிறான்.

இன்றைக்கு நிறைய மீன்கள் அகப்படப் போகின்றன செண்பகத்தின் கொலுசுக்கு என்ன விலையாகும். மற்றைய செலவுகள் அனைத்தையும் கணக்கு போட்டுப் பார்த்து கொள்கிறான். தன் தொழிலைச் செவ்வனே செய்யும் அவனது படகில் வழமைக்கு மாறாக மீன்கள் குவிக்கின்றன. தாத்தா கூறியபடி ஒத்தைக் காத்து தனக்கு கைகொடுத்து விட்டது, என்று மேலே கைகளை உயர்த்தி சத்தமிட்டான். செண்பகத்தின் வாழைத்தண்டு போன்ற கால்கள் கொலுசுளுடன் அவன் மனக்கண்ணில் நடைபயின்றன.

திடீரென எதிர்பாராத ஒரு மாற்றத்தை அவன் வானிலே காண்கிறான். வானம் கடும் கறுப்பு நிறமாக மாறிவிட்டது. காற்று பலமாக இரு பக்கமும் மாறி மாறி அடிக்கத் தொடங்குகிறது. படகு அங்குமிங்குமாகத் தூக்கி அடிக்கப்படுகிறது. நிமிடத்திற்கு நிமிடம் காற்றின் வேகம் அதிகரிப்பதை அறிந்துக் கொண்ட ராமன் தான் ஆபத்தில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தான். "முருகா காப்பாற்று, எனக்கேதாவது நடந்தால் என் மனைவி பிள்ளைகளின் கதி என்ன?'' என்று புலம்பினான். செண்பகத்தின் அழகு முகம், அந்த பிஞ்சுகள் அவன் கண்முன்னே நிழலாடுகின்றன.

மழை இடி மின்னலுடன் கடுமையாக பெய்ய தொடங்கியது. இவை அனைத்துக்கும் போட்டியாகக் காற்று புயலாக மாறி ராமனின் படகைப் பந்தாடியது. உயிரோடு பிடிபட்ட மீன்கள் உயிரற்ற மீன்களாகக் கடலோடு சங்கமமாயின. ராமனின் படகு பேய்க்காற்றால் தூக்கி எறியப்பட்டது. ராமன் தண்ணீரில் மூழ்கலானான். மீனைப் போல நீந்தும் அவன் துணிவோடு நீந்த ஆரம்பித்தான். இம்முறை செண்பகத்தின் கால்களோ கொலுசுகளோ அவன் மனத்திரையில் வரவில்லை. அவளுடைய தாலிக்கயிறே அவன் நினைவில் ஆடிக்கொண்டிருந்தது. எவ்வளவு தான் நீந்துவது தன் கைகளும் கால்களும் சோர்ந்து போகும் வரை நீந்தினான். கண்கள் இருண்டன, தலை பம்பரம் போல் சுற்றியது, ''முருகா முருகா'' என்னைக் கைவிட்டு விட்டாயா? ஐயோ! என் மனைவி என் கண்மணிகள் ! என்று அரற்றித் தண்ணீரை விழுங்கி கொண்டிருக்கும் நிலை. 'அப்பா அப்பா' என்ற கூச்சலும் 'மச்சான் மச்சான்' என்ற செண்பகத்தின் கதறல்கள் அவனைப் புரட்டியது, ஒரு முறை தண்ணீரில் மூழ்கி வெளிவந்தான். கண்கள் மங்கத் தொடங்கின, தலையில் ஏதோ அடிப்பட்டது, கைகள் இரண்டையும் நீட்டி மின்னல் வேகத்தில் பற்றிக் கொண்டான் அது ஒரு நீண்ட பலகை.

மயக்கத்தில் இருந்து மீண்ட அவன் கண்களைத் திறந்து மலங்க மலங்க விழித்தான். நீல வானம் அவன் கண்களை இரக்கத்தோடு நோக்கியது. சில நிமிடங்களின் பின்னரே நடந்தவற்றை மீண்டும் தன் மனத்திரைக்குக் கொண்டு வந்தான். அவன் உடல் நடுங்கியது. எவ்வளவு பெரிய ஆபத்தில் இருந்து அவன் தப்பியுள்ளான். "முருகா! என்னை நீ காப்பாற்றிவிட்டாய், நீ என்னை கைவிடவில்லை, நான் பிழைத்து விட்டேன் செம்பகமும் பிள்ளைகளும் இதை அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சி கொள்வார்கள்" என்று மகிழ்ச்சியில் ஆடினான். எப்பொழுது எனது பிள்ளைகளை அள்ளி அணைப்பேன் செண்பகம் உனது தாலி காப்பாற்றப் பட்டுவிட்டது. இனி உங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. ஒரு கொலுசென்ன எத்தனை கொலுசுகள் வாங்கலாம் என்று கத்திக் கொண்டு அங்கும் இங்கும் ஓடினான். அவனது வாழ் நாளில் இதை விட ஒரு பெரும் மகிழ்ச்சி இதுவரை கண்டதில்லை. மீண்டும் சூரியன் மறைய காரிருள் வெளிவருகிறாள். அந்த மந்தமான ஒளியில் தொலைவில் ஒரு கப்பல் நிற்பதைக் கண்ட அவன் மேலும் மகிழ்ச்சி பொங்கக் கைகளை மேலே வீசிக் கூக்குரலிட்டான். தனது மேலாடையைக் கழற்றிச் சைகை காட்டினான். தன்னோடு தனியாகத் தப்பிப் பிழைத்த தீப்பெட்டி மூலம் சிறு சருகுகளை ஒன்று

இணைத்து நெருப்பு மூட்டினான். சிறிது நேரத்தில் கப்பலிலிருந்து தன்னை நோக்கி ஒரு சிறு படகு வருவதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினான். படகு மூலம் கப்பலை அடைந்த அவன், சூறாவளிலே அகப்பட்டுக் காணாமற் போன மீனவர்களுக்கு உதவ வந்த கப்பல் என்பதை அறிந்து கொண்டான் தப்பியவர்கள் ஒருவரோடொருவர் தமது அனுபவங்களை பரிமாறிக் கொண்டிருந்தனர். ராமனோ 'ஐயோ எப்போ செண்பகத்தை காணுவேன் – அவள் எப்படி மகிழ்ச்சியடைவாள். எப்பொழுது வீடுபோவேன்' என்று புழுவாய் துடித்துக் கொண்டிருக்கிறான்.

அவனது கிராமத்தில் கொண்டு சேர்க்கப்பட்ட ராமன் தனது கூட்டத்தாரின் குடிசைப் பக்கம் தன் முழு பலத்துடன் ஓடினான். தனது குடிசை இருந்த இடத்தைக் கண்டதும் மரம் போல் நின்றான் . இனம் அறியாத பயம் ஒன்று அவனைக் கவ்வியது. என்ன இது பொட்டல் வெளியாக இருக்கிறதே என்று யோசனை செய்தான். அவன் கண்முன்னே தரையில் ஏதோ ஒன்று கண்ணில் பட்டது. ஆம்! அவன் ஆசையோடு பாதுகாத்து வந்த ஆர்மோனியப் பெட்டியின் ச–ரி–க–ம பெட்டி துண்டுகள். குடிசைகளைக் காணவில்லை, கோழிகளைக் காணவில்லை, ஒரு நாய்கூட இல்லை. அந்த ஜனகபுரம் கிராமம் ஒரு மயானம் போல் காட்சியளித்தது. நிலமையை புரிந்து கொள்ள முடியாத ராமன் கலங்கித் தவித்தான் ஒரு வேளை சூறாவளி அடிக்கப் போகிறது என்று ஏற்கனவே அறிந்து கொண்டு அனைவரும் பாதுகாப்புத் தேடி வேறு எங்கோ போய்விட்டார்களா? ஆம் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணுகையில் அவன் முகம் மலர்ந்தது. தனது மனதை தேற்றிக் கொண்டு அங்குமிங்கும் நடந்தவாறு தனது பார்வையை நாலாபுறத்திலும் சுழற்றி வீசினான் தொலைவில் ஒரு மனிதர் வருவது போலிக்கிறதே "ஐயா, ஐயா" என்று கூறிக் கொண்டே அவரை நோக்கி ஓடினான்.

"ஐயா இங்கிருந்த குடிசைகளைக் காணவில்லை இங்கிருந்தவர்கள் எங்கே போனார்கள்" என்று வினவினான். ஐயோ! தம்பி நான் என்னத்தைத் சொல்லுவேன், முந்தநாள் அடிச்ச சூறாவளி காத்திலேயும் மழையிலையும் அகப்பட்டு இங்கிருந்த ஒருவருமே பிழைக்கவில்லை, எல்லோருமே அடையாளம் தெரியாமப் போயிட்டாங்க தம்பி என்று அழுதவாறு கூறினான். ராமன் தலையில் இடி விழுந்தாயிற்று போயிருந்தது. வேரற்ற மரம்போல் கீழே விழுந்தான். செண்பகம், செண்பகம் ராமு 'அஞ்சலி' என்று கதறினான் கதறினான் கைகளால் கடல் மண்ணைக் குதறினான், எறிந்தான் கைகளால் தலையை அடித்தான் நெஞ்சை அடித்தான் உனக்காகப் போராடி வந்தேனே நீ போய்விட்டாயே செண்பகம், நீயில்லாமல் நான் எப்படி வாழ்வேன் என்று புரண்டு புரண்டு அழுதான், ஓடினான், பித்தனைப் போல் பிதற்றினான். செண்பகம் என்று கடற்கரை முழுவதும் கத்திக்கொண்டே ஓடினான். நீ எங்கே செண்பகம் நீ எங்கிருக்கிறாய் இந்தா உன் கொலுசுகள் இதை பிடி செண்பகம் இதை போட்டுக் கொண்டு வா செண்பகம்" என்று கதறிக் கொண்டே அந்த ஜனகபுரம் முழுக்க ஓடினான், அழுதான் கூக்குரலிட்டான். ஆனால் என்ன செய்ய? மாண்டார் மீண்டும் வருவதுண்டோ? போகிறேன் போகிறேன் போய்க்கொண்டே இருக்கிறேன். முருகா என் செண்பகம் எங்கே? எங்கே என் செண்பகம்? செண்பகம் செண்பகம் என்று கால் போனதிக்கிலே போய் கொண்டே இருக்கிறான்.

*நமக்கு அந்தரங்கப் பக்தி இருந்தாலே போதும். ஜபம், தவம், தியானம், நாமசங்கீர்த்தனம் முதலியவற்றால் பகவானை அடைய முயலவேண்டும். குருதேவருக்குச் செய்யும் பணியே மேலானது. ஜபத்தாலும் பாராயணத்தாலும் காண முடியாத ஆத்மாவை, அடக்கம், அன்பு, இரக்கம், கருணை மற்றவர்களை இகழாமை, குருசேவை இவற்றின் மூலம் காணலாம்.*

*-சுவாமி ஞானானந்தர்.*

# ௐ சமயமும் சமூகசேவையும்



அபிராமி கைலாசபிள்ளை

சமயம் என்பது வாழ்க்கை நெறி. ஒவ்வொருவரும் உயர்ந்த நெறிமுறைகளோடு வாழ்ந்தால் சமுதாயம் சிறப்புற்றுத் திகழும். மனிதனின் இகபரமேம் பாட்டுக்காக, சமுதாயத்தின் உயர்வுக்காக சமயங்கள் வழிகாட்டுகின்றன. சமயங்கள் யாவும் தோன்றிய பகுதி கிழக்கு நாடுகளேயாகும் அகமும், புறமும் தூய்மையுள்ளவர்களாக மக்கள் வாழவும் சிறந்த கலாசாரப் பாரம்பரியங்களையும் வளர்த்துக் கொள்வதற்கு சமயங்கள் துணை நின்றுள்ளதை வரலாறு நிரூபிக்கின்றது. வரலாற்றுப் பாதையில் திரும்பிப்பார்த்தால் சனாதனதர்மம் என வழங்கப் பெற்ற எமது இந்து மதத்தின் தொன்மையும் உண்மைப் பொருளான இறைவனை இறைவனின் நிலையை மனிதன் எய்துவதற்கான வழிவகைகளும் வேதாகமங்களிலும் புராணங்களிலும் திருமுறைகளிலும் தெளிவு படுத்தப் பெற்றுள்ளன.

அன்பு, இரக்கம், அடக்கம், கொல்லாமை, பொய் சொல்லாமை, நேர்மை, பொறாமை கொள்ளாமை, ஒழுக்கமுடைமை, புலாலுண்ணாமை, இன்னா செய்யாமை முதலிய நற்பண்புகளை வலியுறுத்தி சமுதாயத்தை தலை நிமிரச் செய்வது நமது இந்து சமயமாகும்.

விழுமிய இப்பண்புகளை உண்மையாகவே ஒருவர் கடைப் பிடிக்கும் போது, தொண்டுள்ளம் தானாகவே மனித வாழ்வில் சுரக்கும். மக்கள் தொண்டே மகேஸ்வரன் பணி என்ற இலட்சியம் எண்ணத்தில் பிறக்கும் மனித நேயம் மனதில் பெருகும். மனித நேயமுள்ளவரால் பிறருக்காகவும் சமுதாயத்துக்காகவும் தொண்டுகளாற்றாமல் இருக்கமுடியாது.

தொண்டுகளைப் பகுத்தறிவின் மூலம் சிந்தித்துச் செய்யும் வல்லமை மனிதப்பிறவிக்கும் மட்டுமே உண்டு. நம்மைப் போன்ற ஏனையோரும் பிற உயிரினங்களும் அநுபவிக்கும் இன்ப துன்பங்களை உணரும் திறனும் இம்மனிதப் பிறவிக்கு உண்டு. நாம் இன்பத்தை விரும்புவது போலவே ஏனைய மனிதர்களும் உயிரினங்களும் இன்பத்தையே விரும்புகின்றனர். ஆகவே நாம் பிறர் எதை நமக்குச் செய்ய வேண்டுமென நினைக்கிறோமோ அதை நாம் பிறருக்குச் செய்ய வேண்டும். உதாரணமாகப் பிறர் எம்முடன் இனிமையாகப் பேசினால் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஆகவே நாமும் பிறருடன் இனிமையாகப் பேசி அவர்களை மகிழ்விக்க வேண்டும்.

"இனிய உளவாக இன்னாது கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

*(திருக்குறள்)*

இவ்வருமையான மானிடப் பிறவியை எடுத்த நாம் எமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு வேண்டிய வற்றை விருப்புடன் முயன்று செய்ய வேண்டும். எமது மக்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களின் துயர் துடைக்கவும் சேவையாற்றுவது இறைவனுக்குச் செய்யும் சேவையேயாகும் அத்துடன் நமது நாளாந்த வாழ்க்கையை ஆராய்ந்து எமது தவறுகளைத் திருத்துவதும் முக்கியமானதாகும். சில சமயங்களில் பிறர் எம்மீது குற்றம் கண்டு கண்டிப்பதுண்டு அப்படியான வேளைகளில் உண்மையாகவே நாம் தவறு செய்திருந்தால் அதையேற்றுத் திருத்திக் கொள்ள வேண்டும். அப்படியில்லாமல் குற்றம் சொன்னவர் மீது வெறுப்புக் கொள்ளுதல் தவறு. எம்மைத் திருத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தை எமது தற்பெருமையால் இழப்பதாகவே முடியும்.

சமூகத்தொண்டு புரிபவர்களிடம் பதவி, பணம், புகழ் ஆகிய வற்றில் ஏற்படும் ஆசைகாரணமாக பிழையான வழியில் செல்லக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டாகலாம். சமூகத்தொண்டு இறைவனுக்குச் செய்யும் தொண்டு

என்பதையும் இறைவன் எம்மைக் கருவியாகக் கொண்டு அத்தொண்டைச் செய்விக்கிறார். என்பதையும் உணர்ந்து செயற்பட்டால் இத்தவறு நேராது "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்பது பகவத் கீதையின் போதனையாகும் நாம் செய்யும் சேவைக்காக மற்றவர் எம்மைப் புகழ்ந்து பாராட்ட வேண்டும் என்றோ உயர் பதவிகள் வழங்க வேண்டும் என்றோ எதிர்பார்த்தல் சுயநலமாகும். தர்மத்தொண்டில் ஈடுபடுபவர்கள் பிழையான வழிகளில் செல்வது குளிக்கப் போய் சேறு பூசுவதை ஒக்கும்.

நாம் பிறரைத் திருத்து முன் எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஒரு முறை ஸ்ரீ ராம கிருஷ்ண பரமகம்சரிடம் ஒரு தாய் சென்று தன் மகன் அளவுக்கு மிஞ்சி இனிப்புப் பண்டங்கள் சாப்பிடுவதாகவும் தான் எவ்வளவு புத்தி சொல்லியும் திருந்துகிறானில்லை என்றும் சொல்லி முறையிட்டு சுவாமிகளை அவனுக்குப் புத்தி கூறும்படி வேண்ட சுவாமிகள் பத்து நாட்கள் கழித்து வரும்படி கூறியனுப்பினார். பத்து நாட்களின் பின் மகனையும் அழைத்துக்கொண்டு அத்தாய் சுவாமிகளிடம் சென்றார். சுவாமிகளும் சிறுவனை அழைத்து இனிப்பை அதிகம் உண்பதால் வரும் தீமைகளை அச்சிறுவனுக்குப் புரியும் படி எடுத்துரைத்தார். சிறுவன் தன் பிழையை உணர்ந்து திருந்தி நடப்பதாக வாக்களித்தான். பின் அத்தாய் திரும்பவும் சுவாமிகளிடம் போய் இப்புத்திமதிகளை பத்து நாட்களுக்கு முன்பே ஏன் சிறுவனுக்குக் கூறவில்லையென்று கேட்டார் அதற்கு சுவாமிகள் "அப்பொழுது நானும் இனிப்புப் பண்டங்களில் விருப்பம் கொண்டு அவற்றை அதிகம் சாப்பிட்டு வந்தேன். அன்றிலிருந்து அவற்றைச் சாப்பிடுவதை நிறுத்தி விட்டேன். நானும் சிறுவன் செய்யும் பிழையைச் செய்து கொண்டு எப்படி அவனைத் திருத்த முடியும்?" என்று கூறினார் இதிலிருந்து நாம் தவறுகளைச் செய்து கொண்டு அதே தவறை பிறர் செய்யும் போது கண்டிப்பது கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிவதை ஒக்கும் என்பது தெளிவாகிறது.

எங்கள் சமயம் சகல சீவராசிகள் மீதும் அன்பு செலுத்துவதையும் இறைவன் மீது பத்தி செலுத்துவதையும் முக்கியமான வாழ்க்கை நெறிகளாகக் கொண்டுள்ளது.



"அன்பே சிவம்"
"எல்லோரும் இன்புன்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

## காயத்திரி மந்திர மகிமை

காயத்திரி மகா மந்திரத்தின் ஜெபம் சூரிய வழிபாட்டைச்சேர்ந்தது. இம்மந்திரத்தை உச்சரிப்பவர்களின் புத்திசக்தியை தூண்டிவிடும் படி சூரியபகவானை வேண்டுதல் செய்வது அதன் சாராம்சமாகும். சூரியபகவான் மனிதரின் கண்கண்ட தெய்வம் மட்டுமல்லாமல் உலகில் உயிரினம் ஜீவனம் செய்வதற்கு மூலகாரணமும் அவரே ஆவார் ஆதித்திய மூர்த்தியைக்குறிக்கும் அத்தனை மந்திரங்களிலும் பார்க்க அத்தியந்த தூய்மை உடையதும், புனிதத்தன்மை பொருந்தியதுமான இக்காயத்திரி மந்திரம் மனிதவாழ்வின் குறிக்கோளை ஞாபகமூட்டிய வண்ணமே உள்ளது எனலாம். இது ஆன்மாவின் சர்வ வியாபக உணர்வினைத்தூண்டிவிடும் ஓர் ஒப்பற்ற நற் கருவியாகும்.

மனிதருக்கு பணிவின் பெருமையை புகட்டும் இந்த மகா மந்திரம் அதேசமயத்தில் உலக மகா சக்தியின் தொழிற்பாட்டை நாம் உணரச் செய்யும் ஒரே ஒரு கருவி. மனிதனுடைய புத்தி சக்திதான் எனவும் புகட்டுகிறது. வேத சாரமாகிய காயத்ரி மந்திரத்தை பயபக்தியோடு தொடர்ந்து உச்சாடனம் செய்யும் அனைவரையும் அவர் எக்குலம் - வருணம் - சாதி - சமயம் உடையவரானாலும் - சாந்த சற்குணம் உடையோர் ஆக்கி உயர் மனிதராக மாற்றும் அற்புத சக்தி இம்மந்திரத்துக்கு உண்டு.

# சமூகசேவையும் மகளிரும்



ராஜேஸ்வரி ரவிகுலராஜன்

ஆரம்பத்தில் வாயுவாய், திரவமாய், ஈற்றில் ஒரு பங்கு திண்மமாகி, கல்தோன்றி, மண் தோன்றிய காலகட்டத்தில் உயிர் தோன்றிய காலம் தொட்டு, இன்றுவரை ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியில், உச்சியில் நிற்கும் உன்னதமான படைப்பே மனிதனாகும். அதிலும் பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவரும், இயன்றளவு சமூக சேவையில் ஈடுபட வேண்டும். கலை, கலாசாரம், பண்பாடு கொண்ட சமூகத்தை உருவாக்க வேண்டுமெனில், வீட்டில் தானும், என் வேலையும் மட்டும் என்று இருந்து விட்டால் முடியாது. சமூக சேவையில் ஈடுபட்டால், எத்தனையோ இடர்களைச் சந்திக்க வேண்டும் என்று சிலர் யோசிக்கலாம். ஆனால் தியாகங்கள் மூலம்தான் சாதனைகள் படைக்க முடியும்.

தன் குருதியையே உருக்கி, பத்து மாதம் சுமந்து எம்மைப் பெற்றெடுக்கும் தாயைப் போல, பரம்பரை பரம்பரையாக தொடர்ந்து வரும் சமயப் பண்பாடுகளும் உயிரினும் மேலாக ஓம்பப் பட வேண்டிய உயர்ச்சி உடையதாகும். சந்தர்ப்ப சூழ்நிலையால், ஒருவருக்கு பிற மதங்கள் மீது மோகம் ஏற்படலாம். ஆனால் தன் சமயம் மீதுள்ள தாகம் தணியவே கூடாது. ஒவ்வொரு இந்து மகளிரும் தானும் சமயப் பற்றுள்ள உணர்ச்சியுள்ள பரம்பரை என்பதை உணர வேண்டும். எமது சமயப் பண்பாடுகள் அழியாது. இவ்வுலகெலாம் பரவ வகை செய்யவேண்டும். நான் பிறந்த பயனை அடைய இத்தகைய பல தொண்டுகள் செய்ய வேண்டாமா ? ஏனைய சமயங்களை அவர்களது செயற்பாடுகளை வரைமுறைகளை, தொண்டுகளை எடுத்துப் பாருங்கள் ! பல்வேறு அமைப்புக்கள் மாபெரும் சாதனையெல்லாம் சாதித்துள்ளன. ஆனால் நாம்...?

ஒரு பெண்ணைப் பொறுத்தவரையில் சமூக சேவையில் ஈடுபடும் போது சுயநலம் சிறிது சிறிதாக அற்றுப் போகும். பொது நலனைக் கருத்திற் கொண்டு செயற்படும் போது பரந்த மனப்பான்மை, உருவாகி, பொறுமை, வஞ்சகம் மனதில் ஏற்படாது. அகம் அழகு பெறும். வீணான அரட்டைகளைத் தவிர்க்க முடியும். பல பேருடன் பழகும் போது அறிவு பெருகும். அனுபவங்களைக் கொண்டு மற்றவர்களுக்கு ஆலோசனை கூற முடியும். ஒரு வகையில் தேகாரோக்கியமாகவும் இருக்க முடியும். சுறுசுறுப்பாக இயங்கும் போது தேகம் வலுப்பெறுகின்றது. எல்லோரையும் சமமாக நோக்கும் பெருந்தன்மை தோன்றும். கவலைகளை மறந்து முகமலர்ச்சியுடன் திகழ முடியும். சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் போன்றவற்றை நடாத்த, பொறுமை என்னும் அணிகலனைக் கொண்ட மகளிரின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும்.

நாகரீகம் என்ற பெயரில், கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றை காற்றில் மிதக்க விட்டு, கண்மூடித்தனமாக, கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று அலையும் இக் கலியுகத்தில், இன்றைய இளம் பிராயத்தவர்கள், முறையாக வழிநடத்தப்படாவிடில், நாடும் வீடும் நாசமாகிப் போகும். அபாயகரமான ஊழிக்காலத்தை நோக்கி இவ்வுலகம் உருண்டோடும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடும். இன்றைய சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, ஒரு வளமான சந்ததியை உருவாக்குவதற்கு ஒவ்வொரு இந்து மகளிரும் தன்னாலான சேவையாற்ற வேண்டும். நாம் வாயால் இவற்றைச் சொல்லலாம். ஆனால் செயலில் இறங்கும் போது பலதடைகள் கஷ்டங்கள், மன உழைச்சல்கள் ஏற்படலாம்.

உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் உறுதியுடைய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப ஒவ்வொரு

இந்து மகளிரும் பாடுபட வேண்டும். அறியாத பருவத்தில் ஐந்து வயதாக இருக்கும் போதே சமய அறிவையும் மன ஆற்றலையும் ஆழமாகப் பதிய வைத்து அன்பையும் நற்பண்பையும் போதித்து மனதை வளைய வைத்து விட்டால், ஐம்பது வயதாகும் போது வாழ்க்கைப் புயலின் தாக்கத்திற்கேற்ப வளைந்து கொடுத்து, சவால்களை சளைக்காது எதிர்கொள்ளும் சாணக்கியத் தன்மை சாத்தியமாகும். ஒவ்வொரு இந்து மகளிரும், அன்பு என்னும் தேன் கலந்து சமய அறிவு என்னும் சாதத்தை அழகாக இளம் பிராயத்தவர்களிடம் ஊட்டி விட்டால், அறியாத இளம் பருவம் அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும். அழிவுக்கு வழி வகுக்கும் ஆயுதக் கலாசாரம் அறவே ஒழிந்து விடும். இந்து மகளிர் அனைவரும் ஒன்றுபட்டு, ஒருவருடன் ஒருவர் இணைந்து, அனுசரித்து, உன்னதமான சமுதாயத்தை உருவாக்க முயலவேண்டும்.

சமய அறிவு எங்கிருந்தாலும் அதைத் தேடி பெற்றுக் கொள்ளுங்கள். பாலையும், நீரையும் பகுத்தெடுக்கும் அன்னப்பட்சியைப் போல் நல்லவற்றை செய்து கொண்டு நல்லனவற்றை எண்ண வேண்டும். ஊனினை உருக்கினாலும் உறுதியான உள்ளம் வேண்டுமென்று இளநெஞ்சங்களில் இலட்சியங்கள் நிறைய வைக்க சமூக சேவைகள் மூலம் பாடுபடவேண்டும்.

உழவாரத் தொண்டு செய்த நாவுக்கரசரையும் ஊரூராகச் சுற்றிச் சமயத்தின் உண்மைகளைப் போதித்த நால்வர் பெருமக்களையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். பல்வேறு மதங்களின் ஊடுருவல்களாலும், கருத்துமுரண்பாடுகளாலும் மக்கள் செல்லும் திசையறியாது தவித்த போதெல்லாம், உண்மையை நிலை நாட்டிச் சமூகத்திற்குப் பெருந்தொண்டாற்றிய பெரும் மகான்கள் இவர்கள் ! அவர்களது பாதையிலே நாமும் அடிவைத் தொழுகினால் வெற்றியும், நமது சமய வளர்ச்சியும் மேன்மேலும் மேன்மையுறுமன்றோ ! நிலவும் ஒளியும், மேடும் பள்ளமும் போல எமது செயற்பாடுகளில் இடர்கள் முன் தோன்றலாம். சமூக சேவையே மூச்சாக, இலட்சியமாகக் கொண்டு இயங்கினால் எத்துன்பங்களையும் எதிர்த்து நாம் நன்மையடைய முடியும். அதற்கேற்ற வழியில் எமது மனதைத் திடப்படுத்திக் கொண்டு செயலாற்ற முன்வருவோம்.

# அமைதி

இந்த அமைதி
எனக்குப் பிடிக்கிறது
விடிகாலைப் பொழுதின்
இந்த அமைதி
எனக்குப் பிடிக்கிறது !

நகரத்தின் கழுத்தை
இறுக்கிப் பிடிக்கின்ற
இரைச்சல் அரக்கனின்
கொண்டாட்ட மில்லாத
இந்த அமைதி
எனக்குப் பிடிக்கிறது !

★ ★ ★

டும் டும் லாரிகளின்
கிடுகிடுப்பும்
பூம்பூம் கார்களின்
கிறுகிறுப்பும்
உர்உர் யந்திரத்தின்
உறுமலுமிலாத
விடிகாலைப் பொழுதின்
இந்த அமைதி
எனக்குப் பிடிக்கிறது !

★ ★ ★

வீச்சாக எரிசரங்கள்
வானத்தில் பறக்காத
உயிர் குடிக்கும் எரிகோளம்
பூமியிலே வீழாத
உயிர்தரிக்க மக்களெலாம்
கிலிகொண்டு ஓடாத
அகதிமுகாம் என்பதெலாம்
இம்மண்ணில் இல்லாத
யாபேரும் ஒருதாயின்
மக்களென வாழ்கின்ற
அந்த அமைதி
என்றுவிடியும் நம்மண்ணில் ?

அன்னலட்சுமி இராஜதுரை

# வழிபாட்டில் ஆலய நோக்கம்





மனோவதனா கனகசூரியம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. கோயில்களின் ஆட்சியினால் தான் எமது வாழ்வே மேம்படும், இரட்சிக்கப்படும் என்பது எம்மனோர் நம்பிக்கை. குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்பதற்கிணங்க நாமும் இறைவன் சாந்நித்யத்தைப் பெறுவதற்கு நாம் வாழும் ஊர்களிலே கோவில்களை அமைத்து ஆராத்தி, அபிஷேகம், பூஜை என்ற ஒழுங்குகளோடு இறைவனை அங்கு நிலைகொள்ளச்செய்து பூஜித்து வணங்குகின்றோம்.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' – எமது அன்றாடக் கடமைகளில் மிக முக்கிய கருமமாக இறைவணக்கத்தையே நாம் மேற்கொள்ள வேண்டும் உருவங்களைவைத்து அப்போதைக்கப்போது நாம் வழிபட்டாலும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வது நமது வாழ்வின் சிறப்பம்ஸமாக அமைய வேண்டும்.

ஆலயங்கள் ஆகம முறைப்படி அமைக்கப் பெறுவன. ஆலயத்தின் அடிக்கல் நாட்டும் போது தொடக்கம் இன்றைய பூஜை விழாக்கள் உற்சவங்கள் யாவுமே இறைவனின் சாந்நித்தியத்தை மையப்படுத்தி தூய்மையான பக்திபயப்பாட்டுடன் சாஸ்திரோக்தமாக நிகழ்த்தப் பெறுவன மந்திர உச்சாடனங்களினாலும், அபிடேக ஆராதனைகளாலும் ஆன்மீக ஊற்றுக்கள் ஸ்திரப்படுத்தப்படுகின்றன. உயிர்ப்பும் உணர்வும் சக்தியும் ஆற்றலும் மிக்க தெய்வீக மந்திரங்கள் பற்பல தடவைகள் உச்சாடனம் செய்யப்பெற்று உயிரூட்டப்பட்டுள்ளன. சாஸ்திர விதி ஒழுங்குகளின் படி தீப தூபங்கள் மலர்கள் மாலைகள் சோடோபசாரங்கள் யாவும் நிகழ்த்தி இறைவனின் சக்தி அலைகளைப் பரவவிடப்பட்டுள்ளன.

இந்துக்களுடைய சின்னங்களான விபூதி சந்தன குங்குமப் பிரசாதம், உருத்திராக்கம் ஆகியனவும் அங்கு இடம் பெற்றிருக்கும். ஸ்தூல லிங்கமான கோபுரம், வீதிகள் சுற்றுப்பிரகாரம் அதற்கேற்ற மூர்த்திகள், கொடிஸ்தம்பம் பலிபீடம் கர்ப்பக்கிரகம் வசந்தமண்டபம் யாகம் என்பன ஒழுங்காகவும் கச்சிதமாகவும் அவற்றிற்கான சுத்தியோடும் இலட்சணங்களோடும் அமைந்திருக்கும். இவற்றை நாம் பார்த்துப் பரவசிக்கவும் பக்தி செலுத்தவும் எமது மனதை இறைவனில் பதியவைக்கவும் இலகுவாகிறது.

மேள தாள வாத்தியங்கள் முழங்க காண்டாமணி கைமணி ஒலிக்க தூபதீபவாசனைகள் ஒளிமிளிர இறைவனுக்கு அபிஷேகம், ஆராதனை பூஜை என்பனவற்றைக் கண்டு களிக்க உடம்பெல்லாம் பரவச நிலை பரவ 'முருகா, கந்தா என்றோ 'சங்கரா ஐங்கரா' என்றோ 'அம்பிகையே அருளொளியே' என்றோ நாம் உச்சாடனம் செய்து உருகுவது அப்படியே இறையுணர்வில் எம்மை ஆழ்த்தி விடுகின்றது. தெய்வீக சக்தி நம்மை ஈர்த்து உவப்படையச் செய்கின்றது. துன்ப துயரங்களையெல்லாம் மறந்து மனம் ஒருமைப்பட்ட நிலையில் அமைதியும் ஆனந்தமும் அடைகின்றது. துன்பங்கள் துயரங்கள் எல்லாம் ஆதவனைக் கண்ட

பணியாகின்றன. மணி ஓசை வேத கோஷம், தேவாரம் திவ்வியப் பிரபந்தம் மேளதாளம் பஜனை சங்கொலி என்ற சாஸ்த்ரோக்தமான ஓசைகள் மனதில் ஆனந்தத்தையும் ,அமைதியையும் உருக்கத்தையும் ஏற்படுத்துகின்றன.

''தனி மனிதன் தன்னைத் தனக்குரிய அனுஷ்டானந்தால் சுத்தப் படுத்திக் கொண்டு தன் வாழ்க்கை உதாரணத்தாலேயே மற்றவர்களுக்கும் வழிகாட்டுவது இந்த மதத்தின் உயிர் நிலை'' என்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸ்வாமிகள் கூறியது இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கது.

தன்னையும் தன் சுற்றாடலையும், மறந்து இறை பக்தியினால் ஈர்க்கப்படும் தன்மையை ஆலயங்கள் அதன் சுற்றாடல் நிர்வாகம், அமைப்பு, பூஜைகள் என்பன ஏற்படுத்துகின்றன. பலர் சேர்ந்து ஒரு சமுதாயக் கட்டுக் கோப்புடன் பூஜைகள் உற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் செய்து பெருந்தொகையான பொன்னையும் பொருளையும் புஷ்பம், கந்தம், நைவேத்யம் மேளதாளம் எல்லாவற்றையும் அர்ப்பணித்து ஆலயத்தில் பூஜைகள் இடம்பெறுவதால் அவற்றைக் கண்ணால் பார்த்து மகிழ்ந்து தெய்வீக அருளைப்பெற முடியும்.

பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை மக்களுடைய துயர் தீர்க்கும் மருந்து இறைபக்தி ஒன்றேதான். கடவுள் மீது வைக்கும் பக்தி ஒன்றினால்தான் நாம் கரைகடந்த இன்னல்களைப் போக்குவதோடு சகிக்கும் சக்தியையும் கைக்கொள்ள முடியும். அத்தகைய பொறுமை, சகிப்பு ஆகியவற்றை நம் மனதில் வேரூன்றச் செய்வது இந்து ஆலயங்களே. அக்காலத்தில் ஆலயங்கள் அறப்பணியோடு அருங்கலைகளையும் வளர்த்து மக்கள் உள்ளத்தில் நல்லெண்ணங்களை விருத்தியடையச் செய்திருக்கின்றன. இன்றும் சில ஆலயங்களை பூஜை அபிஷேகங்களோடு நிறுத்திக் கொள்ளாமல் மக்கள் பணியிலும் தம்மை ஈடுபடுத்துகின்றன. புராண இதிகாசச் சொற்பொழிவுகள் கருத்தரங்கங்கள் இசைநிகழ்ச்சிகள் நாடகங்கள் இவற்றினால் பெறும் அறிவுக் கருவூலங்கள் மக்கள் மனதில் அறிவைச் செறியச் செய்கின்றன. நற்குண நலன்களைப் போதிக்கின்றன. அமைதியையும் சாந்தத்தையும் விளைவிக்கின்றன. கோபாவே சங்களை மறந்து பொறுமை கொள்ளச் செய்கின்றன. வாழ்வின் மேம் பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்ற நல்ல எடுத்துக்காட்டுகள் குறிப்பிட்டுத் திருத்தமடையச் செய்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக மனதை ஒருநிலைப்படுத்தி இறைவன் மீது பக்தி பூணச் செய்கின்றன.

''நாம் இம் மானிடப்பிறவி எடுத்ததன் நோக்கம் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்'' என யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருமான் கூறியபடி இம் மானிடப் பிறவியின் நோக்கம் தான் என்ன? இறைவனை வணங்கி முத்தியின் பத்தை அடைவதற்கான ஏதுக்களை நாம் பற்றிக் கொள்ளவதோடு எமது இளைய சமுதாயத்தினரையும் இத்துறையில் ஈடுபடுத்தப் பாடுபட வேண்டும். இத்தகைய அரும்பெரும் கைங்கரியத்தைப் பெற்றார்களாகிய நாம் – அதுவும் தாயாக உள்ள பெண்மணிகளாய எமக்கு இந்த நோக்கம் மனதில் ஊன்றி விளையவேண்டும் 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுவரை என்பது பழமொழி. குழந்தைகள் இளம்பிஞ்சுகளாக, எதையும் ஏற்றுக் கொள்ளும் குருத்துக்களாக இருக்கும் போதே அவர்களது மனதில் சிறந்த பண்புகளை – ஆண்டவனை அன்போடு வழிபடும் இத்தகைய அரும்பெரும் பழக்கத்தை விதைத்து விட வேண்டியது தாயாக உள்ள எம் ஒவ்வொருவருடைய பிரதான கடமையேயாகும்.

நாம் குளித்து முழுகிச் சுத்தமான ஆடையணிந்து தூய மனதுடன் இறை நாமங்களை உச்சரித்தபடி ஆலயம் செல்லும் போது எமது குழந்தைகளையும் எம்முடன் அழைத்துச் செல்ல வேண்டும். வேடிக்கையிலும் விளையாட்டிலும் ஈடுபடும் வயதாகையால் குழந்தைகள் எளிதில் மனமொன்றிப் பக்திசெய்து வழி படமாட்டார்களென்பது உண்மை தான். என்றாலும் கோவிலிலே எழும் இனிய மணியோசை வாத்திய இசைகள் கோவிற் சிலைகள், குடை , கொடி, ஆலவட்டம், உற்சவங்களின் போது உபயோகிக்கும் குதிரை, காராம்பசு ,நாகம், மயில், அன்னம், சிங்கம் போன்ற வாகனங்கள் அவர்களைக்

கவரும். சித்திரங்கள் தீப, தூப ஆராத்திகளும் அவர்கள் மனதை ஈர்க்கவல்லன. திருநீறு,சந்தனம், குங்குமம் இடுவதில் ஆர்வம் கொள்வர் சில பிள்ளைகள் பெரியோரைப் பார்த்தும் தாமும் கண்ணை மூடி கரங்களைக் கூப்பி பாவனை செய்து வணங்குவர். சிறுகுழந்தைகளில் குருவிடம் விபூதிப் பிரசாதம் சுண்டல் வடை மோதகம் அவல் முதலிய வற்றைப் பெறுவதிலும் விருப்பம் கொள்வர் இளமையில் பிரசாதம் வாங்கக் கோயிலுக்குப் போகத் தொடங்கி, தொடர்ந்து கோவில் பற்றும், பக்தியும் கொண்டு ஆன்மீகவாதிகளாக வளர்ந்த பெரியோர் பலர். எனவே குழந்தைகளுக்கு எவ்வெவற்றில் கவர்ச்சி கூடுதலாக உள்ளதோ அதன் மூலம் அவர்களை நாம் நெறிப்படுத்த வேண்டியது பெரும் பொறுப்பாகும். இளமையிலேயே ஆலயத்தின் பெருமைகளையும் அதனோடொட்டிய புராணக் கதைகளையும் விபரங்களையும் நேரடியாக இல்லாவிடினும் மறைமுகமாக விளங்கி அதில் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் ஏற்படச் செய்வது பெற்றோர், பெரியோர், ஆசிரியர், குரு ஆகியோரின் தலையாய கடமையாகும்

சற்று வளர்ந்தோர், ஆர்வமுள்ளோருக்கு கோவில்களிலுள்ள சிற்பங்களோடு காட்சிகளோடு சம்பந்தமான நிகழ்ச்சிகளை சம்பவங்களைச் கூறி அவர்கள் மனதில் விடயங்களைப் பதியச்செய்யலாம். புராணிகரோ, இசைவாணரோ, பிரசங்கியாரோர நிகழ்ச்சிகளை நடாத்தும்போது நாம் மாத்திரம் தனியே அவற்றை அனுபவிப்பதோடிராமல் குழந்தைகளுக்கும் அதில் ரசனை ஏற்படக் கூடிய தாகக் கவர்ச்சிகளையும் சாராம்சங்களையும் தொட்டுக் காட்டவேண்டும். ஏதோ கோவிலுக்குப் பழம் பாக்கு வெற்றிலையோடு போனோம். அர்ச்சனை செய்தோம். வீடுதிரும்பினோம் என்று இராமல் கோவிலுக்குச் செல்வதால் நற்பலன்கள் ஏற்படுகின்றன என்பதைப் பிள்ளைகளும் உணரும்படி செய்வதே சிறந்தது.

பெண்களில் சிலர் கோவிலுக்குச் செல்வது ஏதோ சினிமா, கச்சேரிக்குச் செல்வதுபோல் ஆபரணங்களெல்லாம் பூண்டு, பட்டுச்சேலை உடுத்து, மிக எடுப்பாகச் செல்வார்கள். இது தவறு சுத்தமான ஆசாரம்மிக்க எளிய ஆடையே போதுமானது. எளிமையும் பணிவும் அமைதியும் சாந்தமும் கோவிலிலுள்ள விக்கிரகங்கள் போல எம்மீதும் படிய நாம் பக்திபூண்டு வணங்க வேண்டும். ஆண்டவன் சந்நிதியில் எல்லோரும் சமமென்று எல்லேரையும் அன்பாக சமமாகப் பேணும் தன்மை இருக்கவேண்டும் பணக்காரன் – ஏழை உயர்வு – தாழ்வு, அறிஞன் – மூடன் என்ற வேறுபாட்டிற்கு ஆண்டவன் சந்நிதியில் இடமில்லை. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்ற ஒருமைப் பாட்டையும் ஒற்றுமையையுமே ஆலயங்கள் எமக்கு உணர்த்துகின்றன.

வெள்ளி, செவ்வாய், பூரணை, அமாவாசை, சிவராத்திரி, ஆடிப்பூரம் விசேடமாகக் குறிப்பிடப்படும் நாட்களிலும் கும்பாபிஷேகம் குடமுழக்கு உற்சவ காலங்களிலும் தான் ஆலய தரிசனம் அவசியமென்பதல்ல. இறைவன் படைத்த எல்லா நாட்களுமே அவனை வழிபட உவப்பான நாட்கள் நாமும் நமது வீட்டுக் கடமைகள். குழந்தைகளுடைய விடயங்கள் யாவற்றையும் கவனித்த பின் கோவில்களுக்குச் செல்லலாம். இறை வழிபாட்டிற்கு குறிப்பிட்ட நேரமே என்ற கட்டுப் பாடில்லை.

எமது உறவினர், நண்பர், பெற்றோர் வேண்டியவர் என்ற அன்பர்களைக்காணச் செல்லும் போது நாம் வெறும் கையுடன் செல்லாமல் எம்மாலியன்ற வகையில் பழங்களோ பலகாரங்களோ ஏதோ ஒன்றை எடுத்துச் செல்வது வழக்கம். அதேரீதியிலே ஆலயங்களுக்குச் செல்லும் போது அவ்வாலயத்திலமைந்துள்ள அப்பன் அம்மையின் விருப்பிற் கமைவான பழங்களையோ, மோதகம், வடை போன்ற சிறு உணவு வகைகளையோ கொண்டு செல்வோம். அப்படியே நாமும் இறைவனுக்கென பூக்கள், பழம், பாக்கு, வெற்றிலை அபிடேகத்திற்கு வேண்டிய எண்ணெய், இளநீர், பழம், பால்,தயிர், நெய் போன்ற எம்மால் இயன்ற பொருளை வெறும் கையோடு போகாமல் கொண்டு செல்லல் சிறந்தது.

சைவ சமயம் என்பது வாழ்வின் நடைமுறை. எனவே எமது சமயச் சிந்தனைகளில் மேம்பட்டிருக்கும் ஆலய வழிபாடு எமது அன்றாட வாழ்வில் மிகமிக அவசியமானது.

# பெண்ணுக்குக் கல்வியே கண்



வசந்தா விமலேந்திரன்

இந்த உலகம் இறைவனால் படைக்கப் பெற்றது. உலகம் இயங்குவதற்குத் தேயைான கடல், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றையும் இறைவனே படைத்தவர். மண்ணில் இயங்குகின்ற உயிர்கள் அனைத்தையும் படைத்தவர் அவரே! ஜீவராசிகளில் ஆணென்றும் பெண்ணென்றும் வகைப்படுத்திப் படைத்தவரும் இறைவனே, இறைவன் என்ற பெயர்ச்சொல் 'ன்' என்று இருப்பதால் அவர் ஆண்பாலைச் சேர்ந்தவரெனக் கூறினாலும் அவர் முத் தொழிலை முறையாகச் செய்து முடிப்பதற்கு முழுச் சக்தியாக மூலசக்தியாக விளங்குபவள் பராசக்தி அல்லவா? ஜீவராசிகளில் ஆணினத்துக்கு தோளோடு சமமாக நின்று சக்தி அளிக்கப் படுவதற்கு பெண்ணினம் இன்றியமையாதது என்பதனால் தான் தொகையில் சரிபாதியாகப் பெண்ணினம் படைக்கப்பட்டுள்ளது.

ஆண் வலிமையுள்ளவன் – செயலாற்றல் புரியக் கூடிய வலு கொண்டதான உடலமைப்பு கொண்டவன். அதனால் உழைப்புச் சுமையை அவன் சுமக்க இல்லச் சுமையை அவள் சுமந்து சிறக்கச் செய்கிறாள். அதனால் அவள் இல்லத்தரசி. பெண் மென்மையானவள், இரக்க குணம் அதிகம் கொண்டவள். அன்பின் ஊற்றும் அவளே. வீரத்திலும் விவேகத்திலும் கூட இருபாலாரும் சமமாக இருந்துள்ளார்களென்பதை வேதகாலம் விளக்குகிறது. கருணைக்கும், பாசத்துக்கும், பொறுமைக்கும் உறைவிடமாக இயல்பிலேயே பெண் உயர்ந்திருப்பதனாலே தான், இனப் பெருக்கத்துக்கான கருப்பையை அவளுக்கு மட்டுமே அருளி ஜீவராசிகளின் சந்ததி அழிந்து விடாமல், சுடராகத் தொடர்ந்து நிலைப்பதற்கும், பாதுகாப்பதற்குமான தனித்துவமான பெரும்பொறுப்பை பெண்ணினத்துக்கு என்று இறைவன் அளித்துள்ளார்.

பெண்ணின் இனிமை, இரக்கம், கருணை, அழகு, அன்பு, பொறுமை முதலிய அரிய பண்புகளின் பெருமை காரணமாகத்தான், இயற்கையையும் அறிவையும், ஆற்றலையும், செல்வத்தையும் உணவையும், கவிஞர்களும் ஆன்மீகப் பெரியவர்களும் பெண் எனப் போற்றி வங்கினரோ? மண்ணை பூமி மாதா, நதியை கங்கா தேவி, வானத்தை ஆகாய வாணி, அன்னம் அளித்து வயிற்றை நிரப்பிப் போஷிப்பவளை அன்னபூரணி, செல்வத்தை திருமகள், அறிவைக்கலைமகள் ஆற்றலை துர்க்கா தேவி, பேசும் மொழியைத்தாய் மொழி, வாழும் தேசத்தை தாய்நாடு, என உருவகித்து வாய் நிறையப் போற்றி மகிழும் வழக்கத்தை மூதாதையர் ஏற்படுத்தினரோ!

கால ஓட்டத்தில் பெண்ணுக்குரிய இடமும் உரிமைகளும் தாழ்ந்து போனதென்பதை மறைக்க முடியாது. அறிவும் ஆற்றங் கொண்ட பெண்ணினத்துக்கு கல்வி மறுக்கப்பட்டு, அவள் ஏட்டை தொடுவது தீது என மூலைக்குள் தள்ளி வீட்டுக்குள் பூட்டி வைத்தனர். சம்பிரதாயம், சடங்கு என மூடக் காரணஞ் சொல்லி, அறியாமை என்ற இருட்டுக்குள் தள்ளி அவளின் அறிவையும் திறமையையும் அவளே

உணர்ந்து கொள்ள முடியாதபடி, பிள்ளை பெறும் ஒரு யந்திரம் என மூடத்தனத்துக்குள் அவள் முகத்தை மூடிக் கொள்ள வேண்டிய ஒரு காலமும் இருந்தது.

விவேகானந்தர், காந்தி, பாரதி, பெரியார் போன்ற விடியற் சேவல்கள் எழுப்பிய குரலால், இந்துப் பெண்களின் இருண்ட வாழ்க்கையில் மெல்ல மெல்ல வெளிச்சம் படர ஆரம்பித்தது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக்காண் " (பாரதி)

புரட்சிக்கவி பாரதியாரின் கூற்று ஒரளவு நிஜமாகி வருவதை இன்று காணமுடிகிறது. வேதம் படைக்கவும் நீதி செலுத்தவும், அரசாட்சிக்குத் தலைமை தாங்கி நாட்டை வழி நடத்தவும் பெண்களினாலும் முடியுமென்பது இன்று நிரூபணமாகிவருகிறது.


'அம்மா என்றால் அன்பு' என்றும், 'அப்பா என்றால் அறிவு' என்றும் கூறிய காலம் ஒன்றிருந்தது. இன்று அப்பாவின் அறிவு, அவர் பணியாற்றும் குறுகிய வட்டத்துக்குள்ளேயே கழிகிறது. அதனால் குழந்தைகளுக்கு அன்பும் அறிவும் அம்மாவிடமிருந்தே கிடைத்து வருவது கண்கூடு. அநேகமான குடும்பங்களில் தாயின் கல்வி அறிவு, பரந்து அவளைச் சூழவுள்ள அனைவருக்குமே பயன்படுவதைக் காண முடிகிறது. வீட்டைப் பொறுப்பாக நிர்வகிப்பதுடன், குழந்தைகளின் கல்வியறிவையும் நற்பழக்க வழக்கங்களையும் ஊட்டி வளர்த்து நாட்டின் நாளைய சந்ததியை நற்பிரசைகளாக்கும் பெரும் பொறுப்பையும் பெண்கள் பொறுப்பேற்றுள்ளனர். தேவை ஏற்படும் வேளைகளில் கணவனுக்கு அறிவுரை கூறி ஆறுதல் அளிக்கவும் பெண்ணின் கல்வி அறிவு பயன்படுகிறது.

சமுதாயத்தின் இன்றியமையாத மறுபாதியாக விளங்கும் பெண்ணினம் கல்வி அறிவு பெறுவதற்கு பெற்றோர் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். சமுதாயம் அதனை ஊக்குவிக்க வேண்டும். அரசாங்கம் சமமான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். கல்வி அறிவும், உடலாரோக்கியமும் நிறைந்த பெண் ஒழுக்கமுள்ளவளாகவும் திகழக் கல்வியே கைகொடுக்கும். கல்வியறிவிலும் உடலா- ரோக்கியத்திலும் அவள் பலமுள்ளவளாக விளங்க கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப் பெற்றால், வாழ்க்கை இலட்சியத்தை எய்துவதிலும் அவள் மனம் ஒன்றித்து உறுதியாக இருக்க முடியும். இதற்கு உதாரணமாக புராண காலத்தின் ராதை விளங்கினாள். அவளின் மனமும் இந்திரியங்களும் பரமாத்மாவை அடைவதிலேயே இலட்சியமாயிருந்தன. அவள் கண்களால் பார்த்த இடமெல்லாம் கிருஷ்ண பரமாத்வாவே நிறைந்திருந்தார். காதுகளால் கேட்டவை யெல்லாம் அவன் பெருமையை விளக்குவது போலிருந்தன. உண்ணும் உணவு அவனே ஊட்டுவது போலாயிற்று. கண்ணனின் வேணுகானம், எங்கிருந்தோ காற்றினில் கலந்து பரவி வந்து அவள் காதுகளில் குழைந்து அவள் உள்ளத்தில் உறைவிடமானது. ஓர் இலட்சியத்தில் மனம் பதிந்திருக்க ஒருமைப்புத்தி உதவுகிறது. புத்தியை வளர்ப்பது அறிவே. பெண்ணின் கல்வி அறிவு வளர்க்கப் படவேண்டும். பெண் தனது கடமைகளையும் உரிமைகளையும் உணர்ந்து பெற்று உயர்ந்து சிறந்த குடும்பத்தையும் உயர்ந்த சமுதாயத்தையும் உருவாக்க உழைக்க வேண்டும்.

நமக்கு இன்பத்தையும் துன்பத்தையும் தருவது இந்தப் புலன்கள் அல்ல என்பதுதான் உண்மை. இவை யெல்லாம் வெறும் கருவிகளே. இவற்றை இயக்கும் எஜமானர் நம்முடைய உள்ளம் அது சொன்னபடிதான் இவை பணிந்து வேலை செய்கின்றன.

- சுவாமி சின்மயாநந்தர்-



# கைமுத்திரைகள்

திருமதி. பிரகதா தில்லைநடராசன்





**கைவிரல் நயனம் பேச**
**கண் வழி நவரஸம் பேசும்**



என்ற கூற்றின் படி இக் கட்டுரையை ஆரம்பிக்கிறேன். சமஸ்கிருதத்தில் ஹஸ்தம் என்றால் முத்திரை என்று பொருள் ஆதிகாலத்தில் அதாவது மொழியில்லாத காலத்தின் போது கை பாஷைகள் மூலமாக சைகை காட்டிப் பேசினர் என்று ஆதி கால வாசிகளின் வாழ்க்கை மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இப் பொழுதும் செவிப் புலன் வாய்ப்புலன் அற்றவர்களோடு கூட இன்னும் நாம் சைகை மொழி மூலம் தான் சகல விஷயங்களையும் புலப்படுத்துகிறோம் எனவே அந்தக் காலந்தொட்டு இன்று வரை விரல் முத்திரை, பாஷை மூலம் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. அன்றும் இன்றும், என்றும் இக் கைவிரல் முத்திரையின் அசைவுகள் அழிந்து போகாது அது தொடர்ந்தே வரும்.

உள்ளத்தில் எழும் பல எண்ணக்கருக்களை கைமுத்திரைகளின் மூலம் வெளிப்படுத்துவது நாட்டியக் கலையின் முக்கிய அம்ஸமாகும். பரத நாட்டியக் கலையின் நாட்டிய உருப்படிகளையோ, நாட்டிய நாடகத்தின் கருத்துக்களையோ, இசைமூலம் சொற் கட்டுகளின் மூலமும் அபிநயமாக முக பாவத்தில் வெளிப்படுத்துவது இம் முத்திரைகளின் மூலம் தான். அஸம் யுதம், ஸம்யுதம் முத்திரைகள் என்று அபிநய தர்ப்பணத்தில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அஸம்யுதம் என்பது ஒற்றைக் கைமுத்திரைகள். இதன் எண்ணிக்கை இருபத்தெட்டாகும். ஸம்யுதம் என்பது இரட்டை முத்திரைகள். இதன் எண்ணிக்கை இருபத்தி நான்காகும். மேலும் சுத்த நிருத்தத்திற்கும் பயன் படும் முத்திரைகள் பதின் மூன்றாகும்.

அவையாவன பதாகம, ஸ்வஸ்திகம் டோலம், அஞ்சலி, கடகாவர்தனம், சகடம், பாசம், கீலகம், கபித்தம், சிகரம், கூர்மம், ஹம்சாஸ்யம், அலபத்மம் என்பனவாகும். இதை விட விரல் முத்திரைகள் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன எழிற்கை, தொழிற்கை, பொருட் கை என்பனவாகும்.

ஒரு கை முத்திரை விரல்கள் தொழிற்கையாகும்.

இரு கை முத்திரை விரல்கள் பொருட் கையாகும்.

பாட்டின் பொருளை விளக்கும் நளின பாவ முத்திரை என இரு கைவிரல்களாகும். இது எழிற் கையாகும். இதனையே நமது இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தின் பின் வருமாறு கூறுகிறார்.

''பிண்டியும் பிணையலும் எழிற்கையும் தொழிற்கையும் கொண்ட வகை

என்று விளக்கியுள்ளார். சில வட நூல்கள் கூட கைவிரல் முத்திரைகளைப் பற்றிப் பல வகையாக கூறியுள்ளன. ஏன்? நம் திருவள்ளுவர் கூட தமது காமத்துப் பாலில் இரண்டு குறள்களில் கைகளைப் பற்றி பின் வருமாறு விளக்கியுள்ளார்.

''முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது''
பைற் தொடிப் பேதை நுதல்

என்றும், அடுத்து குறளில் கைவிரலைப் பற்றி,

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர் சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்

என்று கூறுகின்றார் தன் காதலனை பிரிந்த காதலியானவள் பிரிவென்ற துன்பத்தை காமத்துப் பாலில் காதலனை தழுவியிருந்த கைகளும் காதலன் எப்போ வருவான் என்று தொட்டுத் தொட்டு பார்த்த

விரல்களும் தேய்ந்து போனது என்று காதலின் பிரிவாற்றலை மிக நயமாக விளக்கியுள்ளார்.

அது மட்டுமல்ல விரல்களுக்கு என்று சில பெயர்கள் வழங்கி வந்துள்ளன. அவையாவன சுண்டு விரல் அணிவிரல், பாம்பு விரல், ஆள் காட்டி விரல், பெருவிரல் என்பன. மகாபாரத்தில் துரோணுச்சாரியாருக்குத் தன் பெருவிரலை வித்தைக்கு குரு தட்சணையாக ஏகலைவன் கொடுத்தான் என்று கூறப்பட்டுள்ளது. விரல்களின் பெருமையே பெருமை. இன்றைய ஆடல் கலையைப் படிப்பிக்கும் போது இடை, மார்பு என்று அதற்கெனவே ஆடும் ஆடல்களில் எழிற் கைகளுக்கே பெரும் பங்குண்டு. அடிப்படையான நாட்டிய முத்திரைகள் பயிற்று விக்கும் போது துணை முத்திரைகள் கூட எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

நிருத்தத்திற்கும், நிருத்தியத்திற்கும் நாட்டியத்திற்கும் ஒரு வகைமுத்திரைகள் பயன் படுத்தினாலும் அடவுப் பயிற்சிக் கென்று சில குறிப்பிட்ட முத்திரைகள் உண்டு. அவைகள் அடவுப் பயிற்சிக் காலத்தில் கற்பிக்கப் படுகிறது. இதுவே பின்பு அடவுக் கோர்வைகளாத் தீர்மானத்துடன் சொற் கட்டுகளாக மாறும். இதற்குப் பயன் படும் முத்திரைகள், அஞ்சலி, பதாகம், திரிபதாகம், சிகரம் அர்த்தச்சந்திரன் கடகாமுகம், அலபத்மம், சதுரம், புஷ்ப்பபுடம் மிருக சீருடம், தாம்பிரசூடம், உற்சங்கம் என்பன வாகும்.

108 கரணங்களில் வரும் நிலைகள் முத்திரைகளின் மூலம் அழகு பெறுகிறது. தாண்டவம் சிவனின் ஆடலையும், லலிதம் (லாசியம்) பார்வதியின் ஆடலையும் கூறுகிறது. ஆகவே இவ்விரண்டு ஆடலும் கைவிரல் முத்திரைகளால் அபிநயத்து ஆனந்த தாண்டவமான பேரின்பத்தைக்குறிக்கும் முகமாக ஆடப்பட்டது. ஏழு சப்தஸ்வரங்களில் வரும் நீ என்ற மேல் நிஷாதத்தில், ஐந்தொழிலையும் அடங்கவும், ஐம்புலன்களை அடக்கவும், தன்னை வணங்கும் ஜீவராசிகளுக்கு பேரின்பமான முத்தியைக் கொடுப்பதற்காக தில்லையான கனகசபையில் ஆடப்பட்ட நடனந்தான் ஆனந்தத் தாண்டவம்.

திருமதி பாலசரஸ்வதி அம்மாள் அவர்கள் தானே பாடிக் கொண்டே அந்த முதிர்ந்த வயதிலும் கூட கைவிரல் முத்திரையை அழகாக அபிநயத்து பாவத்துடன் ஆடும் போது அது ஒரு தனி அழகு தான். திருமதி. ருக்மணி அருண்டல் அவர்களும் கலா ஷேத்திர பாணியில் தொழிற்கை எழிற்கை, பொருட்கை என்பனவற்றை பிரயோகித்து ஆடும் அவ் விரல் களின் கைவண்ணம் அசைவுகளாக வெளிப்படும்.

ஒவ்வொரு பாணிக்கும் கைவிரல் முத்திரைகளை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் பொருத்தமான முறையுடன் செய்வர் அதிலும் கலா ஷேந்திரா பாணியில் முத்திரைகளைப் பிடித்து ஆடும் போது, சுத்தமாக, நேர்த்தியாக அழகாக, ஒயிலாகப் பிடிப்பர். அவர்களது பாணியின் (கலாஷேத்திர) கதகளி முத்திரைகளையும் அடவுகளையும் பயன் படுத்திக் கொள்வர். இப்படியாக ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்தோமானால் அதற்கு முடிவும் இல்லை எல்லையும் இல்லை.

இந்த உலகம் ஆனது சுழன்று கொண்டே இருக்கிறது. அதில் நாம் பயணம் செய்கின்றோம். அப் பயண நேரத்தில் நம் அருள் கலைகளைப் போற்றி பேணிக் காப்போமாக.



ஒருவன் பொன்னையும் பொருளையும் நிலபுலன்களையும் ஆடுமாடுகளையும் மனைவி மக்களையும் காக்க வேண்டுமானால் சினத்தைக் காக்க வேண்டும்.

உறவினர்களுக்கும் சினேகிதர்களுக்கும் உபசரிப்பதற்குப் பெயர் விருந்து அல்ல. ஏழைகளுக்குச் செய்யும் உபசாரம்தான் விருந்து. விருந்து என்றால் புதிதாக வந்தவர் எனப் பொருள்.

பணம் சேரச் சேர சாப்பாடும் குறையும் தூக்கமும் ஒழுக்கமும் பக்தியும் கூடக் குறையும்.

-வாரியார்-

# பெண்மை வாழ்கென்று

# கூத்திடுவோமடா

சந்தனா நல்லலிங்கம்

பெண்மையைத் தெய்வமாகப் போற்றும் பண்பாடு இன்று நேற்றல்ல, இந்து வெளி நாகரிக காலத்திலேயே காணப்பட்டதாக ஆய்வாராய்ச்சியாளர்கள் சான்றாதாரம் காட்டி நிறுவியுள்ளனர். மொழியைத் 'தாய்' மொழி எனவும், பிறந்தநாட்டைத் 'தாய்' நாடெனவும் அடைகொடுத்து விதந்து போற்றுகின்றோம். வற்றாது வளங் கொழிக்கும் ஆறுகளையெல்லாம் 'கங்கை' எனப் பெண்ணாகக் காண்கிறோம்.



வேதங்களும் பெண்தெய்வத்தைப் போற்றுகின்றன 'ஷை' என்ற பெண் தெய்வம் கவிநயத்தோடு போற்றப்பட்டுக் காவியத்திற்கு வழி வகுக்கின்றது. பெண்கள் இயற்றிய சுலோகங்கள் வேதங்களில் இடம் பெறகின்றன. உபநிடதங்களில் கார்கி, வாஸக்நவி போன்ற இரு பெண்கள் பற்றிய குறிப்புகள் உள சங்க காலத்தில் ஔவையார், வெள்ளி வீதியார், வெண்ணிக்குயத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பாடல்கள் புனைந்திருக்கிறார்கள்.

வள்ளுவர்தம் மணிக்குறள்களிலே பெண்ணிற்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார்.

*"தற்காத்துத் தற் கொண்டான் பேணித்தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண்"*

என ஆணித்தரமாக இடித்துக் கூடிகிறார். தன்னைக் காத்துத் தன்னைக் கைப்பிடித்த கணவனையும் காத்துத் தனது வாய்மொழியையும் காத்துச் சோர்வில்லாது துணிந்து நிற்பவள் பெண் எனச்சான்றிதழ் வழங்குகின்றார்.

சிவபக்தனான இராவணன் பிறர்மனை நோக்கும் இழி செயலைப் புரிந்ததாற் தன் குலத்திற்கே கோடரிக்காம்பு ஆகின்றான். இதிகாசங்கள் இரண்டும் பெண்களை மையமாகக் கொண்டெழுதப்பட்டுள்ளன. பெண்ணுக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தடுக்க முற்படாது அரச குடும்பத்துப் பெண்கள் மானத்தைக் காக்க எதிர் நீச்சல் போட்டு அனுபவித்த மானசீகச் சித்திரவதையைப் பூதக் கண்ணாடி மூலம் புலப்படுத்துவன. இராமாயணம் மகா பாரதம் இரண்டும். புகட்டும் கீதா உபதேசம் துஷ்டர் தண்டிக்கப்படுதலோடு, சிஷ்டர் பரிபாலிக்கப்படுவர் என்பதாம். இவ்விரு இதிகாசங்களும் புகட்டி நிற்கும் அறிவு பெண்ணுக்குக் கற்பு எனும் திண்மை அவசியம் என்பதேயாம். கற்பினால் விண் மீனாகப் பிரகாசிக்கும் அருந்ததியும் கல்லுருப் பெற்றிழிந்த அகலிகையும் நம் மனத்தில் என்றும் நிலைத்திருப்பது போல வருங்காலச் சந்ததியார் மனத்திலும் பதிய வேண்டும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்பவர் பலகாலம் பெண்கள் கல்லூரியிற் பணியாற்றியவர் அவர் பெண்ணைப் பற்றிப் பாடுவதை நோக்குவோம்.

*"மங்கையராகப் பிறப் பதற்கே – நல்ல*
*மாதவம் செய்திட வேண்டுமம்மா*
*பங்கயக் கை நலம் பார்த்தாலோ இந்தப்*
*பாரில் அறங்கள் வளருமம்மா* (மலரும் மாலையும்)

பாடலைப் பார்க்க மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது பெண்ணாகப்பிறக்க மாதவம் புரிய வேண்டுமென்னாதும், தாமரை போன்ற அவளது அழகிய கைகளின் செயலிலேயே உலகிற் தருமம் வளர்கிற தென்பதும் அவர் நம்பிக்கை.

பக்தி இயக்க காலத்தை நோக்கின் இவ்வுண்மை புலப்படும் அக்காலப் பதிவிரதைகளான மங்கையர்க்கரசியார், காரைக் காலம்மையார், திலகவதியார் போன்ற பெண்மணிகளின் செயல்களைக் கூர்ந்து நோக்கலாம் கூன் பாண்டியனையும் பாண்டிய நாட்டையும் நெறிப்படுத்த மங்கையர்க்ரசியார் மதிநுட்பம் வாய்ந்த செயல்களில் ஈடுபட்டுழைத்தார். பக்தி இயக்கத்தை முதலில் இயங்கவைத்த பெருமைக்குரிய காரைக்காலம்மையார் இறைவனுடைய திருக் கூத்தினைக் கண்ணாரக்கண்டு பாடல்களில் வடித்துச் சைவசமயம் வாழ வழிவகுத்தார் திலகவதியார். திருநாவுக்கரசரை நல்வழிப்படுத்தத் திடமனம் பூண்டு பக்திக் கோலாற் பக்குவப் படுத்திய பண்புடையவர் இவர்களிடம் காணப்பட்ட நல்லறிவு நற்சிந்தனை நற்செயல் என்பன எம்மிடமும் பிரகாசிக்க வழி செய்ய வேண்டும்.

இன்று பாரத நாட்டில் எத்தனை தாய்மார் பெண் குழந்தைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்? எத்தனை பெண்சிசுக்கள் பிறந்தவுடனேயே கொல்லப் படுகின்றன? பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் அநீதியாகக் கொள்ளத் தோன்றுகின்றது பெண்சிசுக் கொலை.

பெண்கள் கல்வியறிவு பெற்று, உயர்நிலை எய்திக் கற்புடன் வாழவேண்டும். சமுதாயம் அவர்களை வாழ விட வேண்டும். "பெண் வாழ்ந்தாற் புறம் வாழும்" என்பது பழமொழி தன்வீட்டை சூழலை இதைத்தவரை வாழ வைக்கும் பண்பு பெண்ணிடத்திலேயே உண்டு.

*"எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லைக் காண் என்று கும்மியடி"*

*(பாரதியார் கவிதைகள் பெண்களின் விடுதலைக்கும்மி)*

என்ற பாரதியின் பாடலடிகள் தத்துவ வாக்காகவிளங்குவதை நாம் உணர வேண்டும். இருபத்தொராம் நூற்றாண்டை நோக்கிக் காலடி எடுத்து வைக்கும் பெண்கள் சமுதாயம் இவற்றையெல்லாம் நன்னுசீர் தூக்கிச் சிந்தை செய்து செயலில் இறங்க வேண்டும் மேற்கு நாடுகள் போன்று பெற்றோரற்ற அநாதைச் சிறார்கள் நம் சமுதாயத்திலும் பெருகித் துயருற வெண்டாம். நல்ல தொரு சமுதாயத்தை உருவாக்க உயர்ந்த நோக்குடனும் மன உறுதியடனும் பெண்களே செயற்பட வேண்டும்.

"வலிமை சேர்ப்பது தாய் முலைப் பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்து நின்றாடுவோம்

*(பாரதியார் கவிதைகள் பெண்மை)*

என்ற பாடலை எல்லோரும் சிந்தை செய்யின் நாட்டில் நல்லறம் ஓங்கும்.

வேதனை நீங்கி, கற்கும் கல்வி மனதில் நன்றாகப் பதிய பாராயணம் பண்ண வேண்டிய ஸ்லோகம்

*யா தேவி சர்வபூதேஷீ வித்யா*
*ரூபேண சம்ஸ்த்திதா*
*நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை*
*நமஸ்தஸ்யை நமோ நம :*

*ஸ்ரீ ஜயேந்திரர்-*

# சக்தி வழிபாடு

எஸ். கோமதி



சக்தி வழிபாடு என்றால் என்ன ?

பரம்பொருளைப் பெண்ணாகப் பாவித்து அதாவது பெண் தெய்வமாகப் பாவனை செய்து அத் தெய்வத்தின் மீது பரிபூரண நம்பிக்கை, விசுவாசம் வைத்து வழிபட்டு, மனதாரப் பக்தி செலுத்துவதே சக்தி வழிபாடாகும்.

இந்து இறைவழிபாடுகளில் சைவம், வைணவம், சாக்தம் என முதல் மூன்று பிரிவுகளும், சௌரம் (சவ்ரம்), காணாபத்தியம், கௌமாரம் (சவ்மாறம்) என பின் மூன்று பிரிவுகளும் சேர்ந்து மொத்தம் ஆறு பிரிவுகள் உண்டு.

சைவம் – சிவனை முழுமுதற் பொருளாகவும்
வைணவம் – திருமாலை முழுமுதற் பொருளாகவும்
சாக்தம் – அம்பாளை, சக்தியை அதாவது ஆதி பராசக்தியை முழுமுதற் பொருளாகவும்
சௌரம் (சவ்ரம்) – சூரியனையும்
காணாபத்தியம் – விநாயகரையும்
கௌமாரம் (கவ்மாறம்) – முருகனையும் முழுமுதற் பொருளாகப் பாவித்து வழிபாடு செய்வதாகும்.

எல்லாத் தெய்வ வழிபாட்டிலும் பெண் தெய்வத்தை வழிபடும் முறை தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. எப்படியென்றால் சிவன் கோயிலில் சக்திக்கு இடம் உண்டு. அங்கே இறைவன் இறைவியை சிவசக்தியாக வழிபடுகின்றோம்.

இதே போல திருமாலை வழிபடும் போது இலக்குமியும் அங்கு உள்ளாள். அங்கு இலக்குமி நாராயணர் என்ற பெயருடன் நாராயணியை வழிபடுகின்றோம். சக்தி இல்லாமல் எந்த ஆண் தெய்வங்களும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

சக்தியை வழிபட பெண் தெய்வமாகிய அம்மன் கோயிலுக்குச் சென்றால் அங்கே ஆதிபராசக்தியின் அம்சமான சக்தியானவள் தனித்து காட்சி தருகிறாளே தவிர, சிவன் திருமால் ஆகியோருடன் சேர்ந்து காட்சி தருவதில்லை.

இந்து இறைவழிபாட்டில் சைவம், வைணவம், சாக்தம் என்றுதான் சொல்வது வழக்கம். ஆனால் சரியான முறைப்படி சிவனுக்கும், திருமாலுக்கும் மற்றும் ஆண் தெய்வங்களிற்கும் சக்தி பொதுவாக இருப்பதனால் சைவம், சாக்தம் வைணவம் என்றுதான் சொல்ல வேண்டும்.

பொதுவாகச் சக்தி எல்லாத் தெய்வங்களுடனும் சேர்ந்து இருந்தாலும் எல்லாச் சக்திகளும் ஆதிபராசக்தியின் அம்சங்களே. சைவர், வைணவர் ஆகியோரைக் கேட்டால் எங்கள் தெய்வமே பரம்பொருள், முழுமுதற்பொருள் என்று சொல்வார்கள். அப்படித் தோன்றுவதற்குச் சக்தி தான் பரம் பெருளுடன் சேர்ந்து அதை உலகத்தாருக்குவெளிப்படுத்த வேண்டும். ஒன்று தோன்றுவதாக இருந்தால் அதற்குச் சக்தியின் இயக்கம் இல்லாமல் தோன்றமாட்டாது.

ஆதலால் சிவன் தோன்றும் போது சிவ சக்தியாகவும், நாராயணன் தோன்றும் போது சக்தி நாராயணன் ஆகவும் தோன்றினார்கள்.

சிவம் என்று சொல்லும் போது "ச"வுக்கு மேல் இருக்கும் 'விசிறி' இச் சுழிதான் நாம் கூறும் அந்தச் சக்தி, "சிவம்" என்ற சொல்லின் முதல் எழுத்தில் இருக்கும் "சி" இல் அந்தச் சுழியை நீக்கினால் அது "சவம்" ஆகிவிடும்.

சிவம் – சவம்

சவம் என்பது உயிர் பிரிந்த உடல். அது எந்த இயக்கமும் இன்றி சும்மா இருக்கும். ஆதலால் சக்தி இன்றி எங்கும், எதிலும் இயக்கமும் இல்லை என்பது தெளிவு. ஆதலால் சக்தியே பரம்பொருள். முழுமுதற் பொருளாகும்.

சக்தி வழிபாட்டில் மேன்மை அடைந்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு. அதில் ஆதி சங்கராச்சாரியார் அபிராமி பட்டர், ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சர், சுப்பிரமணிய பாரதியார், கவி காளமேகம், கவி காளிதாசர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இனி இச்சக்தி வழிபாட்டிலுள்ள விரதங்களைப் பார்க்குமிடத்து கேதாரகௌரி விரதம், நவராத்திரி விரதம் ஆகிய இரண்டையும் குறிப்பிடலாம்.

பார்வதி தேவியார் தனக்குத் தேர்ந்த இடரைப் போக்க கௌதம முனிவரின் வாக்குப்படி கேதாரம் சென்று பூசித்து விரதம் இருந்ததால், கேதாரகௌரி விரதம் என வழங்கப்பெற்று வருகின்றது. இவ்விரதத்தின் பயனாக இறைவி, இறைவனின் உடலில் சரிபாதியைப் பெற்று அர்த்தநாரீசுவரி என்னும் நாமத்தைப் பெற்றாள். இவ்விரதம் புரட்டாதி மாத சுக்கில பட்சத்து நவமி அல்லது தசமியைத் தொடக்கமாகக் கொண்டு ஐப்பசிமாத தீபாவளி அமாவாசையில் நிறைவு பெறும்படி இருப்பதொரு நாட்கள் வரை அனுட்டிக்கப்படுவது.

அடுத்து நவராத்திரி விரதம் இது அம்பாள் மகிடாசூரனை வதம் செய்வதற்காக ஒன்பது நாட்கள் நோன்பிருந்து பத்தாம் நாளான விஜயதசமி அன்று மகிடாசூரனை வதம் செய்தாள். இவ் விரதம் புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி முடிய ஒன்பது நாட்களும் தேவியைக் கும்பத்தில் பூசிப்பது.

நவராத்திரி நாட்களில் அனேகமான இந்துக்கள் தத்தமது வீடுகளில் தெய்வப்பொம்மைகள், மற்றும் உள்ள பொம்மைகளை ஓர் அறையில் கொலு வைத்து வழிபாடு செய்யும் வழக்கமும் உண்டு. இவ்விரதம் முதல் எட்டு நாட்களும் ஒருபொழுது உண்டு, ஒன்பதாம் நாள் உபவாசம் இருந்து நோன்பை நிறைவு செய்வது உத்தமமாகும்.

பத்தாம் நாள் விஜயதசமி அன்று மாநோம்பு (மானம்பூ) என்னும் விழா நடைபெறும். இதை ஆயுத பூசை என்றும் சொல்வர். இப்பத்தாம் நாளில் ஆயுதம் கொண்டு தொழில் செய்கின்றவர்கள் அனைவரும் தத்தமது ஆயுதங்களை அம்மன் பூசையில் வைத்துப் பூசிப்பர்.

மாநோம்பாவது தமோ குணம் உள்ள மகிடாசூரனைத் தேவி தனது சர்வகுணத்தினால் வென்றமை இங்கு கூறப்படுகின்றது. அம்பிகை மகிடாசூரனை அட்டமியும் நவமியும் சந்திக்கும் பொழுதிலே சங்காரம் செய்ததாக தேவி பாகவதம் கூறுகின்றது.

*தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா*
*மனந்தரும்தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.*

## பக்தியின் சிறப்புக்கள்

- ★ பக்தி எல்லாவகையான துன்பங்களையும் நீக்குகின்றது.
- ★ இறைவன் விரும்புவது தூய்மையான பக்தியையே.
- ★ பக்தியே எல்லாவித நன்மைகளுக்கும் அடிநாதமாக விளங்குகிறது.
- ★ மோட்சத்தை அடையச் செய்வது.
- ★ எப்பொழுதும் இறைவனைக் கவருகிறது.

# ஆயகலைகள் அறுபத்துநான்கு

திரட்டியவர் :- சாரதா நடராஜன்



*ஆயலைகள் அறுபத்து நான்கினையும்*
*ஏய் உணர்விக்கும் என்னம்மை - தூய*
*உருப்பளிங்கு போல்வாள்*
*என்னுள்ளத்தினுள்ளே*
*இருப்பள் இங்கு வாராதிடர்.*

புகழ்ந்துரைக்கப்படும் இவ்வாய கலைகள் அறுபத்தினான்கும் எவை?

1. இசை – வாய்ப்பாட்டு
2. வாத்தியங்கள் – மிருதங்கம், வீணை, புல்லாங்குழல், கோட்டு வாத்தியம்
3. பெண்களின் அபிநயம் – நிருத்யம்
4. ஆண்களின் அபிநயம் – நாட்டியம்
5. தெய்வம் முதலிய உருவங்களை எழுதுதல் – ஆலேக்யம்
6. யானை, மாடு, மான் முதலிய விலங்குகளின் கொம்புகளிலும் மரத்திலும் உருவங்களைச் செதுக்கி எடுத்தல்.
7. பூக்கள், அரிசி முதலியவைகளால் பலவித விநோதமான பூஜைகள் செய்தல்
8. வெவ்வேறு நிறமுள்ள மலர்களைப் பலவிதமான முறைகளில் அமைத்துக் கோலமிடுதல்
9. உதடுகளுக்கு வர்ணக் குழம்புகளால் அழகுபடுத்தல்
10. இரத்தினங்களை இழைத்து மாளிகையை நிர்மாணித்தல்
11. இலவம் பஞ்சு அடைத்த திண்டு, மெத்தை தலையணை, விரிப்புகள் தந்தம் , மரம் போன்றவற்றின் இழைகளான கட்டில்கள் கோரைப்புல் போன்றவற்றால் பாய் வகைகள் விரிப்புகள் செய்தல்
12. ஜலதரங்க வாத்தியம் வாசித்தல். உயரமான இடத்திலிருந்து ஆற்றிலோ அல்லது நீர் நிரம்பிய குளத்திலோ குதித்து அங்குள்ள தண்ணீரை உயரே கிளப்பி ஒலியெழச் செய்தல்
13. கடல், காடு, மலை, நகரம், சபை, கடைவீதி போன்ற நாடகத்திற்குத் தேவையான பல பொருட்கள் நிறைந்த காட்சிகளை அது போலவே துணிகளில் சித்திரமாக வரைதல்.
14. அழகும் மணமும் நிறைந்த பல்வேறு வகையான மலர்களைக் கொண்டு பற்பல வடிவமுள்ள மாலைகளைக் கட்டுதல்.
15. தலைச்சோடனைக்கு ஏற்ற விதத்தில் அதற்கான முடிகளையும் பின்னல்களையும் அமைத்து ஆபரணங்களாக மலர்களில் அதததற்கேற்ற வடிவங்களில் மாலைகள், அலங்காரங்கள் செய்தல்.
16. அரசன், அரசி, அரசகுமாரன், அமைச்சன், சேவகர், விதூஷகர் சேவகர் பணிப்பெண், தோழி போன்ற நாடகத்தில் பங்கேற்கும் நடிகர்களுக்கேற்ற வகையில் ஆடை அணிவகைகள் பூணுவித்து வேடங்கள் போட்டு விடுதல்
17. தோடு, வாளி, சிமிக்கி போலப் பலவிதமான அழகு ஆபரணங்களால் காதுகளை அழகுபடுத்தல்.

18. அத்தர், குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், ஜவ்வாது முதலிய வாசனைப் பொருட்களுடன் மணமுள்ள சந்தனத்தைத் தயாரித்தல்

19. உடம்பிற்கும், உறுப்புகளுக்கும் ஏற்றபடி அணிகளை அணிவித்து அலங்காரம் செய்தல்.

20. உலக வழக்கில் பொருத்தமில்லாத சில சம்பவங்களை, எடுத்துக் காட்டாக ஒரு பெட்டியில் ஒரு மனிதனை பூட்டிவைத்துவிட்டு பின் வெளியிடத்தில் அவனைத் தருவித்தல், கட்டாந்தரையில் திடீரென நொடிப் பொழுதில் ஒரு மாமரத்தைப் பழங்களுடன் தோற்றுவித்தல் போன்றவற்றை நிகழ்த்திப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படச் செய்தல்

21. திருமணமான பருவத்தில் இன்பமுற்றிருக்கக் கேளிக்கை புரியும் முறைகள்

22. நூற்றுக்கணக்கான எதிரிகளையும் அணுக முடியாதபடி, கம்புச் சண்டைபுரிந்து, கையால் கம்பைச் சுழற்றிச் சாதுரியம் செய்தல்

23. சுவையான அன்னவகைகளையும் பணியார வகைகளையும் கறிவகைகளையும் தயாரிக்கும் முறை

24. பழங்கள், சர்க்கரை, சுக்கு, மலர்கள் இவற்றோடு தண்ணீர் நிறமும் கொண்ட பல்வேறு பானங்களைச் சுவையாகத் தயாரித்தல்

25. மெல்லிய அழகான உடைகளை ஊசியால் தைத்தல் அலங்கரித்தல்

26. உயரமாகக் கட்டப்பட்ட கயிற்றில் நடத்தல் ஓடுதல் முதலிய வித்தைகள்

27. வாத்தியங்களான உடுக்கை முதலியன வாசித்தல்

28. அவையினர் முன்னிலையில் முரண்பாடுள்ள பொருளைத் தோற்றுவித்து, பிறகு ஆழ்ந்த சிந்தனையின் பயனாய் அதற்குப் பொருத்தம் உள்ள பொருளை அறிவிக்கும் பதினாறு விதமான இலக்கியங்களை அவையில் வெளியிடுதல்

29. பதுமைகளைப் பேச வைப்பது

30. வசை மொழிகளைப் பலமுறைகளில் வரிசைப்படுத்தி அவையில் அடுக்கடுக்காக வழங்குதல்

31. அளவான நல்ல குரலில் அதிகவேகமோ, அதிக தாமதமோ இன்றி தட்டுத்தடங்கலில்லாமல், சபையினர் கேட்டுப் பொருள் புரிந்து கொள்ளும்படி, நூல்களைப் படித்தல்

32. கண்டுகளிக்கத் தகுந்த நாடகம் எனப்படும் பாடல் வகையினையும் கேட்டு ரசிக்கும் வகையிலுள்ள கடுமையான வார்த்தைகளிலுள்ள குறைகளையும் சுட்டிக் காண்பித்தல்.

33. கவிஞர்களது சபையில் ஒருவர் ஒரு கவிதையில் முதல் மூன்று அடிகளைப் பாட மற்றவர் அதற்குப் பொருத்தமான நான்காவது அடியைப் பாடிச் செய்யுளை முழுமைப்படுத்தல்

34. வில், அம்பு, பீடங்கள், மூன்று, நான்கு ஆறுகாலுள்ள கட்டில்கள் முதலியவற்றைச் செய்தல்

35. யூகத்தால் ஒரு விடயத்தைப் பார்த்து, விளங்கி வேறு பல காரியங்களைச் செய்தல்

36. பல்வேறு வகையான இல்லங்கள், கோவில்கள், மாளிகைகள் முதலியவற்றை நிர்மாணிக்கும் பணிகளைச் செய்தல்

37. மரத்தால் வேலைகள் செய்தல்

38. தங்கம், வெள்ளி, ரத்தினங்களில் உள்ள குறைகளைக் கண்டு அறிதல்

39. இரும்பு முதலான லோகங்களைத் தங்கம் ஆக்குதல்

40. இரத்தினங்களில் நீரோட்டத்தை உணர்ந்து நல்லது கெட்டது கூறல்

41. புதையல் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தல்

42. மரங்களின் இனோபதம் வயது வளர்ச்சிபற்றி அறிதல்

43. ஆடுகளையும் கோழிகளையும் போர் புரியும் படி செய்வதும் அவைகளைக் கொல்வதற்கான முறைகளை அறிதலும்

44. ஆண் பெண் மனிதர்களைப் போன்று வைக்கும் முறை.

45. கிணறு, குளம் அமைக்கும் இடங்களை நீர் நிலைகளை வெட்டுவதற்குக் கண்டறிதல்.

46. பெண்களுடைய கூந்தலை வளர்த்தல். தைலம் தேய்த்தல் அதை நீக்க தோய்தல். வாசனைப் புகை போட்டு உலர்த்துதல் அழகாகப் பின்னல், முடியிடுதல் அலங்கரித்தல் சம்பந்தமான அறிவு.

47. ஏதேனும் ஒரு எழுத்தைக் கூறி, கைப்பிடியில் உள்ள பொருளைக் கூறி அதனைக் கண்டுபிடித்துக் கூறல். கைப்பிடிக்குள் உள்ள தானிய மணிகளை எத்தனை என்று கண்டு பிடித்துக் கூறல்.

48. பகுத்தறிவு பேசுகிறவர்களின் குதர்க்க மொழிகளின் பிரிவுகளை உணர்ந்து தகுந்த பதில்களால் அவைகளை, திருப்பி உரைப்பது.

49. பல நாட்டு மொழிகளை உணர்தல்.

50. மலர்களைக் கொண்டு சிறிய வண்டிகள், தொட்டில்கள், ஊஞ்சல் பல்லக்கு குடைகள் ஆகியன அழகோடு அமைத்தல்

51. விவசாயத்திற்கும் குடிப்பதற்கும் வேண்டிய இரும்பாலான குழல்களை இயந்திரங்களைப் பல வகையில் படைத்தல்

52. நொடிப் பொழுதில் தன்னைச் சுற்றி நடக்கின்ற வெவ்வேறு நிகழ்ச்சிகளைப் பாராமலே நினைவுப்படுத்திக் கூறி அதிசயப்படுத்துதல்

53. நிமிஷத்திற்கும் குறைவன நேரத்தில் ஒரு இயந்திரப் பொறியை இயக்கும் ஆற்றல்

54. எண்ணிறந்த அகராதிகள் பற்றிய அறிவு

55. பலவிதமான பாடல்களைப்பற்றிய அறிவு

56. ஒரே நேரத்தில் உடல் மூலமாகவும் உள் மனம் மூலமாகவும் கடினமான காரியங்களைச் செய்து முடித்தல்

57. ஒரே எழுத்தைப் பயன்படுத்தி இயற்றிய பாடல் தேர், பாம்பு, குடம், அரவிந்தம் முதலியவற்றைக் குறிக்கும் பாடல்களில் உள்ள அதே கருத்தினை வேறு விஷயத்தைக் குறிக்கும்படி மாற்றிக் காண்பித்தல்

58. பிரம்மாண்டமான காட்சிகளையும் துணியினால் நன்கு மறைத்து மக்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்தல்

59. சூதாடுதல், கொள்ளையடித்தல் ஆகியனபற்றிய அறிவு

60. வெவ்வேறு பட்ட கருத்துக்கள் பற்றி அறிதல்

61. குழந்தைகளுடைய விளையாட்டுகள், எதிர் வினைகள் பற்றிய அறிவு

62. பகைவருடைய செய்கைகளை எதிர்த்தல், முறியடித்தல்

63. எதிரிகளால் ஏற்படுத்தப்படும் சகலவித இடையூறு களைக் களைந்து வெற்றியைத் தரும் திறனை ஏற்படுத்தல்

64. வீரபுருஷர்களுடைய திறமைகளையும், ஆற்றல்களையும் நற்குண நடைகளையும் போற்றிப் பாடல் புனையும் ஆற்றல்.

## பொன் மொழிகள்

★ இம்மண்ணுக்குப் புகழ் தருவோர் மூவர். அவர்கள் . - கற்புடை மாதர், பக்தர்கள், ஞானியர்.

★ ஆண்கள் தாங்கள் அறிவதாக எண்ணுவார்கள் பெண்கள் அறிவார்கள்.

*-கன்பூஷியஸ்-*

★ மிக அபாயமான சமயங்கள் வெற்றியின் போது தான் வருகின்றன

*-நெப்போலியன்-*

★ எவன் வீட்டில் அமைதியைக் காண்கிறானோ அவன் யாராயினும் மிக மிக மகிழ்ச்சியுடையவனாக இருப்பான்

*-கதே-*

★ அன்றே மலரக் கூடிய மொட்டுகளை இறைவனுக்குச் சூட்டவேண்டும். மறுநாள் மலரக்கூடிய மொட்டுக்களைப் பறித்துச் சூட்டக் கூடாது!

★ ஒரு பெண்மணியின் உள்ளம் கருணையின் கோயிலாக மாறும்போது அதற்கு இணையான வாஞ்சை இந்த உலகம் அனைத்திலும் இல்லை.

*-சாதர்-*

★ எந்தவீட்டில் பெண்கள் கௌரவமாக நடத்தப்படுகிறார்களோ, அந்த வீட்டில் தேவதைகள் குடிகொள்கிறார்கள்

*-மனுசாஸ்திரம்-*

★ ஒரு ஆண் மகனைப் படிக்க வைத்தால், நீங்கள் ஒரே ஒரு நபரைத்தான் படிக்க வைத்ததாகும். ஆனால் ஒரு பெண்பிள்ளையைப் படிக்க வைத்தாலோ நீங்கள் ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததற்குச் சமமாகும்.

*-சாலீஸ் டிமிக்லவர்-*

★ மற்றவையெல்லாம் அதிர்ஷ்டவசத்தால் வந்துவிடும் மனைவி மட்டுமே ஆண்டவன் அருளாலேயே கிடைப்பாள்.

*-போப்-*

★ ஆண்மகனே! நீ வையகம் அனைத்தையும் கட்டுப் படுத்தி ஆட்சிபுரியும் அரசனாக இருப்பதிலும், ஒரு பெண்ணின் சிறந்த அன்பு உள்ளத்தின் மன்னர் மன்னனாக இருப்பதே மாண்புமிக்கது.

*-இங்கர்சால்-*

கண்ணுக்கு அணிகலன் கண்ணோட்டம்
காதுக்கு அணிகலன் நல்ல கேள்வி
வாய்க்கு அணிகலன் சத்தியம்
கரத்திற்கு அணிகலன் தானதருமம்
மனதிற்கு அணிகலன் தருமம் *-வாரியார்-*

# RELIGION AND SERVICE TO SOCIETY

VANATHY RAVINDRAN B. A.

Today we find numerous people needing help around us, all over the world, in every community. The circumstances may be different in each case. Some may be ophans others disabled, Some others too old and most often left with no one to look after them. How do they exist? What are their living conditions? What will happen to them?

They are not people forgotten by God but, due to their fate, Karma or destiny, however we may want to word it have happened to be born into a situation which has now become beyond their control to survive in. God is the embodiment of mercy, of compassion of love though to us Some of his actions may seem the antithesis of mercy. In the mysterious calculus of God-Love, there can be no second to the Divine, and all is resolved and redeemed in the burning brazier of His Grace. The people who suffer for or in, their religious faith 'have always felt a kind of Divine Grace helping them'.

All religious believe that there is a God showering Grace upon all those who profess to abide by that faith alone. The followers of each Religion call upon that one God, who is omnipresent, omniscient and omnipotent to listen to their prayers and help them from all calamities and confer upon all mankind health, prosperity, peace and happiness. They encourage people to see God in all living beings, specially in the ones that need help.

The avenue of service has been given an important place in the Saiva philosophy from its inception to acheive the grace of God. There has been necessity too on the increase for service amongst society. It gives a deeper understanding of the underlying truth that we are all God's creatures and therefore are one, irrespective of caste or creed or language. The Upanishads and Vedantas are mystic treatises which reveal the most profund truths, in the Veds. They say " Life in the world and life in the spirit are not incompatible. Work or action is not contrary to knowledge of God, but indeed, if performed without attachment, is the means to it".

Thirumoolar the Saiva saint states in his Thirumanthiram (1857) thus:

> *"If you make an offering to the Lord, abiding in the temple of several tiers,*
> *that will not be of any use to the devotees;*
> *but, on the other hand,*
> *if you give something to the devotees of the Lord,*
> *it becomes an offering to the Lord Himself abiding in the temple of several tiers".*

To know God, man must first learn to expand himself to love all beings and see God in all and serve God in all. The easiest and the most pleasant means by which this can be accomplished is by developing a spirit of dedication and devotion to ensure peace, security and prosperity within the parameters allotted to

us. Time extends far behind and far beyond. What little man has to do has to be done quickly, at the place that is assigned to him.

Scriptures assert that selfless service is the yoga that secures Divine Grace. Service done to man is upheld as service done to God and no act of service is considered too small. Prevention and cure of any social ailment gives us pride in our community and ourselves, elevating our simple action as the worship of God.

Bhagavad Gita in chapter VIII says that a person who accepts the path of devotional service is not bereft of the results derived from the study of the Vedas, in the performance of sacrifice, in undergoing different types of austerities, in giving charities or in pursuing philosophical and fruitive activities simply by performing devotional service, he attains all these, and at the end, he reaches the supreme eternal abode".

In the modern age at the end of last century, it was Swami Vivekananda who preached a great message in India. He emphasised that in India " the key note of the whole music of the national life was religion, a religion which preached the 'spiritual oneness of the whole universe' and when it is strengthened everything else would take care of itself. To all his countrymen he declared.' The power of Brahman lies in every one of you. The Deity in the poor wants your services ."

Bhagawan Sri Sathya Sai Baba to-day says : "Man is immortal, dust he is an to dust he returneth. But in him , there shines and Athma, as a spark of the immortal flame. This is not a term of flattery invented by the vedantists. The Atma is God; the particular is the universal, no less. Therefore, recognise in each man, a brother the child of God, and ignore all limiting thoughts and prejudices based on status, colour, class and caste".

And He aptly ends by declaring that "The service of man by man can lead to the discovery by man of God that is his own reality.... Every act must be regarded as an offering to the Divine. It may not be easy to develop such an attitude. But if the effort is made sincerely, it can be acheived.... selfless service is the Yoga that secures Divine Grace."

It is also the faith of all religions that those who serve the needy are dear to God and He will look after their welfare while in the pursuit of service. We can on this faith carry on even the impossible tasks, as they would seem, as did Thirunavukkarasu Nayanar, and gain strength even when we feel helpless, face with obstacles in our path to service.

*"On his way to Thiruppaingeeli*
*he became very wearied,*
*and on thirst for water*
*along with hunger assailing him,*
*he went forward*
*undistracted in mind by these,*
*The Lord with a forehead bearing an eye,*
*abiding in Paingeeli*
*girt by beauty-abounding groves*
*intent on relieving the suffering of His servitude*
*grove and tank He first created,*
*then turning Himself*
*into a way-showing guide,*
*he appeared before the unique king of speech*
*in the form of a Brahmana*
*adorned with sacred ash,*
*bearing in His hands*
*the desired-for bundle of rice*
*and awaited His pleasure*
*thus acted He*
*who was impossible of being seen*
*by the Bird riding the skies*
*and the unique boar*
*tearing into the bowels of the earth".*

*(Above is an abstract of a paper presented at the World Saiva Conference held at Thanjavur Tamil Nadu.)*

# Sixth World Saiva Conference

INDRA MAHADEVA.

The Sixth World Saiva Conference was held at the Tanjore Tamil University Campus from 19th - 21st December 1997. The Conference was organized by the School of Philosophy/ Tanjore Tamil University in collaboration with Tiruppanandal Sri Kasi Mutt and World Saiva Council London.

The inaugural session which was held at the Kankai Cholan Kalai Arangam in the Tanjore Tamil University campus on Friday 19th December 1997 at 9.30 a.m. began with a prayer. Swamiji's from the Dharmapuram Mutt, Sri Kasi Mutt Tiruppanandal Perur Mutt, Kunrakudi Thrivannamalai Mutt and Kumbakonam Periya Mutt, graced the occasion and offered their blessings. Dr. N. Mahalingam inaugurated the Conference and delivered the inaugural speech. The presidential address was delivered by Thavathiru Sivanandi Adigalar from Meykandar Mutt, London.

Delegates from France, UK, Malaysia, Sri Lanka, India, Mauritius, South Africa and Singapore attended the Conference. Thirty eight delegates from Sri Lanka were present at the Conference. The Kankai Cholan Kalai Arangam was filled to capacity. The audience was very receptive and well disciplined. Their thirst for Saiva Siddhanta knowledge was obvious. All arrangements were excellent. Accommodation provided for the delegates was excellent. Transport of delegates from the hotel to the university and back by special buses was well planned and executed. Three meals plus beverages were provided free to all delegates.

Simplicity in all aspects was the key note of the Conference. Tanjore has been a seat of learning and culture for many centuries. The Raja Raja Cholan's magnificent 'Periya Kovil' will bear witness to this fact. Those who expected to see ornamental carved dollars, arches, statues, traditional floral decor and kolams were stunned by the simplicity observed in the Kankai Cholan Kalai Arangam. Though there was no pomp and splendour, the sessions were a treat to all Saivites who attended the Conference.

The cultural events organized on December 19th 1997 evening were of a very high standard. The dance drama "Karaikkal Ammaiyar" was an unforgettable experience. The dancing and music were superb. Narayani Kulendran who portrayed the part of Karaikkal Ammaiyar gave an exquisite performance. It is noteworthy that her Sri Lankan mother Gnana Kulendran is professor Emeritus of the Tanjore Tamil University. Both parents are Sri Lankan and it was heart warming to know that a Sri Lankan was the main danseuse. The traditional Tanjore Kittappa 'Pani' of dancing was enhanced by the exquisite performance of the dancers.

Speeches, seminars and workshops were held on the first, second and third day of the Conference in various halls and rooms of the University. Vanathy Ravindran, R. Mylvaganam, Dr. T. Senthilvel,

K.E. Arumugam, T. Kanagaratnam, S .F. Ethirmannasingham and M. Nagaratnam of Sri Lanka presented papers at the sessions.

The concluding sessions of the Conference were held on December 21st from 4.00 p.m. The chief speaker at the session was Hon. Minister Tamil Kudi Mahan who mesmerised the audience with his speech. The vote of thanks was given by Thavathiru Sivanandi Adigalar. All delegates were given the special souvenir issued for the occasion, a small replica of the Tanchai Periya Kovil, a bottle of Panchamirtham plus a few books. Delegates were also given gifts when they registered themselves on the first day of the Conference.

On December 20th, delegates were taken on a tour of the Tanchai Periya Kovil or Brahadheeswara Temple. This temple was built by Raja Raya Cholan during the golden age of the Cholas. It is a beautiful temple anone could spend hours in the temple premises which are vast. This temple has withstood the ravages of time like many other Indian temples and stands alone in its magnificence.

One cannot forget the traditional hospitality or Virunthombal of Tamil Nadu. Tanjore which excels in South Indian cuisine did not disappoint us. The food served at the University was delicious. All three meals were served in traditional style on plantain leaves. The items of food varied from meal to meal and was served hot hot by smiling servers without a murmur or grumble.

It was indeed appropriate that Tanjore Tamil University - a seat of learning and culture hosted the Sixth World Saiva Conference.

# BEATITUDES OF THE AGED

1. Blessed are they who know that my ears today,
   Must strain to catch the things they say.

2. Blessed are they who seem to know,
   That my eyes are dim and my wits are slow.


3. Blessed are they with a cheery smile,
   Who stop and chat - for a little while.

4. Blessed are they who never say,
   You've told that story twice today.
5. Blessed are they who know the ways,
   To bring back memories of yesterdays.

6. Blessed are they who understand,
   My faltering step and feeble hand.

7. Blessed are they who make it know,
   That I'm loved, respected and not alone.

8. Blessed are they who ease the days,
   On my journey Home in loving ways.



# கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின்
## ஸ்தாபகத் தலைவி
## திருமதி. லீலா சுப்பிரமணியம்




எம் மன்றம் இம்மலரை வெளியிடும் இவ்வேளையிலே பல்லாண்டுகாலம் சேவையாற்றி எமது ஸ்தாபகத் தலைவியாக இருந்து பலவருட காலம் எம்மோடு இணைந்து தோள்கொடுத்து உழைத்த திருமதி லீலா சுப்பிரமணியத்தை நாம் மறந்துவிட முடியாது.

அவரது அன்பும் அரவணைப்பு மிளிரும் பேச்சும் இனிமையும் உறுதியுமான செயற்பாடுகளும் ஓயாது ஓடி ஓடி உழைக்கும் சேவை மனப்பான்மையும் எல்லோராலும் போற்றப்பட்டவை. 'சுப்பு மாமி' என்று செல்லமாக அழைக்கப்பட்ட இவர் கடந்த 21.12.97ல் இயற்கையெய்திய செய்தி எம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. துணிச்சலும் செயலாற்றலும் மிக்க எமது ஆரம்பகாலத் தலைவியை இழந்த எமது மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.



Hon. S. Thondaman is seen in the picture lighting the Oil Lamp at the Sakthi Vizha organized by our Association after reorganization.



"Janaranjana Mela" Trade Fair at Viharamaha Devi Park organized by our Association.




4th World Saiva Conference held in Colombo organized by C.W.Y.H.A along with Sri Lankan World Saiva Conference




Our delegates at the 6th World Saiva Conference held in Tanjavur.



"Vel Kavady" received by our Association at Alfred Place Junction, Colombo-03.



Navarathiri Bhajan by our Members



South Indian film Director "Visu" visited our Association for a discussion.





"Villuppaddu" staged by our members at the Shakthi Vizha held at the SriLanka Foundation Hall.

Association's Navarathri Celebrations 1997 at No. 7, Fountain House Lane, Colombo-10



# Colombo Young Women's Hindu Association
## (CYWHA)
### 15 Bagatalle Road, Colombo 03 Tel 584168

14th December 1997

Dear Friends,

**ELDERS' HOME FOR HINDU WOMEN**

This Association which has been registered under the Societies Ordinance on the 31st January 1994 is registered with the Department of Hindu Religious and Cultural Affairs and is "an approved charity" within the meaning of the Inland revenue Act No.28 of 1979 entailing any person making a donation to tax relief.

One of the objects of the Association is the establishment of a Home for the Aged which it has been felt is a grave need in the context of the present situation in our society due to families having left the country and their Elders left behind to survive in unhappy surroundings lacking what they would yearned to have the care, concern and affection of their loved ones who are unable to provide these for reasons beyond their control.

Realising this need the Association has taken up the pursuit of this object seriously and it has been able to purchase the resident of a Patron, an elder Member of the Association, situated at No.15, Bagatalle Road, Colombo 3, in extent 22.75 perches at a reasonable price and terms of payment. The cost at the concessionary price is Rupees Six million (Rs.6,000,000/-) of which Rupees Three Million (Rs.3,000,000/-) has been made as a down payment and three year's time has been granted to pay the balance at the rate of Rupees One Million per year. The Association has taken possession of the property to carry out its objectives with immediate effect.

The premises will be used to run an Elders' Home for Hindu Ladies providing for the general care and welfare of its residents, medical aid by channelling doctors, the collection of clothes for laundry, provision of postal, banking and other facilities, the supply of vegetarian meals, conducting religious functions, installing television to screen religious and cultural programmes and providing such other services as would make the life and surroundings of the residents happy and purposeful.

Accordingly this Appeal goes out to all our well-wishers to contribute towards the worthy cause and help us to find the funds to meet the balance purchase price by the stipulated date. All donations should kindly be made out by a cheque/draft/banker's order drawn in favour of the "Colombo Young Women's Hindu Association" and crossed "Account Payee". Your support towards the establishment of this Elders' Home for Hindu Women will not go unrewarded as it is an act of great merit.

May the blessings of God be with you all.

Yours in Service,

**COLOMBO YOUNG WOMEN'S HINDU ASSOCIATION**

**Indrani Yogarajah**
*President*
*Tel.: 597500*

**Yamuna Ganeshalingam**
*Secretary*
*Tel.: 574866.*

# Colombo Young Women's Hindu Association
## (CYWHA)
### 15 Bagatalle Road, Colombo 03 Tel : 584168

## VISALAMBAL ANBU ILLAM

### RULES & REGULATIONS

1. MANAGEMENT — The management of the 'Visalambal Anbu Illam' shall be carried on by the Committee appointed by the C.Y.W.H.A. The decision of the Committee shall be final and conclusive in all matters.

2. ADMISSION — Application for admission shall be on the prescribed Form.

3. DONATION — When an applicant is selected for admission, she will be required to make a lump sum payment of a pre-determined amount as a donation. The amount required to be paid as donation will be stipulated at the time of application.

4. CHARGES — 4.1 The Committee of Management will determine the quantum of payment that will be levied for board and lodging.
4.2 The charges payable for each month shall be paid on the 01st of each month.
4.3 In the event the charges aforesaid remaining unpaid the terms contained under ARREARS OF DUES (5) will apply.
4.4 A refundable deposit of six months of the monthly charges shall be paid at the time of joining.
4.5 This amount shall so adjusted periodically in the event of increase in the charges of the monthly payment, so that at any time there will always be a refundable deposit equivalent to six months charges.

5. ARREARS — 5.1 In the event of the monthly charges as stated above remaining unpaid and in default for a period of one month, the local Guardian and the two Referees will be notified of the same.
5.2 If satisfactory arrangements are not made within 10 days of so being notified and the default continues then 2 months notice will be given to the Resident either make good the default within 30 days or to find alternate accommodation.
5.3 At the end of the 3rd month the Resident in default shall be required to vacate the premises without futher notice and on vacation of the premises the Committee shall refund to the Resident the amount standing to her credit out of the deposit after setting off the arrears and other amounts due and payable by the Resident to the Home.

6. FOOD — 6.1 Only vegetarian meals will be served to Residents and Residents should not partake of non-vegetarian meals in the premises.
6.2 Meals will be served at pre-determined times and Residents shall comply with such arrangements.

7. VISITORS PREMISES — Visitors will be permitted only during the following times:-

Week Days - 04.00 p.m. to 07.00 p.m.
Weekends - 10.00 a.m. to 12.00 noon.
03.00 p.m. to 07.00p.m.

No visitors shall be permitted to stay in the premises beyond these times unless special permission has been obtained.

8. <u>LEAVING</u>

No Resident shall leave the premises without prior permission from the person in authority at the Home who shall have the power to refuse permission for any Resident to leave the premises when found that it is not in the best interests of the Resident. In any event, when leaving the premises the Inmate shall be required to make an appropriate entry in the Register provided for the purpose.

9. <u>GENERAL</u>

9.1 Medical facilities may be provided on request and all expenses in connection with the same shall be met by the Resident.

9.2 Hospitalisation and any other unforeseen expenditure connected with the Resident shall be reimbursed by the local Guardian within 10 days of presenting Bills. However, wherever possible such expenditure will not be incurred by the Management without prior approval approval of the local Guardian.

9.3 In the event Committee is of the opinion that the Resident is not temperamentally or is otherwise not suitable to continue in the Home and/or the environment of the Home does not suit the Resident, the management Committee shall terminate the occupancy by giving 3 months notice to the inmate and the local guardian and refund such part or portion of the refundable deposit lying to the credit of the Resident at the time of leaving.

9.4 The Committee reserves the right to alter, add or to otherwise vary the Rules & Regulations from time to time at its own discretion.

9.5 The following additional Facilities will be provided by the Home as part of its services;

1. General care of the Resident.
2. Channelling of Doctors.
3. Collecting clothes for laundry.
4. Postal facilities.
5. Banking facilities.
6. Conducting Religious functions, Cultural functions.
7. Organising religious videos, excursions, birthday parties etc.
8. Taking them to Temples.

10 <u>EXPRESS CONDITION</u>

The Committee or its employeess hall not be liable for any injury or illness whatsoever that a Resident shall suffer from while being an occupant of the Home.

Having read and understood the above, we hereby consent to abide by the same.

| | |
|---|---|
| ......................... | ................................. |
| *Applicant* | *Guarantor* |
| *Referee* | *Referee* |
| *1*...................... | 2.............................. |

# ACKNOWLEDGEMENT

1. We wish to express our sincere gratitude and appreciation to our chief guest, His Excellency, Sivashankar Menon High Commissioner for India and his charming wife Mrs. Mohini Menon, who accepted our invitation readily to participate in this occasion inspite of their busy schedule.

2. We thank Mr. D. Esuwaran who, spared his valuable time for the review of this publication and always gave the necessary guidance and advice to the association.

3. To all our special guests who generously contributed to lessen the financial burden of our association - A WARM THANK YOU.

4. I take this opportunity to thank Mr. V. Murugesu, a distinguished Attorney at Law in providing honorary legal advice & support in our efforts to acquire the property "VISALAMBAL ANBU ILLAM" at No. 15, Bagatalle Road, Colombo 03.

5. For the purchase of this property Mr. R. Yogarajah, Attorney at Law and leading pioneer businessman was instrumental in carrying out delicate negotiation which ultimately resulted in our owning this well located Elders Residence. We are indebted to him.

6. Our sincere thanks to Mr. E. Jayaraj, National Organizer of Ilankai Kamban Kazhagam for the enlightening and interesting speech.

7. The editor Mrs. Sulochana Selvaganesh, the editorial Committee and its advisors Mrs. Abirami Kailasapillai and Mrs. Padma Somakanthan carried out an excellent task in getting this book published.

8. We wish to extend our sincere thanks to Mr. P. Vimalendran, proprietor Unie Arts (Private) Ltd., for the interest in all our printing works and especially in printing this publication at very nominal cost.

9. The refreshments provided to all those who are present here today are by the courtesy of Mrs. Shanthi Balasubramaniam. On your behalf we thank her for the kind genorosity.

10. Last but not the least, the committee members who stood by and gave valuable selfless support for ventures undertaken need to be applauded.

**Mrs. Yamuna Ganeshalingam**
*General Secretary*
*Colombo Young Women's Hindu Association*

SHAKTHI

SHAKTHI

SHAKTHI

SHAKTHI

SHAKTHI

SHAKTHI

SHAKTHI

# Shakthi

## ANNUAL SPECIAL PUBLICATION
## OF
## COLOMBO YOUNG WOMEN'S HINDU ASSOCIATION

## 1998



**VISALAMBAL ANBU ILLAM**
***AT***
***NO. 15, BAGATTALA ROAD,***
***COLOMBO 3.***

Printed by Unie Arts (Pvt) Ltd. 48 B, Bloemendhal Road.
Colombo-13. Tele/Fax: 330195